T. D. R. C. [illegible]

[illegible] 38 [illegible]

[illegible]

[illegible]

Q23:38.21197

M70.3

114532

## வன்னாச்சிரமநல்லொழுக்கங்கூறியசருக்கம்.

திருவளர்கருணைபூத்தச்சிறந்தசெம்பவளமேனிப்
பரமனார்வேணுநாதர்பதமலர்நினைந்துபோற்றி
யிருடிகண்மொழிவார்நெல்லைத்தலத்தினிலெவர்களேனும்
புரிபவநீங்காதென்றுபுகன்றதென்புகல்வீரென்றான். (௧)

தொன்மைசான்முனிவர்கேட்பச்சூதமாமுனிவன்சொல்வான்
மன்னுபொன்மலைவில்லிவாழ்மற்றுளதலங்கடோறுந்
தன்னிகரில்லாநெல்லைத்தலத்தினும்பாவஞ்செய்யா
துன்னிநற்புண்ணியங்கள்செய்பவருயர்ந்தோராவார். (௨)

ஆயவித்தலத்தில்வைகியறிவிலாதியற்றுபாவந்
தீயவஞ்ஞானத்தாலுஞ்செய்திடுபாவமெல்லா
மேயபொற்சமலவாவிமென்புனல்படிந்துநெல்லை
நாயகன்வடிவாள்பாகனம்பனைப்போற்றநீக்கும். (௩)

சத்திமுன்றவங்கள்செய்யுந்தபோவனங்காமகோட்டஞ்
சித்தமையால்நந்தன்மசேத்திரந்திருநெல்வேலி
யித்தலத்தெவர்களேனுமியற்றுபுண்ணியமதொன்று
பத்துநூறுகோடிபாவங்களுஞ்சமமாக்கும். (௪)

தாய்பராசத்திநெல்லைத்தலமுந்தாயாமவ்வூரின்
மாயமோகத்தான்மிக்கவனிதையர்தம்மைநாடிப்
போயவர்போகமுண்போர்பொருந்துறநோக்குவோர்க
ளாய்தனைவிரும்பினோர்போல்நரகமுந்துவாரால். (௫)

வையகமதனிலுள்ளோர்மற்றுளபாவஞ்செய்யி
னுய்திறஞ்சிறிதுண்டாகுமுமையொருபாகனூர்க்குக்
கைதவமியற்றிப்பாவக்கட்டுறுச்சிவத்துரோகஞ்
செய்பவர்மீள்கிலாத்தீநரகிடையதனில்வீழ்வார். (௬)

ஆதலாலிப்பாவங்களனுகுமென்றஞ்சியுள்ள
மேதினும்விருப்பமின்றிமிகபரமினிதுவேண்டி
வேதங்கண்மொழிந்தவாறுவிழுமியவொழுக்கத்தோடும்
பூதலத்தெவரும்போற்றப்புனிதராயினிதுவாழ்வார். (௭)

என்றிருவினையினாலேயியற்றுபுண்ணியபாவங்க
ளொன்றிவந்துறுவார்செய்தியுரைத்தலுமுனிவர்கேட்டு
நன்றுயரொழுக்கமென்றநாலுவன்னத்தார்நீர்மை
துன்றுமாச்சிரமநான்குகுணங்களுஞ்சொல்லினென்றார். (அ)

என்னனுமகிழ்ந்தருந்தினியல்லேசழுக்கத்தோடு
மன்னுமாச்சிரமநான்குமருவியதிருநெல்வேலி
தன்னிடையிருப்போர்முத்திசார்வர்சத்தியமாமென்று
துன்னுநல்லொழுக்கமேன்மைச்சரிதையைச்சொல்வ, ரனன். (௯)

நிறைந்தபல்புவனமெங்குநீறணிகடவுண்மேன்மை
யறிந்தெவர்போற்றவல்லாரறம்பொருளின்பம்வீடு
பெறுந்தரமெவரோவென்னிற்பேருலகதனினித்
திறந்தருமொழுக்கமிக்காரொன்றுநான்மறைகள்செப்பும். (௰)

வேறு.

கருதிமொழியந்தணரொடுசத்திரியர்வணிகர்சூத்திரரென்
றரியவன்னமொருநால்வரிவரிறொழுக்கமுடையோர்கள்
பிரமசாரியில்வாழ்வோன்வானப்பிரத்தன்சன்னியாசி
கருதினுயர்நாலாச்சிரமக்கருமத்தாருமிவராமால். (௰௧)

பொருவில்புவனபலகோடிபொருந்துமுயிர்களனைத்தினினும்
விரவும்வினைகளிரண்டினிற்றீவினையொன்றியற்றிநமன்றூதர்
நரகிலழுத்தாவகைசிறந்தநம்பனடித்தாமரையுதவுந்
தருமநெறியேயெவற்றினுக்குந்தயுவார்தலைமைப்பொருளாமால். (௰௨)

இயலாரியமதியமமெனுமிரண்டியியமமுயிர்புரத்தன்
முயலார்பொறைபொய்யொழிதலின்மொழிமெய்பயிலல்புலன்றகைதல்
தயவார்மேன்மைதகுவதாஞ்சாருங்கொலைகள்செயலொழித்தல்
செயலார்கருமமிவைபலவுஞ்செய்வதிதுவேசிறப்புடைத்தால். (௰௩)

புரியுநியமமகமோனம்புனலிற்படிதல்புகல்விரதந்
தருமமிருதியுணவொழிதலச்சோரமையுமிவிடஞ்சேர்தன்
மருவுசவுசமுதல்யாதும்வழங்கலிவைகள்பலவுமே
பரிவினருமெனவிதிக்கும்பழமாமறைகள்பகருமால். (௰௪)

பண்ணுளோரும்பழமறைகள்பகரும்பதங்களுள்ளோரு
மண்ணுளோருமொழுக்கநெறிவழுவாதியற்றிவருவோருங்
கண்ணுளோரும்பலகலைநூல்கற்றுளோருங்கவிஞோரும்
விண்ணுளோருந்தமிழ்த்திருநெல்வேலிநகரையடைவாரால் (௰௫)

புலர்வைகறையிற்றுயிலுணர்ந்துபுழைக்கைமுகனைப்புராந்தகனை
யிலமிமையவரைமானையணங்குறுத்திக்கினியானை
மலர்மறைசெந்திருமானைமணக்குங்குளவநெடுமாலை
யுலகுமரும்போற்றப்பவன்மானையும்பர்கோமானை (௰௬)

நெடுநீர்க்கங்கை முதலாற்சரீள்பாற்கடலேமுதற்கடலை
வடபால்வரையேமுதல்வரையைவசிட்டனதிமாதவரை

---



யிடர்தீர்கற்பினருந்ததியேமுதலாமினியமடவாரைப்
படைவேல்விழிமானுருப்பசியேமுதலாயுள்ளபாவையரை. (௰௭)

நிகரில்காசிமுதனகரைநிதியார்கவுத்துவமணிமுதலாய்ப்
புகலுமணியைமந்தாரமுதலாயுள்ளபூந்தருவை
மகிழுமயிராபதமுதலாய்மதங்கள்பொழியும்வாரணத்தைச்
செகமதுயர்பொன்முடிசுமந்தசேடன்முதலாம்வாளரவை. (௰௮)

சனகன்முதலாம்யோகிகளைநன்றமிருக்குமுதன்மறையைப்
புனிதநிறையும்பிரணவமமுதலாமெழுத்தைதப்புகழ்வீணை
நூன்முதல்தெய்வமறைமுனிவோர்தம்மைத்தேனுமுத
லினிய பசுவைக்காயத்ரிமுதலாயிசைக்குமந்திரத்தை. (௰௯)

உலகிலரிச்சந்திரன்முதலாமுண்மையுனாக்கும்வேந்தர்களைக்
குலவுததீசிமுதலவரையாதுகொடுக்குங்கொடையோரை
யிலகுநந்தாவனமுதலாஞ்சோலைதனையிந்திரனுகைக்குஞ்
சுலவுசவேதப்பரிமுதலார்துயகடுமைவாம்பரியை. (௨௰)

உந்துபரியேழுடைக்கவரியுடையோன்முதலவியபேசாச்
சிந்தைமகிழுமார்க்கண்டன்முதலாச்சிறந்தசிரஞ்சியரை
யெந்தவுலகத்தினுமுள்ளதீர்த்தமெவைக்குமேலாய
தந்தைதாய்தன்மலரடியைத்தகவாயிதையந்தனிலெண்ணி. (௨௰௧)

வேறு.

பொருவினீணகர்நீங்கிநானுறவிற்கடைபோய்
நிருதிதிக்கினின்மவுனமாய்நிகரின்முப்புரிநூன்
மருவுநீள்வலச்செவிவைத்துலயங்குடுத்தரிகஞ்
சிரசின்மேற்சுற்றிநிலத்திலோர்துரும்பினைச்சேர்த்தி. (௨௰௨)

காலையுத்தரதிசையுயர்கங்குலிற்றென்பாற்
சாலநோக்கிமுச்சுடர்வழிக்கரைபுனற்றரங்கஞ்
சேலவெண்டிசைமறையவர்திகழுறுமாமா
னேனுமற்றிவர்தம்லமமுன்னெதிரினோக்காமல். (௨௰௩)

அழிவுறும்மூவர்நிலமறுகானதோர்மன்றம்
வழியிடங்களினிராதிருமலமதுநீக்கி
யெழுமவன்குறியிடக்கையாற்பிடித்துமண்கவர்வான்
புழுவுறையெலியகழ்புனல்படுதலம்போக்கி. (௨௰௪)

தூநிலாதிறுஅயமண்ணெடுத்துயர்குறியின்
மீதொருதரங்குதத்திலைங்கால்விரயக்கழுவு
மேதமில்கரம்பத்திருகாத்தினுமெழுகாற்
பாதக்கட்குறவேழ்தரஞ்சவுசம்பண்ணுவதாம். (௨௰௫)

சவுசம்பண்ணுமண்ணுறுவதுகடுநெல்லிதான்றி
யவையிற்பாதிதண்ணீர்க்ககல்பாத்திரமிலையே
லவையினீர்க்கரைக்கோர்முளநண்ணிச்செய்திடுக
லவிர்சிரத்திற்றூசாசமனத்தொழிற்காக. (௨௬)

வேறு.

இன்னவர்தாஞ்செய்தொழிலுக்கிரட்டிபிர்மசாரிதனக்கிதனிரட்டி
மன்னுநெறிசருவானப்பிரத்தர்தமக்கதனிரட்டிவருசவுசத்திக்
குன்னுமிவைபகற்பொழுதுக்கிருட்போதுக்கதிற்பாதியூர்செல்வார்க்
கொன்னிலாநோயினர்க்குமடவார்க்குநாலிலொன்றுய்க்கூறுநூலே (௨௭)

நாலகிறவெலும்பிருந்தைசாம்பரிவைதவிரிடத்தின் மருவிச்சூடு
பற்றுரைமிற்புனல்வாங்கிக்குடக்கேனும்வடக்கேனும்பரிந்துநோக்கிச்
செழுமறையவர்க்கிதையம்வாழ்வேந்தற்கணியிடறுசிறந்தவிப்பர்க்
கெழுமண்ணமடவார்சூத்திரர்க்குவாயளவுதானருந்தல்வேண்டும். [௨௮]

அடைவினிந்தவகைமுக்காற்புனலுண்டுபின்பார்த்தங்குட்டமூலத்
தடைவிருமுறையிதழ்கடைவதாவிரல்கண்மூன்றாந்தானே
படவுமன்னிவாய்தொட்டுத்தற்சனியங்குட்டத்தாஸ்வலப்பாலமூக்கு
துடனிடதுமூக்கதனின்மறைபுகலுமைவிரலையதனிலுலவாநேத்தி. (௨௯)

திகழுறுமங்குட்டநீணுமிகைசேர்த்துவிழிசெவிகள்சிறந்துதொட்டுத்
தகவுறுசிறுவிரலோடங்குட்டங்கூட்டியுந்தன்னிலொற்றி
மிகையினறுமலர்த்தடக்கையுரத்தலைமத்துவிரலனைத்துங்கூட்டிச்சென்னி
தகளறுபொற்றோளிணைகண்முறைதொட்டிடன்மைபூட்டப்பொதுதல்வேண்டும்.

இருந்தெழுந்துபோய்வரினுந்தும்மினுநீர்குடித்திடினுந்தெண்ணீராடி
யருந்தினுந்தசணிந்திடினும்விதிமுறைநற்கருமங்களாற்றும்போழ்தும்
பொருந்துமுயிலெழும்போதும்யாதேனுமசுசியைத்தொடும்போதும்
திருந்திழையார்புணர்ந்திடினுமாசமனத்தொழின்முடிக்கத்திறத்தோராவார். (௩௰)

நந்தையுவாநவமியொடுநாயிற்றிற்பல்விளக்கினையுந்றேர்கள்
வந்தகுலத்தொடுங்கெடுவர்வதைகயாகவிதித்தமாமிதுவின்றேனு
நிந்தையுறுமெனவுரைத்தநாள்களினுநேயநறுந்தெண்ணீர்வாங்கிச்
சுந்தரவாயிடைப்பெய்துபன்னிருகாற்கொப்புளித்திற்றூயதாமால். [௩௧]

வானுயர்மாவிருப்பைவன்னிநாயுருவிகொன்றைகடுவாகையீந்தோ
டானொருவில்வரந்தங் …ஞ்சிறுவர்ப்பிறங்குகனுவாய்ப்பாலா
மூனமின்முள்ளுண்டு…ருவிற்சிறுவிரலின்பருமத்தாயுறகோணின்றி
யீனவ…விற்றருண…ளிர்பற்கறையைப்போக்கிடவும்வேண்டும். [௩௨]

மன்னுஞ்…வினின்பால்…வகினனகோடியர்சருவேவாழ்வுமேன்மை
துன்னு…ழிலருள்…ற்றன்மனத்தூய்மைவாணு [௩௩]



…ரின்னவைதானவித்தெனவுமுகநோக்குகென்றருமறைகளியம்புமாறு
முன்னரினிதுரைத்துநற்றருவொடித்துத்திகழ்முறுவல்விளக்கவேண்டும். (௩௪]

கூறுமறையவர்தமக்குப்பன்னிரண்டுவிரலளவாங்குறைமூவோர்க்கும்
வீறுபெறநால்வாரொருமெல்விரல்குறைதல்விதயாமத்தருவைவிற்போன்
மாறுபடவிளைத்துநாவழித்துவளமையெறதுாயனுகிற்
பேறுதவும்வாலுவைபிறங்கொளித்துண்கதிர்மதியாம்பெருமையோனே. (௩௫)

அனகடுறதருப்பைபயொடுகோமயத்தொடுமண்டலிகொணர்ந்தங்கவணிசேர்ந்திப்
புனைமந்திர…ரியமருங்களிநூலிலைமுடிந்துபனலிற்சோ
வினைவிருக்குறவின்றுபுனருட்டோன்றுகிரத்துந்திமேலிரண்டு
வினவுமுந்திக்கீழ்மூன்றுதாட்கிருமூன்றிவைவதிமண்ணுரைத்தல்வேண்டும். (௩௬)

நறும்புனலினெதிராடியெழுந்துடலங்கோமயத்திநூற்றைவந்து
கறங்குதிரைநீராடமொழிந்தமறையினைத்தினையுங்கழறிமூழ்கிச்
சிறந்தகரத்தால்வாழ்ணார்முனிவரர்தென்புலத்தார்க்குத்தெண்ணீர்நல்கிப்
பிறங்குநெடுங்கரையேறியுத்தரியந்தனைமறித்துப்பிழிந்துபின்னர். (௩௭)

தூயசலமருங்கணிந்துதோளின்மேலுத்தரியந்தாங்கச்சேர்த்தி
நேயமொடுவெண்ணீறுமார்பினணிந்துயர்தருப்பைவிரலிற்சூழ்ந்தே
யேயவருங்காலைதனிற்கடன்கழிக்கவிவ்வண்ணமியற்றிடானே
லாயகலைவிழாதிழிவாய்மறுமையினுமாய்ப்பிறந்தேயலைவனமாதோ. (௩௮)

இந்தவகைக்கடன்கழித்துக்குடக்கேனும்வடக்கேனுமினிதுநோக்கி
வந்தநெடுமூச்சடக்கிமுக்காற்காயத்திரியைமனத்தனோர்ந்தே
முந்துபிராணாயாமமொருகாற்செய்திடிற்பாவமுழுதுநீங்கு
மந்தவகைபன்னிருகாலஃதியற்றிலருந்தவப்பேறதுவுண்டாமால். (௩௯]

நீசரிலுயர்துவராடைசெஞ்சாந்துபுனைந்ததிப்பணிகள்பூண்டு
தகவுறுகண்டிகைமாலைசூடியன்னமூர்தருமாமாதைச்
பகருமறைதொழுகாயத்திரியணங்கைப்பருவமிருநான்குமெய்தத்
திகழ்தருநல்லுருவாகநினைந்திரவியெழுமளவுஞ்செபித்தல்வேண்டும். (௪௰)

இத்தகைமின்றுயிரத்தெட்டோதிபுவத்தானமுறையினிதினாற்றி
நித்தியவசங்கற்பமுதலானபழமறைகளிகழ்ந்தவேண்டு
மொய்த்தநறுமணங்கமழ்சந்தனத்தேய்வைவாலரிசெம்முளரிப்போதும்
வைத்தநறும்புனலோடுமருக்கியஞ்சேட்டிமாங்கதிர்க்குவழங்கவேண்டும். (௪௧)

ஒன்றிரண்டுமூன்றென்றுய்வளர்தருப்பைதனைநீக்கியொண்பானேழஞ்
சென்றுடைதருப்பைநுதிமுதலுளதாய்க்கொண்டகில்சந்தெதிர்நீர்சேர்த்து
நன்றுயர்வானவர்க்கொருகானமுனிவரர்க்கிருகால்…கூட்டித்
துன்றியதென்புலத்தோர்க்குமுக்காற்றெர்ணிறையுவச்சொல்வர்நல்லோர். ௪௨

கதிரிலகுவரகுமூந்துதிரள்சுரைக்காயவரைக்கருங்காரரிசியரிப்பு
முதிருமெண்ணெயொடுகலந்தமூரல்பழமூரல்புனன்மூழ்கினோர்கள்

விதிமுறையினிவைநீக்கியினிதருந்தவிருப்புறுவெண்முல்லைபோன்ற
புதியநறும்போனகத்திற்புகலும்வயிச்சுவதேவம்புரிகுவாரே. (௪௩)

அகமகிழ்ந்துகடவுளர்பூசனையாற்றிவெள்விடைவெள்ளணியினுளை
மகிழ்வினொடுமருங்கினில்வெண்டுகிலுடுத்தமடமானைமணஞ்சேர்முல்லை
முகையவிழ்மைந்தாரணிந்துமுதிரபையரதமொடுமுளரிமீது
திகழுறுகாயத்திரியைச்சிந்தைசெய்துயகழ்கடன்கடிர்ந்தபின்னர். (௪௪)

அதிதியர்நல்விருந்தைகற்போரடைந்துளோரறம்புகையமேற்போர்
விதிமறைகளினிதுணர்வோர்பிரமசாரியர்துறந்தோர்விருந்தியார்கந
மிதமொடுநல்லுணவளித்துக்கொடிபதிதரிழிந்தோர்நாயிடையுநோயர்க்
குதவுயர்மந்திரத்தினொடுமுளங்கனியுமன்பினொடுமுதவிப்பினும். (௪௫)

மறுவினிடைப்போந்தோரான்கறக்குமளவையிற்றேடும்வறிருநாழிம்
பெறுபுதல்வருபர்களைஞரியவர்சூழமனையினிடைப்பெட்பினலைகி
யுறவிழக்குத்தரநோக்கியுற்றபதப்பிடிமூன்றூணருமென்மை
யறிவொடுநற்பலியாற்றித்தருப்பையினையணுகினைகலாதார்த்தே. (௪௬)

இபன்மறையானீர்வலஞ்செய்தணிதொட்டாபோசனங்கொண்டினிதினோடு
முபந்திராணருதிசெய்தினியன்றப்பாடுமுதலுண்டுபின்ன
ரயில்கருணையரிப்பனவுமுடனருந்தியன்பான்முக்கனிகளாரத்
தயவினொடும்பின்னருந்தியுத்தராபோசனமுந்தானுட்கொண்டே. (௪௭)

இருந்துபுனற்பெருகிரலின்வழிவிடுத்துவரவத்தினிற்செறிநுளோர்கள்
விரும்பிநிகவெனமொழிந்துகைபூசியாசமனம்விதியினாற்றிப்
பொருந்துபரத்தினைநினைந்துகால்கழீஇச்சனிவடவைபுனைவியென்றும்
பரிந்தகமோர்தயினறவையற்றிகளெனச்செபித்தினியபாகுமாந்தி. (௪௮)

புகன்மறைகள்சிவஞானபுராணமிவைபயின்றுபகற்பொழுதுபோக்கிப்
பகலிரவின்சந்தியும்பகற்பொழுதிற்கடனைப்பயிலுமில்லி
னிகரினிலைபயில்விழுவிரைஞ்சிரண்டாறடைவுழியினிதுபூசி
விலகுமினைநாத்தாற்றிலொன்றினுக்கொன்றணைந்தபலனெய்துமாதோ. (௪௯)

கார்நிறமென்றுகிலுடுத்துநீலநிறப்பொற்பணிகள்கவினத்தாங்கி
யார்பசியநறுந்தொடையலணிந்துவணப்புள்ளதனையடையலூர்ந்து
சாருமிருஞ்சாமமறைவடிவாகுமணிநிறத்தின்றையறன்னைச்
சீருமவாணைமூன்றுணையுநினைத்தினியமந்திரத்தாற்செபித்தல்வேண்டும். (௫௰)

முன்னுருவிரிசமிதைகளாற்றீக்கருமமுறைமுடித்துமுகமன்கூறி
யருள்பெருகவிருந்தினொடுமமுதருந்தி மனமடைவினாற்றிக்
கரியமுகில்குழலுமையாளொருசுருந்தவிலனடிக்கமலம்போற்றிப்
பொருவினெடுந்நிறைபுடையகதுமறைசெபித்துமெய்யிற்பூதிபூசி. (௫௧)

புனிதநிறையக்கமணிபூண்டுபஞ்சாக்கரஞ்செபித்துப்புவனகோடி
தனையுதவும்வடிவுடையதாயினொடும்வேணுவனத்தழற்கண்ணானைக்



கனியுமுளத்தொடுவந்துகைகுவித்துக்கண்களிர்க்கவுழச்சூழ்ந்து
வனசமலரடிதொழுதுவாழ்த்திவிடைகொண்டுவளமனையுட்போந்தே. (௫௨)

நிறைகுடமுமணிவிளக்குந்தலைமாட்டினிடையொருபானெறியின்வைத்து
வெறிகமழுநறுந்தூமந்தவழுமலரணைமீதின்மிகுநதகற்பின்
பொறைதிகழுமகளிரிளமுலைப்பொருப்பிலிருபுயங்கள்பொருந்தப்பூண்டு
செறியகலமதுநகர்ந்துசேர்ந்துதுயில்புரிநுவைசிறப்பதாமால். (௫௩)

இனையிறனதில்விடத்தேகிழ்த்திசையிற்றலைவைக்கவினியமாமன்
மணிதிகழ்பொன்னெடுங்கோட்டுத்துறைந்திடிறதென்றிசையதனில்வைக்கவேண்டு
மணிபெறுவேற்றூருறையிற்குடதிசையின்மீதுவைப்பாதுவேயன்றி
யுணர்விலாதுத்தரத்தேதலைவைத்துத்துயில்புரிதலொண்ணாதாமால். (௫௪)

வன்னச்சிரமநல்லொழுக்கங்கூறியசருக்கமுற்றும்,

ஆகத்—திருவிருத்தம்—௪௬௯௨

## பிரமசாரியச்சருக்கம்

கருவுற்றுருவாயிறக்குநாட்காறுமறையோர்முறைமூன்று
வருணத்தவர்க்குங்கருமங்கள்வகுத்துமறைகளமொழிந்தவகைப்
பொருளுற்றறிந்திங்கெம்மனோர்புகலற்பாற்றேவெனப்புகன்று
தெருளுற்றுணர்ந்தசூதமுனிதிகழ்மாமுனிவர்க்குரைசெய்வான். (௧)

தக்கவிண்டினமுராலுந்தாமக்குழல்சூழ்கட்குவளை
மகளிர்பூப்புநீராடிவருமந்நாளேமுதலாகப்
பெருமுயர்பன்னிருநாட்கெற்பந்துண்டாகுமான்காருந்
திகழுமதியிற்செழுமதியிற்செய்யுங்கருமஞ்செய்துபின்னர். (௨)

ஓதுமதிதானிருமூன்றிலுயர்சீமந்தமினிதாற்றி
நீதிமகவுபிறந்திடுநாணெறியால்விதித்தசடங்கியற்றித்
தீதிறினமீராறதனின்மகரணஞ்செய்வித்துப்
போதமுடனறுமதியிற்புனிதமுறுபோனகமூட்டி. (௩)

தாங்குசிகையுந்தமதுமறைமுறையேதாங்கிச்சடங்கியற்றித்
தீங்கிலாண்டுநிறைவித்துச்செய்யுங்கருமம்பலசெய்து
வீங்குவேய்மென்குழன்மொழிமெல்லியற்கும்விதித்தமுறைசெய்தே
யோங்குமணமுங்கேளிரொடுமுவந்துசிறப்பாய்ச்செய்திடுக. (௪)

அந்தணர்தமக்குமுந்நூலாண்டோரேழுமெட்டுமாஞ்
சிந்தைமகிழுமரசருக்குச்சிறந்தவாண்டுபன்னொன்றாம்
விந்தைவளரும்வணிகருக்குவிளங்குமாண்டுபன்னிரண்டா
மிந்தமுறையேசடங்கியற்றியினிதுபுனைதலியல்பாமால். (௫)

ஓரார்விழுப்பஞ்செறிகாயத்திரியைவிளம்பித்திகழ்வேத
நீரார்விருப்பினொடாறுநெறியேபயிற்றியவரவர்தம்

பேராவொழுக்கநிலைநின் றுயிறவும்விதித்தமுறைபேணி
யாராய்ந்தோருவாநெறியினிறநலநன்றபெருமைமாண்பதுவே. (௬)

மாபிறுயர்ந்தமறையோர்நன்மனைகடொறும்போயேற்றவன்னங்
குரவனருள்பெற்றலதார்தலாகாகூறுபழவன்னம்
பிரசநறுந்தேனிவைமுதல்பேணிநுகர்தலிமையாகு
பிரவிதனக்கோர்பயனியற்றுநெதிராரோக்கலியல்பன்றே. (௭)

அழகுசிறந்தகுழன்மாதர்க்காசைகொளலாகா திந்த
ஞமையுற்றிடுகொடும்பொசிந்தலொன்றுநறி விலோர் ... கள்
குழவிற்சேர்தலவர்களைத்தங்குழ விற்கூட்டவிழிவாகும்
விழிபிதானகுரவனடிவிரும்பித்தொழுதல்வேண்டுமால். (௮)

கடவுண்முனிவர்தமைக்காணிற்கடிதினெதியடிவணங்கிப்
புடையினின்றங்கவரருளைப்பெற்றுப்போதனன்றுகு
மிடையினிகிற்கண்டவுடனெழுந்திராதேயிருந்திடி னு
மடைவதன்றுலெவரோடுமவரோடிருந்தோராரவாரால். (௯)

களபநறுஞ்சந்தனமடைக்காதிகழுந்தாரணிகள்பற்கொம்பு
மிளகுலவணந்திலவறையலிளர்ந்நகமிகைகளிடையக்தி
லுளமதறுதலுலகிடைப்பல்லுயிரையொறுத்தலிவையாவோ
ளிளர்கைத்தண்டினுரிமுஞ்சிகொடாமலிருக்கவேண்டுமால். (௰)

மஞ்சமுயர்பாய்வாசனைங்கள்வன்னப்புடைவையாதவொட்டைக
கஞ்சமிவையாகாவுகிர்கள்களைவதாகாயகற்காலங்
குஞ்சலாகாவனாகாண்மேற்கும்வதிமுப்புரியான
முஞ்சிப்புல்லாமிலகிடைமுக்கணைபூசித்திடவேண்டும். (௰௧)

மதிபாற்காமமுதலாறுபகையுமாற்றிமறைபுகன்ற
விதியாற்பூசாக்கர்மேர்தவெண்ணீறக்கமணிபுனைந்தே
யுதையாதியினற்றியற்றினமுமோமஞ்சமிதையாற்பண்ணி
நதியார்வேணிநெல்வேலிநாதர்தமைப்புந்தொழுனன்றும், (௰௨)

வேறு.

பனவர்தமக்காண்டுபதினாறுயர்ந்தபதியரசர்க்
கினையதிறலாண்டிருபதாடனிரண்டுமிகுந்தசெல்வத்
தனவணிகர்தமக்காண்டுதானாறுநான்கிவைதனந்தாற்
புனையுமுந்நூல்சாத்தியினதிப்புனைந்திடுவதாகாதால். (௰௩)

சுருதிமறைவேதியர்க்குத்தாயசலைத்தோலருணத்
தரிசிறந்தகலைநெடுவேலுயர்வேந்தற்கொருவினுரி
பெருகுசெல்வவணிகருக்குப்பெட்புமிவ்வாறுயர்முப்
புரிமணிநூலுடன்மார்பிற்புனைந்திடவும்வேண்டுமால். (௰௪)



உயர்முஞ்சிப்புற்சணற்போடொவிபெருகுகாற்பாகத்
தியல்புமுநாலுன்மறையோர்முதனமூவர்க்கிவைபுனைநூல்
பயனுறுதாதகிவில்வகார்தருப்பைபதுமத்தா
லையமுறுபொன்மார்பினிவைபுனைந்திடினுநன்றுமால். (௰௫)

புகன்மறையோர்தமக்குயர்ந்தபுரசு ... தண்டாகு
மிகலரசர்தமக்கரசந்தண்டேந்தலினிதுறும்
நகவுடையவணிகருக்குத்தான்வெதிரந்தண்டாகுந்
திகழுமித்தத்தண்டினிற்கோவணஞ்சட்டல்சிறப்பாமால். (௰௬)

இத்தருவினுயர்தண்டினளவிவர்மூவருக்குந
தத்தமதுசென்னிநுதன்மூக்கினளவெனத்தருமால்
வித்தகமுந்நூற்புரியும்விதித்திடுநன்பானமைந்த
கொத்தொருமூன்றுமெனவேகூறுமறைகூறுமால். (௰௭)

மன்னுமாவணியவிட்டம்வரின்முற்கொடைசுர்வேதம்
பன்னுமவரம்மாதப்பவுரணையிற்செயவேண்டும்
புன்மையில்சாமத்தார்க்குப்புரட்டாதிப்பவுரணையிற்
பின்னவர்மூவைக்குநாட்காறுமறையியம்பாரால். (௰௮)

தற்பணங்கள்செயிற்றேவதற்பணத்துக்கணிபூணூல்
பொருட்டுடன்முன்னிருந்தபடிபொருவிலிருடியர்க்கானி
லற்புறநா ... வடமாகுமவர்தமதுபிதிர்க்களுக்கு
முற்பொழிபுமபுயத்திலிடலாகுமெனபர்மறையுளோர். (௰௯)

வேறு.

பயந்தாளனையர்மனையிடத்திற்பலியேற்றுண்டிபழமறையி
னுயர்ந்தோர்புகழுமொருவேதமுளத்திலுணருவமைந்தபின்னர்
வியர்த்துசமாவர்த்தனம்விதிபிறழாதிருமபுவில்வாழ்வுக்
கியைந்தோர்கனிவிதகைமுறையாலினிதுமணஞ்செய்திடவேண்டும். (௨௰)

இந்தச்சமாவர்த்தனமியற்றிவிதிவழுவாவுமுடியாதே
வினைமொழிவர்மதிவல்லோர்நித்தியகன்மமவர்க்காகா
சிந்தைமுதியோர்சுருதிமுறைசெயபுகலாச்சிரமத்தி
னந்தவழியினெறியில்லாரவரோதுறக்கமடையாதார். (௨௰௧)

பிரமசாரிக்குயர்தண்டின்முஞ்சிபிறங்கப்புனைவதாங்
கிரசமதல்வாழ்வார்தமக்குக்கிளருமான்றோலணிவதாம்
பாவுவானப்பிரத்தருக்குப்புலியார்தொன்மாமயிராகும்
காருசன்னியாசிதனக்குத்துவராடைவனைத்தண்டுடையாளம். (௨௰௨)

முறைமாமறைக்குருபகிட்டதமுழுதுமுணர்ந்தோராசிரிய
ரதில்லார்பொருள்கொண்டவைசொல்வோர்வர்களுவாத்தியாரவா
ரிறுவெளாக்கேர்க்கறிவோர்களவரோயெவர்க்குங்குருவாவார்
மதியால்வணங்கிமுறைகேட்போர்தாமேமாணுக்கருமாவார். (௨௩)

இயைருாவன்றனைப்பழிப்போரெரிவாயிராகினிடைவீழ்வார்
நவிசெருவினமத்தந்தையினுக்கருயதிசுழப்போது
மன்னதன்புதல்வியுடன்பிறந்தாளேனுமகதமியவர்வர்க
டவியுறைபுமிடஞ்சாரார்தக்கோர்பெருமையீதாமால். (௨௪)

குரவனாசபுரிவேந்தன்குலமேதமைக்கத்தனைப்பெற்றோன்
பாவவுரியமுன்னவன்மாதுலனேடைவர்பகர்தாதை
பொருவிவ்வர்க்குமனைவியராய்ப்பொருந்துமடவார்தாயென்பர்
பெருமையுலவிந்தமுறைபெதியார்கள்பெரியோரே. (௨௫)

பிறவாநெறியையுதவுமிந்தப்பிரமசரியச்சரியைதனை
மறவாதவருங்கேட்போருமகிழ்ந்துகயிலைதனில்வாழ்வார்
நறவாரிதழிபுனைவேணம்பனடியையினைந்தரித்தர்
றறவாவொழுக்கமனைவாழ்க்கைத்தூயோர்பெருமைசொல்வோமால். (௨௬)

பிரமசரியச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௫௩௮

## மகளிரிலக்கணங்கூறியசருக்கம்

திருவின்மிக்கான்மனையவள்சேருமம்மனையி
லரியதாய்வருமங்களம்பற்றருஅறமாம்
கருதமன்னவைமறைநெறியென்பதுகருதிப்
பொருவிலாக்கிலமின்மாதரைப்பொருந்துதல்புகல்வாம். [௧]

நன்கினில்லறம்விரும்புவோரிருபத்துநாலாண்
டன்புகூர்ந்தபிரமசாரியநெறியாற்றிப்
பின்புநற்குருவருளினற்பிறைநூதன்மாதை
யின்பமாகவேவதுவைசெய்திணங்குவதியல்பாம். [௨]

உரியகோத்திரமொன்றினிலுதித்துளோருடலி
லரியவெம்பிணியுற்றவரலர்மொழிவழியோர்
பிரியுமாண்பெருப்பாவையர்வழியினர்பணிபுள்
வரைவின்மீனிதிப்பேருளார்வரைந்திடலாகா. ௩

அமுதமென்மொழியுடையளாயமுகினிற்றிருவாய்க்
குமுதநண்பனுமுகத்தளாய்க்குணமுடையவளாய்ச்
சமைகொண்மைந்தர்கள்பலரொடுபிறந்ததங்கையளாய்க்
கமழுமெய்யுடைக்கன்னிகைவெட்புறுகடனே. (௪)



நன்குலத்தினுக்கிசையின்றிமேற்பட்டோர்தாழ்ந்த
வன்குலத்தினில்வழிமுறைவளாவின்றியிழிந்த
புன்குலத்தினிற்பூவையரழகெனப்பொருந்தி
னன்றறத்தமுவிடில்வர்நரகினிலடைவார். (௫)

இன்னவாறுசொல்வகையினிலிழிப்புறுகு
மின்னனூர்க்குயர்வேதங்கள்விளம்பியவாறு
மன்னிமம்படுமிலக்கணவகையெலாஞ்சூதன்
பொன்னையேகிகர்சடைமுடிமுனிவர்முன்புகல்வான். (௬)

வேறு.

செய்யகமலமலர்ப்பாதஞ்சிறுத்தல்பெருத்தல்வேர்வின்றி
நொய்யவனிச்சமலரின்மென்மிதிப்பக்குழைந்துநோவதாய்த்
துய்யசிவப்புள்ளடியமைந்துதோன்றும்வலாகள்கொடிமீன
மெய்ம்மைசிறந்தகுடைவனைசக்கரம்போல்விளங்கில்விதியாமால். [௭]

உயர்மேணடுவுவிரலளவோர்வரைமேனேக்கிடந்தற்ற
வியலார்திருவுற்றிடுமரவமெலிநீள்கழுகுமயிற்போலப்
பயனில்வரைகள்கிடந்துளதேற்பரிவில்வறுமையிடப்படுவார்
செயலாரெழிலாய்ப்பெருவிரல்கடிரண்டுவாய்ப்பிற்றிருவெய்தும். (௮)

அந்தவிரல்களகன்றிடினுமதுநீண்டிடினுந்திருநீங்கும்
சிந்தகடுத்தவிரல்களறநெரிகின்வளம்போமதுநீளிற்
சிறைபிறர்மேலாசைவைக்குஞ்செறிந்துநெருங்கிற்செல்வம்போ
முந்தக்குறுகிற்குசியாயுழன்றேயிறக்குஞ்சின்னுளில். (௯)

சொன்னவிரல்களொன்றின்மேலொன்றர்குறினற்றுனைவன்சா
மன்னதகலிற்பொருளகலுமனையுங்கடைசேர்விரலிலைத்திற்
றுன்னப்பொருந்தாதெனின்மணந்தோன்றுங்கடையப்பெருவிரற்
மன்னுமடுத்தவிரனீளின்மனைசெய்யுமனமாந்தளைமருவும். (௰)

உளவிற்பருத்துமென்மையாயரும்புவேர்வுநரம்பின்றி
யுளமட்டிருக்கினன்றுநரம்புயரினூர்கடொறுந்திரியும்
வளரிப்பாங்காலெனவேமருவியுயரிற்சிறப்பின்றுன்
கிளர்பன்மயிர்கள்செறிந்திடிற்பொய்கிளத்துந்தாசியாய்மெலிவாள். (௰௧)

வட்டமாகியொளிசிறந்துசிறிதுசிவப்புமருவினக
மிட்டம்விளையுந்துகளெழவேநடக்கிலிறக்குங்குலமுன்றுந்
தெட்டிமருமிளையோரைச்சிறந்தபாட்டினியல்கூறிற்
பட்டைதலசந்துதிரண்டுருண்டுபெருத்தலதுவேபண்பாமால். (௰௨)

பாடங்குயர்ந்தநரம்பெழுந்தாற்பதுமைபுகலுங்குதிபந்தி
ஞருவுவாய்ந்தங்கெழில்பெருகிவப்பாரினிற்றுயரெய்து

மருவிமிகவுமுயர்ந்திட்டாலயலோர்மீதின்முனஞ்செலுத்து
மருகுசிருந்தாதவைபருக்கிளைவில்செல்வர்கன்றிடுமால். (௰௩)

பரிந்துமென்மேல்வரவரவேபருத்துப்பெருத்தவரால்போன்று
பொருந்துகரம்புரோமமிலைபுறத்திற்றெருமுருக்கணைக்காலெற்
றிருந்துமரசற்காமுழந்தாள்பாண்டில்போலத்திரளினன்றும்
விரிந்துதசைகளொழியின்முலைவிலைகள்பக்கும்வேசையாம். (௰௪)

ஊருநரம்புமயிரின்றியொன்றோடொன்றுகூடாமற்
சேர்கொள்யானைத்துதிக்கையெனச்சிறந்துதிரண்டுவரவரவே
யாரப்பருக்கிலழகாகுமயிரக்குரல்தலையாம்
பேரீங்கியொளியின்றிமிகவேபெருக்கினாரப்பெய்தும். (௰௫)

இலகங்குலமோராறுமூன்றென்னவெழில்பெற்றுயர்மணங்க
ளுலவவாய்ந்தேயுயர்பிதம்பத்தோடுசதுரமதுவாகி
மலிவுறுதுநீண்டுதாழ்ந்துயர்ந்துமயிர்களிடைசேரிற்
கலிவெந்துயரார்பிணிபிடித்துக்கைம்மையாகிவிடுமன்றே. (௰௬)

உயர்ந்துபருத்துமென்மையாயுலம்பொற்றிண்டகமென்னை
னயந்தகலவிக்கின்பமல்குமாருமிருக்கிலுளம்
வியந்தவிருப்புநல்காதுவெறுப்பினிதைசெரும்விரியல்கு
லியைந்துபெருத்தமுதுகுயருமியானைட்பிடர்போன்றிடினன்றும். (௰௭)

எழிலார்வலப்பாலுயர்ந்திடிற்பெண்மகவேயினிதுபயந்திடுமால்
விழைவாரிடப்பாலுயர்ந்திடிலாண்மகவேவிரும்பிப்பூத்திடுமாற்
குழலார்நாளக்கமலமலர்சிலைமான்குறும்பாயெலிமயிர்போன்
மழவார்மயிர்கள்செறிந்திரண்டுமணிவாய்த்திருக்கில்வளம்பெருகும். (௰௮)

வளைமென்றனைபோன்றிடிற்பெருஞ்செவ்விரிவாய்ப்புரையுற்றுக்
கிளருமடிச்செறிமயிர்க்கருக்கிற்கேடாமடிப்பாயேம
றள்ளிச்சிறைியாமிடப்பாருழ்ந்துசுழியெய்த
லொவிதுயரமவட்கெய்தியணிகடுறந்துசைம்மையாம். (௰௯)

மருங்குறுவண்டுவறுமைபெய்தின்மனையாளுறைவள்பெரிதாகி
விரங்குதுயராமுந்தியகன்றெழிலாயாழ்ந்துவலஞ்சுழிய
லொருங்குசெர்வடிருநரம்புமயிருற்றுயர்வாயிடஞ்சுழியத்
திரங்கியுழலுமென்மையாம்வயிறெற்செல்வமகப்பெறுவாள். (௨௰)

அன்னவயிறுதவளைவயிறுகவமைபிற்புவிகாக்குந்
தன்னுகுமரர்பலவுயிர்க்குந்தாயவயிறுலிலையாகி
மன்னியெங்குமயிர்களுறுதிருக்கின்மகிழுஞ்சிறப்பெய்த
மின்னினிடையார்வயிற்றில்வளைமூன்றுடைக்கின்மிகநன்றும். [௨௧]

அணிகொள்வயிற்றின்மேன்மடிப்பாகளைநீண்டுகெழிபலவும்
புணர்வுற்றிடிற்றனிபதியகன்றுபோயெய்யிடமுமதிரிந்துழன்று



கணிகையாகுங்குடம்போலக்கனத்தமுழவுபொற்பருக்கிற்
பிணிகொண்டுழன்றுசிரப்பெய்திப்பிணங்கிநிலைகெட்டயருமால். (௨௨)

ஆர்வெண்ணீறுபூத்துயர்பூசணிக்காயெனநெல்லெனவயிறு
சேரிலசைப்பில்சோறருந்துமகலிற்சிறையாமிகாலிற்
சாருமனைவாளைக்கொல்லுந்தகைசகவிலாவின்புடைமேவிக்
கூருமென்மையாய்நரம்புமெழாமற்குலவிற்றிருவுண்டாம். (௨௩)

உகளுநரம்பதெழுந்துமயிரோடுவிலாவினண்ணிடின்மேற்
புகலுநூற்சொல்லிலக்கணங்களுடையவொளிவாய்த்திருப்போகு
மகன்பொருந்துமயிரொழுக்கமென்மையாகியவிர்கிலக
திசமுங்கோல்பொற்கிடந்திடினற்றிருமாதினுமேம்படுசிறப்பாம். (௨௪)

ஒழுக்கமயிருள்வளைவாகிற்கைம்மையாகுஞ்சிவப்புற்று
ழுக்காறடையுமிடையிடையேசிதையிலணர்சேர்திருக்கு
மிழுக்கில்சமமாய்மயிரின்றியிதைமாழ்ந்தகிடாதாகில்
விழைக்குமுளைத்தோயர்கணவன்மிகவும்வேட்கையுற்றிடுமால். (௨௫)

மார்பின்மயிர்களுறிற்கணவன்மரிக்குமகலிமந்தனக
ளாரவருந்திப்பலவையுறுந்திடுமங்குலமோர்பதினெட்டுச்
சாரச்சிறிதங்குரினள்ளுந்ததையின்மயிர்களுறநதோங்கிச்
சேரமிகவும்பருத்திட்டாற்சிறப்புநீங்கித்திதுறுமால். (௨௬)

சலைவிசெறிமுலைபணைத்துக்கனத்தேரிவைவாய்த்திடையில்வெளி
யிலுறுபுடைத்துப்பரந்துயர்கண்கறுக்கிலருநன்றுமடவார்
வலதுமுலைத்தாழுயர்ந்திடிலாண்மகவைப்பெறுவன்மகுடம்போ
விலகுமிடதுமுலையுயரிற்பெண்ணேபெறுவளியல்பாமால். (௨௭)

வேறு.

அறவுமடிக்கணத்துமேல்வரவரநேர்ந்திடிற்சிலநாளபுகதாமாற்
பொறியுறுநல்வடிவமின்றித்திரிகைபோற்பரந்தெழுந்தாற்பொற்புறுதா
னுறுசவிளைபருத்திடினுமுயர்ந்திடினுநீண்டிடினுமுலர்ந்திட்டாலு
நெறியலதுநீங்கிடினுமறவுமுலையெனத்தொடுத்தனிதியன்றால். (௨௮)

செய்யகழுத்துப்புறத்தினென்பெழாதமைத்திடிற்செந்திருவின்வாழுந்
துய்யகவினயாதுமின்றிமேலெழுந்துதாழ்ந்துயரிற்றுயரினுழு
மெய்ம்மைதருதோளிணைகள்குறுகுதனீடுதலின்றிவேய்போல்வாய்ந்து
மொய்கொளழகுறிற்சிறப்பாந்தோளின்மயிர்முளைத்திடிற்சாந்துணைவன்றுனேகக

வேயனையதோளிலென்புமேலெழுந்தாற்கயினியாமுலைந்நாசமிக்க
தியநுசந்திகடைசைந்துதோன்றுவற்றீதின்றுந்திசழ்கைம்மூலத்
தாயமயிரோடுமுயர்ந்துநப்பருகுனெறியாகுமாழ்தல்செம்மை
யேயமயிர்நீணரம்போடிறியும்பெருளதாகிலியல்பன்றுமால். (௩௰)

திகழுமயிரின் றிரம்பென்புயராதிருந்திடுசெங்கரநன்றும்
பகருமயிரொன்புகரம்பெழிற்கொடியவெந்துயரிற்படிந்துமாழ்கு
மிகையினருந்தாமரையினனைபோலப்பெருவிரல்கள்விளங்கவேண்டும்
புகழொடுநீண்டோளிபெருகுமங்கைமுயல்வயிறெனவேபொருந்தலாமால். (௩௧)

விரைசெறிசெந்தாமரையினகவிதழ்போற்சேர்ந்துயர்மெல்விரல்களங்கை
நிரையினிடைவெளியின்றிப்பொருந்துதனன்றும்புறங்கைசிலவுமென்பு
புரையிலரம்பிவைவெழாதுநுதசைகண்மூடிமயிர்பொருந்தாவாகி
வரைவிலெழில்வாய்ந்தொளிரினிலைமைபெறுசெல்வமெய்திமகிழ்ந்துவாழும். (௩௨)

கையில்வரைபலவுமுறிற்கைம்மையாமகன்றிடினற்றிருவைக்காளுள்
செய்பரம்புயரிலிருந்திடும்புறங்கைசெறியமயிர்செறிந்திட்டாலங்
கைமிலைமணந்திடுகாதலனழிவனரம்பெய்தனிரப்பிழுழந்து
வெய்யகொடுந்துயருழன்றமாட்டாளுந்துயர்க்கடலில்வீழ்வாளே. (௩௩)

திருந்துகரத்திடையரு நறச்சேர்ந்தங்கறத்தோன்றிடாமலென்றும்
பொருந்துவரையாவுமிடையாதகயல்போற்கிடக்கிற்புனிதமாகும்
விரிந்தஞ்சம்போல்வடிவமெய்திடிற்வேந்தற்குரித்தாமகவையுவும்
பரிந்தவளைகுடையாலமங்கர்த்திடிலெப்பாக்கியமுமடையுமாதோ. (௩௪)

மன்னுகற்புவாய்ந்திடுஞ்செங்கயனிகரிக்கில்மருவுவலம்புரியையேன்
மின்னுகர்வடிவேற்கைவிறல்வேந்தற்குரியவளாக்குலைபோலெயிற்
றன்னவணிகர்க்குரியனுகத்துநெடுந்தூயசகடையெனவேயாரி
லெங்கிலமும்புகழுமவர்மனைவியாயறங்கள்புரிந்திடுவண்மாதோ. (௩௫)

கரிபரிவெள்விடைதோட்டிவச்சிரம்வெஞ்சரமாங்கயாழிபோலத்
தெரிவினர்சற்குரியள்கதைசூலம்வேல்கொலைவாள்சிறந்துகாணி
லுரியபொருட்குவைமுழுதுமுற்றிடிற்றனிபரிசனுற்றோர்க்கெல்லாம்
பரிவினொடமுட்டோறும்வேண்டுவனவுதவிநனிபடைக்குந்தானே. (௩௬)

வடவரவொட்டகந்தவளைவெப்பரங்கழுகுநரிவெருகுசெந்நாய்
கொடிதுறுதேளர்த்திடில்வெந்துயரெய்துமகுட்டங்குலவியோதொண்
டிடுவளைகளிட்டிகையினளவுறிற்காதலனிறக்குமெழில்வாய்ந்தங்
கடைவினுயர்விரல்கண்முனைசேர்ந்துநசந்துகண்மிகுதாதாங்னன்றும். (௩௭)

நீண்டுமயிர்நரம்பெழுவன்மையாய்வளைந்துநேர்ந்திடையினீங்கி
வீண்டுதயராமுகிர்கணீண்டுறவேசிவந்திட்டாலியல்பதாகும்
வேண்டிடில்லொளியின்றிப்பொன்மையாய்பள்ளமாய்விளர்ப்புற்றுளும்
பூண்டதுயருறும்புள்ளியாய்விளர்ப்பிற்பலர்களொடும்புணருந்தானே. (௩௮)

இலகுமுதுகிடையொடுவென்புதசைகொடுமூடிமயிர்களின்றிக்
குலவுமெழிலுறினன்றுங்கூன்மேவின்மயிர்ச்செறிந்திடின்பிறருடு
பலவுநரம்பெழுந்துதாழ்ந்துயர்ந்திடிற்றீதேபயக்கும்பஞ்சிறுங்கு
சுலவுநரம்பிடைவெழாதுயர்தசைகள்பொருந்திடினற்சுவனன்றும். (௩௯)



செய்யசிறுபுறத்தினரம்பெழின்மயிர்கள்செறிந்திண்டிற்றெறிக்கேணி
யைவுறவுற்றிடிற்றிதுமென்கழுத்துநாலேழ்மங்குலமதாகித்
துய்பவளப்போடுகழுகெனத்திரண்டுவரிமூன்றுபெறிற்றூய்தாகு
நொய்துநறுமிடிற்றுசியாம்பெருக்கிற்கம்மைமெய்துநால்கள்கூறும். (௪0)

மயிரொழினின்றிடிற்குறுகிலுலர்ந்திடினற்றிருநீங்கிவறுமைகூறும்
பயிலுறநீஞ்மடிப்பெய்தின்மலடியாகாடிகவின்பரிவிருந்தித
யியலுமிரண்டங்குலத்தினளவையாற்றிரண்டிடினல்லியல்பதாகுஞ்
செயிருறநீண்டிருகூறதாய்ப்பருத்துமயிர்களுற்றிற்றீயதாமால். (௪௧)

அசையுநரம்புறுமயிர்களிவையொழிவிலழகாகுமவளைந்திட்டாங்கு
தசைகளின்றுத்தறக்குறுகிலெனமயிர்களுறினவையதாங்கெப்பால
மிசையுமியல்பதுதசைந்தங்காடியினினெழில்பெறுகிலினுறுது
மிசையறவும்பள்ளமாய்மயிரினுறுவன்மைபாய்விரவிதாம். (௪௨)

கதிர்செறியுமொளியுமிழ்ந்துவட்டமாயுவாமதிபொற்கவினத்தோன்றி
முகிருநறுமணம்வீசுந்தாமரைபோற்சிறந்துமேலாம்முகமன்றுங்கி
ழிகருருண்டுபவளம்போலினிதுறுநேவார்வளைதாணிலகச்சேரின்
மகிழிநலகினிதவிச்குமன்னவர்தங்கிழத்தியர்மகிழ்வுகூறும். (௪௩)

சிறுத்துயிரப்பருத்தொன்றினிதழாமெனவுமோர்வளைதாண்சேரி
லொருத்துமிசிருவகன்றுகறுத்துறவேபருத்திடினுற்றிடவள்கைம்மை
பொறித்திடின்றிதழினடுச்சிறிதுயர்ந்தங்கழகுபொருந்திடுதனன்றும்
விறைத்துலர்ந்துநீண்மயிர்கள்பொருந்திடில்வெந்துயரினிடைவெதும்பிமாழ்கும். (௪௪)

நிலவுகதிர்மிகப்பரப்பிமுருந்தெறிந்துவெண்டரளநிரைத்தாலென்னக்
குலவுநகையெண்ணைங்கதெனுந்தொகையவாய்ச்சேர்ந்துகுழுமினன்று
மலதுபரந்துயர்ந்துநீண்டகன்றுறுபொன்னுறும்பசுமையாய்த்தெற்றுகிச்
சுலவியுறக்கரிந்துசிட்டிபோன்றிருக்கின்மிகுந்துயரங்கொண்டுசோரும். (௪௫)

செந்தனரியியைந்தநகையுயர்ந்திடிற்றுயரிழிபுத்தெற்றதாகிற்
காந்தளிறந்திடுநீங்கிற்பலர்களொடுங்கலந்துநாக்கடியிற்சேந்து
வாய்ந்திலகிமென்மையாயிருக்கிலினியனருகரமாட்டாதாகு
மேய்ந்தபணிநாவெனவேநுனிகவராயகன்றிடில்வெந்துயரினையும். (௪௬)

மன்னுமுயர்நாவிளர்க்கிற்புனலிலிறந்திடுங்கறுக்கின்மண்டிச்சீறுந்
துன்னிமிகப்பெருக்கினிரப்பெய்திடுநீண்டுயர்ந்திடினற்றூயயாவு
முன்னியருந்திடுமகலிலிகல்செய்யுமேவுகின்றமூக்கிருண்ணுக்குந்
தன்னிலுறுசிவப்பெய்தியிழுதெனவுமெய்ம்மையாய்த்தயங்கினன்றும். (௪௭)

புகலுமிவையன்றிபுண்ணுவறத்துற்றிநீண்டோங்கிப்பொருந்தியாகி
னிலிற்பிறக்கெர்க்கும்பாய்ச்சிறந்துநிரப்பெய்தும்வன்மை
லகமருங்கள்வர்தங்கண்ணுறவிளர்ப்பெய்திலணிகணிக்கு
திகழுருமைக்கறுப்பெய்திற்செய்கணவனைப்பிரிந்துதியங்கிச்சோரும். (௪௮)

மேவுதமிழெனுமூக்கின்மென்படஞ்சற்றுயர்ந்தெள்ளின் விளங்கும்வாசப்
பூவின்வண்ணமாயீன்றொரசுவடைமேலைபோகநேர்ந்த
யோனிருவெனசிறுத்திருப்படங்கழுந்தோர்பெறுசமனேனுலகம்யாவுங்
காவல்புரிந்துயிர்யாவுங்கைதொழுதேத்திடுந்திருப்பொற்கலினுய்வாழும் ௪௯

சேர்தருனிவளைந்திடையிற்பள்ளமாய்க்கருமையாய்ச்சிறப்பின்றாகி
யோய்ந்தருகுறுகிபருக்கிற்கைம்மையாஞ்சிலதியாமடிப்புற்றிட்டால்
வாய்ந்தவுருக்கேய்ந்தறவுங்குறுகிட்டாற்கலதியாஞ்சுவள்வாய்த்தொண்ட
லேய்ந்ததெரிவுறுநகண்ணடுகுருதிளங்கைசெய்திடினன்றாரும். ௫௦

சொன்னவகையலகைகைபுரிந்திடில்வெந்துயரினுறுந்தம்முங்காலை
யுன்னிமெல்லவிருமுறைமும்முறைதும்மல்விதியாகுமலதொன்றாத
மன்னுவிழிமணிகருத்தங்கிமைகருத்துமற்றைவிடம்விளர்ப்பதாகித்
துன்னிவரிக்கடைசிவந்துபைங்குவளையென்னவெழிற்றோன்றிற்றுய்தாம். ௫௧

படையனையவிழியுபரிநூபுன்போம்கட்டமெனிற்பலனாச்சேருங்
கடைகரியின்விழிநிகர்க்கிலகற்றிடல்குணநூருங்கவிஞர்வண்ண
மடையுமென்புருவமேனைக்குணநூல்வாய்த்திடாதறவேசெப்பி
னுடன்கணவனுயிருண்ணுமாழுமேலகதியாயுமுனநூசாரும். ௫௨

மேயபசுவிழிநிகர்க்கிற்கலகியினில்விழைவுநுனைமேதிக்கண்போ
லேயிடினுமாறுகண்ணுயிருந்திடினும்பாவிழுகருமிடப்பாலேனுக்க
லாய்துயாசதியுறுமலதுவலப்பாலேனுக்கின்மலடதாகுந்
தூயநிறந்தேனிறமாயிருக்கினிதிகும்புகழ்தோன்றவாழும். ௫௩

இலங்கிமையின்மயிர்பருத்தங்கறநேர்ந்திடாதெழிலாய்க்கறுப்பதேயிற்
றுலங்கிடுநற்திருப்பருத்துபபொன்மையாயிடையிடைதோய்வெளியேலாகா
பெர்லன்குழுமுமுகத்தில்விற்போன்றறமென்மையாய்க்கருமைபொருந்திமிக்கா
யலங்குகதிர்க்கொடிப்புருவமொன்றோடொன்றுறுதாகிலழகதாகும். ௫௪

புனிதமுறுபுருவமயிர்பருத்துநீண்டிருநடுக்கன்றுபொன்மையாகி
யனையதொன்றோடொன்றதறிலருந்துயரமேவிடுமஞ்செவியினுப்ப
ணினியசுழியிருந்திடினன்மகவுயிர்க்குமுரிப்பின்றியெழுந்தேயாங்கு
வனையின்மயிர்நரம்புயரில்விளைந்திடினுந்துயரிதுடுவைறுமைகூடும். ௫௫

திருநுதன்மூவிரலகலமாகிமயிர்நரம்பின்றிச்செவிருமின்றி
மருவுகதிரிளைவிரிக்கும்வெண்பிறைபோலிருக்கில்வளஞ்செறிந்துவாழுங்
கருதுசோத்திகைநேசைசேர்ந்திடின்மன்னவர்க்குரித்தாய்க்கலந்துசேரும்
பரிவினரம்பொடுமயிர்களணிந்திருக்கிற்சேர்ந்திடுவள்பலர்களோடும். ௫௬

சீர்திகழுஞ்செவிமேந்தோர்கையுநிற்சிறப்பெய்துஞ்செயியசென்னி
யேரினுயர்ந்திணுவட்டமாயழகாயிருந்திடினுங்கண்டவாகு
மார்வுறவீற்றிடில்விதலையாகீண்டுப்பலர்கடமைநன்றதுசோரு
நீர்வுபயன்றியுதன்றுவிரிந்திடில்யாருமிகழ்ந்துவேசிரப்பிணைய்தும். ௫௭

301



ஆறலினியதுமவனர்ந்துகடைகுழன்றங்கநோக்கினழகுத்த
நிறையிருளிருண்டுமணமடுத்தனியின்முறைமுறையாமுதிப்பதாகிக்
குறைகுதனீண்டுமின்றிவளர்கடையிற்பிளப்பின்றிக்குரவுமென்மை
யுறவிலகுமொளிசிறந்துசெய்த்திடிற்பூங்குழலினிதென்றுரைப்பர்மேலோர். ௫௮

இவ்வகைதானின்றிவளர்கடைபிளந்துவெளிவெளியாயிடையிற்றேன்றி
யவ்வியல்பிடுஞ்சுருண்டுதுழைவின்றிவடிவமின்றியுறவுநீண்டு
வெவ்வியசெந்நிறத்தாய்ப்பொன்னிறமதாயிடில்வெந்துயரினுழுஞ்
செவ்வியநெற்றியிற்புருவத்திடையினிற்சம்மறுவுளதேற்செகத்தைக்காக்கும். ௫௯

மல்குமிடப்புறத்தினிடைதழும்பொடுவன்புள்ளிசெய்யமறுவுண்டாகி
னல்குரவுநீங்கும்வலமூலையதனிற்றழும்புமறுநலத்ததாகிற்
பல்குடும்பந்தாங்குமொருபாலகனைப்பெறுவள்பின்னும்பதமைபோல
வொல்குமிடையார்நாவினர்தம்மையெழில்வாய்த்தவயிற்றுயிர்க்குமன்றே. ௬௦

தன்னுமறமூக்கினுதியிடைசெனிலசாளுந்தூயவேந்தர்
நன்மனையின்கிழத்தியாய்நலம்பெருகுமில்வாழ்வுநணுகுமாமுன்
சொன்னமறுக்கறுப்பாகிற்றுயருழந்துகைம்மையாய்ச்சோருமின்றே
யின்னுயிர்நற்கணவனைத்தான்பிழைத்துவேலைவரோடுமிணங்கிச்சேரும். ௬௧

மற்றுமிடப்புறக்காத்திற்கழுத்தினிலஞ்செவிதன்னின்மகிழ்கபோலத்
துற்றமறுவுளதாகின்முன்னொழிற்குமாரனைப்பெற்றுவப்பின்வைகுங்
குற்றமிலாவடிமுதலாயுயர்ந்தியளவினுமெட்கொருகதேய்ப்பச்
சொற்றவடுத்தயங்கிடினல்குரவுழந்துநாடோறுந்துயரினுழும். ௬௨

மத்தகத்தின்முத்தலைவேற்பண்டையநிகர்வரையதுநின்மதர்வைவேற்கட்
புத்தமுதமொழிமடவாராயிரவர்வழிபடவேபுவியின்வாழுங்
கொத்துமலர்க்கரத்தினிலுந்தியின்மார்பின்வலஞ்சுழிகள்குலவனன்று
மொய்த்தமுதுகிடையின்வலப்புறத்துவலஞ்சுழியுறினன்முறையின்வாழும். ௬௩

ஆக்குயர்பின்புறத்தில்வலஞ்சுழியிரண்டாகிற்பெருகுமாயுள்செல்வ
மோங்குமல்குலடிப்பாட்டில்வலஞ்சுழியுற்றுறிலரசற்குரியளாகும்
பாங்கவயினுற்றிடுபாண்டிலஞ்சுழியதறில்வளரும்பரிசுதவாணு
டீங்கிலெழின்மைந்தலாயுட்பெற்றுமலர்த்திருவெனவேசிறந்துவாழும். ௬௪

அழகுறுநற்கடிதொடங்கியல்குன்மட்டோர்சுழிகிடக்கிலணையுங்கேள்வன்
குழவியொடுமுடியுமந்தக்கடிமுதலாய்வயிறளவுகுறித்துமுன்சொ
லிழிவுசுழியுறிற்கணவனிறந்திடுமாங்கிச்சுழியிரண்டுண்டாகிற்
பழிமொழிகூறிடவமூலக்கணியுங்கற்பிணையிழந்துபலரைத்தோயும். ௬௫

கருமுறுகண்ணினிற்சுழியதுறிற்செம்மையாகுமன்றேற்கறப்பதே
மருவிடுமூக்கினிற்சுழிகளுறிற்சுவாஞ்செவிமீதல்வண்ணம்வாய்ந்த

சுரிகுழலில்வளிருச்சியிடையில்வலஞ்சுழிய [illegible] பணிவன்மாயும்
பொருவிலுச்சிதன்னிலெ [illegible] திருவய [illegible] பொலிவுறீக்கும். [௬௬]

நேயநெற்றிமீதுவலஞ்சுழியதுறிலவடவனைநீக்குதனன்றாரு
மாயசுழிவலமிடமாய்ப்பிடரினெய்திலோராண்டிலவனைந்தகேள்வன்
வீயுமழகொம்துயில்ந்பறகறிக்கிற்பலவுமிலக்கணங்கண்மேவித்
தூயவளொன்றாழுமணம்புரிந்திடலாகாதென்றுசொல்வர்மேலோர். (௬௭)

ஆர்வுறுமெல்லாமியினின்மென்சுழியுளதேற்கன்னியுங்கற்பதுதானிக்கு
மேரிலருநான்மொழியுமிலக்கணங்களுள்ளதெல்லாமிருந்ததேனுஞ்
சார்வுறுநற்குணம்பொருந்துறுவேண்டுங்களபருவமயிலஞ்சாயற்
சிருவுமகளிரிலக்கணமுறைத்தோங்கற்பினியல்செப்புவோமால். [௬௮]

## கற்பியல்.

### வேறு.

பெருமைசேர்கணவனுண்டபின்புதானுகர்தலன்றே
னிருவிழிதுயிலிற்றுஞ்சலெழுதன்முனெழுதல்கள்வ
னருகுறிற்பணிகள்பூணலகலிலப்பணிகணித்தல்
பொருவில்கற்புடையமேன்மைப்பூவையர்செய்கையாமால். (௬௯)

முதிருமன்புடையகேள்வன்முனிந்திடிலொறுக்கின்மாறு
யெதிருறவின்றுவார்த்தையியம்பிடாரின்பமாவார்
வதியுமில்விடுத்துநீங்கார்மனையகல்பொனாசோக்கார்
நிபெறுவடமீன்போன்றகற்புடைமாதர்தாமே. (௭௰)

அல்லினிற்பகற்காலத்திலன்பரோதேனுங்கேட்டு
லில்லையென்றுரையார்தங்களில்லறக்கருமமல்லால்
வல்லமற்றொன்றுஞ்செய்யார்வறிதுரைவழங்கார்வார்த்தை
சொல்லின்மெய்ம்மொழியேசொலவர்தூயகற்புடையோர்தாமே. (௭௧)

பகர்விழவணிகளைக்கண்வர்ப்பணிதனுளன்பு
தகவுடனோப்பல்செய்யதண்புனலதிகளாடன்
மகிணரேவலிற்செய்வார்வணகலன்மாற்றுட்டியின்
மிகவுமன்புறுவார்சாலிமீனிலுங்சற்புமிக்கார். (௭௨.)

ஏயுமப்பினர்தாயில்லாவில்லிடைவகார்கேள்வ
ருயுள்போமென்றுநாமமறைகிலாருர்துமிச்சி
னேயமாயமுதிதுண்பார்நெறியொடுமிருந்தபின்னர்ப்
போயப்பாலிருப்பாமிக்கற்புடைப்பூவைமாரே. (௭௩,)

இரவலர்துறந்தோர்தெய்வமிறந்தனோரேவல்செய்வோர்
வருவிருந்தினர்க்குந்தங்கண்மகிணனதருளின்வார்
குறைகழற்கேள்வனேதங்கேட்குமுன்குறிப்பினீவா
ருரியகாதலனைத்தற்றுவேறாரிடம்போந்திடாரால். (௭௪)



மனையறத்திலுக்குவேண்டும்வளம்பலவீட்டுவார்க
ளனையவைவறிதிற்போக்காரன்பருக்கினோங்கப்
புனிதமாய்மஞ்சண்மெய்யிற்புனைகுவார்மகின்றேனுந்
தினமுறுநோயரோனுஞ்சேருவார்கற்புளோரே. (௭௫)

ஒருவரோரிளைக்கிற்கையைநீட்டியங்குரைத்திடார்கள்
குரவரோதேனுமன்பாய்க்கொடுக்கினுநோர்கையால்வாங்கார்
தெருவின்மன்றிடத்தினின்றுசெய்கருமங்கள்செய்யார்
பெருமைசேரறிவின்மிக்கபெருந்தகைக்கற்பினோரே. [௭௬]

இறந்துளோர்தமதுமெய்யையிருந்துளோர்க்கொப்புச்சொல்லா
ருறைந்ததம்முடம்பினுள்ளமாகிலையுதிர்த்துச்செல்லார்
செறிந்துசென்றொருவர்தம்மைச்சினந்துரைசெய்திடார்க
ளறந்தலைநின்றமேன்மையறிவுடைக்கற்பினோரே. (௭௭]

உடுத்தவாடையினுற்றார்ந்துத்துரையிடையுறைந்திடார்கள்
படுத்தகட்டிலின்மீதேறிப்பதம்படநின்றிடார்கண்
முடித்தபூமோந்திடார்கண்மோந்தபூமுடித்திடார்க
ளடுத்துநாடோறும்பூச்சாந்தணிந்திடார்கற்புளோரே. (௭௮)

கிளர்பொருளிழக்கில்வாடார்கிடைத்திடாவவற்றைநாடார்
வளமுறுபொருடான்கைக்குவராமையான்மனமுங்கோடா
ருளமகிழ்கருமமெல்லாம்வேதியருரையிற்செய்வா
ரளவில்பேரறிவின்மிக்கவருந்துதிக்கற்பினோரே. [௭௯)

சண்டனபுகலார்கேட்டல்கனவிலுமுறையாருண்ட
வுண்டியைப்பழியார்தான்செய்யுதவியையறத்தைநோன்பைக்
கொண்டுளம்வியவார்மற்றோர்கூறுமந்திரமுங்கொள்ளார்
தெண்டிரையுலகின்மேன்மைசிறந்திடுகற்பினோரே. (௮௰)

கணவனையுண்டதென்னகறிபெற்றீரென்றுகேளா
ருணவின்மற்றோரையேனுமுண்டதுவினவார் [illegible] கோ
ரணைவுறிலெதிர்போய்நின்றங்கழைத்திடாராமை [illegible]
குணமுறைபேர்கள்சொல்லிக்கூப்பிடார்கற்புளோரே. (௮௧)

மிக்கதன்கணவனூர்தனிறலிலைமிதித்துநில்லார்
புக்கமீர்மருந்துஞ்செல்லார்வலஞ்செய்துபணிந்துபோவார்
தக்கநல்வார்த்தைபேசிற்றடுத்திடைபேசார்முன்னின்
றொக்கவும்பேசார்மேன்மையுறுதிசேர்கற்பினோரே. (௮௨]

அழகுடைமகளிர்தாமென்றறிவிலாதுரைப்போரோடும்
பழகிடார்தங்கண்மெய்யைப்பார்த்திடார்பழிப்புச்சொல்லார்
விழைவுறுகணவனன்றிவேறொருவரையுநோக்கார்
குழலிணைக்கையாற்கோதார்கோதறுகற்பினோரே. (௮௩]

உலைதமக்கென் றுவையாரொருகையாற் பாணிநல்கா
ரலர்விளக்கவியூர்வாயாலடுப்பிடைநெருப்பையூதார்
கொலைபுரிந்துண்ணார்நீண்டகூந்தலைக்குலைவிசார்
கலைபலர்நடுவினின் றழுதறிடார்கற்புள்ளோரே. (௮௪)

ஒருவரும்விளக்கும்கைகினுடுறநடுவேபோகா
ரிருகையானீரையள்ளியுண்டிடாரிருகையாலே
மருவுதம்முடம்பைத்தொட்டுச்சொறிசெய்யார்மாலைப்போதங்
கருதியகாலைப்போதுங்கிடந்திடார்கற்புள்ளோரே. (௮௫)

மன்னவன் றுஞ்சிற்றுஞ்சல்வாழ்தலிற்றும்வாழ்த
லன்னதன்புத்தநாளிற்றன்புறத்தாயகற்பின்
கன்னியரியல்புகேள்வன் காலவிளக்கிடுநீர்கங்கை
யென்னவாழ்தெய்வர்தானுங்கணவனென றெண்ணுவாரால் (௮௬)

பொற்புடைமடநல்லார்கள்பூத்திடுமூன் றுநாளு
மற்புதமுகங்காட்டார்களாங்கவருறத்தப்பேசார்
நற்புனலிடைதோய்நதெய்தினண்பர்தம்முகத்தைப்பார்ப்பா
ரற்றைநாளின்றேற்சிந்தித்தலரியநோக்குவாரால். (௮௭)

காதலனழைத்தபோதிற்கடிதுமுன்னெய்துவார்க
டாதைதாய்தனினும்பெற்றதுணையர்கடனினுமேதான்
கோதிலாக்கணவன்மீதுகுழுமுமன்புகூர்வா
ரோதயில்கற்பின்மிக்கவெழிலுடைமாதர்தாமே. (௮௮)

ஒங்குபேருலக்கைதன்னினுரலம்பிமுறத்தில்வாசல்
…ங்குறுபடியின்வைகாரகன் றிடுந்திருவெல்லெண்ணிப்
பாங்கொடுமிரவிலேனுநம்பகலிடைப்பள்ளிமீது
தூங்கிடார்கற்பின்மிக்கநுடியிடைமடநல்லாரே. (௮௯)

இன்பநற்கேள்வன்வாய்மையின் றிநோன்பிருக்கிற்பூசை
யன்கொடுபுரியிலன்னோர்நரகிடைத்தாழ்துவார்க
ளன்பர்தம்பழிசொல்லோரை…வருடன்வெகுண்டுசொல்வோர்
வன்கொடுநீசரிராயர்மறுபிறப்பெய்துவாரால். (௯௰)

மருவுதங்கணவன்சீறில்வீந்துமுன்குறுகிவைவோர்
பெருவலியுமுவையாகப்பிறப்பர்மாற்றவளைக்காணி
லருகுறச்சென் றுசீறிக்கூறையதாவாரன்பர்
பரிவுறப்பசிப்பவுண்போர்பன் றியிற்றோன் றுவாரால். [௯௧]

அறிவின் றியேதிலன்றனைமருகண்டுவக்கின் றோர்கண்
மறுபிறப்பெய்திற்பேயின்வடிவெடுத்தழலுவார்க
ளிறைவனையிகழ்ந்துதாய்தன்னில்லுறைப்பதையோரைக்
கறுவொடுகாலனூதர்கதழெரிநிறையத்துய்ப்பார். (௯௨)



உரியதங்கேள்வன்வீபிலுடனெரிமூழ்கப்போது
மரிவைதான்வழியின்வைக்குமடிக்கசுவமேதயாகம்
புரியுமப்பலனுங்காலபடர்கள்கைபதித்துக்குற்ற
பொருவினண்பினர்தம்மோடும்பொன்னுலகெய்துவாரால். (௯௩)

அனைவுறுகணவன்பாவியாகினுமன்பனோடு
கனமலியெரியில்வீழ்ந்தாள்கற்புடையவளேயென்னி
னினுகுறுமவளைக்காணினமனுளமஞ்சியந்நா
டுணைவனைவிடுத்துப்போவான்சூழ்ந்திடுந்தூதரோடும். (௯௪)

நாயகனுடனேகூடநண்ணியேயெரியின்மூழ்கு
மேயகற்புடையமாதர்மெய்ம்மயிரொன் றுக்கேதா
னேயபேரொளிகள்கான் றங்கிலகுசெம்பொன்னினாட்டி
லாயிரகோடிகாலமன்பரோடினிதுவாழும். (௯௫)

மேன்மைசேர்கற்புமிக்கமெல்லியலாளைக்காணிற்
பானுவெண்மதிசேர்ந்தும்படரொளிமழுங்குமன்றான்
மானநற்றந்தைதாயர்மணம்புரிகணவன்மூவே
ழானசுற்றங்களெல்லாமழிவிலாத்துறக்கமேவும். (௯௬)

தூயகற்புடையமாதர்துலங்குசேவடிகடோய்ந்த
தாயவெவ்விடமுமேன்மைத்தலத்தினுமதிகமாகு
மேயநன்னதிகள்யாவுமேவியதங்கள்பாவ
மோய்வுறக்கற்புமாதருவந்தினிதாடவெண்ணும். (௯௭)

பெருகுகற்பதனைநீத்தபேதையர்தமைப்பயந்த
வுரியதாய்தந்தைதங்கள்வழியினிலுள்ளோர்கேள்வன்
மரபினில்வந்துளோர்கடம்மையுமறுகுற்றேங்க
வெரிசொரிநரகினூங்குடியெனவேற்றுவாரால். (௯௮)

பொங்கர்சூழ்மாடகூடம்பொலிவுற்றதேனுங்கற்பு
மங்கையரின்றிப்பேய்சூழ்வனமெனவழங்குமந்த
டிங்கள்செங்கதிர்வெங்காற்றுச்செவ்வியகற்பின்மின்றோ
ரங்கமேதீண்டிலுள்ளமஞ்சிடவெருவுவாரால். (௯௯)

ஆர்வுறுகணவன்மாயவணியிழந்தவளையாவி
தீர்வுறுமாக்கைபோன்றேயாவருந்தீண்டிடார்கள்
சார்வுறுவழியிற்காணிற்றடையெனத்திரும்புவாரன்
னோர்மொழிவதுவும்வெய்யவிடமெனவுளாசெய்வாரால். (௱)

கற்புடைக்கைமைமாதர்கலந்ததம்மொழுக்கநீங்கி
லற்புடைக்கிளைஞரோடுமருநரகழுந்துவார்கள்
பொற்புடைக்குழலையன்னோர்போக்கிடாராகிற்கேள்வன்
மற்புடைப்புயத்திற்பாசம்வழங்குவார்மறலிதூதர். (௱௧)

மிகத்தயவுடையகேள்வன்வீட்டிடில்விதவைமாதர்
பகற்பொழுதொருபோதுண்டிபாசிலேபாய்விதித்தே
யகத்திடைமண்மேற்றுஞ்சியரிபுரோன்யாற்றிப்பேன
மகத்துவப்பூசைசெய்தமலரடிவணங்கவேண்டும். (௱௨)

விதவையரிந்தவாறுவிரதங்கண்மிகவும்பூண்டு
முதிர்தவமியற்றினோன்முடியுமிக்குயர்போகங்க
ளிதமுறப்பெற்றுமுக்கணிறைவனுாருளும்பெற்றுக்
கதமுறுவினைகணீங்கிக்கதியினையடைகுவாரால். (௱௩)

இன்னதாமகளிர்தங்களிலக்கணங்கற்புமேன்மை
தன்னையுங்களுக்குநானுநதகவுடனுரைத்தேனிப்பான்
மன்னுமாசாரங்கூறுமகிமையைமொழிவேனென்றே
துன்னுமாதவர்கள்கேட்பச்சூதமாமுனிவன்சொல்வான். (௱௪)

மகளிரிலக்கணங்கூறியசருக்கமுற்றும்.

ஆசுத்திருத்விருத்தம் — ௩௯௰௨

## ஆசாரங்கூறியசருக்கம்

ஆனையநன்மணங்கள்கூறிலார்ச்திரும்பிரமந்தெய்வ
மினையவாரிடம்பிராசாபத்தியமெனார்கருமின்பங்
கனிவுறுமசுரங்காந்தருவம்ராக்கதம்பைசாசம்
வினவிடிலிவைதானெட்டுமணமெனவிளம்புநூலே. (௧)

உலகின்முற்பிரமமோதிலொருவனையழைத்தமிக்க
கலனொடுமியங்களார்ப்பக்கன்னியையளித்தலாகு
மிலகுமதத்தெரிவையீன்றவின்பமார்செய்தான்முவேழ்
குலனுமுய்ந்திடவேயன்புகொண்டீறநற்குணத்தின்வாழும். (௨)

மற்றுயர்தெய்வநல்லமகளினையழைத்தேதோற்கின்ற
கற்புறுமகவைநல்கும்பணக்கன்னிதந்த
பொற்புறுபுதல்வர்தாமேபுனிதராயினிதுவாழ்ந்தே
யற்பொடுமரபீரேழுமருங்கதியடைவிப்பாரால். (௩)

மிக்கவாரிடமிரண்டுபசுவெருதினிதுவாங்கித்
தக்கதன்மகவையீதறகவினம்மாதுபெற்ற
மக்கடானினிதுவாழ்ந்துமரபுமூவேழுமின்பத்
தொக்கநற்கதியிலாழ்த்துமெனமறைதொகுக்குமாதோ.

பெருகுநன்னெறிப்பிராசாபத்தியம்பிறங்குகன்னி
ரிகையைத்தீமுன்னுந்தேயளித்தலங்கவள்செய்மூவேழ்
வருங்குலங்கதியிற்போக்கும்வழங்குமிந்நான்குமேன்மை
யிருபிறப்பாளர்தங்கட்குரியதென்றியம்பும்வேதம். (௫)



துன்னுமாசுரமேமிக்கதொகுபொருள்விழைவின்வாங்கிக்
கன்னியையளித்தலாங்காந்திருவந்தான்காதல்கூர்ந்து
கொன்னுயர்கன்னிதானுங்குமரனுநயம்பிற்கூடன்
மன்னும்ராக்கதமோர்பின்னைவன்மையிற்பற்றிக்கோடல். (௬)

சொல்லுமிம்மணங்கண்முன்றுற்றுயநல்லரசர்க்காகும்
கல்லுளைக்களிப்பிருலேகளவிருந்துமுறும்போது
புல்லுதல்பைசாசமாகும்பொருவிலிவ்வுலகிவித்த
வல்லல்கூர்மணத்தையாருமிழிவெனவறைவர்மாதோ. (௭)

வேதியர்முதலாயுள்ளநால்வரும்விதியிற்றத்த
மாதினைமணக்கிற்செங்கைபிடித்திடன்மரபதாகு
நீதிசேர்மறையோர்வேந்தர்கன்னியைநெறியின்வேட்கி
லோதுசெங்கையிலம்புபிடித்திடலுரிமையாமால். (௮)

பழமறைவேதர்வேந்தர்பரதவர்மகளிர்வேட்பி
னுழவுகோல்பிடித்தனன்றுமுயர்வேதர்முதலமூவர்
வழுவில்வேளாளர்மாதைமணக்கிலம்மாதுநன்றே
சழுகுமென்றலைசெங்கையாற்பிடித்திடலதுநன்றுமாமால். (௯)

ஓதுநன்மணத்தில்வேட்டவொண்டொடிமாதர்நல்ல
சாதன்மைத்தனையபெறுக்களிப்பொடும்வாழ்வார்
தீதுறுமணத்தில்வேட்டசேயிழைமாதர்சிலர்
பேதுறுமக்கட்பெறுவரொன்றுணைப்பர்மேலோர். (௰)

வேறு

புளகமுலைமடவார்கள்பூத்தநாண்முதன்மறைகள்புகன்றநானி
லுளமகிழப்புணர்தல்விதியாங்கருப்பமுறுஞான்றுமும்பர்சோமா
னளிபெறுமாத்தங்கும்வரத்தாலணையலாந்திதியினிவைக்காகாரனில்
வளமுறுநற்பருவமைந்தின்மருவிடில்வெங்கரவெய்தி நருமவாரால். (௰௧)

மறைபுகலுனிற்றனதுமனையலது பிறர்நலங்கண்மருவலாகா
பொறியிலகுபுணர்முலையார்பூத்தநாளலதுபுகலீராறென்றின்
குறுநாளினுதித்தமைந்தனிரட்டைநாளொற்றைநாளுநகதுகூடிற்
பெறுவர்தநக்குழனெடுங்கட்பிறைநுதலந்செரின்மாதைப்பெட்பினோடும். (௰௨)

ஏர்திகழ்நன்மகவுலமெய்திடற்கூடுதலாகாதியலார்திங்கட்
சார்வுறுநாட்பொருடநாட்டணைவாரமணந்திடினற்றலைகலைநலப்
பார்புகழுமகவுயிர்க்கும்படைசெழுங்கட்டிருவனையபாவைதன்னை
யார்பொருள்கொண்டளித்திடில்வெங்கரகின்மலப்புழுவருந்தவமூழ்குவாரால். ( )

விருப்புறுவேட்டகமதனிற்பொருள்கவர்ந்தண்டோர்கணைநகிலிடையிழ்வார்
பொருப்புறழ்பொற்புயக்கணவனுள்ளக் குறிப்பதுணர்ந்தொழுகும்பொருவிலாத
மருப்பினுயர்கோட்டுமுலைமடநார்செங்கண்மாதுறையுமனைவீன்மாரிற்
றிருப்பயினுங்கரியமுகிலினிதிருக்குமுலகினுமேசிறந்ததாமால். (௧௪)

கையில்வாட்படைதாங்கிக்காவலர்கைப்பொருள்வாங்கவெனக்கிட்டஞ்
செய்யும்வாணிபம்புரிதல்விதித்திடாமனைக்கினெருநிருவலிவட்டல
பொய்ம்மைசேர்பொருள்வேட்டுமறைபுகலாதுழிபுரைந்தபயோதுபோகனை
மெய்ம்மைசேர்நெறிவழுவல்வேதியர்க்காகாதெனவேவிளம்புநூலே. (௧௫)

மணிக்குடத்திற்புனன்முகந்துவருதலாற்கனிரும்பிற்கரிகள்வாய்ப்பத்
துணித்திடலாலனைத்திடலாற்றார்ப்பகாலிற்தணந்தைச்சுடுதலாலு
மணிப்புறுபாவம்போக்கும்பஞ்சமாவேள்வியெனப்பதகருரைத்தக்
குணிப்புறுவேள்வியைநாளுங்குறைவிலாதினிதாற்றல்கொள்கைத்தாமரல். (௧௬)

அருமறைகள்பகர்ந்திடுதல்பிரமமகம்பிதிர்மகந்தற்பணமதாகும்
பரிவின்முறைதினமோமம்பற்றிநித்தேவமகம்பலிதாமுய்த்தல்
வருபூதவேள்வியுவந்ததிதிகளுக்களித்தன்மானுடமாம்வேள்வி
கருதிப்புரைத்திடிவினைகளேகதுமகமெனமறைகள்கழறுந்தானே. (௧௭)

இனியபாலினிற்சோற்றிற்றிழிந்திருப்புனல்பழுக்கிலியற்றொத்தத்
தனையியற்றலாமேயிலநிதியர்கள்புரிவெதிர்போய்த்தகயெற்றெழுந்து
கனியமுகமன்கூறியவர்பூசையனைத்திலினைத்தகருதினாளும்
புனிதமுறச்செய்தருமம்யாவையுமேம்பாடுமெனப்புகலும்வேதம். (௧௮)

இடிபவியினிடையதிதியரினடிசிலளித்தல்லாற்பயிடோரான்
மடிவுறுநோயினர்சிறுவர்சூன்மகளிர்வேட்டுனாண்மகளின்றேருக்
கடியின்முனம்வழங்கியபினதிககலைவல்லோர்க்குமடிசிறனனை
யுடன்மகிழ்வினளித்திடலேகன்றுகுமெனமறைகளுரைப்பதாகும். (௧௯)

புங்கவர்தென்புலத்தர்துறந்தோர்கிழிந்தசேடமும்புந்தமுதுண்டிக்காம்
வங்கநெடுங்கடற்புவியிலுறைசேர்மதியர்கடுநகர்தார்வாரே
றங்கவர்கடமக்கன்னத்தாலுயிற்றிடையடைபுமன்னகாவிற்
றங்குபுழுவாகுமெனமறையனைத்துமொழியுமெனப்பர்தக்கமேலோர். (௨௰)

தெரிந்தமறையவாரசர்வணிகர்தினமிருபொழுதும்வயிச்வதேவம்
பரிந்திடாதொளிலொழுக்கந்திறம்பலாவிழிந்தபொறிமிலர்போலாகி
யரந்தையுறமிகமெலிந்துமறுபிறப்பிற்கருங்கொடிபோலலைந்துசோர்வார்
விரிந்தமறைபுகன்றபடிவழுவுறுதியற்றிடில்விண்ணுலகில்வாழ்வார். (௨௧)

உதித்திடுமட்டமியாதிதிதிபதினைங்கோடியுமுழுவாவிலெண்ணை
விதித்திடுமென்றசைப்புழுக்கன்மயிர்விலைகண்முடித்திடுதல்விலக்கதாகுங்
கதித்தெழுபுன்முதலவற்றினன்றேறுங்கிள்ளுதற்குக்கருதலாகா
மதித்திடுநல்லொழுக்கநெறிவழுவிலார்தமைத்துதிக்குமறைகடானே. (௨௨)



305

வேறு.

றன்னுறுகாலைமாலையம்போதில்வாளராவிழுங்கிடுபோதிற்
றன்னுநீரடையிற்பானுவைப்பார்க்கிற்றூயதன்றுருகுந்தன்னிழலே
முன்னுறுபுனலுட்சால்புறநோக்கிமுதிர்துகிலின்றியேமூழ்க
லன்னுவான்கனிறைக்கவர்தல்பொய்யுரைத்தலகத்திடைநிறுப்பினுந்தீதாம். (௨௩)

வானுயர்கோயின்மறையவர்துறந்தோர்மனுநெறிவேந்தர்சொற்புலவர்
நானநீர்க்கும்பமையவிநறுநெய்நலங்கெழுமரபினிலுயர்ந்தோ
ரார்வேயயினிசதுக்கநீண்மரனோடரசுநன்னெறியெதிரடையி
னேனையங்கவற்றைவலங்கொடுபோதலியல்பெனவியம்புநான்மறைகள். (௨௪)

வளர்மனையவளோடினிதுணலாகாமற்றவளிருந்துழிநோக்கி
னிளநலவனிதையறனின்மைந்தனையேயீன்றிடும்பூத்தவடன்னைக்
களவினுமாகாதொடுவதூணருந்தல்கனவினுநினைப்பதுமாகா
வுளமகிழ்மடிசிலருந்திடுபொழுதினுயர்தவிசுறைந்திடலாகா. (௨௫)

பொங்கழல்வாயினூதுதல்சிதிப்பொருந்துமன்னுயிர்குறைத்திடுதல்
செங்கையாலினியபுனன்முகந்துண்டறிகழூற்பகலிடையுறங்க
லங்கணிந்திரவிற்காட்டுதறனிபோய்மடிமையாயுருந்துயில்புரித
றங்குதூசகன்றமகளிரைநோக்கறனிவழிச்சேறன்மிக்கருந்தல். (௨௬)

சிந்தையுற்றருந்தறுயிலிடையெழுப்பல்செறியிருட்கங்குலினனமோர்
வந்திடுவெண்ணையயின்றிடலாடல்வாய்ப்புழிப்போய்மனஞ்செலுத்த
லந்தியுங்காலைநேரமுந்துயிறலாடனலருந்துழியோட்ட
லுந்துறுகாலைவெயில்டையிருத்தலுகிர்மயிர்துனியினைக்கடித்தல். (௨௭)

விரிகுழலதனைநடப்புழியுலர்த்தல்பிறர்மனைமென்றுகில்புனைத
லிரிவுறவேற்றிற்பசுவினிலிவர்தலியல்பிலாதவரொடுகூட
றரியலர்தம்மைச்சேவைசெய்திருத்தல்சவருகூடுபுகைபடச்சேறல்
பரிவொடுபுனலிற்படிந்தபின்செய்யபாணியான்மேனியைத்துடைத்தல். (௨௮)

வம்பலனயின்றகலத்திடையயிலல்வாயிலிலாவழிச்சேற
னம்பமென்றடைந்தோர்க்கிடர்வரவிழைத்தருணையிலுதுகளுடுயில
லம்பலமணுகிச்சூதினிதாடலாசனங்காலினாலகற்றற்
கம்பிதமுடனீள்கைசென்னிவேறோர்காரணமின்றியேபுரிதல். (௨௯)

உயர்நகமதனைநகத்தினாலுரிஞ்சலுடைந்திடுகலத்தினிலுண்ட
லியலுறுகுடங்கையிட்டனமருந்தல்லலகிடுபள்ளிமீதிருந்து
பயில்புனல்பருகறுய்த்திடல்செடித்தனின்றுதண்புனல்பிழிந்திடுத
லயிலுறுமிச்சிலோடேகனள்ளிரவிலானநம்பாகடகருந்தல். (௩௰)

தூயவாண்முகத்தோடங்கைமென்மலர்த்தாடோய்ப்புனல்புலர்ந்திடாதுறங்க
லாயதாளிணையிற்றெருகெழலோடுமாசமனத்தையாற்றுதல்கை
சேயகான்முகத்தினிதுறுதெண்ணீர்சேர்த்தருதின்னமுதருந்த
லேயநான்மறைமைப்பின்னவர்க்குளாத்தவிருகையாலவன்றலைசொறிதல். கக

அடிக்கடிமெய்யிற்கரங்கொடுபுடைத்தறன்வயிறடங்கிருமலங்கள்
விடுத்துமுன்னோக்கல்பிறர்மனைவிழைதல்விழியுபார்மயிர்பறித்திடுதல்
கொடுத்திடல்விலக்கன்மடிமையிலுழுகல்குறளொடுபொய்தவறுரைத்த
னடுக்கெடமொழிதனிந்தனைபகர்தனவையெனப்புகன்றனர்நல்லோர். (கஉ)

இருங்குலங்கல்வியுருவொடுதிருவிலிழிந்தளார்தமைமிகழ்ந்துரைத்த
லருங்கொடும்பசியாலருந்திடாரிடத்திலருந்தல்பெட்பெவற்றிலுமார்த
னெருங்குவெஞ்சினத்தானெறியலதுரைத்தனித்தமுர்த்தனையேபுகழ்த
லொருங்கினம்பொறியையடிக்கடிதீண்டனாத்துதியுரைத்திடறிதாம். (கங)

அந்தணருயர்ந்தோர்கடவுளரரசருந்தவர்கற்புடைமகளி
ரிந்தவைவரையுமிகழ்ந்திடலொருவனேகுழித்தாள்பணிந்திறைஞ்சல்
புந்திசெய்தொருவர்குறைசொல்வதாகாபொய்கைநீள்குளங்கிணற்றுடி
லுந்திருகைமண்ணெடுத்தெறியானேலவன்றவமகழ்ந்தவர்க்குறுமால். (கச)

இயல்பிலாவாய்மைமெய்மைசேயெனினுமியம்பொணுதினைக்குவதேனு
மயல்கொணோய்செய்யும்பொய்சொலாதொழிகவறிஞரோடினைக்குகாளு
நயஞ்ஞமுரைத்துளத்திலெஞ்ஞான்றுநன்மையேகுறிக்கொளல்வேண்டும்
செயலில்வெஞ்ஞிற்குறளையிற்றுதிற்செறிபொருள்கோடநீங்காமால். (கரு)

அனலையந்தணரைப்பசுவினைமிச்சிலடைந்துளோர்திண்டுதலாகா
வினிதுறுசிராத்தம்புரிந்திடுதினத்திலேற்றவணிடுசிராத்தத்தி
னவிபெறவருந்திற்பழிபடுமிவற்குநன்கவன்றனைக்குந்தீதுறுமாற்
புனல்கொடுகைகால்கழுவலுண் கலத்தற்றிதெனப்புகன்றனர்புலவோர். கசு

கொள்பவன்மாண்புங்காலமும்பிலனுங்குறித்துநற்றுணமாக்களிப்பி
னுள்ளிதர்தணர்க்குமிளித்தோருயர்தலமுழுவதும்புரப்பார்
தெள்ளினவன்னமளிப்பவரளப்பில்செல்வமுற்றிருப்பர்நீரளிப்போ
ரொன்ஞமால்விரகபெய்திடார்வெள்ளியீகுனர்வடிவுநன்குறுவார். (கஎ)

ஆவினையளிப்போரானுலகடைவாரருநிதிப்பொருளினையளிப்போர்
தேவர்தம்முலகுசேர்வர்நெய்தகழிசெறிந்திடத்தீபகல்இடுவோர்
மேவுநல்விழிகள்விளங்கிடுந்திலங்கண்மிகுந்தளிப்போர்மகப்பெறுவார்
கோவுயரில்லங்கோலிநன்களிப்போர்குலவுபொன்மாடமீதுறைவார். (கஅ)

வேகவெம்புரவியளித்துளோர்தெய்வவிமானமீருவர்செழுங்கோட்ட
மோகையினளிப்போர்திருவொடும்பொலிவருயரணைசிவிகைகான்களிப்போர்
பாகுறுமின்சொன்மகளிரோடுறைவர்பரிவொடுநெற்குவையளிப்போர்
தாதுயர்சுடிகைதாங்குபார்வளத்தினலனெலாநன்குடன்பெறுவார். [ககூ]



வேறு.

அருமறையின்பொருளுரைப்போர்பிரமனுலகடைவாரஞ்சலென்றுளோர்க
ளிருநிலமும்புரப்பர்பொருளீந்துநால்வேதவிஞ்சையினைச்சொல்லிப்போர்
மருவுகஞ்சனுலகுறைவர்மாநிதியைக்கொடுப்போரும்வாங்கல்கொஞ்சப்
பொருளெனினுமுவப்போரும்புகழ்பெருகமிகுந்தசெல்வம்பொருந்திவாழ்வார். ()

வேறு.

தழைபடுமாலைசாந்தம்வெண்டயிர்பாறசையொடுநெல்விலைவாளா
விழைவுறவருமேற்கொள்ளுதலுரித்தாம்விறகுசெந்தேன்பழங்கிழங்கு
களியொடுமிழிந்தோர்தம்முமாந்தான்செய்கருமற்றவத்தினைக்கொடையை
வளமிகப்புகழ்வதாகாதுவேதியனைவைதிடில்வாழுநாளுலக்கும். (சக)

அழிவினட்புடையோனடைக்கலம்புகுந்தோன்வழிவழியடிமைபுக்கிடுவோ
னெழினிறைமெய்ப்பொன்மயிர்வினையாளனென்றிவரினிதுடனளித்த
வழுவில்வாலரிசிகோடலாமிங்ஙன்வழங்குநற்கருமங்களனைத்து
மிழிபினன்மறையோர்முதலமூவருக்குமியல்பெனமறைமொழிந்திடுமால். (சஉ)

அசனிமண்வாரியுற்கைவீழ்ந்திடுநாள்சுழல்வளியடையுநாளோர்பால்
வசுவெரிபடுநாளரையிருட்போதிற்பின்னவர்வதிந்திடுமிடத்தில்
விசையமன்னவருக்கசுபமுற்றிடுநாள்வேறிடையூறவர்க்குறுநா
ளிசைவுறுபதினுன்கட்டமிநந்தையீருவாபோதன்மாண்பின்றே. (சங)

நாகமார்ச்சாலஞ்சிகரிமண்டேகலிலநாயிடைபுகினுதார்
கோருவெஞ்சம்போடொட்டகமாற்றிற்கூறிடார்குலவுநற்புனலிற்
சேகறுதருவினூர்தியினிருந்துசெப்பிடாருவாகருமத்து
மோகையினடக்கும்போதினும்வேதமோதிடார்நான்முறையுணர்ந்தோர். (சச)

இயல்புறிவ்வொழுக்கம்வழுவுறுதியற்றியீன்றதம்புதல்வர்பாலுரு
முயலுறுகருமமனைத்தையுமிருத்திமுதிர்பெருஞ்ஞானகமடைந்தே
தயவினற்றருமமினிதொடுபுரிகசார்ந்தவைபுரியக்கூடிமற்
கயல்விழிவடிவோர்பாகன்வாழ்நெல்லைக்கழைவனத்துறுங்கதியடைவார். (சரு)

ஆசாரங்கூறியசருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்-ருதூறுள.

## இல்லறங்கூறியசருக்கம்

என்றபொழுதுமகிழ்ந்துமணிமாடமிலகுநெல்வேலி
யொன்றியொழுக்கநிறைகின்றோருயர்வீடடைவரெனவுரைத்தாய்
நன்றிதுரைத்தவொழுக்கமுநன்னெறியுமுழுதுகவிலெனவே
தன்றுசடைமாதவர்புகலச்சூதமுனிவனுணர்செய்வான். (க)

செய்யகரியசுவேதநிறப்பன்றிசிறந்தவூர்க்குருவி
வெய்யகுரண்டசேபிப்புன்மென்காலன்னங்கருக்குருவி
ஐயதவளைகடல்படுமீன்சுகந்தோலடிப்புள்ளினங்கோழி
மொய்சாரிகைமீனிளமனைத்துமுடித்தூனருந்தன்முறையன்றால். (௨)

கன்னற்பாகினமைத்தவைகையலித்தான்கறந்தபாலாடு
மன்னுமுயலொட்டகங்குளம்பொன்றுயமாக்கள்பொழிந்தபா
றன்னுமிரவிற்றயிர்பகலிற்றாயவெண்ணெய்க்கேகமற்
றின்னபிறவொழிகவூன்பொறிமான்றசைதென்புலத்தருக்காம். (௩)

உடும்பார்கமடமுயலமுங்கேழற்புற்முட்பன்றியருந்தினமா
செடும்பார்மிசைநற்கதியாயுள்வேட்டோர்கணைஞன்றினலாகா
வடும்பால்பழையதெனிற்றாய்த்தாலாசாமகத்துன்மருந்திலுயிர்
விடும்போதய்யுமிடத்திறந்தோர்க்கூட்டின்வழைவூனருந்தலாம். (௪)

உயர்நன்மகத்துனன்றியூன்சுவைப்பேரனதனுக்குடன்படுவோர்
பயிலுங்கருவியினிற்முறைத்தோன்புகர்ந்தானகொள்வோர்தோன்வியந்துளோன்
மூயலுங்கடிதினென்மொழிந்தோனதனையட்டோனிவர்களெண்மர்
துயர்செய்நரகினடைவருண்விடுத்தோர்தூயகதியடைவார். (௫)

இடர்கள்பிறருக்கியற்றுவோர்தமக்குமுடனக்கெய்துமென்ப
த்டைவினறிவாரறிவுடையோரதனுலுயிர்களனைத்தையுந்த
ணுண்டவுயிர்போனினைத்திடுவோருமமைம்புலனைநெறியில்வழி
யடையப்பொறியின்விடுத்திடாரடைவர்கதியையடைவாரே. (௬)

கருதிமுயன்றுமெய்வருந்தினல்லாற்பொருள்கையடையாதப்
பொருளினன்றிநற்கருமம்பொருந்தாவக்கருமமன்றித்
தருமமெய்தாவத்தருமமின்றியின்பந்தானுரு
மருவுமின்பமறனன்றிவாராததனேபுரிவதாம். (௭)

வளருமுலைதானெழுந்து ... மகளைக்கொடுத்தன்முறையனரு
மளகமலிர்தாடனைய ... கில்லணர்தான்றப்பனெறுண்டபின்னர்த்
தளருமிடையாடனைய ... விக்கிற்றந்தையிறக்குமலையதேரின்
முளரிவதன்த்தார் ... க்கமுறையன்றெனவேமறைமொழியும். (௮)

வேறு.

ஆனதன்புதல்விகன்னியிற்பூப்பின்யாவருமறியவிக்கன்னி
தான்முனம்பூத்தாளென்றுரைத்தளிப்பிற்றந்தைநற்பாவமதிலையால்
வானுயர்சோமன்வளர்பெயிரும்பின்மணக்குத்திப்பூத்திடின்மணக்குங்
கானகந்திருவன்முலையெழின்மணக்குமுனமகட்கொடுத்திடல்கடனும். [௯]

விரிதழற்கடவுள்கின்னரன்சோமன்மேவலான்மதிதொறும்பூப்பு
வருதலாலத்தமகளிரும்புனிதமருவுவர்மலர்மணிமஞ்ச



மரிவையர்வதனஞ்சிவிகைநற்றருப்பையாசனமகத்தினீறந்தப்
பொருவில்பாத்திரங்கள்குதபநற்காலம்புனிதமென்றுரைத்தனர்புலவோர். (௰)

கலவிமங்கையருஞ்சன்றினிதூட்டிக்கறந்ததீம்பாலும்பட்டின்ற
நலனுறுபழனும்வேட்டையிலவெய்யநாய்சுவைத்தருந்தியதசையு
முலகினின்மிச்சிலெனவிழுந்துலாயாருயர்த்துமோருறுகடன்பொருட்டு
நலனுயர்வேள்விவேட்டிடிலவர்க்குரனிபொருள்வழங்கலன்றுமால். (௰௧)

... மத்தூர்தாளினைபுனிதமாடல்வெம்புரவியாட்டினுக்குச்
சுந்தரவதனம்புனிதமாவினுக்குத்தூயபின்புறமதுபுனித ...
... ருநன்னுதலின்மங்கையர்க்குடலமெங்கணு ... மைவிண்கலஞ்செம்
புந்துபொன்பெருக்காற்சாம்பராற்புளியாற்றூய்மையாமென்பர்தூய்துணர்ந்தோர்

பதியினைத்தெய்வமெனத்தொழுமகளிர்பறையொடுங்கூடிவீற்றிருப்பர்
முதியநற்றந்தைதாய்தமர்துணைவர்முடிநதிடிற்கன்னியர்மூன்றுசெய்
மதியொடுந்தமதுமரபினுக்கேற்றவொருவனைவரித்திடல்விதியாங்
கதிகொடுக்கருமமழித்தவர்கணவர்ச்செகுத்தவர்நீக்குதல்கடனும். (௰௩)

புரையறுகற்பிற்கன்னியையொருவன்வலிதினிற்புணர்ந்திடிலவட்குத்
திருவறமாசுபூத்தவெற்றிமைகள்செறிதுகில்புனையெனவழங்கி
யுருகிமெய்வருந்தவடிகிலோர்பிண்டமுதவிநாட்கழித்துழிப்பூப்பின்
மரபொடுமவளைக்கூட்டுககருப்பம்வந்திடினீக்குதல்வழக்கே. (௰௪)

தங்கடம்மாபிற்பின்னவர்கொளலாம்வணிகர்பின்னவருழைத்தமது
வங்கிடமரபிற்கோடலாமரசர்தம்முனமுவணிகர்பின்னவர்க
டுங்கநன்மரபிற்கோடலாமறையோர்சொன்னநாற்சாதியுங்கொளலா
மங்கவர்தம்முட்பின்னவர்மறையோர்க்கருமகப்பெறிற்கதியடையார். (௰௫)

மன்னுநற்குருவைத்தந்தையைத்தாயைமனைவியைப்புதல்வனைவிருந்தைத்
துன்னிருபோதும்வழிபடுவோனையதிதியைத்தூயபாகவனை
யின்னவொன்பதின்மர்தம்மையுநாளுமின்பமுற ... தனித்திடாமன்
முனையியில்வாழ்க்கைபூண்டுளோன்றனைமுழுமக ... னமொழிவார். (௰௬)

வியனுயர்கிருந்தாயொருவன்வந்தெதிரின்வியத்தனன்மொழியினிதுரைத்த
லியலுறநோக்கல்வருகவென்றுரைத்தலெழுதன்முன்மகிழவன்செய்ப
லயல்ன்மற்றவன்றனருகுறவிருத்தல்போமெனிற்பின்செலவயர்தல்
பயிலுநன்முகமன்வழங்கலிவ்வொன்பானெறுமுக்கமும்வழிபடுபண்பே. (௰௭)

அன்புறுதவிசுதாள்விளக்கப்பே ... டிசின்பூந்தண்மலர்ப்பாய
லின்பமாயுறையுமிடனுகர்தெண் ... ரிசுடரொண்ணைவெள்ளிலைகா
யொன்பதென்றிவைதன்மனைவயினடைந்தோருளமதுமகிழ்வுறவளித்த
வருதியென்றுரைத்துமீண்டுவருதியாலணங்குநீயென்
றரதகவடிவாள்கூறவவள்பணிதலைமேற்கொண்டு
கருதியேபணிந்துகாளாத்திரியுந்தான்கடிதிற்சென்றாள். (௪௭)



வேறு.

மனவிசையிற்சென்றுதற்கமாபுரியுட்புகுந்துவையமூன்றும்போற்றத்
தினகரனைத்தொளிர்சிங்காசனத்திருந்து கொடுங்கோன்மைசெலுத்துந்தற்கன்
முனமடந்தைமூவரையுந்தேவரையும்பெற்றமுக்கண்முதல்வியேவ
றனிலடைந்தனதியென்பேர்காளாத்திரியாகுமெனச்சாற்றிப்பின்னும். (௪௮)

ஆதிபராசத்திகவுசிகையெனும்வேற்றருக்கொடியேயமொறுன்னி
மேதகையவேணுவனத்துற்றிருந்தாள்விண்ணவருக்கிடர்செய்யாது
பார்தலம்புக்குறைதியன்றேற்படைத்தகடற்றனையொடும்படர்தியந்த
மாதுடன்போர்புரியவென்றுண்மதிதூதற்காளாத்திரியாமாதுமன்றே. (௪௯)

சொன்னமொழிக்கெதிர்மாற்றஞ்சொற்றிலனத்தோகையெழிலோக்கித்தற்கன்
கன்னல்வில்விகனைக்கிலக்காய்க்காதலித்தெனபாலுறைதியெனக்காளாத்தி
ரியனைகவுசிகைமருங்கிலவளேவற்பணிபுரியுமநேககோடி
மின்னிடையாருளார்விரைவில்வருதியவளைநீயுமெனவிளம்பமீண்டுசென்றாள். (௫௰)

மீண்டுசெலக்கண்டுபெற்றிக்கொணர்திரெனத்தற்கன்விடவிரைந்தோர்கோடி
யாண்டகைமைவாளவுணர்தொடர்ந்துறலுமணங்கவரையழன்றுநோக்க
நீண்டவிழிக்கடையுமிழ்ந்தநெருப்படலாலுடன்முழுதுநீறுபட்டு
மாண்டனர்காளாத்திரியும்வரைவனத்திற்கவுசிகைதன்மருங்குசார்ந்தாள். (௫௧)

தொடர்ந்துசென்றவாளவுணரொருவரின்றித்தஞ்சியதைத்தூதர்நோக்கி
யடைந்துசொலக்கேட்டலுந்தற்காசுரன்றேறோறியங்கைப்படையுமேந்தி
மிடைந்தகடற்றனையுடனமைச்சர்களும்புடைசூழவிரைவில்வீர
மடந்தையுறைநெல்வேலிமாநகரந்தனைநோக்கிவர்தானமன்றே. (௫௨)

பல்லியத்தின்முழக்கொலியும்பனைக்கைமதகரியொலியும்படரும்வாசி
யொல்லொலியும்வயவர்கடமுனையொலியுமுவரியொலியென்னவோங்க
வெல்லொளியைமறைத்தெழுந்ததூளியிருவிசும்புடனெண்டிசையும்போர்ப்ப
வில்லுமிழும்படைக்கலமும்விழியுமிழ்வெங்கனலுமுலகெங்குமேவ. (௫௩)

அடுசமர்வேட்டின்னபரிசாயினம்வெள்ளஞ்சேனையார்த்துச்செல்லத்
தடநெடும்பொற்றேரேறித்தன்னவர்பலர்புடைசூழவிச்சார்த்தற்கன
கடன்மறுகவிசும்புலையக்காசினிமாதுடனெளிப்பக்கடிதிற்சென்று
வடிவுடைமாதுடனமலன்வைகுநெல்லைமாநகரின்வடபால்வந்தான். (௫௪)

வந்ததுகண்டிமையவருமாலயனும்வாய்வெருவிமறுகியோடிக்
கந்தமலர்க்கருங்கூந்தற்கவுசிகையைவந்திறைஞ்சிக்கனன்றுதற்க
னிந்நகர்வடபால்வந்திறுத்தனனீயெழுந்தருளியிகல்செய்தட்டிப்
புர்திமகிழ்வுற்றடியேம்புரையறவீற்றிருக்கவருள்புரிகவென்றார். (௫௫)

படங்கிளர்வாளரவினத்தையடர்கருடனொறுப்பதெனப்பதகரானோ
ரடங்கலுமின்றுடன்மடியவடுவனச்சம்விடுமினெனவருளிமெய்யி

விடுங்கவசமொளிகெழுமயெரியுமிழும்படைகரங்கடோறமேந்தி
மடங்கன்மிசையிவர்ந்துமடந்தையர்சேனைமருங்குசெலச்சென்றுண்மன்றே. (ருசு)

காளிமதிக்குடைகவிப்பக்கமலினிகாளரத்திரிதாங்கவரிவீச
வாளெனுங்கட்செயைவிசையைமலர்தூவியெதிர்முகமாய்வாழ்த்திச்செல்லத்
தாளணிநூபுரஞ்சிலம்பச்சதிமுறையின்மாதர்நடம்புரிந்துசாரப்
பாளைபுரைமலர்க்குழலாரிரட்டுமியம்பலமுழங்கப்படர்ந்தாளன்றே. (ருஎ)

ஒண்டொடிதன்னுடன்பட்டரும்யோகினிகளாற்றலுக்கொப்பிகந்தோரோங்கி
யண்டமுழுதுண்டுமிழுமகல்வாயார்சிலைகுலிசமயில்வாள்சூலந்
தண்டமுதற்படைபரித்ததடக்கையினூர்மேருவெனத்தகையமெய்யா
ரெண்டிசையுஞ்செவிடுபடவெழுகடலும்வாயடைக்கவிசைக்குஞ்சொல்லார். (ருஅ)

சிரமனந்தநாவனந்தஞ்செவியனந்தம்விழியனந்தமுடையார்திகழ்பொற்
கரமனந்தமுகமனந்தங்காலனந்தமுடையர்பலர்கதியின்மேவும்
பரிவதனம்புலிவதனம்பணிவதனங்கரிவதனம்பாய்ந்துசெல்லு
மனவதனமரிவதனமயில்வதனமன்னினருமனந்தமாதோ. (ருகூ)

மோகினியொப்பவர்கள்பலர்கலைமகளொப்பவர்கள்பலர்முளரிக்கோயிற்
றோகையையொப்பவர்கள்பலர்சுந்தரியையொப்பவர்கள்பலர்சொலுமிப்பான்மை
நாகரிகமாதர்படைநளிர்கடலாமெனமருங்குநண்ணிச்சூழ
மாகர்புகழ்சவுசிகையும்வாளவுணரிகல்வேட்டுச்சென்றுண்மன்றே. (சுய)

இப்பரிசுதானையுடன்பிடிமேற்செலரிப்பிணைவொத்தெழுந்தவையத்
தொப்பினெல்லைமாநகர்க்குவடதிசைகுரோசமிரண்டிருத்துச்சென்று
ளப்படிநேர்வரனுக்கியவுணருந்தோள்புடைத்திகல்வேட்டார்த்துப்போந்து
மைப்புணரியெனவளையக்கவுசிகைகண்டீங்காரஞ்செய்தாண்மன்றே. (சுக)

உங்காரந்தனினின்றுமுலப்பறுநால்வகைப்படையுமுதித்துச்சீறிச்
சிங்காரயோகினிகளுடன்றிரண்டுமுகங்கடொறுஞ்சென்றுதாக்கிச்
சங்காரம்புரிந்திடலுந்தானவருந்தழல்விழித்துச்சலதியென்னப்
பொங்கார்வத்துடனெதிர்ந்துபடைக்கலங்கடோந்தடுபோர்புரிந்தாரன்றே. (சுஉ)

தண்டரளமணிமுறுவல்யோகினிகடழல்விழித்துச்சலங்கொண்டார்த்துக்
கண்டகரைத்தலைதுணித்துக்கடகரியும்பரித்தொகையுங்கவிழ்ந்தோலிட்டு
மண்டலத்தில்வீழ்ந்துபுரண்டுத்துத்தலைவரொடுஞ்சூதரொடும்வருமான்றேரைத்
துண்டுபடவடுத்தடித்துப்படையொடித்துவடித்தனராற்றணங்கைகோத்து

மறைபுகழுங்கவுசிகைதன்வஞ்சினத்திறுதித்திகல்செய்வயவர்தம்மைக்
கறையடியுயக்கத்தையும்... தொமான்றேனைக்கதியின்மேவி
புறுபரியைமேதினியோடரைத்துயிருண்டப்பாலுமுருமிற்போமாற்
பிறையெயிற்றுவாளவுணர்புயவலியாலிசைத்துவிடும்பிண்டிபாலம். (சுங)

மத்தகம்புக்கடுகரியையூடுருவிவாசிநிரைமடியநூறி
வித்தகப்பொற்றேர்துணித்துமேவுபடைத்தலைவர்தலைவெடிக்கமோதிச்



சத்திமுதற்படையினுடன்றுனவர்மாண்டுகப்புடைத்துச்சாருமென்ப
மூத்தனகைச்செங்கனிவாய்முகிழ்முலையோகினிகள்விடுமுசலமன்றே. (சுச)

நீறியிகல்வாளவுணர்செலுத்துபிறைமுகப்பகழிநிகழ்ந்துசென்று
மீறியடும்யோகினிகளுரத்தூறுபுரிந்தமைதான்மேவுகாந்தர்
கூறுநகரோசையொத்ததக்குறியிற்சிங்காரங்கெழுமக்கிட்டி
யூறிவழிகாமமெனமேன்மேலுமொழுகினவாலுதிரத்தாரை. (சுரு)

வாளுருவிமதகரிமத்தகத்தெறிந்துவச்சிரத்தாற்பரியைமாய்த்துக்
கோளுடைவாம்பரித்தேரைக்குந்தத்தாற்றுகள்படுத்திக்குறுகிநேர்ந்து
தாளெடுத்துயோகினிகள்வாளவுணர்தடமார்பத்துதைப்பச்சாய்ந்து
கூளிகள்வாய்பிளந்தருந்திக்குடித்துமிழ்ந்தாலெனவுமிழ்வார்குருதிமன்றே. (சுஎ)

வெய்யசினத்தானவர்கள்வெகுண்டணியுட்புகுந்துவியன்மணித்தேர்தன்னை
மையன்மதகரிநிரையைவாம்பரியையுதைத்துருட்டிமருங்குபோந்து
கையெடுத்துங்கனல்கவிப்பயோகினிகளுரத்தடிப்பக்கவின்சேரன்னோர்
மெய்யின்மயிர்ப்புளகமெழவிதுகொலுமதாற்றலெனவிளம்பிநக்கார். (சுஅ)

தானையிவ்வாறிகல்புரியுந்தன்மைகண்டுதெருவர்படைத்தலைவர்மேவி
மேனிமிருஞ்சிலைகுனித்துவிசிகமழையெனச்சொரிந்துவெகுண்டெம்மன்னை
சேனைதனையிகலிந்தாரதுநோக்கிச்சினமடங்கலுகைத்துச்சீறிக்
கானமலரலங்கல்புனைகவுசிகையுமெடுத்தனள்கார்முகத்தைக்கையில். (சுகூ)

பிடித்தநெடுஞ்சிலைவளைத்துப்போண்டத்தூடணிலம்பிளக்கவஞ்சர்
முடித்தலைகள்வெடித்தொழுகமூளைமண்டவாம்பரியுமுழங்குமாவுந்
துடித்திறக்கநாணெறிந்துசதுர்கோடிவாளியொருதொடையிற்பூட்டித்
தடித்தின்மிளிர்ந்துறத்துரந்தாடழலும்முழக்கனுடைத்தையன்மன்றே. (எய)

விடுங்கணைகளொன்றனந்தகோடியாய்விரிந்துவிண்ணின்மிடைந்துதான் ணிக்
கடுங்கனல்கான்றடலவுணர்படைத்தலைவர்முடிமீதுங்கனகமான்றே
ரடங்கலினுங்கரிபரியின்மீதுமமர்முகத்தில்விடப்படைகளாய்ந்து
தொடுங்கரத்துமசனியில்வீழ்ந்ததான்றுபலதுண்டமுறத்துணிக்குமன்றே. (எக)

கரமறுக்கும்வில்லறுக்குங்கழுத்தறுக்கும்படைத்தலைவர்கனகமோலிச்
சிரமறுக்குங்காலறுக்குஞ்செவியறுக்குஞ்செய்தவத்தர்தேரைவீர்த்த
வரமறுக்கும்புகழறுக்கும்வலியறுக்கும்வயங்கமணியாரமீர்ந்த
வுரமறுக்கும்விசையமுறுங்கவுசிகைதன்னெடுஞ்சிலையினுந்தும்வாளி. (எஉ)

கையிழந்துமருப்பிழந்துகாலிழந்துசெவியிழந்துகறங்குஞ்செம்பொற்
செய்யமணித்தாரிழந்துதிரண்டவுரலடியிழந்துசிகரிபோலு
மெய்யிழந்துகதியிழந்துவலியிழந்துவிழியிழந்துவிளிந்ததாடும்
பையரவப்பணிபுனையுங்கவுசிகைதன்பகழியடப்பட்டுவேழம். (எங)

கொடிதுணிந்தகொடிஞ்சிகளுந்துகுலவயிரத்தாரொடிந்துகுலவிச்சூழுங்
கிடுகறுந்துபாகிறந்துநேமியழிந்தழிந்தனவாலிடைத்தமான்றே

ருடல்சிதைந் துரந்தசர்க் குவெளிகிளர் புல்லணைந் துகளாயோடி வந்த
வடிமுறிந் துகவுசிதைதன் பகழியடவிமிர்த்தனவா லடைந்தவாகி. (௭௪)

வாள்சிதைந் துவேல்சிதைந் துமழுச்சிதைந் துதனுச்சிதைந்த பாரில் வாழு
நாள்சிதைந் துயிறல்சிதைந் துநகைசிறந்த முகத்தினராய் நண்ணார்ப் பிறி
மூறுமிகலுருகித் தணைந்தபடைத் தலைவரவ்வாறுமுடிந்தார்பின் னுந்
தோளில்வலியுடைய துற்கண் சேனைமுற்று மார்த்துவந் தருகுழ்ந்த தன்றே. (௭௫)

அடலவுணர்கடற் றுனைப்பெருமிதக்கடன் கோகவுசிலைகதன் குலைப்
படையதனை விடுத்திடலும் பலகோடி பருகயொளிபரப்பிச் சென்று
வடையைப்புருக்கி காடு வளைந்துமாற்றலன் றன் சேனை முற்றுமடியநூறி
யிடரகற்றிய வனைப்பாக்குமெத்திறைமைபான் மீளவும்வந் தெய்திற்றன்றே. (௭௬)

வேறு.

சிறிகொள்வருதானை யுந்தலைவருஞ் சிதைந்தனர் செழுஞ்சோரி
யாறினாற்றெழுந்த தலைகடனிறைந் தனவலகையுஞ் செந்நாயும்
பாறுங்கங்கமும் பாதகர் மெய்ப்பலி நுகர்ந்தனபலவுண்டாற்
கூறுவான் றெருக்கிலமுதுகு ருந்துறக் குலவியபிணக்குன்றம். (௭௭)

துங்கவாளெயிற்றவுணர்தந் தொடரிகிற் றெறித்தகண் விழித்தாமங்
கொக்கையிற்புனைதரு கரிக்கிம்புரி குலவுமேகச் சரிபூட்டிப்
பங்கமில்லெலும்பில் யோகினிமார் பல்பகட்டின் பொன் மணித்தாள
மங்கைபற்றியே பொத்தநின் றுமோலமாருதுறைபலகோடி. (௭௮)

இனையபான்மையிற் றுனைமுற்றிறந்ததும்பிறைவிடங் கையிலேந்துந்
தனுவின்விஞ்சையும் படைக்கலத்தாற்றலுந் தானைமைவுறநோக்கிச்
சினமுமானமுமுறவிடேழொனச் சென்றுதற்கணுமுக்கட்
பனிதராபதிமுன்னுற்றுவளைத்தனன் பொருப்பைச்சாசிலைதன்னை. (௭௯)

நிலைவளைந் தமுதண்டெரக்குடைந்திடத் திசைமுகன்செவிபொத்த
கலையதிரக் கடலஞ்சிவாயடைத்திடா வண்ணதிக்கயில்போலக்
குலவுதிருமுகக் குருடையயக்கணைகோடியோர் தொடையாகப்
புலவுவேற்றற்கண் பூட்டுவார்ந்தனன்புயவலாதுறமேன்மேல். (௮௰)

ஆர்த்தவார்கணை செல்லுமென்றுல கினுக்குருளிமாயமெட்டும்
விரிந்தவுபடைந்தனமறைந்தனன் வெய்யவனுமெக்கெல்லாம்
ஆர்த்தகாவிருள் பறைந்ததுமன்னுயிர்பகுதிகாவெரிமேவ
வொளிதவாருகிபலையறக்குடித்தனவெரிதருமுதன்மீனம். (௮௧)

நியதிழ்ந்தனகருப்புலைகொன்மனைதிகழினம்பிறைபோல்வ
ருரயிலுரைப்பனவாக்கைம்புளைவனகவினமென முலைகயன்ன
மேயமூன்றுகாண்வகைக்குமாற்றலெனவிரிந்து சென்னியாதிக்
காயும்வெஞ்சினத் திறலசுரர்கோன்கார்முகத்துச்சொரிவாளி. (௮௨)



இனையவாறவன் விடவருபகழியையிறைவிதன்னுதற்செங்கட்
கனலினாலெரித்தொருபதுகணையினாற்கண்டகன்சரத்தேர்துந்
தனுவைநீறுசெய்திருபதேவால வன்சாலிகைதனைக்கொய்து
மனநடுக்குறப்பின்னுமாயிரஞ்சரம்வரைநிகர்புயத்தெய்தாள். (௮௩)

தோளிலக்கணையழுந்தலுந்துண்ணெனத்துளங்கிவெந்திறற்றுற்கண்
முளதாமரைக்கடவுண்முன்னுதவியதழலுமிழ்பிலொன்றை
மூளும்வெஞ்சினங்கொடுவிடவருதலுமுக்கணாயகிதன்கை
வாளியேழுடனேழுவிட்டறுத்தனள்வானவர்மகிழ்ந்தார்ப்ப. (௮௪)

மீட்டும்வேறொருவில்லெடுத்தசுரர்கோன்விரிஞ்சன்மான்மதிவெய்யோ
னாட்டமாயிரமுடையவன்மாருதர்களிர்கடற்கிறைசெந்தீ
யீட்டுபல்புகழ்க்காலன்மற்றிவர்முதலிமையவர்படையெல்லாம்
பூட்டியொன்றொன்றுவிடவிடத்தொனித்தனள்பூவைதன்கணைதூண்டி. [௮௫]

விட்டவானவர்படைபழுதுறக்கண்டுவெகுண்டிறற்கணுமீட்டு
மட்டுலாவுபொன்னிதழிசூடெம்பிரான்படையைவந்தனைசெய்து
விட்டகாலையிற்கணனுருகாகியேவிரிக்துமேல்வரத்தையல்
கிட்டிவாளெனவலக்கையாற்பற்றினள்கேடில்விண்ணவர்தார்த்தார். (௮௬)

பழுதுறச்சிவன்படையையுமெதிர்சென்றுபற்றினளிவளாற்ற
லழகிதென்றடலவுணரோர்முத்தலையயிலையங்கையிலேந்தித்
தொழுதுவீசலுந்துண்ணெனவரக்கண்டுதோகைதுண்டுகள்செய்தா
ளொழுகுதீமுகத்தனலுடைச்சூலத்தையுடனதற்கெதிர்தூண்டி. (௮௭)

தண்டமொன்றினைத்தானவர்க்கிறையவன்வலியுடைத்தடக்கையிற்
கொண்டுவீசினனதனைநாறம்பினாற்குறைத்துத்துண்டுகள்செய்து
கண்டகன்றனையடுவனோர்கணத்தெனக்காரிகையொருகோடி
திண்டிறற்சரந்துற்கண்மார்பகந்துறச்செலுத்தியார்த்தனளன்றே. (௮௮)

புற்றிலுட்புகுமரவெனக்கணையெல்லாம்பொருப்பைநேரகலத்தின்
முற்றுந்தாக்கிப்புகுந்திருவினைசொரிந்தனமுழங்கியசெழுஞ்சோரி
சற்றுமச்சுரன்றுற்கணுந்தடக்கையாற்றையறன்னகன்மார்பத்
தற்றடிப்பனென்றசனியினார்த்தெழுந்தோடிவந்தனனன்றே. (௮௯)

ஆலகாலமொத்தார்ப்பெடுத்தசுரர்கோனருகுறவரநோக்கிச்
சாலவோசனிபதுமமெல்லடிகொடப்பாதகன்றன்மார்பிற்
காலன்மார்பின்முன்கண்ணுதன்மிதித்தெனவுதைத்தலுங்கவிழ்ந்தேங்கி
ஞாலமீதுதன்வாயுமிழ்செம்புனனதியில்வீழ்ந்தனனன்றே. (௯௰)

வேறு.

கிடந்தவன்முதுகிற்பின்னுங்கிஞ்சுகமனையசெவ்வாய்
மடந்தையுமிடதுகாலான்மிதிப்பமெய்ம்மறந்துமூர்ச்சை
யடைந்துபின்றேறிவிண்ணூடணிகியோர்மாயமோர்ந்து
மிடைந்தகன்மழைபெய்வித்தான்மேதினியெங்குமேவ. (௯௧)

மற்றதுகண்டேன்றானென்றெனமடங்கலூருந்
கொற்றவைநுதற்கணங்கிகொளுத்தியம்மாயைநீக்க
வெற்றிவேற்றுற்கன்மீட்டோர்வேழமாய்வெகுண்டுசீறிப்
பொற்றொடிதன்னைப்பற்றப்போந்தனன்புழைக்கைநீட்டி. (௧௨)

நீட்டியபுழைக்கைதன்னைநெருப்புமிழ்தடக்கைவாளா
லீட்டமொன்றுடையநங்கைதுணித்தலுங்கண்ணுற்றுற்கன்
மீட்டொருமயிடமாகமேவலுந்தடிந்தாள்பின்னு
மீட்டியபுகழ்ச்சேரன்னையேந்தும்வேற்படையாற்குத்தி. (௧௩)

அடுசினத்துற்கன்றன்பேருருக்கொடுமமராஞ்ச
விடியெனவார்த்துமார்பினெற்றுதற்கெய்தநோக்கி
மடவரலரவிற்சீறிவயங்கெரியுமிழ்தன்சூலப்
படையொடுகுத்தியந்தப்பதகனைப்பாரில்வீட்டி. (௧௪)

கண்டகனுடலிரண்டாய்க்கதுமெனக்கீறிச்சூழ்பே
யுண்டிடறடிப்பநல்கியுயிரைநல்விருந்தாய்மேவிச்
சண்டனுண்டுவப்பநல்கித்தரணியுந்திசையோரொட்டு
மண்டமும்வெடிக்கவோங்கியாதகவடிவாளார்த்தாள். (௧௫)

மாலயன்றனையுநேர்ந்தவலியினால்வென்றதுற்கன்
பாலுமுதானையோடுமின்னணம்பட்டான்சொல்லின்
மேலவர்க்கிடர்செய்தீயோர்கிளையுடன்விளிந்திவ்வாறு
ஞாலமேற்கிடப்பர்நாய்க்குநரிக்குமூணாகியன்றே. (௧௬)

இறந்தனன்றுற்கனென்னவிம்மையவருவகைபூத்துச்
சிறந்துடறடிப்பநின்றுசிந்துபூமாரிமேவி
நிறைந்ததுபுவனமெல்லாநீதியுங்கிழ்ந்ததோங்கி
யறந்தலையெடுத்ததுற்றதரும்பறைமுழக்கமன்றே. (௧௭)

திருமகள்கொழுநன்முனூர்தேவருந்திசைகாப்போரும்
பிரமனுமுவந்துபோந்துபேரொலியுடையமாதைப்
பரவியேவலமாய்ச்சூழ்ந்துபன்முறைபணிந்துபோற்றி
மருவுபொன்முடியின்மேன்மலர்க்கரங்கூப்பிநின்று. (௧௮)

பொன்றிடத்துற்கன்றன்னைப்புனரியந்தானையோடும்
வென்றதாற்றுற்கையெனும்பெயர்மேவிநின்று
நின்றியுமெங்களுள்ளத்தலக்கணுமடைந்துநீக்கி
யின்றெமையடிமையாகப்படைத்தனையிறைவிநீயே. (௧௯)

இப்படியின்னுமெங்கட்கிடரிதன்மேல்வந்தாலு
மப்பொழுதடைந்துநீக்கியாள்வதுன்கடனுமென்றார்
மைப்புயலனையகூந்தன்மடந்தையப்படியாமென்னச்
செப்பியேயவையகல்கிந்திருக்கணுக்கருளிமீண்டாள். (௨௰)



புல்லியங்கறங்கவானோர்பரவியேபடருயாதும்
வல்லயோகினிகடாமுந்தானையுமருங்குசெல்ல
மெல்லியன்மடங்கலூர்ந்துவியன்மணிமாடமோங்கு
நெல்லைமாநகரினெய்திநகரில்பொற்கோயில்புக்காள். (௨௰௧)

அரியயன்மகவானாதியமரரைநோக்கிதத்தந்
திருநகரடைந்துமுன்போலரசுசெய்துறைமினென்ன
வுரைசெய்துவிடையுநல்கியோங்கரியணையிற்றுற்கை
பரிசனஞ்சூழவைகிப்பார்புரந்திருந்தாளன்றே. (௨௰௨)

கழைவணக்கடவுடன்னைக்கவுரியைப்பணிந்துபோற்றித்
துளபமாலயனேயாதிசுரரொலாஞ்சென்றுதத்தம்
வளநகரடைந்துமுன்போன்மாசறுமனையுஞ்சிரு
முளமகிழ்சிறப்பும்பெற்றுங்குவகையோடுறைந்தாரன்றே. (௨௰௩)

வேறு

இத்தலைத்துற்கைதன்முனூற்றிருந்தேயினிதினிற்றுற்கைமந்திரத்தைப்
பத்தியினோடுசெபிக்கினுஞ்சார்ந்தோர்மண்டலம்பணியினுமகிழ்வாய்த்
தத்தமக்கியன்றமட்டட்டுடைகநிவேதனந்தான்புரிந்திடினு
மூத்தமிழ்த்தொடையல்புனையினுமவர்க்குமுத்தியுஞ்சித்தியுந்தருமால். (௨௰௪)

இளையவாறுகுமரதகவடிவாள்காதையென்றியம்பினன்சூத
னளையதைவினவிமாதவத்தலைவரகமகிழ்சிறந்தனரிந்தப்
புனிதமாக்கதையைப்படித்தவர்கேட்போர்பொருந்தலர்தமையெலாம்வென்று
மனமகிழ்சிறந்துபுவிமிசைவாழ்ந்துமாசறுமுத்திபெற்றுவப்பார். (௨௰௫)

ஆரதகவடிவம்மைசருக்கமுற்றும்.
ஆகத்திருவிருத்தம் ௬௱௯௰௧.

## பிட்டாபுரத்திஅம்மைசருக்கம்.

வயமலிசூலப்படையுடைத்துற்கைமகிமையைக்கேட்டுளமகிழ்ந்தேஞ்
செயிரறுகாளிதோற்றமுஞ்செயமுஞ்சிவபரஞ்சோதியுற்றவளோ
டியல்புடனார்த்ததாண்டவம்புரிந்தவியற்கையுமியம்புதியென்ன
நயிமிசாரணியத்தருந்தவர்வினவநற்றவச்சூதனுநவில்வான். (௧)

அறல்புரைகூந்தற்காசிபன்மனைவிதிதிமகண்மோகினிபயந்த
விறலுடைச்சும்பனிசும்பனுமவுணர்மேவியைந்தெரியிடைநின்று
நறைமலர்க்கமலாசனத்தின்மீதுறையுநான்முகக்கடவுளைக்குறித்து
மறைபகர்விதியினாயிரம்வருடமாதவம்புரிந்தனரன்றே. (௨)

இருவருமியற்றுமாதவம்வியந்தேயெகினமூர்ந்தடனுமுற்றணுகி
யுரகர்மானிடரைமாதவன்முதலாமும்பரையிகலில்வென்றிடவு

மருவுமாடவரான்மரணமற்றிருக்கும்வண்மையும்படையுமான்றேரும்
விரியுமூன்றுலகுமரசியல்புரியுமேன்மையும்வழங்கியேகினரால். (௩)

பெறலரும்பேறுபெற்றனமென்னும்பெருமிதத்துடனிகலவுணர்க்
கிறைவராமிவர்களிருவருமயனுலிலங்குபொன்வரைக்குமேற்றிசையி
னறைமலரகழிசூழ்ந்திருமினகரநவமுறவியற்றுவித்தடைந்து
விறலுடைத்தகுவர்தொழமுடிசூடிவியந்தரியணையின்வீற்றிருந்தார். (௪)

வானவர்க்கஞ்சிப்பாதலத்தொளித்துவைகியதானவரெல்லா
மானதேரிவுளிமிசையிவர்ந்தாழியலைகடலென்னவந்தணுகி
யூனுறைகதிர்வேலிவரிருவரையுமொளிர்மலரிட்டடியிறைஞ்சிச்
சேனையாயமராச்சமுற்றமுங்கத்திசைமுகங்கிழியவார்த்தலைறந்தார். (௫)

இலங்கெயிற்றவுணர்க்கிறைபுரிந்துறையுமிருவருமிகல்குறித்தெழுந்து
சலங்கொண்டெழுதிவேலையொத்தனுசுந்தானையிரேறுடுமுற்றெதிர்ந்தே
யலங்கலர்தடந்தோளரியைமாதிரத்துக்கதிபரையமரரையெல்லாங்
கலங்கிவென்கொடுப்பவென்றவர்திருவுங்கவினையுநகரமுங்கவர்ந்தார். (௬)

பாதலத்துறையுமுரசரைமதியைப்பருதியைப்பாரின்மன்னவரை
யோதமுமுட்கவார்த்தடர்ந்தெதிர்ந்தவுருசமரியற்றிவென்றவர்தம்
மேதகுவளமுநகரமுங்கவர்ந்துமேவலர்வெறின்றியுவந்து
தீதின்மூன்றுலகுந்தனையுந்தம்மிரண்டுதிகழ்மணிக்குடைக்குளாக்கினரால். (௭)

முருந்தனுமிவர்க்குமுன்வரங்கொடுத்தமுளரியந்தேவும்வானவரு
மகந்தனக்கிறையுமுனிவரும்பிறருமற்றிவர்க்கஞ்சியேயோடிச்
செகந்தனக்கணியாய்த்திகழும்பொன்வரையிற்சென்றொருமுழைஞ்சதனூடு
புகுந்திவராற்றல்குறித்தனுதினமும்புலம்புகொண்மனத்தராயுறைந்தார். (௮)

விண்ணவர்பதமுநகரமற்றெவையும்வெஞ்சினத்தவுணருக்கீந்தார்
நண்ணியேயவருமிவர்கள்சொற்படியேநல்வகைத்தானையோடுறைந்தார்
புண்ணியமுனிவர்தங்களைத்தவமும்வேள்வியும்புரிந்திடாதொறுத்தார்
பண்ணவர்மடவாரடைந்தருந்தேவல்பணித்தனரியமனங்களித்தார். (௯)

குளிர்மலர்த்தருவுநிதிகளுங்கோவுங்கொடுஞ்சினத்தானவர்க்கெல்லா
முளமகிழ்சிறப்பவேட்டனமுழுதுமுற்றுடனளித்திடப்பணித்தார்
தளிர்மருக்கூந்தரமதுசொல்குலத்துத்தையலார்தமையணர்தனார்தார்
களிமதுக்குடிப்பார்பிறர்க்கிடரினைமுத்துக்கனன்றுடன்பருகொாகேடர்வார். (௰)

இரணியன்முரனைகயிடவன்மதுவென்றிசைபெறுதானவரெல்லா
முரணுடையிவர்மெய்க்காற்றுறிற்பூளைமொய்ம்மலரொன்னவீகுவராற்
றரணியிலினிமேலுதிப்பவர்தம்மிற்சார்ந்துமற்றிதற்குமுன்னுதித்து
மரணமுற்றவரிலிவருக்கொப்புரைக்கவலியுடையோர்பிறரிலையால். (௰௧)

அடுசினக்கூற்றுமிவர்பெயர்கேட்கிலசனிகேட்டரவயர்வதுபோ
லுடலமுநடுங்கிக்கலங்கிமெய்ம்மறக்குமுற்றவரடிபெயர்த்தலவிற்



படிமுதுகுருக்குமணந்தனுந்தனதுபடம்பொருதல்லலுற்றழுங்கும்
வடவனலவர்தமுயிர்ப்பினுலவியுமற்றினிப்பகருவதென்னே. (௰௨)

அல்லொளிமணிச்சூட்டுரசர்கிம்புருடர்கிலங்கெழிற்கருடர்சந்திருவர்
மல்லல்சேர்பயத்துத்தானவரியக்கர்வந்துவந்தடிதொழுதேத்தக்
கொல்லுலை...வெலிருவருங்கொடுங்கோல்குவலயமுன்றினுஞ்செலுத்தி
யல்லலுற்றுவப்பேரரியணைமீதிலமகிழ்ந்துறைந்தரசளித்தார். (௰௩)

இப்படிநெடுநாட்சும்பனுமேனைநிசும்பனுமினிதின்வீற்றிருந்தார்
மைப்புயலனையமாலயன்மகவானாதியாம்வானவரெல்லா
மொப்பறுமவுணரியற்கையையெல்லாமொளிகிளர்புன்சிரிப்பதனான்
முப்புரமெரித்தகடவுளையடைந்துமொழிதுமென்றகத்துணர்ந்தெழுந்தார். (௰௪)

வெள்ளிவெற்பிடத்தில்விண்ணவரொருமேவிமான்மழுவும்வேத்திரமு
மொள்ளொளிச்சுரிகைப்படையுங்கொண்டுறையுநந்தியையுற்றடியிறைஞ்சி
யள்ளிலைநெடுவேலவுணர்செய்திமையறைதலுமாங்கவன்முக்கண்
வள்ளல்பாலவிடுப்பவுய்ந்தனமென்றுமனமகிழ்வோடுமேகினரால். (௰௫)

வாயில்பற்பலவுந்தணந்துடன்கிமாணிக்கமண்டபமொன்றி
லாயிரகோடிபருதியொத்தொளிருமரியணையதன்மிசைமின்...
தூயவெண்பிறையுங்கங்கைமாநதியுந்துன்னெயிற்றரவமுந்தரித்த
நாயகனுமையோடிருத்தல்கண்டுவந்துநண்ணியேயடிக்கடிபணிந்தார். (௰௬)

மடலவிழிதழிபுனைந்தவாசரணமறைச்சிலம்பணிந்தவாசரணங்
கடுவையாமுய்யநுகர்ந்தவாசரணங்கரியுரிபுனைந்தவாசரணம்
படவரவணிந்தபண்ணவாசரணம்பாவைபங்குடையவாசரண
மடியவரலக்கணொழிப்பவாசரணமவிர்மதிபுனைந்தவாசரணம். (௰௭)

என்றுதோத்திரஞ்செயமரருக்கெல்லாமினிதினிலருட்கணோக்களித்து
வொன்றிநீரடைந்தகருமம்யாதென்னவுமாபதிவினவமாயவனும்
துனறுமோர்கரத்தாற்றனதுவாய்புதைத்துத்தனிற்றலையொருகையான்மடக்கி
வென்றிசேர்மழுமான்றரித்தவாதியேயின்விண்ணப்பமென்றிவைவிளம்பும். (௰௮)

சம்பனுமேனைநிசும்பனுமென்னுஞ்சீர்த்தனைத்தானவரிருவ
ரம்புவிமுதன்மூன்றுலகமுங்கவர்ந்தாரவர்களுக்கஞ்சியேயடியேஞ்
செம்பொன்மால்வரையிலொளித்திருந்தெய்த்தேந்திறலுடையவரையட்டென்னை
நம்பும்வானவர்க்குமெனக்குநீயிரங்கிநல்லருள்புரிதியென்றுரைத்தான். (௰௯)

சீதரன்மொழிகேட்டென்னையாளுடையான்றிருவருள்புரிந்தஞ்சலென்று
மாதுமைதனைப்பார்த்திவர்க்கிடர்புரியும்வாளெயிற்றவுணரையெல்லாந்
தீதறத்தணித்தியென்றுவாய்மலர்ந்தான்றெரிவையுநன்றெனவிசைந்து
நீதிசேர்வேணுவனத்தலத்துறையுந்துர்க்கையைநெஞ்சகத்துணர்ந்தாள். (௨௰)

மரகதத்துர்க்கையுணர்ந்தமையறிந்துமடக்கன்மீதிவர்ந்துசென்றணுகிப்
பரகெதிதருமெய்ச்சோதியையுமையைப்பரிவுடன்மலரடிபணிந்து

புரகரமுக்கட்புனிதவென்றரனைப்போற்றிசெய்துற்றெதிர்நின்று
கரகமலங்கள்சென்னிமேற்குவித்துக்கவுரிதன்றிருமுகநோக்கி. (௨௧)

அகிலமீரேழும்பயந்தநீயென்னையகத்தினிலுணர்ந்தகாரணம்யா
திகல்புரிபணிசளுண்டெனிற்பணித்தியென்னலுமுமைமனமுவந்து
மகிதலத்துறையுஞ்சும்பனையாதியவுணரைமலைந்துவென்றமரர்
தகவொடுந்தத்தநகரமுமரசுஞ்சார்ந்துறப்புரிதியென்றாள். (௨௨)

என்றெனவுமையைஞானநாயகனைநளினமென்மலர்ப்பதம்பணிந்து
நின்றுவானவருஞ்சூழ்தரவுடன்படரத்துடியிடைத்துற்கைமீண்டெய்தி
வென்றிசேர்மடங்கல்வெரின்மிசையிவர்ந்துவெய்யனைப்பதியின்வரச்செய்திக்
குன்றெனத்திகழ்பொற்கோயிலுடடைந்துகுலவுமான்றவிசின்வீற்றிருந்தாள். ௨௩

புனத்துழாய்முகிலுந்திக்குபாலர்களும்புலவருமாமுனிக்கணமு
மனத்தையூரயனுமுடன்படர்ந்தீண்டியடிதொழுதேத்தநோக்கிக்
கனத்திறமாந்துமணிவடம்புனைந்தகனதனமரகதத்துற்கை
மனத்தினிலவர்தமின்னறீர்ப்பதற்குமகிழ்ந்தனண்மதித்தோர்பொழுதில். (௨௪)

வடவரையென்னவயங்கிவானளக்குமவுலியும்வளைந்தவெண்பிறையுங்
கொடுவடவனல்காலுமிமூன்றுங்குலவுபொறநேடுண்காது
நெடியவெள்ளெயிறுஞ்சிவந்தவாயிதழுங்கரிய்பெருயிர்ப்பில்வெம்புகையுஞ்
சுடுசினத்துடனேகருணையுஞ்சிறந்தசுதாமதித்திருமுகமும். (௨௫)

கருமணிமிடறும்படவரவணியுங்கண்பனித்தாரும்பொற்கலனும்
வளைபுனைதடம்பொற்றோள்களையிரண்டும்வாளொழுமழுச்சிலைதண்டம்
பருதிவேல்சூலம்பாசமேமுசலமுதற்படைபரித்தகைத்தலமும்
விரிகதிர்மணிப்பொறகச்சறத்திரண்டுவிம்மியமுலைப்பயோதரமும். (௨௬)

கடுவுமிழரவச்சரியுஞ்சூடகமுங்கவினுறப்புனைந்தமுன்கையுங்
துடிநிகரிடையும்வளைந்தபட்டுடையுநலங்கொள்மணப்பொன்மேகலையு
மிடியெனமுழங்கவெழின்முழங்காளியல்புறப்புனைகண்டாமணியு
மட்லவிழ்கமலபதத்தினிற்பாதகடகமும்வளைந்த நூபுரமும். (௨௭)

குஞ்சரத்ததண்மேற்போர்வையுந்திமிர்ந்துகுங்குமக்களபமுமார்பு
கஞ்சினுங்கொடியவிழியினின்மேவிநலம்பெறத்திட்டுமஞ்சனமு
மஞ்சுசூழ்வரைநேர்புயந்தொறும்வளைந்தமதுமலர்த்தொடையுமாக
வெஞ்சினத்துற்கையடியிடைநின்றுமேவியோர்காளிவந்துதித்தாள். (௨௮)

உதித்தகாளியைக்கண்டச்சமுமகிழ்வுமுற்றனரினமயவர்சேடன் (ற்
பதைத்தனனிவண்மெய்ப்பரமபொருதாகிப்பகிரண்டம்வெடித்ததார்ப்பொலியா
ககத்திண்மெய்ம்மயிர்சாறெறுமெழுஞ்சேர்திக்களைகடல்பருகியதென்றுன்
மகித்தவளாற்றன்முழுதுணர்ந்துரைக்கவல்லவர்யாவருமிலையால். (௨௯)

இத்திறற்காளிமரகதத்துற்கையிணைமலரடியையுற்றிறைஞ்சி
சத்தரிசெங்கட்பவளவாய்மயிலேதானவர்குலமறத்தடிந்த



வித்தகிகான்செய்பணிவிடையென்னேவிளம்பெனத்தொழுதுநின்றுரைத்தாள்
பத்திசெயன்பர்க்கெளிதினின்முத்திபாலிக்குங்கவுசிகைபகர்வாள். (௩௰)

வேறு.

வெற்றிபெறுபிட்டாபுரத்தியெனும்பெயர்படைத்துமேவியென்றுங்
கொற்றமுறுமென்னணிகத்தலைவியாயுறைதியெனக்கூறிப்பின்னுஞ்
செற்றமிகுதிறற்சும்பனிசும்பனெனுந்தானவரைச்சேனையோடும் றே. (௩௧)
பொற்றொடிநின்புணர்ப்பதனாற் போர்த்துடன் கொண்டணைதியெனப்புகன்றாளன்

அப்பரிசுபுரிவனெனத் துற்கைமலரடிபணிந்தந்தரத்தாறேகி
யொப்பரியதிறற்காளியோங்குமகாமேருவின்மேற்றிசையினுற்று
மைப்பொழிலொன்றினிலடைந்துமோகினிதன்வடிவெடுத்துவதிந்தாளண்டோர்
முப்புவனங்கடந்தசும்பனிசும்பனுக்குற்றிவளுறைதன்மொழிந்தாரன்றே. (௩௨)

அடலவுணர்குலத்திறைவர்சண்டனையுமுண்டனையுமனுப்பியந்த
மடவரலையுடன்கூட்டிவருதிரெனவவருமலர்ப்பொழில்வாய்மேவிப்
படிபுகழுமெமக்கிறைவருனையழைத்தாரென்னவந்துபகரக்கேட்டுத்
துடியிடையுமெழுந்துசென்றுசும்பனிசும்பனைவயிற்றுன்னினாளால். (௩௩)

மேவியபைந்தொடிவனப்பைவிறலவுணர்குலவேந்தர்விரும்பிநோக்கி
மூவுலகிலிவணிகர்மெல்லியர்குழலாரில்லையெனமொழிந்துவில்வே
ளேவுதனக்கிலக்காகியெம்மிடத்திலேந்திழைநீயிருத்தியென்றார்
காவிமலரனையவிழிக்காரிகையுமதுகேட்டுக்கழறலுற்றாள். (௩௪)

பூவுலகில்வளஞ்சிறந்தவனைவனத்திற்கவுசிகைபோந்துறைந்தாளந்தப்
பாவையணித்தணபுரியுஞ்சிலதியரில்யானொருத்திபகைவேறின்றி
மூவுலகுந்தனிப்புரக்குமன்னவர்நீரெனைவிரும்பன்முறையோவந்தக்
காவிவிழிச்செங்கனிவாய்க்கன்னிதனைச்சென்றடைமின்கடிதினென்றாள். (௩௫)

இவ்விவலியையாவர்வென்றார்கவுசிகைபேர்விளம்பலுமெயவுணர்வேந்தர்
கதமெறியைத்தசையெனவேவிரும்பியுறுமீப்போலக்காதல்கொண்டு
மதுமலர்ப்பூம்பொழில்புடைசூழ்வரைவனத்துக்கேகமனவிசையிற்செல்லு
மந்திர்குரன்மானேறேறியணிகமும்பின்றொடர்ந்துவரச்சென்றாரன்றே. (௩௬)

எழிலுடைவானவர்மகளிரீருமருங்குஞ்சாமரைநின்றிரட்டமுன்பு
முழுமதிவெண்குடைநிழற்றமுருடுமுதலியம்பலவுமுழங்கமேவித்
தொழுத்தகையோடுடன்படர்ந்துவந்தியருந்துதிப்பவெற்றித்துவசமோங்க
மழைபுரைபூங்குழற்காளிவழிகாட்டப்பின்றொடர்ந்துவந்தாரன்றே. (௩௭)

வந்துதிருநெல்வேலிமாநகர்க்கீசானதிக்கில்வைகிமாயா
தந்திரங்கைவந்தசுக்கிரீபனெனும்படைத்தலைவன்றனைநோக்கிப் [ன்
பைந்தொடிக்கைக்கவுசிகையைநின்புணர்ப்பாற்கொணர்தியெனப்புகர்ந்தாரன்
வெந்திறலோர்தமைப்பணிந்துகாளியுடன்வெய்வனத்தின்மேவினான். (௩௮)

காளியுமத்தகுவனுடன்கழைவனத்திற்சென்றுகவுசிகையைக்கண்டு
தாளிறைஞ்சிமருங்குநின்றாள்சார்ந்தசுக்கிரீபனுடனவனைநோக்கி
வாளனையவிழிமடவாய்வாளவுணர்குலத்திறைவர்வாதின்மிக்கார்
தோளில்வலியுடையசும்பனிசும்பனெனும்பெயர்படைத்தசுடர்வைவேலார். (௩௯)

உனக்குமணங்காதலித்துவந்துறைந்தாரவரையடைந்துலகமேழு
நினக்கடிமைத்தொழில்புரியச்சேயிழைநீயிருத்தியெனவிசைந்தகேட்டுக்
கனக்குழற்றுர்க்கையும்வெகுண்டுகண்சிவந்தாள்கண்டனைங்கலங்கிமீண்டுச்
சினக்கொடியோன்சும்பனுக்குநிசும்பனுக்குமவளாற்றல்செப்பினாள். (௪௰)

சொன்னதுகேட்டழன்றவருந்தூம்ரலோசனனையனுப்பத்தானைபரவி
தன்னையறமுடித்திடுவென்றாங்கவனுமோரிலக்கந்தருவரோடு
முன்னியிசல்வேட்டார்ப்பமொய்மலர்த்தார்த்தற்கையவள்முனைநோக்கிக் (௪௧)
சன்னன்மொழிக்காளியைப்பார்த்திவன்றனேர்கவர்திடியெனக் கனன்றுசொன்ன

சொற்றபணிபுரிவனெனத்தண்ணெனவோர்மடங்கல்படைத்திவர்ந்துகுலம்
வெற்றிமழுப்பாசமுதற்படைபரித்துக்காளியெரிவிழித்துச்சீறி
யுற்றெதிர்ந்துமுன்னடைந்தவோரிலக்கந்தருவரையுமொருகைத்தண்டாற்
செற்றமுடனடித்துயிருண்டுடலையெல்லாம்பாரிலுடன்றெறித்தாளன்றே. (௪௨)

படைபேமவுணரெல்லாம்பொன்றினதுகண்டுமனம்புழுங்கிச்சீறி
மடமாதிங்கிவளொருத்திக்கபடைகொண்டிகல்புரிதல்வலியன்றென்ன
விடிவெருவமெனவார்த்துத்தூம்ரலோசனனிமைப்பினெய்துக்கையாற்
படியேழும்புகழ்காளிமடங்கலுடன்பாசத்தைப்பற்றியீர்த்தான். (௪௩)

மங்காதபுகழ்க்காளிவாளவுணன்புயவலியைமதித்தேயுக்ர
வுங்காரஞ்செய்திடலுமுயிருமொழிந்துடலும்வெந்துசாம்பரானான்
சங்காரத்தொழில்வல்லபைந்தொடியுங்கவிகைதன்மருங்குசார்ந்தாள்
பொங்கார்வத்துடனமரர்பூமாரிபொழிந்தவளைப்பொருந்தியார்த்தார். [௪௪]

அதரிவைகண்டுசென்றுசும்பனிசும்பனையடைந்துதொழுதங்கின்று
மாதொருத்திபடைபொருதுதூம்ரலோசனனுமவன்மருங்குசென்ற
வேதிறல்வயவீரரிலக்கரும்பொன்றினரெனவேயிசைப்பக்கேட்டுக்
காதுசினத்தருவர்மன்னர்சண்டமுண்டன்றனையேவக்கனன்றுசெல்வார். (௪௫)

வேறு.

மன்னரேவலைத்தலைக்கொடுவாளமர்குறித்துத்
தன்னைநேரிலாச்சண்டனுமுண்டனுந்தயங்கும்
பொன்னந்தேரியர்ந்துபடைக்கலம்பற்றிப்புனரி
யன்னசேனையுஞ்சூழ்ந்துறச்சென்றனரன்றே. (௪௬)

முரசொலித்தனகலித்தனவயப்பரிமுகில்போற்
புரசைமால்[illegible]முழங்கினபொருதிறல்படைத்த



வரைசெய்தோள்வயவீரரும்வாய்திறந்தார்த்தார்
திரைசெய்வாருதிதிடர்படச்செறிந்ததுதூளி. (௪௭)

இனையபான்மையாற்சண்டனுமுண்டனுமெய்து
மனையதன்மையையமாருற்றுறைந்திடவினவிச்
சினகாத்திறுமுறைதனன்றன்றெனத்தேர்ந்து
தனதுதானையுங்காளியுஞ்சார்ந்துடன்படர்ந்தார். (௪௮)

வென்றிசேர்தருமடங்கலின்வெரின்மிசையிவர்ந்து
நின்றுசித்துபூந்துறைமருங்காகவோர்பொழிலிற்
சென்றுவாலரியணைமிசைதிகழ்ந்துவீற்றிருந்தாண்
மன்றலுன்றியபூங்குழன்மரகதநற்கை. (௪௯)

அதிருமார்கலியெனவருமவுணர்மாத்தானை
மதுமலர்ப்பொழிலதனிடைத்துற்கைவைகுதல்கண்
டேதிர்படர்ந்துபோர்முரசறைந்திலங்குவாளுநிவு
முதிருவானவருள்ளமுழ்லையவார்த்தனவால். (௫௰)

அலங்கல்வார்குழற்சவு[illegible]கயானையைநோக்கி
விலங்கனேர்முலைக்காளியைவிழியினேவச்
சலங்கொண்டாங்கவர்க்கெதிருற்றுத்தடுத்துத்தான்வருங்
கலங்கவானுருமேறெனக்கையெடுத்தார்த்தாள். (௫௧)

ஆர்த்துநேர்ந்தவளாற்றலையவுணருமழன்று
பார்த்துவாளெழுமழுக்கொழுபகழிதண்டாழி
கூர்த்தவேன்முதலாகியபடையெலாங்குறித்துச்
சூர்த்தகொக்குடைக்காளிமெய்ம்மறைந்திடச்சொரிந்தார். (௫௨)

ஆரும்வன்றிறற்காளியுமவர்திறநோக்கி
மேருமால்வரையனையதோருருக்கொடுவெகுண்டு
வாரிபாமெனவாய்திறந்தார்த்துவாளவுணர்
போர்பழிந்துகப்படுகொலைபுரியலுற்றனளால். [௫௩)

மடுத்துவாயிதழடுக்கியேவலியுடைக்கரத்தாற்
பிடித்துநீறெழப்பிசைந்தனள்பிறைபுரையெயிற்றுற்
கடித்துமிழ்ந்தனள்கைகளாலசனிவீழ்ந்தனன
வடித்துக்கொன்றனளடுதிறலுடையமாகாளி. (௫௪)

ஆர்த்தவோசையாலளவிலோர்தமையுயிரழித்தாள்
பார்த்தபார்வையாற்பற்பலர்தமைக்களப்படுத்தாள்
கூர்த்தவள்ளுகிர்ப்படையினாற்சிரங்களைக்கொய்தாள்
தார்த்தடம்புயத்தாக்கினாற்சலங்கொடுதடிந்தாள். (௫௫)

தேரைத்தேரினாற்சிதைந்துகவெடுத்தடித்துடைத்தாள்
வீரர்தங்களைவீரரால்விழிந்துகப்புடைத்தாள்

காருடற்கரிதனைக்கரியாற்களப்படுத்தர
ளாரும்வாசியைவாசியாலுயிருகவறைந்தாள். (௫௬)

தந்திரப்படைத்தலைவரைத்தடக்கைமால்கரியைக்
கந்தரத்தினைவயவரைப்படைக்கலத்தோடும்
பைந்தொடிக்கரத்தாலள்ளியள்ளியேபதைப்ப
வெந்திறற்பகுவாய்ப்பெய்துபசிகெடமிசைந்தாள். [௫௭]

மானவேற்படைத்தலைவரைவய்வரைப்பரியை
யானைதன்னையுமங்கையாலெடுத்துவாய்ப்பெய்தே
மேனிமிர்ந்தபைங்கரும்பெனவிரும்புடன்மிசைந்துள்
ளூனுமாவியுமுண்டுவெள்ளென்பினையுமிழ்ந்தாள். (௫௮)

மேருமால்வரைதன்னுடன்வெருண்டெடுத்தறைந்தாள்
பாரின்வீட்டியேபதத்திலுற்பவசைபடத்தேய்த்தா
ளாரும்வேலையூடமிழ்த்திருளங்கையால்வாரிச்
சீருலாவுமெண்டிசையினுஞ்செலவிட்டெறிந்தாள். [௫௯]

இடிக்கொன்றனனொடுவயரங்கணைத்தொடர்ந்து
கூடிக்கிரீடமுளண்டமுங்குலுங்கவேசதியி
லூடிக்கொன்றனளச்சமுற்றெளித்தவர்தமையுந்
தேடிக்கொன்றனள்சிற்றமிக்குடையமாகாளி. (௬௰)

இனையபான்மையிலிகல்குறித்திண்டியவவுண
ரனிகமாய்ந்ததாலறுகுறையனந்தமாடினவாற்
கனகவெற்பெனப்பிணக்குவடுயர்ந்தகாசினிமேற்
பனிநெடுந்திரைக்கடலெனப்பரந்ததுகுருதி. [௬௧]

காளியார்த்தலுந்தானைமாய்ந்ததனையுங்கண்டு
மீளிமொய்ம்புடைச்சண்டனுமுண்டனும்வெகுண்டு
நீளமேவியதேருடனேர்ந்துவில்வளைத்து
வாளிபூட்டியேயிறுதிநாண்மழையெனச்சொரிந்தார். (௬௨)

சொரிந்தவார்கணையொன்றுநூறுகியேதன்னி
விரிந்தவான்புகழ்க்காளிதன்மேனியிற்பட்டு
முரிந்துநேருறப்பிளப்புண்டுமுனையறமடிந்து
நெரிந்துதுண்டுகளாகியும்வீழ்ந்ததுநிலத்தில். (௬௩)

விட்டவார்கணைபழுதுறநோக்கியேவெகுண்டு
வட்டவேலெழுமழுமுதற்படைபலகோடி
தொட்டுவீசலுமணுகியேகாளிதன்றோண்மேற்
பட்டுதுண்டுகளாகியேபாரில்வீழ்ந்தனவால். (௬௪)



திண்டிறற்புயத்தவுணர்தந்திறல்கண்டுசீறி
மண்டுவெஞ்சினக்காளியும்வந்தடர்த்தணுகி
முண்டன்பங்கியைப்பற்றியேமுரண்வலிக்கரத்திற்
கொண்டவாளினாற்சிரந்துணித்தவனுயிர்குடித்தாள். (௬௫)

காலனேயனமுண்டன்மாய்ந்ததுகண்டுசீறி
யாலமேயெனச்சண்டனார்த்தணுகலுமவனைச்
சூலவேல்கொடுகுத்தியேதுணித்துயிர்குடித்து
மாலைதாழ்புயக்காளியுமகிழ்ந்துநின்றார்த்தாள். (௬௬)

மற்றடம்புயச்சண்டனைமுண்டனைமாய்த்த
வெற்றிநோக்கியேயமரரும்பிரமனுமாலுஞ்
சுற்றுவார்சடைமுனிவருந்துதிசெய்துமகிழ்ந்து
பொற்றொடிக்கரக்காளிமேற்பூமழைபொழிந்தார். (௬௭)

மன்னுவெஞ்சினத்திகல்செய்துமாய்ந்தவாளவுணர்
சென்னிரண்டையுங்கைகொடுசென்றுமாகாளி
பின்னுவேற்படைத்துற்கைவென்றடல்படைத்த
கன்னிமுன்னமேகையுறையாய்வைத்துப்பணிந்தாள்.

மகிதலம்புகழ்துற்கையுமகிழ்ந்துகாளியைப்பார்த்
திகலினீண்டியவெறிசுடர்த்தானையினோடுந்
தகவில்சண்டனைமுண்டனைக்கொன்றதன்மையினான்
மிகையில்சாமுண்டியெனும்பெயர்விருப்புடன்கொடுத்தாள். (௬௯)

வேறு.

அருத்திகூர்ந்துதன்னடியடைந்தவர்க்குநல்லருள்புரிந்திடும்பிட்டா
புரத்திசாமுண்டியெனுமொருநாமமும்பொருந்திமேவினள்சென்று
விரைத்தபூந்தொடைச்சண்டனுமுண்டனும்விளிந்ததன்மையைத்தூதர்
வரத்தின்மேதகுசும்பனைநிசும்பனைவணங்கிநின்றுரைசெய்தார். [௭௰]

கேட்டவேலையிற்சண்டனுமுண்டனுங்கிஞ்சுகநிறச்செவ்வாய்
வாட்டடங்கண்ணியொருத்தியான்மடிந்ததற்புதமெனமனத்தெண்ணி
நாட்டந்தியுகவெகுண்டயன்முதற்சுரர்நல்கநாடொறுமேபெற்
றீட்டுபல்படைக்கலம்பற்றித்தேரிவர்ந்திகல்குறித்தெதிர்போந்தார். (௭௧)

மன்னரோகுமத்தன்மையைநோக்கியேமறிதிரைக்கடலேழுந்
துன்னியோருருக்கொடுபடர்ந்தாலெனத்துண்ணெனவெழுந்தார்த்துப்
பண்ணுநால்வகைத்தானையும்படைக்கலத்தலைவரும்புடர்திண்டிப்
பொன்னந்தேர்மிசைச்செல்லுமவ்விருவர்தம்புடைசூழ்இயினதன்றே. (௭௨)

வேழமார்த்தனவயவர்தோள்புடைத்தனவிரித்தகேதனம்விண்டோய்
வாழிமான்றடந்தேர்மணிகறங்கினமலிந்தவெண்குடைவெண்பற்
சூழிமானிரைகலித்தனபல்லியந்துவைத்தனவெழுந்தனி
யாழியேழினுஞ்செறிந்தனமிளிர்ந்தனவடுபடைக்கலமன்றே. (௭௩)

கரியிருட்டமும்வயவர்தந்நோக்கமுமலர்காப்படையுங்கா
லெரியுமேவியேவிரிந்துநீர்பருகலாலீரமற்றனறுங்கப்
புரவிவாயுமிழ்விலாழியுமதகரிபொழியுமும்மதநீரும்
பெருகியூற்றமுன்புபோனிறைந்ததுபின்னும்வெண்டிலாயாழி. (௭௪)

வேறு.

இலைமலிவேலடலவுணர்க்கிறைவர்மருங்கினிலிராசதத்தெய்துஞ்சேனைத்
தலைவர்தொகைமூன்றிலக்கத்திருபதினாயிரஞ்சங்கஞ்சாற்றுமந்தக்
குலவுதடம்புயத்தலைவரொவ்வொருவற்கெண்ணிறந்தகோடிசேனை
மலிதருமப்பெருந்தானைத்தொகையைமுழுதுணர்ந்தெவரோவுரைக்கவல்லார். (௭௫)

இனையபடைத்தலைவராயுஞ்சேனையையுமன்றியிகற்கலைதேர்போர்பட்டி
யனையதிறல்வானவுணர்ம்பதினாயிரகோடியவருமல்லால்
[illegible] உடையியாசுரனொன்றுமலைக்கொப்பாகித்
தினவுறுதிண்புயக்காலகேயரொன்றுமெண்ணிறந்தசேனைமன்றோ. (௭௬)

செப்புதொகைத்தலைவரொடுமெண்ணிறந்தகோடிவெள்ளஞ்சேனையொடு
மொய்பிறிறற்சம்பனுடனிசும்பனும்போர்வேட்டுவெகுண்டுருத்துச்சென்றார்
முப்புவனந்தட்டழிந்துவெருகடலுங்கரைபுரண்டமூளரிச்செங்கண்
ணைப்புயனுமிமையவருமனத்திகைத்தார்வடவனலுங்குளிர்ந்ததன்றே. (௭௭)

திண்டிறற்றேர்ச்சும்பனிசும்பன்னிராசத்தானியொலிசென்றுவிம்ம
வெண்டிசையுஞ்செவிடுபட்டவெழுகடலுங்கலங்கினவாலிலங்குசோதித்
தண்டாளக்சோலைவபுனைகொடிஞ்சடர்ப்பதபனன்முதற்சாற்றுங்கோளின்
மண்டலங்கடட்டழிந்தமணியொலியால்வெடித்தவான்முகடுமன்றே. [௭௮]

இன்னபரிசடலவுணர்க்கிறைவரிகல்குறித்தடறல்கண்டிமையோரெல்லா
மண்ணியகைகாணநின்றிவராய்வெருவிமனம்பதைப்பவர்தாழுக்கட்
கண்ணியிணையடியிறைஞ்சிக்கனன்றுசும்பனிசும்பனிகற்களத்திற்போந்தா
ரன்னையெழுந்தருளியெமைப்பரப்பதற்காவலாயெதிர்ந்துதொழுதார். (௭௯)

அச்சமுறுவானவர்வந்துரைப்பதுங்கேட்டஞ்சன்மினென்றவையகல்விப்
பொய்ச்சவிடைத்துற்லைதனதுடம்பினின்றுமிழ்ந்தாளளிபுகல்கௌமாரி
நச்சரவுபுனைந்தபிரமாணிமயேஸ்வரிவிசையபராசியின்னி
பச்சைநிறவைட்டுணவிவராகியெனுமடந்தையவாப்படைத்தாளன்றே. (௮௰)

சுந்தரமுந்தோள்வலியுங்கைப்படைகளொடுமுதித்தவரைப்பொற்கொங்கைப்
பைந்தொடிக்கைகளெழுவருக்குமொவ்வொருவர்க்கொருகோடிபதாதியாக



வெந்திறலுங்கொடுஞ்சினமுமேயமடந்தையர்தமையும்விதித்தலஃதி
யிந்திரன்கைதொழுதேத்துதுற்கையும்போர்குறித்துவெகுண்டெழுந்தாளன்றே. (௮௧)

சூலமழுவெழுத்திகிரிசரிகைகிலைகணைகுலிசஞ்சடர்வேல்பிண்டி
பாலமுதற்படைபலவுமையிரண்டுகரத்தினிலும்பற்றிச்சென்று
வாலரியின்மிசையிவர்ந்துகொடிவயங்கக்குடைதிகழமருங்குமேவி
யேலமலர்க்கருங்குழலார்கவரிபணிமாறவியமிரட்டமன்றே. (௮௨)

காளியுமையொருகோடிடாகினிகடமைப்படைத்துக்கனன்றுசூழ
மூளுமிகல்குறித்தரிமீதிவர்ந்துபடைக்கலம்பரித்துமுனிந்துசெல்ல
வாளனையவிழியேழுமடந்தையருஞ்சேனையுடன்மருங்குசாரப்
பாளைபுரைமலர்க்கூந்தன்மற்றுளதானையும்வெகுண்டுபடரச்சென்றாள். (௮௩)

படக்கிளர்பன்னகம்புனையுங்கவுசிகைதன்வாலரியும்படருங்காளி
மடங்கலுமார்த்திடுமொலியான்மாதிரமால்யானையெட்டுமயங்கிவீழ்ந்த
வொடுங்குமிடைச்செங்கனிவாயிவர்மருங்கில்யோகினிகளாகியுற்றோ
ரடங்கலுமார்த்திடுமொலியால்வெடித்ததுமேதண்டமுடன்புவியுமன்றே. (௮௪)

படிப்பர்கவுசிகைபுகழைப்பகருவர்அம்மாற்றலினைப்பாதம்போற்றி
நடிப்பர்படைக்கலந்திரிப்பர்விண்மிசையேகுவர் [illegible]
குடிப்பர்கட்விணைமுகந்துகுன்றுகளைக்குவலயத்துடழுந்தத்தண்டா
லடிப்பரடித்தலம்புடைப்பரயிலெயிற்றுயோகினிகளடையமன்றே. (௮௫)

அட்டதிக்குஞ்செவிடுபடத்தனித்தனிவாய்திறந்தார்ப்பரவுணர்முன்போய்க்
கிட்டுவர்கிச்சுறநகைப்பரெரிவிழிப்பர்கேழ்கிளரும்விசையத்திண்டோள்
கொட்டுவர்பாருலகுலையக்குப்புறுவரொதிருறுவர்துணங்கைகோத்து
வட்டணையிட்டறைகூவித்தெளிப்பரடுதிறலுடைவஞ்சனிகளன்றே. (௮௬)

விரைசெய்மதுமலர்க்கூந்தல்யோகினிகள்ப்பரிசுவெகுண்டுசென்று
வரைசெய்புயத்தவுணர்படைக்கெதிரேற்றுவலையமயில்வாள்விட்டேறு
பரசுமுதற்படைக்கலங்கள்வீசிரைதையவுணர்பார்த்துச்சீறி
முரசறைந்துதிகிரிகதைமுசண்டிமுதற்படைபலவுமுனிந்துய்த்தாரால். (௮௭)

வேறு.

பாசையிலைத்ததானவரைப்பற்றியெடுத்தேடாகினிக
ளாசத்தரையினுடன்றேய்த்தாரடித்தாரவர்கைப்படைபறித்துக்
காரிற்போலியுமுடறுணித்தார்கதிர்வாளெறிந்துசிரமறுத்தார்
வீரமழுவாலுரம்பிளந்தார்விளியமலர்த்தாள்கொடுமுதைத்தார். (௮௮)

அடல்வாளவுணர்யோகினிகளங்கைப்படையைப்பறித்தொடித்தா
ரிடியேறெனமார்புறப்புடைத்தாரொடுத்தெண்டிசையிற்செலவெறிந்தார்
கொடுவாள்கொண்டுதசையறிந்தார்குந்தங்கொடுதோளினைத்துளைத்தார்
தொடிசூழ்முன்கைதனையொடித்தார்துடிப்பக்கதையாலடித்தனரால். (௮௯)

அவுணரிரதந்தனையெழுக்கொண்டடித்தம்புலியினுடழுத்திக்
கவனப்பரியைமதகரியைக்கழுமுட்படையர்னுடல்பிளந்து
தவனவெயிற்றுத்தானவர்தந்தலையைத்திருகிப்பாதடித்துப்
புவனம்வெருவயோகினிகள்புணரியெனக்கையெடுத்தார்த்தார். (கய)

வெற்றிமருவும்யோகினிகண்மேவியுகைத்துவருபரியைக்
கொற்றக்கரடக்கயந்தன்னைக்குறுகியவுணரொருகரத்தாற்
பற்றித்திரித்துப்பாரினுடன் பதைப்பவடித்துத்தடந்தேரை
யுற்றுத்தாளாலுதைத்துருட்டியோங்கற்றடந்தோள்புடைத்தனரால். (கக)

இந்தப்படியேதானைதம்மிலிகல்செய்திடக்கண்டெரிவிழித்துச்
சந்தப்புயத்துத்தகுவர்படைத்தலைவர்தடம்பொற்றேர்கடத்தி
வந்துற்றெதிர்ந்துசிலைகுனித்துவயங்கூர்வாளிமழைதூர்த்து
கந்தக்குழல்யோகினிகடமைக்கனன்றுமிகவுங்கலிந்தனரால். (கஉ)

தலைவரடைந்துயோகினிகடம்மைமலியுந்தன்மழையைக்கண்
டுலகுப்கழுங்கவுசிலைபோர்முகத்தின்மடங்கலுகைத்தெதிர்ந்து
குலவுவடவெற்பனையதனுக்குனித்துப்பகிரண்டமுழங்கநீக்க
வலையற்றுவரிமறுகுறவெட்டரவும்பதைப்பாணெறிந்தாள். (கங)

ஆணிஞ்ஞஞ்சஞ்சேட்டலங்கிக்கித்தகுவர்வரைப்புயமும்
பூணுமுரியத்துகில்சோரப்புவிமேல்விழுந்துபுரண்டிறந்தார்
கோணைமதமாத்தலைவெடித்துக்குளறிவிளிந்தீதுறம்புரவி
யாணொழியத்துடித்தறந்தற்றதநுண்ளோயினவால் (கச)

வேறு.

இனனவாறுதகுவர்சேனையின்னலெய்தும்க்கணத்
தன்னையோர்தொடைக்கணந்தமாசுகந்தன்த்தொடுத்
தொன்னலார்தமீதுய்ப்பவொன்றுநூறுகோடியாய்த்
துன்னிழுழியசனிப்பாறறெருடர்ந்துமெய்துணித்த (கரு)

ஒருகைவில்லிலொருகைவாளியுதவவெய்வதன்றியு
மிருமருங்குமேயநாலிரண்டுகைத்தலத்தினு
மருவுவெம்படைக்கலங்கடமையும்வஞ்சர்சேனையை
விரைவினெய்திடியபின்னென்றுதுற்கைகூறிவீசினள். (கசு)

கூறிவீசுபடையொவ்வொன்றுகோடிரூபமாகிவிண்
ணூறுசென்றுமின்னின்மின்னியழலுமிழ்ந்தணுகியே
சீறிநேர்ந்ததகுவர்தங்கள்சேனைநாலுவகையுமெய்
வேறுகூறுபட்டிறக்கமேவியேதுணித்ததே. (கஎ)

சிரந்துணிக்குமவுணர்முன்புசெய்தவத்தினெய்துநல்
வரந்துணிக்குமுடறுணிக்குமருவுவெம்படையர்டுெ



கரந்துணிக்கும்விழிதுணிக்குமிலகுகாழரணிகுலா
வுரந்துணிக்கும்விந்தையங்கைவில்லினுந்தும்வாளியே. (கஅ)

தந்தியைச்சிதைக்கும்வாசிதன்னையுஞ்சிதைக்குநேர்
வந்ததேரையுஞ்சிதைக்கும்வயவர்வில்லைத்துநின்
றுந்தும்வாளியைச்சிதைத்தொலிக்கும்வெற்றிமுரசையு
மந்தமுற்றிடத்துணிக்குமன்னையேவும்விசிகமே. (கக)

மேயதேரினுற்றெதிர்ந்ததலைவர்வெய்யசென்னியோ
ராயிரந்தடிந்தனந்தமானையைத்துணித்துமுன்
பாயும்வாசிகோடியைப்பஃறுணிப்படுத்தியே
தியுமிழ்ந்துவிசைகெடாதுசெல்லுமேகவாளியே. (உ0)

இடிகொளூழியெரிகொலென்னவீண்டிமேவுகந்துகத்
துடறுணித்தெதிர்ந்ததேருடைத்தவீரருயிர்குடித்
தடையுமத்தமாவையுமடுத்தழன்றெரித்ததான்
மிடல்புடைத்தவீரதுற்கைபோரின்வீசுசூலமே. (உக)

ஆனைவீரரிரதம்வாசியுற்[illegible]வும்பிகற்
சேனைகாவலாளர்[illegible]றுசின்னமுற்தெரிந்திடா
தூறுமென்புஜீவனியூடுமொன்றவுற்றறைத்ததாற்
பானலங்கண்வீரதுற்கைபடரவுய்த்தமுசலமே. (உஉ)

தினகரன்படர்ந்துமேவுதிமிரநீக்குமாறுபோல்
வினையவெங்கணவுணர்மன்னருடனூருத்துமேவிய
வனிகநாலுவகையையுமழன்றுபுக்கறுத்ததாற்
புனிதமேவுவிசையதுற்கைபொங்கியுய்த்தபருதியே. (உங)

படைத்தலைவர்சென்னியைப்பஃறுணிப்படுத்தியே
யடுத்ததேனாநீறுசெய்தடைந்தமாவைவாசியைத்
துடித்துவீழ்ந்திறக்கநூறுதுண்டமாக்கியட்டதாற்
றடுத்தெதிர்ந்துவிந்தைசீறியேவமேவுசத்தியே. (உச)

வென்றிமேவுபடைகளிந்தவாறுமேவியடுவது
மன்றிவீரதுற்கைநெற்றியம்பகத்தினங்கியாற்
கன்றிநோக்குதிக்கெலாங்கடுஞ்சினத்தயித்தியர்
துன்றுசேனைவெந்துசாம்பராகிவீழ்ந்துதுஞ்சுமே. (உரு)

தொடியுலாவுமுன்கைவீரதுற்கைபோழகுகுழ்
வடிவின்மேவுசெங்கனன்மடுப்பமாடுசீறியே
யடையும்வெய்யதகுவர்சேனையுய்யின்வெந்தழிந்ததாற்
சுடரின்விட்டில்வந்துவீழ்ந்துதுஞ்சுகின்றதென்னவே. (உசு)

இந்தவாறுதுற்கைநின்றிகல்விளைக்குமேல்வையி
லந்தமாதிவர்ந்துகைக்குமரியுருத்தடர்ப்பவே

வெந்திறற்றருவர்தங்கள்சேனைவெள்ளமவனியிற்
புந்திபந்தியாகவேபறைந்துவீழ்ந்திறந்ததே. (ாஎ)

ஆர்த்தவோசையாலும்வாளிளுலுமங்கைதுவுறப்
பார்த்தபார்வையாலும்வெய்யபன்னகங்களாலும்வாய்க்
கூர்த்தபற்களாலும்மொய்த்தடர்ந்துகொன்றதாற்
சீர்த்திமேவுசெயமடந்தைசேர்ந்துகைத்தசியமே. (ாஅ)

இன்னவாறுமுக்கண்வீரதற்கைகொல்லவீண்டிய
மன்றுதானையும்படைத்தலைவருமடிந்தனர்
நனைர்வேலையேழுமொன்றியூழிநாளின்வெல்பொற்
றுன்றுசோரியுலகெலாந்துளங்கவந்துசூழ்ந்ததே. (ாகூ)

குலவுமெண்ணிறந்தகோடிகொடியவெம்பிணக்குவ
யிலகுபாதலத்துமூழ்கவோங்கிவானளந்ததா
ல்குரும்வெய்யபடைக்கரத்துலோநதியெக்குமீண்டிய
வலகைதவக்குரோணியநுகுறடித்ததே. (ாய)

பருந்துநாளிகங்கமாதிபநகர்மெய்த்தசைப்ரித
[illegible]முமெருழுமுளையும்
விருந்தாகவெல்லாவரியவுண்டுவந்துவீற்
றிருந்தெழுந்திருக்கவுற்றமற்றெதிரொடுக்குமே. (ாகக)

வேறு.

அனிகமிறந்ததைநோக்கிச்சும்பனெனுமவுணர்மன்னனழன்றுசீறி
மனவிசையிற்றேர்நடத்திவந்தெதிர்ந்துமலரயன்முன்வழங்கப்பெற்ற
முனைகெழுமுமயிறிகிரிமுசுண்டிமுதற்படைபலவுமுனிந்துதூண்டிப்
புனிதமிகும்யோகினிகடமைத்தொடர்ந்துறாந்துபோர்புரிந்தானன்றே. (ாகஉ)

மிடலுடையநிசும்பன்விடமேவுபடைவெற்பினிடிவீழ்ந்ததென்னத்
தொடியணிகையோகினிகண்மிசைசதுவியுறப்பனைத்துரந்துணப்பநில்லா
துடுசினவெம்புலிதுரப்பவஞ்சியகன்மானெனவோட்டெடுத்தார்நோக்கிப்
படரடைந்தமனத்தினராய்ப்பண்ணவருமாதவரும்பதைத்தாரன்றே. (ாகங)

அதிர்கழற்காற்சும்பனிவ்வாறமரியற்றக்கண்டுமயேஸ்வரியேயாதி
மதிபுரையுறுதலேழுமடந்தையருங்காளியும்வநதெதிர்த்துச்சீறிப்
பதகனையுற்றடுகவெனப்பகர்நதுகதையயில்குலிசம்பருதிநாஞ்சின்
முதலபடைக்கலங்களொட்டுமுறைமுறைவீசலும்வ்லாயின்முன்னிற்றன்றே. (ாகச)

திண்ணெடுந்தேரளடலவுணன்செலுத்தவருபடையையெல்லாஞ்சிந்தத்துவீட்டித்
துண்ணெனவுற்றெதிர்தாங்கிச்சும்பன்வளாயுடலையெட்டுத்துண்டமாக்கி
விண்ணவர்கண்டுவகையுறநாலிரண்டுபடைக்கலமுமீண்டதார்த்து
நண்ணியவனுயிர்குடிதததோள்புடைத்துக்கூத்துவனுநடித்தானன்றே. (ாகரு)



சும்பனிறந்ததைநோக்கிநிசும்பனெனுந்தானவன்றேர்தூண்டிச்சீறிச்
செம்பொன்வரையனையதொருசிலைகுனித்துக்ககணைமாரிசிதறிச்சூழ்ந்து
தும்பைமலர்புனைகாளியுடனெழுவருடலினையுந்துளைத்தானாக்கி
வம்புலவுமலர்கூந்தற்கவுசிகைவாலரியுகைத்துவந்தாளன்றே. (ாயசு)

வந்ததிர்த்துக்கவுசிகையுநிசும்பனையுற்றடுதியெனமறங்கொண்டார்த்தே
வெந்திறற்சூலாயுதத்தைவீசினளப்படையுமிளிர்ந்துவிண்ணூ
டுந்துதிரைக்கடல்சுவறவுலகுறுமன்னுயிர்பதைக்கவூழித்தீயுஞ்
சிந்தைபதைத்தடங்கவனற்சிகைபரப்பிமணிகறங்கச்சென்றதன்றே. (ாயஎ)

மேவியசூலப்படையின்விறனோக்கிநிசும்பனதன்மீதுசெல்ல
வேவுபலகோடியுய்த்தானவற்றையெல்லாமெரித்துவிளாங்கெய்தபின்னும்
பூவுறைநான்முகனெடுமால்புரந்தரன்முச்சுடர்முதலாய்ப்புகலும்வெற்றித்
தேவர்படைக்கலங்களெல்லாமுறைமுறையேதொடுத்ததன்மேற்செலுத்தினுனல்.

தொட்டதொட்டபடையையெல்லாந்தண்ணெனவேதுணித்துதறிச்சூலவைவே
லட்டதிக்கும்வெற்றிகொண்டநிசும்பனெனுந்தானவர்கோனுரமார்பிற்
பட்டுருவியுயிர்பருகிப்பகிரதி[illegible]புனலாடிப்படர்ந்துவாய்ந்த
மட்டவிழ்பூங்குழற்கூந்[illegible]கவுசிகைதனமலர்க்கையில்வந்துறைந்ததன்றே. (ாயக)

உயிரொழிந்தநிசும்பனுடறேரினின்றுந்தலைகீழாயுலகில்வீழ்ந்த
தயிலெயிற்றுத்தகுவர்மன்னரிருவருமிப்பரிசிறந்தாரதனைநோக்கிக்
கயல்விழியோகினிகளுடன்காளியுமேழ்மடந்தையருங்கடல்போலார்த்து
மயில்புரையுமென்சாயற்கவுசிகையைவந்திறைஞ்சிமருங்குசூழ்ந்தார். (ாஉய)

வானவருமாலயனுங்கவுசிகையைவந்திறைஞ்சிவரத்தின்மிக்க
வூனுறைவேற்சும்பனிசும்பனைத்துணித்தெம் மின்னலெல்லாமொழித்தாட்கொண்
கானமலர்க்கருங்குழலாயாளையுநீகல்கியகாரணத்தினாலே
யேனையமைந்தருக்கிடுக்கணெய்திலன்னைநீக்குவதுமியற்கையன்றே. (ாஉக)

என்றுதுதிசெயுமமரர்தமைநோக்கிக்கவுசிகையுமினிநீரெல்லாஞ்
சென்றுமதுநகரடைந்துதீதறவீற்றிருந்தரசுசெய்வீரென்று
ளன்றெனப்பின்னரும்வணங்கிநெல்வேலிநாயகனைநயந்துபோற்றி
நின்றுனதுதிருவருளாலுய்ந்தனமுய்ந்தனமெனவேநிகழ்த்தியேகி. (ாஉஉ)

தத்தம்வளநகரடைந்துதகவுடனேவீற்றிருந்தார்தரணியெங்கும்
வித்தகநான்மறைவழக்கமேவினவேள்வியுநடந்தவிருப்பினோடு
முத்திபுகமாதவருந்தவமுயன்றார்புகலுமறைமுறைதப்பாது
சித்தமுவப்புடன்மேவிமன்னுயிருமின்னலற்றுச்சிறந்ததன்றே. (ாஉங)

வெற்றிபெறுகவுசிகையுங்காளியொடுந்தானையொடுமீண்டுசென்று
பற்றலர்தம்புரமெரித்தபசுவனநாயகனைவடிவாளைப்பண்பொ
டுற்றிறைஞ்சியோரேழுமடந்தையர்க்குமியற்றிவெவ்வேறுறையுணல்கி
யற்றமில்சீருடனிருத்தித்தன்னுடையகோயிலிற்புக்குறைந்தாளன்றே. (ாஉச)

கவுசிகைதன்னருண்முறையேகாளியுந்தன்சேனையுடன்கடிதினேகி
யவனிபுகழ்நெல்வேலிமாநகர்க்குத்தரதிசையிலவிருஞ்சோதி
நவமணிப்பொற்கோயில்கொண்டுவானவருமாதவருநண்ணிப்போற்ற
வுவகையொடுந்தொழுமடியார்வேட்டதெல்லாமகிழ்வுபெறவுற்றாளவ்வே. [௱௨௫]

ஆற்றலுடைவடக்குவாய்ச்செல்விநெல்லைமாகாளியவனிவேந்தர்
போற்றிசெய்செண்பகச்செல்விபொருதிறன்மிக்குடையபிட்டாபுரத்தியென்றுஞ்
சாற்றுதிருநாமமெய்தித்தரணிபுகழ்வேணுவனந்தனைவெந்நாளு
மாற்றலரால்வின்னலுறுவகைபுரந்துமான்றவிசினுறைந்தாண்மன்றோ. [௱௨௬]

வேறு.

ஈதிவணிற்கச்சும்பனுமேனைநிசும்பனுமிறந்ததன்மையினைத்
தூதுவர்சென்றுங்கருளுடன்பிறந்ததோகைதன்காண்முனையாற
மேதகுதடந்தோளிரத்தபீசனுக்குவிளம்பலுங்கேட்டவன்செம்பொற்
பூதரமிசைபோயாயிரம்வருடம்புரையறுமாதவம்புரிந்தான். [௱௨௭]

புரியமாதவங்கண்டயனும்வந்தனனிப்புகறிவேண்டியவரமெனலும்
வரைபுரைதடந்தோளவுணனுநோக்கிவணங்கியென்மேனியிலெழுந்த
குருதிபாரடையின்மற்றெனைப்போலக்கொரோக்கிற்ட்டவனிவேறு
மருவியெண்ணிறந்தகோடியர்தோன்றிமாற்றலருடன்பெ... டவும். ௱௨௮

அவர்கண்மேயகுருதியவனியில்விழினுமன்னவாறுதிக்கவுமழியாத்
திவண்மணித்தேருந்தெய்வதப்படையுமுதவெனச்செப்பலும்வினவிப்
புவனமீன்றவனும்வழங்கியேயகன்றான்பொருதிறலிரத்தபீசனும்பெற
லுவகையிற்சிறந்துமாறலர்நகரினுற்றடலுளிர்முடிபுனைந்தான். ௱௨௯

நால்வகைத்தானைப்புணரியினோடுகடந்துமாலயன்முதற்சுரரைப்
பால்வருமணிகத்துடன்படர்ந்திசைப்பருதிநீக்குவதெனத்துரந்து
மால்கிளர்மனத்தானுரகரோயாதிவலியுளோர்தமையும்வென்றனுங்கு
மேல்விறற்படைதற்றெதிர்ப்பவரின்றிவெற்றியந்தெரியல்சூடினரால். ௱௩௰

ஆயிரத்திரட்டிகாதமுன்னதமுமங்கதிற்பாதிமெய்த்துடிப்பு
மேயதானவனுக்கொப்பெடுத்துரைக்கலிரதுமளாரெங்களுடுதும்யாரு
தியினுங்கடியன்கூற்றினுங்கொடியன்றீதறவுறையுநாளொருந்து
மாயமாறலர்தம்வன்பழிவாங்கமதித்துவேய்வனத்தின்வந்தடைந்தார். [௱௩௧]

வந்ததானவன்றன்சேனைநெல்வேலிநகரினைவளைதலுநோக்கிக்
கந்தவார்கூந்தற்கவுசிகையெழுந்துகாளியுந்தானையுங்கடிது
முந்துறமடங்கலெருத்தமீதிவர்ந்துமுனிந்துபோர்வேட்டெதிர்துன்னி
வெந்திறற்றகுவர்சேனையையெல்லாம்விரியவாட்படைகொடுதுணித்தாள். (௱௩௨)

தானைமாய்ந்ததனைநோக்கியெயிரத்தபீசனுஞ்சலங்கொடார்த்துறலு
மானமாரொழுமாதருந்தடுத்துமழுவெழுமுதற்படையெல்லாஞ்
சோனைபோற்சொரிந்தாரவையெலாமவுணன்றேளினுற்றுறுசெய்தலுமே
காளியுமிதினெழுகுசெங்குருதிநதியெனமுழங்கிவீழ்ந்தனவால். (௱௩௩)



தசோரியினின்றெண்ணில்பல்கோடிவெந்திறலுடைரத்தபீச
ந்தடர்த்தணுகநோக்கியேமாதரொழுவரும்வெருண்டுவிற்குனித்துப்
ந்தவார்கணையாலவருடலுளைத்தபோதினிற்பொங்குசெங்குருதி
ந்திடவிடமற்றலகெலாமேவலூற்றிருந்தொழுகியதன்றே. (௱௩௪)

ர்குருதியதனிடைநின்றுமொவ்வொருதுளிக்குப்பல்கோடி
ரசேரிரத்தபீசரார்த்தெழுந்தாரவர்தொகையாவரோவிரிப்பார்
மூன்றுலகிலெள்ளிடவிடமற்றெங்கணுந்துன்னியேசெறிந்தார்
ம்வியந்துநான்முகன்முன்புகல்கியவரம்பெரிதன்றோ. ௱௩௫)

றுமச்செயல்கண்டயனுமாதவனுந்தானுக்கமுற்றேங்கிநெட்டுயிர்த்தா
மாதவருஞ்சுரரும்வாய்வெருவியங்கைகாணடுக்கமுற்றயர்ந்தார்
மெய்மறந்தான்குளிர்ந்ததுகனலுங்குளாகடலனறுபட்டுலர்ந்த
மங்கியங்காதடங்கினவெருவிக்கதிர்மதிதிசைதிரிந்தனவால். [௱௩௬)

ட்டழிந்ததோங்களெங்குடைந்ததும்பலோரொட்டும்வீழ்ந்தயர்ந்த
ாளிமணிச்சுட்டிரகமோரொற்றுமேங்கினவுடுவெலாமுதிர்ந்த
மன்னுயிர்மற்றுள்ளவும்வெருவியலறினவனையபாணமையினைக
பொழில்சூழ்கவுசிகைநோக்கிக்காளியைக்கூவியீதுரைப்பாள். [௱௩௭)

பவிரத்தபீசர்மெய்க்குருதியிருநிலத்துறுமன்மேதினியை
நின்றுவான்மறைக்குதியதன்மேனிறுத்தியானவனையுற்றெதிர்ந்து
கவடுவன்கூடர்தசையெல்லாம்வாய்ப்படுநகொளவிசைந்து
கழ்கொங்கைக்காளிமூன்றுலகும்புரையிறலத்தி... பொதிந்தாள். (௱௩௮)

விரத்தபீசரையெல்லாங்கவுசிகைவெஞ்சினக்காளி
ளிறுத்தியிரத்தசோடினியாநான்மறைமனுவிஞல்யாத
மெய்க்குருதிமுழுவதுஞ்... கொண்டெஞ்சிக்குனித்தார்த்
ல்கோடிமுறைமுறையூழியி[illegible]துரந்தாள். [௱௩௯]

வேறு.

வாள்யொன்றனந்தமாய்மின்றிங்[illegible]
மூன்றுலகமுமிடைந்திரத்தபீசர்தஞ்
ணிக்கும்படாணிக்குமாற்றன்மேவுந்[illegible]
ணிக்குமெதிர்ப்பட்டதாறணிக்குமேவி[illegible] [௱௪௰]

மேவுதுற்கையுந்தம்விசிகமேவியமெதுவ
ம்ரத்தபீசர்மேனிகண்டதுண்டமாகியே
ன்னசென்னியுங்குலாவுதாளுமாகமும்
க்கையும்விராய்த்தலைமயங்கிவீழுமே. [௱௪௧]

அற்றசென்னிவானுளோர்தலைநடுங்கவார்த்தெழீஇ
யுற்றுமன்னுயிரிறக்கவுருமுபோலவீழ்ந்தவாற்
பற்றில்வஞ்சர்நிலையிழந்தாளினும்பார்க்கிடர்
முற்றவந்திழைப்பரென்னுமொழியுமுண்மையானதே. (௱௪௨)

வாளொடற்றெழுந்தகைமடுத்துமீண்டுவந்திடத்
தோளிணேடுசென்னியைத்துளங்கவேதுணித்ததா
னீளமேவுதம்படைநிகழ்த்திடிற்றமக்கதே
மீளவெம்பகையெளவிளம்புமாறதென்னவே. (௱௪௩)

வைவர்கிட்டிமுட்டிவாய்மழித்ததட்டிவெய்யபோர்
செய்வரன்னைவீசமீதுசெல்லுமம்பைவாளினுற்
கொய்வர்தோள்புடைப்பர்விற்குனித்துவாளிமாரிபோன்
றெய்வர்வெற்பினைப்பறித்தெறிவர்ரத்தபீசரே. [௱௪௪]

செறுத்தெதிர்ந்திரத்தபீசர்சீறிநின்றுமேற்செலக்
குறித்துவீசுதிகிரிதண்டுகுலிசமாதியாவையும்
பிறைத்தலைப்பகழியாற்பெருந்திறற்கவுசிகை
யறுத்ததுண்டம்வீழவேலையதடுத்தார்ந்ததென்பவே. (௱௪௫)

இனையவாறுசமரியற்றுமேற்தெழிற்கவுசிகை
டனையரத்தபீசரொவ்வொருத்தருக்கனந்தமாந்
தனதுருபமாய்வளர்ந்துதன்னதாற்றல்காட்டியே
முனைமுமாடும்வெரினுமேவமூரிவாளினுவினுள். (௱௪௬)

முன்னருங்கவுசிகைமுகந்திரிந்துநோக்குறிற்
பின்னருங்கவுசிகைபெயர்ந்துமீறுபார்க்கில்வான்
றன்னினுங்கவுசிகைதரணியுங்கவுசிகை
யென்னமேவியிரத்தபீசர்மாயவாளியேவினள். (௱௪௭)

இந்தவாறுவிந்தையேவுமேவுமெய்துணிப்பவே
யந்தரத்தபீசர்முற்றுமார்த்துவீழ்ந்துதஞ்சிறு
ருந்துசோரிமேதைதாதுவொக்கவொன்றுமின்றியே
வெந்திறற்படைத்தவீரகாளியும்விழுங்கினள். [௱௪௮]

வேறு.

துன்றியவிரத்தபீசரையெல்லாந்துன்னியேதுணித்துயிர்குடித்த
வென்றிசேர்வீரதுற்கைதன்வலியைவியந்தெடுத்துரைத்துமோதகுவ
வொன்றியகுருதியுட்ன்றசைநுகர்ந்தகாளியையுவந்துவாழ்த்துநமோ
வென்றுமாயவனும்பிரமனும்புகன்றவ்விருவரையுந்துதித்தனரால். [௱௪௯]

வானவர்வந்துபூமழைபொழிந்தார்வையமும்மகிழ்ந்சிறந்தனவாற்
றனையிரேடுதுற்கையுமீண்டுதமனியக்கோயில்புக்குறைந்தான்

334



மேனிமிரிரத்தபீசருணகர்ந்தகாளியும்வெறியுடனெழுந்து
நாணிலமுலையவான்முகடதிரநடம்புரிந்துலகினையலைத்தாள் (௱௫௰)

யன்னகஞ்சமந்தவுலகுதட்டழியும்பான்மைகண்டமைவனப்பரமன்
முன்னருற்றணுகிச்சகத்தினைக்லியன்மொய்குழனீயெனக்காளி
யென்னுடனுடவல்லையேலாடென்றியம்பலுமிறைவனுமிசைந்து
மன்னியேமாறுகொண்டிருவோரும்வல்லசாரியினடம்புரிந்தார். (௱௫௧)

ஒத்துட்னுடுர்தன்மையைநோக்கியுமாபதியூர்த்ததாண்டவமாய்
வித்தகனடம்புரிதலுநோக்கிவெள்கியேவெறியொழிந்திடலு
மத்தனுமறைந்துகோயிலுட்புகுந்தான்காளிதன்னிலையதுதடைந்து
வித்தகப்பசும்பொன்னரியணைமீதுமேவியேமகிழ்ந்துவீற்றிருந்தாள். (௱௫௨)

இனையமாகாளிதன்முனுற்றிருந்தேயினிதினுங்கவடன்மந்திரத்தை
மனமகிழ்வோடுசெபிக்கினுஞ்சென்றோர்மண்டலம்பணியினுமுவப்பாய்ப்
புனைமலருடைவழங்கினுமுறையேபூசனைபுரியினுமதூரங் (௱௫௩)
கனியுமுத்தமிழ்ச்சொற்றுருடைபுனைந்திடினுங்கருத்தில்வேட்டனவெலாம்வழங்கு

அப்படியநேகர்நாடொறும்வழிப்பட்டவமிருத்தொழிந்துவெம்பிணிதீர்ந்
தொப்பறுமட்டசித்தியும்வளமுமோங்குநற்கதியையுமடைந்தார்
அப்பிதழ்ப்பிட்டாபுரத்திதன்காதையீதெனச்சூதனேதினனுன்
முப்பகைகடந்தமுனிவர்கேட்டந்தமொய்குழறனைத்துதித்துவந்தார். (௱௫௪)

வேறு.

விந்தைவிசையமுங்காளிதோற்றமுமாற்றலுந்நலங்கவிரித்துக்கூறு
மிந்தமகத்துவக்கதையைப்படிப்பவருங்கேட்பவருமெழுதினோரு
மைந்தரைப்பெற்றின்னலற்றுவளம்பொருந்திநெடுங்காலம்வாழ்ந்துபின்பு
சந்திவனத்துமைபாகன்சரணாணுய்ச்சார்ந்துறைவர்சத்யமாமே. [௱௫௫]

பிட்டாபுரத்தியம்மைசருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௫௲௯௱௩௰௬

---

## நெல்லைக்கோவிந்தர்சருக்கம்.

வாரணிகள்பக்கொங்கைவடிவுடைமாதுபோற்று
மேரணிந்திலங்கும்வேணுவனலிங்கத்தினின்று
நாரணன்றோன்றிவைகுங்காதையைவிதியாலென்
மாரணமுனிவர்கேட்பவருந்தவச்சூதன்சொல்வான். (௧)

முன்னொருகற்பந்தன்னின்முக்கணுனலகீரோழுந்
தன்னகத்தொடுக்கிமீட்டுந்தருவதுகருதிமுன்பு
கன்னியர்துளபமாலைக்கழவனத்தாதியாக
மன்னிலிங்கத்தினின்றுமகிழ்வுடன்றோற்றுவித்தான். (௨)

தோன்றியநெடியமாயன் சுருதியின் வடிவாய்நின்ற
மூன்றுகட்பரனைவேயின் முளைத்தசெஞ்சுடரோயென்னை
யீன்றதாய்தந்தைநீயென் றியம்பியாகமஞ்சொல்பண்பி
லான்றபேரன்பினேடுமருச்சனைபுரியலுற்றான். (ந)

கதிதருசிவதீர்த்தத்திற்கமழ்பொற்றுமரைநன்னீரில்
விதிமுறைபடிந்துதோய்ந்துவிளங்கவெண்ணீறுசாத்திப்
புதியதண்டிகைமெய்யெங்கும்புனைந்துடல்புனிதனுகி
மதிமுடியமலனுமமந்திரமரபிற்கூறி. (ச)

சென்னியின்மதியஞ்சூடுந்தேவுக்கும்விடைக்குந்தென்பான்
மன்னியவங்கிதிக்கின் மாயவன்மருவும்வென்றித்
தன்னுடைப்படையினூலோர்சக்கரதீர்த்தஞ்செய்வித்
தன்னதன்புனலையேந்தியரற்கபிடேகஞ்செய்து. (ரு)

அணிதுகில்சந்தந்தூபநிவேதனமலங்கலாதி
யுணர்வுளோர்விதித்தவீரெட்டுபசாரமியற்றிநாளு
மணமலிகொன்றைவேணிவரதனைவலஞ்சூழ்ந்தேத்திப்
பணவரவமளிமாயன் பன்முறைபணிந்துபோற்றி. (சு)

வளசமாயிரமும்பானன்மலரோராயிரமும்வில்வந்
தனிலோராயிரமும்வாசந்தயங்குசெங்கழுநீர்மென்போ
தனையவாயிரமுநித்யநியமமாயன்பிற்சாத்தித்
தினமுமஞ்செழுத்துப்பன்னீராயிரமுருச்செபித்து. (எ)

இப்படித்தேவவாண்டோராயிரமெழிலிவண்ணன்
முப்புரமெரித்தமுக்கண்முதல்வனைப்பூசைசெய்தா
னப்பணிநெல்லைநாதனவ்விலிங்கத்தினின்றுஞ்
செப்பெனுமுலையாளோடுந்தெற்றெனவெளிவந்தெய்தி. (அ)

வேறு.

கங்கைச்சடையுமதிமுடியுங்கண்ணேர்மூன்றுந்திருமுகமு
மங்கைமழுவுமான்மறியுமரவக்கலனுமெற்பணியுங்
கொங்கைக்குறியுமகன்மார்புங்குலவுந்தணைத்தாருடன்வயங்கத்
துங்கவிடைமேற்கவுரியுடன்றேன்றிக்காட்சிகொடுத்தனனுல். (கூ)

வறியன்சேமநிதிபெற்றுனெனமாயவன்கண்டுளமகிழ்ந்து
விறன்மெய்தடித்துப்புளகமெழவிழிநீர்சொரியக்கரம்புடைத்து
முறையிற்பலகால்வலஞ்சூழ்ந்துமுன்னுற்றிருநாலங்கமுற
நெறியிற்பணிந்துகைதொழுதுநின்றுநிமலன்றனைத்துதிப்பான். (ய)

உலகேழும்படைப்பவனீயொருங்குபுரக்குங்கடவுணீ
தொலையவட்டுக்கதியுதவுந்தொல்லோனீயேதமியனுக்குத்
தலைவனீயேதாய்நீயேதந்தைநீயேதமர்நீயே
நிலவுமரவுமுடன்முடித்தநிமலநெல்லைநாயகனே (யக)



தருமம்விடையாவிவர்ந்துகைத்தாய்தமிழ்மாமுனிக்குமணக்கோலத்
துரிமைகாணவித்தலத்திறுந்துக்காட்சிக்கொடுத்தனையாற்
சுருதிவேயின்முளைத்தெழுந்தாய்துன்னிச்சூரருக்கிடர்புரியு
நிருதர்குலத்தைவேரறுத்தாய்நிமலாநெல்லைநாயகனே. (யஉ)

அடியருளத்தினுவந்துறைவாயன்பர்க்கெளியாய்ப்பிறர்க்கரியாய்
படியையிடந்தும்யான்காணுப்பதுமத்தானுமயன்காணு
முடியுநெடியன்காணவின்றுமுன்னிக்காட்சிகொடுத்துநின்றாய்
நெடியகனகவரைச்சிலையாய்நிமலாநெல்லைநாயகனே. (யங)

என்னப்பலவுமெடுத்தேத்திப்பின்னுமிறைஞ்சியெதிர்நின்ற
கன்னித்துளபந்தியல்வருதோட்கண்ணனென்றனைப்பார்த்துவகையுடன்
சென்னிமதியம்புனைந்தமுக்கட்டேவன்றிகழ்மெய்ப்பரஞ்சோதி
பன்னுமறையுமாகமமும்பகர்ந்தபவளவாய்மலர்ந்து. (யச)

முகிலிற்சிறந்தமேனியுடைமுகுந்தாநீநந்திருவுருவாய்த்
திகழுமிலிங்கத்துதித்ததந்செப்பினயலன்றன்றியுமே
பகரும்விதியினைமைப்பலநாட்பரிவினுடன்பூசனைபுரிந்தாய்
மிகவுமுவந்தாம்வேண்டியதென்விளம்புவாயென்றருள்புரிந்தான். (யரு)

மாயன்புகல்வானெம்பெருமான்மற்றுன்னிடத்தன்மாறுத
நேயமுடையனுய்த்தமியேனித்யமாகவிருந்திடவுந்
தூயசக்ரதீர்த்தமதிற்றோய்ந்துன்றன்னைத்தொழுமெவரு
மேயமுத்திபெற்றிடவும்வேண்டுஞ்சிறப்புமருளென்றான், (யசு)

அனையவரமுமருள்புரிந்துபின்னுமமலன்முகுந்தனைப்பார்த்
துனதுநாபித்தலத்தயனையுதிப்பித்துலகெல்லாம்படைத்துப்
புனிதமுறுமன்னுயிர்க்கிடுக்கணீக்கியிதிதிபுரந்து
பனகமிசையேயித்தலத்தினமருவடபாற்பள்ளிகொண்டு. (யஎ)

வேண்டுஞ்சிறப்புற்றிருத்தியெனவிளம்பிமாயையொன்றுதவிப்
பூண்டங்குமையோடிலிங்கத்திறுடுபுகுந்தான்பொருந்தியெனை
யாண்டமாலுமயனையளித்தகிலம்படைத்தாருயிர்புரந்து
பாண்டரங்கத்தனிகூத்தன்பணித்தவிடத்திற்பள்ளிகொண்டான். (யஅ)

மகிழ்வோடங்கணறிதுயில்கூர்மாயனணியத்தாளநல்லூர்
மிகையில்சீவைகுண்டமுதல்விளம்பும்பதிகடொறுமேவித்
திகழும்பசும்பொற்கோயில்கொண்டுவைகுந்தனுடரவும்
பகலுமமைத்துவழிபட்டுப்பகரெவ்வுலகும்புரிந்துறைவான். (யகூ)

அந்தப்படியேயுவந்துறையுமாழியங்கைப்பெருமானை
வந்துமரீசிமுதன்முனிவர்மறைசொன்மரபிற்பூசனைசெய்
திந்தமுகுந்தன்றனைப்பஞ்சராத்ரிவிதியினரிச்சிப்போர்
தந்தங்குலத்தினெடுநரகிற்சார்கவென்முன்சபித்தகன்றார். (உய)

அதனாற்பஞ்சராத்ரமுறையருச்சித்திடுவோர்களாதான்
முதியவேத முறைபூசைமுயன்றோர்வேட்டதருள்புரிந்து
கதியுமுதவும்பசுந்துளபக்கண்ணனெல்லைக்கோவிந்தன்
பதமமடைந்தைக்குளக்கோயிற்பணித்தகருணைச்சீதரனே. (௨௧)

திருவின்கொழுநனுளக்குறிப்புச்செப்பக்கேண்மின்றனைப்புரப்போ
னாருமெனவுமவன்கருணைக்குரியனுருந்தானெனவும்
பரமன்றனைப்பணிந்துதிருப்பயடைத்தானெனவும்பலகாலு
முறைசெய்திடுவோர்வேட்டதெல்லாமுதவிக்கதியுமுதவினனால். (௨௨)

ஈசன்றனக்குத்தனிகரொன்றியம்புமறிவிலீனார்களு
நேசந்தன்பாலுடையனெனவிமலன்றன்னையிகழ்ந்துரைத்து
நாசமடையும்பதகருந்தானரகத்தடைவரலாலெனக்கு
மாசும்பவமும்வருவிப்பதாமொழிப்பதெவ்வாறெனமயங்கும். (௨௩)

ஆதலான்மாயவன்றன்னையரனுக்கிணையென்றெருக்காலு
மோதலாகாதென்னமறையுரைக்கும்யானின்றுரைத்ததன்று
லீறுநெல்லைக்கோவிந்தனிலிங்கத்துதித்தகாதையெனச்
சூதனென்னும்புராணமுனிசுருதிமுனிசொற்படிமொழிந்தான். (௨௪)

வேறு.

ஆணவமும்மலங்கடந்தமுனிவர்பின்னுஞ்சூதனைப்பார்த்தருத்தியோடும்
வேணுவனத்துவந்துறையுநெல்லைக்கோவிந்தர்தமைமேவிப்போற்றிக்
காணும்விருப்புடன்பணிந்துகதியடைந்தோரின்னுமுண்டேற்சழறுகென்னச்
சேணுயிலனும்புகழுஞ்சிற்பரனைத்துதித்தினையசெப்பலுற்றான். [௨௫]

மகத்துவஞ்சேர்காசிபன்றன்மரபில்வருபுண்டரிகன்வாரிசூழ்ந்த
செகத்திலுள்ளதலங்கடொறுஞ்சென்றுதவஞ்செய்துசித்திசேராதாகி
யகத்திலெழுஞ்சஞ்சலத்தோடொருநெறியிற்செல்லுமேல்வையனுகக்கண்டு
மிகத்தயவாய்நாரதனைமேவியடிபணிந்தினையவிளம்பலுற்றான். ௨௬

பூதலத்தின்மீதினெங்கும்பொருந்துசிவதலங்டொறும்புயல்போன்மேனிச்
சீதரன்றன்றிருப்பதிகளனைத்துஞ்சென்றுதவம்பலவுஞ்செய்து
மேதகையசித்தசுத்திமேவலின்றிமேதினியின்மெலிந்தெய்த்தேனுன்
மாதவனன்னிலைபொருந்தும்வழியருள்செய்யெனவவனுமகிழ்ந்துச்சொல்வான். (௨௭

தாரணியின்மீதிலுள்ளதலங்களுக்குமேலானதன்மைதன்னாற்
சீரணியுஞ்சகச்சாரமெனும்பெயருஞ்சிறந்தளதுதிருநெல்வேலி
காரணியுமணிமிடற்றுக்கண்ணுதலுங்கவுரியுடன்கலந்துறைகு
நாரணனுமச்சிவலிங்கத்துதித்துநாகணைமேனண்ணுமன்றே. ௨௮

அத்தலத்தின்விசேடமெல்லாமயனுரைப்பயான்கேட்டாங்கடைந்துபோற்றி
முத்திதருமுழுமுதலையோகில்வழிபாடியற்றமுன்புபோந்தவ்



வித்தகன்யான்வேட்டவெல்லாமருள்புரிந்துவிடையுதவவிரும்பிப்பெற்றுச்
சித்தமிசையிறும்பூதுற்றிதையசுத்திபொருந்திமகிழ்ந்திறந்துசெல்வேன். (௨௯]

அப்பதியினியடைந்துபாசுபதவிரதமெய்தியானையுன்னி
யொப்பிலருந்தவமுஞற்றிநுளத்தின்மிசைவேட்டவெல்லாமுறுமெனாவுரைத்
துப்புரவுதருநீற்றின்வரலாறும்புனைவிதியுஞ்சொலித்தன்கையாற்
[illegible]புதிருநீறணிந்துதிருந்துபஞ்சாக்கரமுமுபதேசஞ்செய்தான். (௩௰)

நாரதர்[illegible]ன்மொழிவினவிமனமிசைந்துபுண்டரிகனடைந்துநெல்லை
யூரதிற்பு[illegible]வகையுடனேங்குநவதீர்த்தத்துமூழ்ந்தோய்ந்து
காரிழிகழுறுமிடற்றுக்கண்ணுதலைக்கவுரியைநேர்கண்டுபோற்றி
வாரணமன்றழைக்கவருநெல்லைக்கோவிந்தனையும்வணங்கிச்சென்று. [௩௧)

தெள்ளமுதச்சுவைபொருந்துந்தீம்புனற்பொற்றாமரைமேல்கரையிற்சென்று
நாள்ளொரியிறுப்பணின்றுநாரமுடன்மருத்தருந்திநண்ணுறூறான்
டெள்ளரிய தவம்புரிந்தானிவன்செயலோர்ந்துளமிரங்கியென்னையாளும்
வள்ளனெல்லைக்கோவிந்தனுவயங்குசெந்தாமரைத்தடங்கண்மாயனெங்கோன். ()

செங்கனகமணிமுடியுஞ்சிறந்தசெந்தாமரைவிழியுந்திகிரியோடு
சங்கமுந்தாங்கியகரமுஞ்செந்திருவுங்கவுத்துவமுந்தயங்குமார்பு
மங்கனுலகளந்தசரணும்புயமுமாகமிசையணிந்தகுல்லைக்
கொங்குலவவெதிர்தோன்றிக்கருடவாகனக்காட்சிகொடுத்தானன்றே. (௩௩]

கண்டவுடன்விரைந்தெழுந்துகைகடலைமீதேறக்கனிவாய்ச்சூழ்ந்து
புண்டரிகனெதிரிறைஞ்சிமேனிபுளகெழமறையாற்புகழ்ந்துநிற்பக்
கொண்டனிறத்தெம்பெருமான்கூறுதிநீவேட்டதெனக்குலவுமுள்ளத்
தெண்டலைகயதுப்புரவுஞ்சித்தியுமீந்தருளெனவிந்திரையின்கேள்வன். (௩௪)

பாசுபதவிரதமுற்றுத்தவம்புரிந்தபான்மையினுற்புரிவாய்நின்பா
னேசமுறவெளிவந்தாநெல்வேலிநாயகனைநினைந்துநோற்று
மாசிலுளத்துப்புரவுஞ்சித்தியுநீபெறுகெனவாய்மலர்ந்துசென்றே
தேசுலவுமணிச்சூட்டுப்பாம்பணையிற்பள்ளிகொண்டான்செங்கண்மாயன். (௩௫)

பின்னருமேபுண்டரிகனெல்வேலிநாயகனைப்பெருகுமன்போ
டுன்னியருந்தவமுஞற்றியுளத்தூய்மையுடன்சித்தியுற்றவேபெற்றுத்
தன்னுமையகியதியினிற்சென்றனனென்றுவப்பொடருந்தவத்துச்சூதன்
சொன்னதுகேட்டகமகிழ்ந்துமுனிவரெல்லாஞ்சடிலமுடிதுளக்கினரால். (௩௬)

நெல்லைக்கோவிந்தர்சருக்கமுற்றும்

ஆகத் திருவிருத்தம் ௫௲௩௱௭௨.

## அரியயனருச்சனைச்சருக்கம்

அருந்தவத்துப்பெருந்தலைவரமைவனத்தெம்பெருமானையயன்பின்னுடும்
பொருந்திமதாத்துளிபிலிற்றும்பூக்கமலப்பொகுட்டுறையும்புத்தேடானு
முருந்திணெழிறருமுறுவன்முனரிமடமயிறழுவுமுகிலும்போந்து
திருந்தவருச்சனைபுரியுஞ்செய்கையுமாவெனச்சூதன்செப்பலுற்றான்.

முந்துமொருபிரமகற்பமுடிவுதனிலூழிவெள்ளமுழக்கமேவி
வந்துலகமொருமூன்றுமன்னுயிருங்கவர்ந்தன்வால்வயங்குமூக்க
ணெந்தையுறைதிருக்கயிலையப்புனற்குமீதுவளர்ந்தெழுந்துநின்ற
தந்தவரைமீதுறுமோராலிலைமேலச்சுதனைக்கண்டயின்றானன்றே. (௨)

பின்னுலகுமன்னுயிரும்பெருமைபெறப்படைப்பதற்குப்பிறைதாழ்வேணி
முன்னவன்றனகத்துணரமுகில்புரையுந்திருமேனிமுகுந்தனுந்தி
தன்னிலொருபொற்கமலநாலியோசனைப்பரப்பிற்றண்டுவச்ர
மன்னநிறத்துடன்மலர்ந்ததிலயனேறிமத்திலுடனுதித்தானன்றே. (௩)

உதித்தபிதாமகனெகினமமர்ந்துநெல்லைமாநகரினூற்றுப்பன்னூட்
கதத்தில்வருகாலனைமுன்னுதைத்தவனையுளத்தினிடைகருதிநோற்று
விதித்திடுபப்பெருந்திறலுமேன்மையும்பெற்றுவகையுடன்மீண்டுதன்னை
மதித்துவருமேல்வைதனின்மாயவன்பாற்கடலிடைக்கண்வளரக்கண்டான். (௪)

கண்டிவனொருவனிங்குத்துயில்புரிவானெனக்கருதிப்பாருமையோடும்
புண்டரிகமாயவன்றன்பொன்மார்பிலடித்துணைத்துப்பெருக்கென்றானை
முண்டகக்கண்விழித்தருளிநீயாவனெனவிரிஞ்சன்முதல்வன்யானே
யெண்டிசையுமெவ்வுலகுமென்னகட்டினூடிருத்தல்காண்டியென்றான். (௫)

சீதரனுமவன்கூட்டுட்சென்றுலகமுறைதல்கண்டுதிரும்பமீண்டு
போதனையென்னகட்டுளித்தெழுமடங்குபொருந்துநீபோர்துகாணென்
றோதவயனவனுந்தரத்துற்றவ்வாறுநோக்கியுடன்மீள்போதின்
மாதவனுன்பதுதுளையுஞ்சேமித்தானதையுணர்ந்துவனசப்புத்தேள். (௬)

கரியதுடலன்றிமனமுங்கரியனிவனெனவேகருதியுந்திப்
புரைவழியாய்வெளியில்வந்தபூங்கமலாசனன்மிகவும்புகைந்துசீறி
வருதியிகல்பொருவதற்குவலியுண்டேலெனவிளிப்பமாலுநேர்ந்தா
னிருவருங்கைப்படைவழங்கியிழைத்தசமரினையிவரிளம்பவல்லார். (௭)

விண்ணவர்தம்படைகளெல்லாம்விடுத்திவராயிரவருடம்வெம்போராற்றிக்
கண்ணுதலோன்படைக்கலத்தையிருவருங்கைதொழுதுவிடக்கணன்றுசீறித்
துண்ணெனநேர்வரலுமரியயனையிருதுணிக்குமெனத்தருகிலுள்ளத்
தெண்ணியுமையொருபாகனிலிங்கவுருவாய்நடுவிலெழுந்துநின்றான். (௮)

எழுந்துநின்றசோதிதன்பாலிவர்கள்விடுபாசுபதமிரண்டுமேவத்
தொழுந்தகையசிவலிங்கநடுவணுற்றநெனகொல்லனச்சுருகியானுஞ்
செழுந்திருவிளையகனுந்திகைத்துநின்றாரசீராவாக்குத்திங்கட்
கொழுந்தணியுமைந்துமுகக்குழகனருளாலினையகூறுமன்றே. (௯)

பாசுபதப்படைக்கலத்தாற்பட்டிறவாவண்ணமுமைப்பாதுகாத்தற்
கீசனிந்தவடிவாகவீண்டெழுந்தானெனவுமவரிறைஞ்சநோக்கி
மாசில்பரஞ்சோதிநெல்லைமாநகரின்வைகுபரஞ்சுடரைவந்து
பூசனைசெய்திடுமினுங்கண்மனவயிரநீங்குமெனப்புகன்றதன்றே. (௰)



சொன்னமொழிகேட்டவருமனமிசைந்துபின்னருங்கைதொழுதுபோற்ற
வன்னபரஞ்சோதிகரந்தமைவனலிங்கத்திலுடனடைத்ததாமான்
மன்னுகமலாசனனுமாயவனும்வந்துவளைவனத்தின்மேவும்
பொன்னிதழித்தொடைபுனையும்புராதனனைப்போற்றிவிதிமுறைபூசித்தார். (௰௧)

அற்றவவேடந்தரித்துநாடோறும்பூசித்துமறைநவின்றுபோற்றிப்
பற்றலர்தம்புரமெரித்தபராபரன்றன்றிருவருளாற்பகையுநீங்கி
யுற்றமனநேயமுடன்மித்திரராயுவந்தயனுமுவணமூருங்
கொற்றவனுமுலகமெலாம்படைத்தளித்துத்தம்பதத்திற்குறுசிவாழ்ந்தார். (௰௨)

இப்படியேயெண்ணிறந்தநாரணருநான்முகருமெய்தியெய்தி
யப்பணியும்வேணுவனத்தமலனைக்கற்பங்கடோறுமன்பிற்போற்றி
யொப்பிறிருவருள்பெற்றாரதனையெல்லாமெவருரைக்கவல்லாரென்னச்
செப்பினன்மறைச்சூதன்மாதவரும்வினவிமகிழ்சிறந்தாரன்றே. (௰௩)

அரியயனருச்சனைச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௫௲௬௱௮௰௫

---

## நாரதச்சருக்கம்

மும்மலமுங்கடந்துமுத்திபெறமுயலுமருந்தவத்துமுதல்வர்மேலோய்
நம்மைமுற்றிமாளுடையநாயகனைநாதன்றானண்ணிப்போற்றுஞ்
செம்மையுமச்சிவனுதவப்பெறுபேறுமுரைத்தியெனச்செப்பச்சூதன்
கைம்மலையினுரிபுனைந்தகடவுளைக்கைதொழுதேத்திக்கழறலுற்றான். (௧)

செங்கமலமலர்ப்பொகுட்டிற்சிறந்திருக்குந்திசைமுகத்துச்செல்வனல்கத்
துங்கமுறுசடைமுடியுந்துலங்குநீவெள்ளைமேனியுமாய்த்தோன்றிநின்ற
பங்கமிலாநாதனயனைப்பணிந்துசித்தியொடுநித்யம்பரிவாய்மேவத்
தங்கியருந்தவமியற்றத்தரணியிலோர்தலமெனக்குச்சாற்றுகென்றான். (௨)

புண்டரிகனாதன்சொன்மொழிசெவியிற்புகலலொடும்புந்திதன்னி
லொண்டொடிக்கோர்மருங்களித்தவுபாபதியைத்தொண்டருளத்துறையுந்தேவை
யண்டர்தொழுநெல்வேலிநாயகனைநினைந்துருகியங்கைகூப்பிக்
கண்டருமானந்தவெள்ளங்கரைபுரளக்கவிந்தினியகழறலுற்றான். (௩)

விலங்கலுக்கெல்லாமதிகமேருவரையாகுமெனவிளம்பல்போலுக்
துலங்குமொளிநவகோளிற்சுடரவனேயதிகமெனச்சொல்கைபோலு
நலங்கிளர்மென்மலர்க்கதிகநளினமெனகைபோலவுநானிலத்திலுள்ள
தலங்களுக்கெல்லாம்பிரமவிருத்தபுரமதிகமெனச்சாற்றும்வேதம். (௪)

அத்தலத்திலென்னனையநான்முகருநாரணருமளவிலாத
சித்தியுடன்முத்திபெற்றுரவையெல்லாம்விரித்தனக்குச்செப்பவேண்டிற்
பத்திபெறுபலகோடிநாவுடையருளொளிநும்பகரொணுதால்
வித்தகநாநாலுடையயானெவ்வாறுரைப்பதெனவிளம்பிப்பின்னும். (௫)

அறந்தழைக்கும்வேய்வனத்திற்பாதகராயினும்பொருள்வேட்டவர்நூளுந்
திறந்திடினும்பிறந்திடினுமிருந்திடினுஞ்சித்திமுத்தியெளிதினல்கி
யுறைந்தசதாசிவன்றருமவிடைமீதிலுமையவளோடுறைந்தெப்போது
நிறைந்ததிருவருள்புரியத்தொண்டர்வரல்பார்த்தேதிரோநிற்குமன்றே. (௬)

ஆதலாலத்தலத்துக்கெத்தலமுநிகரொவ்வாதவனீசென்று
மாதுபாகனைக்குறித்துவைகியருந்தவம்புரிதிமைந்தாவென்னப்
போதிருன்முகனுரைத்துவிடையுதவநாரதனும்பொருக்கெனறேகி
வீதிதொறுமணிமாடம்விளங்குநெல்லைமாநகரின்மேவினனே. (௭)

மேவியநாரதமுனிவன்விரைசமழ்பொற்றுமரையில்விதியின்மூழ்கி
யசவலொடுஞ்சிவதீர்த்தத்தாடிநகர்வலஞ்சூழ்ந்தாலயத்துட்புக்குக்
காவிவிழிவடிவுடையகவுரியைவேயீன்றமுத்தைக்கருதிநாளுந்
தேவர்தொழுந்திருமூலத்தேவைநாயகரையெய்திச்சேவித்தேத்தி. (௮)

பம்புதிரைபரப்புபொற்றுமரைக்குமேல்புறத்திலொருபாங்குநண்ணி
யைம்புலனுமுள்ளடக்கிமும்மலமுங்கடிந்திகல்பற்றற்றானின்றிச்
செம்பொனுடனோடுமொக்கச்சிந்தித்துத்துயிறுறந்துதிகழ்வெண்ணீறும்
வெம்புபழவினைதொலைக்குங்கண்மணியுமேனியெல்லாம்விரவப்பூண்டு. (௯)

பங்கயவாசனத்திருந்துமூசிழ்த்தலுடன்விழித்தலின்றிப்பகருநாட்டந்
தங்கிவளர்மூக்குநுதிதனைநோக்கிச்சாருமருத்திடையிரேசு
பிங்கலையிற்போக்கினுடன்வரவொழித்துச்சுழிமுனையிற்பிறங்கக்கும்பித்
தெங்கணுந்தானாகவுறையீசனைத்தன்னுளத்திருத்தியிறைஞ்சிநோற்முன். (௰)

அவ்வாறுசிலபருவம்யோகின்வழிபடுமேல்வையமலன்மாதோ
டெவ்வாயுஞ்சினகரத்திணைபுலவிவரலுமிவணியற்கைநோக்கிச்
செவ்வாயுந்திருமுகமுமாண்மழுவுந்துகமெழிற்செங்கதிரோர்கோடி
யொவ்வாதபேரொளியுமுறத்தோன்றிவிடைக்காட்சியுதவினுனல். (௰௧)

நாரதன்கண்டெனெழுந்துநடம்புரிந்துகரம்புடைத்துநண்ணிச்சூழ்ந்து
பாரதிலெட்டங்கமுறப்பரிவுடன்பன்முறைபணிந்துபதுமத்தோனுஞ்
சீரதிகமுறுமாலுமுடியடிகண்டறியாதசெல்வனென்மு
னேரதிகமுறவெளிதின்வெளிவந்தாவென்னவியக்தேத்தலுற்முன். (௰௨)

வேறு.

[illegible]ரமிசைமதிநதியாரறுகணிபவசிற்பரபேரொழிலுரு
மூரமிசையரவமும்வண்டலைமாலையுமொக்கவணிந்தவபொற்



கரமிசைமான்மழுவுடையநிராமயகாரணகான்மிசையே
யரிவிழிபுனைபவதொண்டரகத்துறைதற்புதநீசரணம். (௰௩)

[illegible]கயினும்விழியினுநகையினுமெழில்வளைசாமருபேரொளிசேர்
மெய்யினுமழலுடையவகருணையவிண்டொடவுயரியபொற்
சயிலவிலுடையசதாசிவதற்பரதண்டுளவம்புனையா
னயரமளியிலறிதுயில்புரிதருபகழியநீசரணம். (௰௪)

மெச்சியதிறலுடன்வெற்பையலைத்திடும்வெய்யசதக்கிரியன்
வச்சிரவுடலநெரிந்துறுசெம்புனல்வாய்தொறுமுறவலற
வச்செழுமலரடியுங்குலிசுதிசெ[illegible]மூத்தியசங்கரநீள்
கைச்சிறுவிரலுகிரதுகொடயன்றலைகளைபவநீசரணம். (௰௫)

வேறு.

என்றிவைபுகன்றுபோற்றிப்பின்னருமிறைஞ்சிச்சூழ்ந்து
நின்றுதன்னுளத்தினூடும்புறத்தினுந்தோன்றக்கண்டு
நின்றநாரதனைநோக்கிநின்னுளம்வேட்டவெல்லா
மின்றியாமுணர்ந்தாமீதுபெறுதியென்றியம்பலுற்முன். (௰௬)

நித்தியமாகவைகுநிலைமையுநம்பாலென்றும்
பத்திமென்மேலுமேவும்பான்மையுமுலகீரேழி
லெத்தலத்தேனுஞ்சென்றேருரிமைப்பின்மீண்டெய்தும்பண்புஞ்
சித்தியுங்கலையெட்டெட்டுஞ்செயிரறத்தெரும்வாறும். (௰௭)

ஒருவராலேனுமின்னலடைவுறுதுறவும்யாருங்
கருதியவெல்லாமுன்றன்கருத்தினிற்றெரியுமாறு
மருவும்யாவர்களுமுன்னைவழிபடும்பெருமைதானுஞ்
சுரருடனசுரருக்குநேயமாய்த்துன்னுமாறும். (௰௮)

கண்டதோர்கருமங்கூறக்கடவபேருடன்சொல்பண்பும்
பண்டரும்வீணைநம்பால்வாசிக்கும்பதமுந்தந்தோங்
கொண்டுநீயுவகையோடுங்கோதறவாழ்தியாலென்
றண்டர்தம்பெருமானந்தம்முனிக்கருள்புரிந்துபின்னும். (௰௯)

ஆறுபத்தாறுகோடிதீர்த்தமுமழைப்பித்தாட்டி
யீறின்மாமுனிவன்றன்னையிதற்கெலாமிறைநீயென்னக்
கூறியேபட்டங்கட்டியருள்செய்துகுழகன்சென்று
நாறுபூங்கோதையோடுமிலிங்கத்துணண்ணினனே. (௨௰)

வேறு.

இப்படிநெல்லைநாயகனருளாலெய்துதற்கரியபேறெய்தி
யொப்புறவுயர்ந்தநாரதமுனிவனுவகையிற்சிறந்திரும்பூதுற்
றப்பதியதனிற்பாம்பணைமீதிலமலனைக்குறித்தறிதுயில்கூர்
மைப்புயலதனைவணங்கியேசென்றுவையமீரேழுஞ்சஞ்சரிப்பான். (௨௧)

தன்னுசெஞ்சடையும்புலியதளுடையுமுடையவத்துய்முனிதோளின்
மன்னியவீணைகாலிருந்தசையுமருவியோர்யோசனைகேட்க
வின்னிசைசிறந்தெப்போதினுமுக்கணிறைவனையேதுதிசெயுமா
லன்னவாமுதஞ்செவியினுலருந்திச்சரிப்பதேயனையவனியந், (௯௨)

சுத்தசாத்துவிதகுணத்துறுமந்தத்துய்முனிவரர்க்கடையாளம்
வித்தகயாழினிசைதிசையெட்டுமேவவோர்யோசனைகேட்கு
முத்தரிற்சிறந்தநாரதர்பெற்றபேறிஃதின்னமுங்கேண்மின்
சித்திரசேனன்சித்திரகேதுசெயிரிலாகாவுடனுகூ. (௯௩)

கந்திருவரர்தங்குலத்திலக்கரசரிவரொருநால்வருங்கருதி
வந்துநெலவேலிவாதனை வணங்கிவரன்முறைபூசனையியற்றி
யந்தமில்வரம்பெற்றகமகிழ்ந்தாகாவுகுவாமிருவருமருளா
லிந்திரனுவப்பயாழிசைபயிலுமியற்கைபெற்றினிதின்வீற்றிருந்தார். (௯௪)

வடமலிதடந்தோட்சித்திரகேதுசித்திரசேனன்மற்றவர்தாங்
கயிலைமால்வரையினுமையுடனுறையுங்கண்ணுதற்சாமிசேட்டுவப்பப்
பயிலும்யாழிசைக்குமுனிபதம்பெற்றார்பனைவனத்துறையுமெம்பரவ
னுயர்புகழ்த்தொண்டர்வேட்டதுவாயாதுவகையோடுற்றருள்செயுமால். (௯௫)

இன்னணம்வந்துவந்துநெல்வேலியிறைவனைக்கருடர்காந்திருவர்
மன்னியற்சனைசெய்துயர்பெருங்கதியும்வளமும்பெற்றவர்களெண்ணிறந்தோ
ரன்னதைமுழுதுமுனாக்கவல்லவர்யாரறைந்தனநிந்தவாறெனைப்
பன்னினன்சூதன்முனிவரும்வியந்துபரமனைநினைந்துளங்களித்தார். (௯௬)

நாரதர்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம் ௫௲௯௧.

## அனந்தனுதிநாகவரசர்வரம்பெறுசருக்கம்.

மனந்தனிலாசாபாசமற்றிருந்துமாசறுமுத்திமேவுதற்கு
நினைந்தருந்தவஞ்செய்தபோதனராகிநெல்லைநாயகன்றனையெய்தி
யனந்தனேயாதியுரகரொல்லோருமற்சித்துவரம்பெறுகதையைப்
புனைந்தநான்மார்பவுரைத்தருளென்னச்சூதமாமுனிவரன்புகல்வான். (௧)

அத்தியம்பணத்துச்சேடன்முன்கற்பந்தொறுந்தொறுந்துஞ்சிடாதிருக்கு
நித்தியம்பெறநெல்வேலியினடைந்துநினைத்தவையுதவுசிருருத்ராம்
பத்தியினோடுந்தினமுமேபன்னீராயிரமுருப்பகர்ந்தேத்தி
மத்தமுநதியும்புனையரஞ்சடைமாமந்தத்தேர்ந்தவம்புரிந்தனனால். (௨)

உளமுவந்திரங்கிநெல்லைநாயகன்வெள்விடைமிசையுமையொடுநீலக்
களமுமான்மழுவார்கரமுமுக்கண்ணுங்கதிருசரணபங்கயமு
மளியுடன்றோன்றக்காட்சியுற்றளித்தானகமகிழ்ந்தெழுந்துஞ்சோர்ந்து
ளிர்மணிச்செஞ்சூட்டனந்தனும்பணிந்துநான்மறைமொழிகொண்டுதுதித்தான். (௩)



அற்புதனுனக்குவேண்டியதென்கொலுறையெனவனந்தனும்பணிந்து
நிற்பரவழியாதிருக்குநித்தியமுஞ்செறியுமன்னுயிரொடம்புவியைப்
பொற்புறப்பரிக்குமாற்றலுமெண்ணெண்கலையெலாம்புனையறவுணரும்
நிற்பனந்தானுமருள்செய்வாயென்னவிளம்பலும்வினவியெம்பெருமான். (௪)

இறப்பொடுபிறப்பற்றிருப்பதியாமேயன்றிவேறியாவருமிலையாற்
சிறப்புறுமாலுநித்தியனன்றூற்செப்புமவ்வரத்திலுக்கிணையா
யுறப்பெறவேண்டிற்றுண்டெனிலுரையென்றுரைத்தலுமுளத்தினோர்ந்து
மறைப்பெருமபொருளைப்பின்னரும்வணங்கிவாளெயிற்றனந்தனீதுரைப்பான். (௫)

சீரணிகமலமலர்புரையுனதுசேவடிச்சிலம்பதாயுறவு
மோரணிகரத்திற்கடகமாயுறவுமெய்துநீர்ப்பிறையைச்சேர்ந்து
மாரணிம்பரவநீபுரிநடனமடியனேன்கண்டுவப்புறவு
நாரணன்பரவநேமியன்றளித்துநாதநீநல்கெனநவின்றான். (௬)

என்னையாளுடையநாயகன்விண்ணவியிளநகைபுரிந்துளமுவந்தே
யனையவாறெமக்குமணியதாய்நடனங்காணவுமவனியைப்பரிக்க
மன்னியவிறலுங்கலையெலாமுணரும்வண்மையும்வழங்கினமென்று
பின்னருஞ்சேடன்றன்முகநோக்கிப்பிறைமுடிப்பிஞ்ஞகன்பேசும். (௭)

வந்தியாமுதவவரம்பெற்றுமென்னமதித்துமாயவன்றனையிகழேற்
சுந்தரந்திகழுமதிடப்புறத்திற்றோன்றினார்முகுந்தனுமுமையுங்
கந்தநாண்மலரோன்வலப்புறத்துதித்தானுதலாறசருத்தயயவர்செய்
நந்தலிறிருட்டிதிதிக்கனுகூலமாகவேநீயுநண்ணுதியால். (௮)

என்றருள்புரிந்துபாஞ்சுடரோகவினிதினிற்சேடனுக்கிருந்து
தன்றிமீதோங்கிப்பிரளயமுறலுந்தலங்கொளிக்கயிலைமால்வரையிற்
சென்றரன்றனக்குக்கடகமுஞ்சிலம்புமாகியேநடனமுந்தெரிசித்
தன்றனைநீத்தமகன்றுபின்மீட்டுமமவனநோக்கிவந்தனனால். (௯)

ஒருபிரளயத்துமுலைவுறுநகர்நெல்வேலியென்றுணர்ந்ததினடைந்து
மருவியவுதாந்தவெள்ளத்திற்குயர்ந்தமாதவச்சனகாதியினோர்
விரைவினிற்சேடனெய்துமாறுணர்ந்துமேவுபேரன்புடனெதிர்போய்ப்
பரிவுடனொருவர்க்கொருவர்நேரிறைஞ்சிப்பத்திமையாற்றழீஇயுவந்தார். (௰)

பிரளயமதற்கெங்குநேருறாச்சொன்னப்பிறையெயிற்றனந்தன்கேட்டலுமே
மருவுமெண்ணிறந்தவுகாந்தத்துமழியாவண்மையாற்பிரளயசித்தென்
றொருபெயருடையதிருநெல்வேலியினுறைந்தியாமுய்ந்தனமென்ன
வருமறையுணர்ந்தசனகரோயாதிநால்வருமறைந்திடவினவி. (௰௧)

அத்தலமகிமையறிந்தியானெய்தியருந்தவம்புரிந்தமைவணர்ந்து
வித்தகனுதவவரம்பெறீஇயேகிவெள்ளிவெற்பினிலரனடனம்
பத்தியிற்சேவித்தருள்பெற்றுமீண்டுபனைவனத்தரனடிபணியச்
சித்தமின்புற்றுவந்தனனென்னச்செப்பியேசேடனும்படர்ந்து. (௰௨)

வரைவனந்தனைந்துநெல்லைநாயகனைவரன்முறைபூசனைபுரிந்து
விரிதலைபுல்கையோருருக்கொண்டுமேவுறப்பரித்துமாயவனுக்
குரியபாயலுமாயமையனந்தரனையுளத்தினிலமைத்துறுபகலு
மிரவினும்வழிபட்டகமகிழ்சிறந்தேயினிதின்வீற்றிருந்தனன்சேடன். (யங)

ஈதுமுன்சேடனருள்பெறுந்தன்மை யியம்புசீருருத்திரமென்னு
மாதிமந்திரத்தைச்செபிக்கினுஞ் செம்பொனருளியசெபஞ்செய்வித்திடினு
மாதுமைபாகனுங்கவர்வேட்டவர மெலாம்வழங்குமென்றுரைத்த
சூதமாமுனியையருத்தியாற்றுதித்துச்சுருதிமாதவர்களீதுரைப்பார். [யச]

பிலத்தினூடுறையும்பிறையெயிற்றுரகர்பின்னும்வெண்டிரைக்கடல்சூழ்பூ
தலத்தினுற்றீசன்றனைப்பணிந்தேத்தித்தனைப்பறுகதிபெறச்சாரு
நலத்தகும்வழியுண்டோவதையாய்ந்துநவிலுதியெமக்குநீயெனலும்
வலத்தினின்மழுவேந்தரனையுள்ளுணருமாதவச்சூதனும்புகல்வான். (யரு)

திகழ்மணிச்செஞ்சூட்டுர கரொல்லோருந்தெட்சகனனந்தனுமியைந்த்
தகவொடுற்றிறைஞ்சிப்பூதலத்தெய்திச்சம்புவைவழிபடுவதற்குப்
புகவழிகாணேமென்செய்கோமென்னப்புகலலுமாங்கவர்முக்கட்
பகவனைநோக்கித்தவஞ்செய்வீர்தோன்றும்படருநன்னெறியெனப்பகர்ந்தார். யசு

வேறு.

நன்றெனவுரகரெல்லாநான்மறைப்பொருளாஞ்செம்பொற்
குன்றவிற்குழகன்றன்னைக்குறித்தருந்தவங்கள்செய்தார்
மன்றல்சூழ்கரியகூந்தன்மாதொருபாகத்தண்ண
றன்றிருவருளான்மீதுசார்நெறிதோன்றிற்றன்றே. (யஎ)

பயிலுமந்நெறியினூடுபணிக்குலத்திறைவரெல்லா
மயிலெயிற்றுரகரோடுமம்புவிமீதினேகி
யுயர்பெறுங்கயிலைவெற்பினுற்றனருறமுமங்க
ணியல்புடனிருந்துநோற்குமிருடியரிவரைநோக்கி. [யஅ]

சிரணிந்திலங்குஞ்சித்தித்தலமதுதிருநெல்வேலி
யேரணிசிறந்தவந்தப்பதியினிலெய்திவீ
ராரணப்புரவியானைக்குறித்தருந்தவங்கள்செய்தாற்
காரணன்வேட்டதெல்லாங்கடிதின்வந்துதவுமென்றார். (யகூ)

அவர்மொழிப்படியேசென்றுவரைவனமதனிற்சார்ந்
தவருடைச்சூலிதன்னைக்கண்டடிபணிந்துபோற்றித்
திவண்மணிக்கோயிலுக்குத்தென்கிழக்காகமேவிக்
குவலையத்தூடுவைகிக்குழகனைக்குறித்துநோற்றார். [உய]

சேல்புரைவிழிமாதோடுஞ்சிற்பரன்வெளிவந்தெய்தி
மால்விடைக்காட்சிநல்கிவாளெயிற்றுரகரெல்லா



மேலுமெய்யன்பினோடுமிறைஞ்சியேவலஞ்சூழ்ந்தேத்த
ஞாலநாயகனீர்வேட்டதென்னெனநாகவேந்தர். [உக]

மணிமிடற்றமலயாங்கண்மாசறமுனநுமேனிக்
கணியதாயுறவுநின்பாலன்புமேன்மேலுமோங்கிப்
பணிதருகருத்துமிந்தப்படர்பிலத்துவாரம்யாங்க
ளனுகவுஞ்செலவுமென்றுமிருக்கவுமருள்வாயென்றார். (உஉ)

நாட்டமூன்றுடையநாதனளிர்மணிச்சூட்டுநாகர்
கேட்டநல்வரங்களெல்லாங்கிருபையோடினிதினீந்து
வாட்டடங்கண்ணியோடுமகாலிங்கத்தூடுசேர்ந்தான்
வேட்டவையெய்தப்பெற்றுவியந்தனர்நாகரெல்லாம். (உங)

அன்றுதொட்டென்னையாளுமமலனுக்கணியதாயுஞ்
சென்றுதம்பிலத்தினூற்றுத்திரும்பிவந்திறைஞ்சிச்சூழ்ந்து
மொன்றுபேரன்பினூற்றுரிவர்களினுணர்வின்மிக்க
நன்றறியனந்தன்றக்கனெனும்பெயர்நாகர்வேந்தர். (உச)

இருவரும்பிரியாராகவிருந்துநெல்வேலிமேவும்
பரமனைப்பணிந்துபோற்றிப்பகர்மணிக்கோயிலுக்கு
மருவுமேல்புறத்தினென்றும்வைகுவரென்னநான்கு
சுருதியும்புராணந்தானுங்கலைகளுஞ்சொல்லுமன்றே. [உரு]

இத்தகைத்தாகுமுக்கணிறையவனனந்தனுக்கும்
பைத்தலையுரகருக்கும்பரிந்தருள்புரிந்ததென்ன
வித்தகமறைமுற்றோர்ந்தமாதவர்விரும்பிக்கேட்ப
முத்தரிற்சிறந்தசூதமுனிவரன்மொழிந்தானன்றே. [உசு]

அனந்தனுதிநாகவரர்சர்வரம்பெறுசருக்கமுற்றும்—
ஆகத்திருவிருத்தம்—ருதளாகூயஎ—

## அகத்தியர்அரசுசெய்சருக்கம்.

முக்குறும்பறிந்தைம்புலனுமுள்ளடக்கிமுத்திமேவுறமுக்கணெண்டோ
ணக்கனையுளத்தடைமைத்தனுதினமும்வழிபடுசுற்றவமேலோர்
தொக்கபல்கலைதேர்சூதனைநோக்கியகத்தியர்தொல்லைமாஞால
மொக்கவுமரசுபுரிந்தனரென்னவுவகையோடுரைத்தனையன்றே. க)

பாரரசுரிமைசெயுமிறைதன்னூற்றன்பரிசனத்தினூற்பகையாற்
கோரவெவ்விலங்காற்கள்வராலினல்குலவுமன்னுயிர்க்குறுதளிக்குஞ்
சீருடையவனேயாகுமாலிந்தத்திறன்முனிக்கெய்துமோவந்தக்
காரணந்தன்னைவிரித்துரையெனலுங்கற்றுணர்சூதனீதுரைப்பான். (உ)

ஈசனுக்கிணையாயுலகுநேர்பெறச்சென்றிருந்துவாரிதியையுண்டுமிழ்ந்து
வீசொளிவிந்தவரைமடக்கிவில்வலன்றனையும்வென்றுயர்ந்த

மாசறுமுனிவன் றவவலியதிற்றுமற்றென் றுமறிவிலாதவர்போற்
பேசினீ ரிலமாங்கவன்புரந்தபெற்றிநீர்கேண் மினென் றுரைப்பான். (௩)

கறைமிடற்றமலன் கழல்கணுய்முன்புகாசினிபுரந்தபின் முறைமே
யறுமுகமதலைக்கவ்வரசளித்தாளுங்கவனெகநாட்பரித்துக்
குறுமுனிதன் மாணுக்களுதலினிப்பெறுசெனக்கொடுத்தனுமந்த
மறுவின்மாதவத்தோன் குருமொழிமறுத்தல்வாய்மையன்றெனமனமிசைந்து. ௪]

கந்தவேள்செந்தாமரையடிபணிந்தகமையுடைக்குறுமுனிதுதிசெய்
தெந்தைநீயுதவுமரசியறமியேனியற்றுமாறினிண்டியேயுலகை
வெந்திறலவுணர் கலக்கிலுற்றவனாவெற்றிகொண்டருளியேயடியேன்
சிந்தையினுறைந்துநிதநுசெங்கோல்செலுத்தவுங்கருணைசெயென்றான். (௫)

தன்னடிபரவுந்தொண்டரிற்சிறந்ததமிழ்முனியுரைத்தமைவினவிப்
பன்னிருதடந்தோட்பண்ணவனிசேள்பாரினையவுஞ்சுருற்றலைக்கின்
முன்னமுற்றியாமேயெடுத்துநீசெங்கோன்முறைவழாதரசுசெய்வதனுக்
குன்னுளத்துறைந்துதிருவருள்புரிதுமுலகெலாம்புரத்திநீயென்றான். (௬)

கோதைவேற்குமரன்பணித்தலைக்கொண்டுகுறுமுனிசடைமுடிதுலங்க
மாதவத்தண்டேவிலில்செங்கோலாய்மனுமுறையுலகெலாஞ்செலுத்தி
நீதியேதழைக்கமறைநெறிவழங்கநிலமகளுவகையிற்சிறப்பக்
கோதிறன்னுயிர்போன்மன்னுயிர்க்கிரங்கிக்குவலயமுழுவதும்புரந்தான். (௭)

வளமிகக்சுரந்துகவினைகடலாடைமாநிலமாதினிதாட்ட
வுளமகிழ்சிறந்துமன்னுயிருண்டாங்கோரிடையூறின்றிமல்க
வளவறுவேள்வியியற்றலாலனுகியமரருமலிதாலர்ந்துவப்பக்
கவிகையுலகமுன்றையுமுறையேயகலமையுடைக்குறுமுனிபுரந்தான். [௮)

ஈதிவனிற்கவிதற்குமுனிகழ்ந்தநெடுந்துமக்கியப்புவனென்னச்
சூதன்மாதவனைநோக்கியேயுரைப்பானுலங்கெழில்வனைவனத்துறையு
மாதிதன்குமரன்றனைவர்களோடுமனிகமுமூட்டன்செலப்படர்ந்து
மாதிரங்கடந்ததடம்புயச்சூரபன்மன்மாநகரியுற்றெதிர்ந்து. (௯]

வரிசிலைகுனித்துச்சரந்தூர்ந்தவுணர்மாக்கடற்படைசிதைத்தயிலாற்
பெருவலிச்சூரனுடலினையிரண்டாய்ப்பிளந்தொருகூறுகுக்குடமு
முரியதோர்கூறுமயிலுமாயுறவுமூர்தியுங்கொடியுமாய்க்கொண்டு
கரையறுகடலந்தானையிற்றேறுங்கந்தவேள்செந்திலவந்தணைந்து. [௰)

இலபகதுறைந்துநெல்லைமாநகர்க்குச்செலவொருப்படலுமுற்றிறைஞ்சி
யலைகடற்சிறையுமமருமவுணர்நேகர்போர்க்கஞ்சியுற்றுழி
மலிபுனலூர்கொந்தனரவனுமாய்ப்பதற்கோருருக்கொண்டே
யிலைமலிகதிர்வேலெந்தைநீதிருச்செந்தூரினிலிருத்தியென்றிசைப்ப. (௰௧)

நன்றெனவாங்கோருருக்கொடுமேவிநளிர்கடலூடுபுக்கொளித்த
குன்றுறழவுணர்தமையெலாந்தடிந்துகுளிர்புனற்செந்திலினுறைந்த





தன்றியும்பூதப்படையுடன்வேலுவனைத்தினுற்றமலன்கோயிலுக்குத்
தென்றிசைத்தெய்வச்சினகரமதனிற்சகமெலாம்புரந்துவீற்றிருக்கும். (௰௨)

ஈதுமுன்னிகழ்ந்தவின்னணஞ்சூரன்றுணையாயிறந்தவர்பின்னும்
பூதலத்தவுணராகவேயுதித்துப்புலவரைமுனிவரையலைப்பக்
காதமக்கொடியோர்க்கஞ்சிமாதவருங்கடவுளருஞ்செறிந்தீண்டி
மாதவக்கும்பமுனிவரன்றன்னைவரன்முறைகண்டிவையுரைப்பார். (௰௩)

அடுசினச்சூரன்றமர்களாய்முன்னமறுமுகனிகலினுற்றிறந்த
கொடியவரின்னுமவுணராய்த்தோன்றிக்குலவுமூன் றுலகும்புக்கலைத்தார்
விடலருந்தவமும்வேள்வியுமிழந்தோம்வேந்தனீயாதலினவரை
முடியவட்டெவருமின்னலற்றிருக்கமுனிவனீபுரிகுதியென்றார். (௰௪)

அவர்களுற்றுரைத்தவாசகம்வினவியஞ்சன்மினீவிரென்றுரைத்துத்
தவமிகவுடையதமிழ்முனியென்றுதயங்குபொற்றுமணப்புனலி
னுவகையிற்படிந்துநீறுங்கண்மணியுமஞ்செழுத்தோதியேயணிந்து
கவுரியைவேணுவனப்பரஞ்சுடரைக்கருதியேசென்றடிபணிந்து. [௰௫]

கந்திருகருமாரிக்குக்கீழ்திசையிற்காமர்பொற்கோயில்கொண்டுறையுஞ்
சதுமறைபாவுமுருகவேளுடையசரணபங்கயத்தையுற்றிறைஞ்சி
யித்திருமுறையருச்சித்துலகினையவுணர்மிகநலிந்தனவெனவிளம்பித்
துதிசெய்துயரவிக்கண்கணீர்சொரியத்தொழுதெதிர்நிற்பதைநோக்கி. (௰௬)

வேறு.

இரவியாயிரகோடியாறுருக்கொடுமீண்டி
மருவுபான்மையிற்சிரநதொறுமணிமுடிவயங்க
விரவுசெம்மணிகுயிற்றியேமிளிரும்பொற்பட்டந்
திருவெண்ணீறணிநுதலொறுநுதலொறுந்திகழ. (௰௭)

எத்தலத்தினுமிருளறவிளநிலாப்பரப்பு
நித்திலத்தொங்கலுதற்கடைதொறுந்தொறுநிலவ
வித்தகக்கரும்பூருரமத்திகடொறுமேவிச்
சித்தமின்புறத்திட்டியதிலகங்கள்சிறக்க. (௰௮]

நறைகமழ்ந்தசெந்தாமரைநாண்மலர்க்கிணையா
யறையும்பன்னிருநயனமுமாரருள்கொழிப்பச்
சிறிதும்வெண்மையயறற்றிடையறச்சிவந்தபங்கயம்போன்
மறைபகர்ந்தசெவ்வாயும்புன்மூரலும்வயங்க. (௰௯]

விண்டலத்துறுபருதிமின்மினியொத்துவெள்க
வெண்டிசைப்புவிவிசும்புபாதலமெனுமூன்று
மண்டலத்திருளறமிளிர்மகரவாய்வயிரக்
குண்டலந்திகழ்குழைதொறுங்குழைதொறுங்குலவ. (௨௰]

பிரமகற்பமொன்றினிலூற்றுப்பெயர்திங்கடோறு
மருவுபூரணைமதியெலாம்வைகியேதிரண்டிற்
றரியமூவிரண்டுருவமாயுதித்தெனவெழில்கூர்
திருமுகங்களோராறுந்தண்ணளியுடன்றிகழ. (௨௧)

செம்பொன்மால்வரைபன்னிரண்டுளவெனத்திகழு
மம்பொற்றோள்களிலணிமணிவலயமும்பிறங்க
வெம்புவெஞ்சினச்சூர்கிளைவேரறத்தடிந்த
கொன்பிறங்குவேற்படையொருதடக்கையிற்குலவ. (௨௨)

மற்றுமவேலுமாகரந்தொறும்வயம்பெறப்பிடித்த
கொற்றவெம்படைக்கலமெலாங்கிளாங்கிளாகுலவப்
பொற்றடம்புயத்தோடகன்மார்புறப்புனைந்த
சுற்றுபேரொளிச்சன்னவீரத்தணிதுலங்க. (௨௩)

நித்திலக்கண்டசரங்கலவெறிப்பநீண்மார்பில்
வித்தகம்பெறப்புனைந்தமுந்நூலுடன்விரவி
முத்துமாலையுமாரமுமொய்யொளிபரப்பிக்
கொத்துவாய்ந்தபன்மலர்த்தொடைபுயந்தொறுங்குலவ. (௨௪)

மிளிர்வைவேலுடையவுணர்தம்விறல்கெடவோங்கி
வளர்பொற்றோளினும்வயங்கெழின்மார்பினுந்திமிர்ந்த
குளிர்வெண்சாந்தமுஞ்சுண்ணமுங்குலவுமோரேழு
களிர்கடற்புவிமுழுவதுநறுமணங்கமழ. (௨௫)

அதிருமார்கலியவனியையனுதினம்பரிக்கு
முதிரும்வெஞ்சினச்சேடனேமுதலரவீன்ற
கதிர்செய்மாணிக்கமிடையுறக்குயிற்றியகனக
வுதரபந்தனத்தொளியினாலுலகெலாம்விளங்க. (௨௬)

திருந்துமாணிக்கவெற்பினைத்தெண்ணிலாக்கதிர்சூழ்ந்
திருந்தபான்மையிற்புனைந்தவெண்பட்டுடையிலங்க
விரிந்தபேரொளிப்பட்டிகைமீதுறச்செறித்துப்
பொருந்தும்வாட்படைமரகதத் ° தடறுடன்பொலிய. (௨௭)

தன்னைவந்தனைபுரிந்தவர்சாருநற்கதியா
மென்னுளத்திலுஞ்சிரத்திலுமென்றுநீங்காது
மன்னுமம்புயமலரடித்துணையுமற்றதனிற்
றுன்னுசெம்பொனூபுரத்தொடுசதங்கையுந்துலங்க. (௨௮)

சாரதப்படைத்தலைவருமிலங்கருந்தழுவ
வீரரொன்மருமினைவலுந்துதித்துடன்மேவச்

---

° தடறு ஆயுதவுறை.



சீர்சிறந்தசெஞ்சூட்டுவாரணக்கொடிதிகழப்
பாரும்விண்ணுநெக்குலைந்திடப்பல்லியங்கறங்க. [௨௯]

தேவர்கோன்மகளார்தெய்வயானையுஞ்சிறந்த
வோவியர்க்குமேயெழுதொணாப்பேரெழிலுடைய
காவல்வேட்டுவர்க்கிறைதருகாமர்பொற்கொடியு
மேவியேயிருமருங்கினுமினிதின்வீற்றிருப்ப. (௩௰)

கொற்றவெண்குடைதிகழ்ந்துறச்சாமரைகுலவ
வெற்றிசேர்மயில்வாகனமீதினின்மேவிக்
கற்றுணர்ந்தவருளத்துறைகந்தவேளடைந்து
நற்றவத்தமிழ்முனிக்கெதிர்காட்சிநல்கினால். [௩௧]

விண்கலந்தசெங்கதிருறவிரியுமம்புயப்பொற்
கண்களிப்புறக்காண்டலுங்கதிர்முகமலர்ந்தே
தண்கடற்புவிமீதுதன்சிரமுறப்பணிந்து
பண்கனிந்துறத்தமிழ்முனிதுதியிவைபகர்வான். [௩௨]

வேறு.

கந்தாமுகுந்தன்மருகாமெயன்பர்கதிசேரநல்குமுதல்வா
மந்தாகினிக்கண்வருகார்த்திகேயமகமூடெழுந்துபடருந்
தந்தாவளத்தினதண்மேற்புனைந்ததலைவன்பயந்தமுருகா
கொந்தாரும்வெட்சிமலர்மாலைவேய்ந்தகுமராநினன்பனடியேன். (௩௩)

மகவானிழந்தவிரசிந்துவெள்ளைமதவாரணத்தின்மகளை
மிகவாதரித்துமுறைவேட்டணைந்ததலதேயும்வேடர்தலைவன்
றகவாய்வளர்த்தவெழில்கூரும்வள்ளிதனையும்மணந்துதழுவுங்
குகமூவிரண்டுமுகவென்னையாட்கொள்குமராநினன்பனடியேன். (௩௪)

திருமால்வராகவுருவச்சமெய்தவெதிர்சென்றிரண்டுவிழியும்
பொருகோடிரண்டுமுறவேகவர்ந்துபுரமன்றெரித்தபுனித
னுரமீதணிந்துகொளநல்கும்வீரவுயர்ஞானபோதமுதவிக்
குருவாகமேவியெனையாண்டுகொண்டகுமராநினன்பனடியேன். (௩௫)

வேறு.

என்றுபலதுதித்தேத்தித்தமிழ்முனியன்பினுமெதிரிறைஞ்சியெந்தாய்
துன்றியபடலவுணர்பலர்தொல்லுலகையலைத்தனர்நீதுணைவரோடுஞ்
சென்றவர்தங்குலமுழுதுஞ்சிதைத்தருளவேண்டுமெனச்செப்பக்கேட்டுக்
குன்றனையபன்னிருதோட்குரிசிலெனைத்துத்தாண்டுகொள்ளுஞ்செவ்வேள். [௩௬]

உலகையடலவுணர்பலருற்றலைத்தாரொனில்யாமோர்கடிகைப்போதிற்
றொலையவட்டுத்துருதுமுடன்வருதியெனச்சேனையுடைசூழச்செவ்வேள்
செலுமளவில்லயவீரவாகுவெதிர்சென்றிறைஞ்சிச்செறுநர்தங்கள் (௩௭)
குலமுழுதுமுனதருளாலடுவன்விடைதருதியெனக்கூறலோடும்

இளையவள்ளன் முகநோக்கித்தாளையுடனீயேசென் றிகலினேற்று
வளையெயிற்றுவாளவுணர்தமைத்தடிந்துவிசையமெய்திவருதியாலென்
றுளமகிழ்ந்துவிடையுதவிக்கருணைசெய்துமீண்டுமயிலுகைத்துப்போந்து
மிளிர்மணிப்பொற்சினகரத்துண்மேவியரியணைமிசைவீற்றிருந்தானன்றே. (௩௯)

அடல்படைத்ததிறல்வீரவாகுவுந்தேரோறியங்கைப்படையுமேந்தி
மிடலுடையபூதவெள்ளமாயிரமுமோரிலக்கம்வீரர்தாமு
முடனுறப்பல்லியங்கறங்கவொளிருமதிக்குடைவயங்கத்துவசமோங்கப்
படிபுகழுங்குறுமுனியுமருங்குசெலவெருளியுடன்படர்ந்தானன்றே. (௪௦)

குறுமுனியோர்மானமிசைப்பரிசனத்தோடுறைந்தேகிக்கொற்றவீர
னெறுழ்வலிமாத்தாளையுடன்படர்ந்திறுத்தவிடங்கடொறுமென்றாயாரு
மறுமுகனைவிதிமுறையேதாபித்துப்பூசனைசெய்தனுகவள்ளல்
செறுநரகமகிழ்ந்துறையும்பதிகடொறுஞ்சேனையுடன்சென்றுசூழ்ந்து. (௪௧)

சிலைவளைத்துமுதண்டம்வெடிபடாரணிதாக்கிசிலீமுகங்கடேண்டித்
தலைமலையுமுடன்மலையுஞ்சதகோடிதாரணியிற்றயங்கச்சார்ந்தே
யலைச்சடலிற்குருதிநதியனந்தமுறக்கவந்தமளவிறந்ததாடக்
கொலைபுரிவாளவுணராபுஞ்சேனையையுங்கொன்றத்துவெற்றிகொண்டானன்றே. (௪௨)

இப்படிமூன்றுலகினிலுமெய்தியெய்தியிடர்புரிதானவரையெல்லாங்
கைப்பசழிதாரந்துணித்துயிர்கவர்ந்துகருதலர்வேறின்றிமீண்டு
துப்புறமுஞ்சடிலமுடிமுனிவனொடுமிந்தாளையொடிந்துணைவரோடு
மொப்பிறிறல்வயவீரவாகுவும்வெய்வனத்தினில்வந்தற்றனன்றே. (௪௩)

வாவுபரித்தேரிழிந்துசினகரத்துட்சென்றுதிறல்வாகுசெவ்வேள்
பூவடியைமுறைபணிந்துநல்லருள்பெற்றுவகையொடும்போருர்கிறைஞ்
மேவுதமிழ்க்குறுமுனியுங்குமரனையுற்றெதிரிறைஞ்சிவிடைபெற்றேகித்
தேவர்தொழுநெல்வேலிச்சிற்பரனையும்முறைவணங்கிச்சென்று. (௪௪)

தன்னுடையசாலையினிற்சார்தலுமேயமருமாதவருமீண்டி
யின்னலுடன்பகைதொழிந்தோமினியெமக்கோரொண்ணாமிலையென்றாயென்னப்
பன்னியவரவருறையும்பதிபுகுந்தாரசத்தியனும்பரிவாய்மேவி
மன்னுமருந்தவஞ்சிறக்கமகமோங்கத்திங்களில்மும்மாரிபெய்ய. (௪௫)

கொலைபுரிவேங்கையும்பசுவுமொருதுறையிற்புனலருந்தக்குறுகுமுப்பு
லவிபிணியுமின்னலுமற்றெல்லோருமுவகையுடனணிவாழப்
புலவுசெறிமுத்தலைவேற்புராந்தகன்றன்றிருவருளாற்புவனமூன்று
மலையமலைதனிலுறையுமுனிவன்மனுமுறைபுரந்துவைகினனால். (௪௬)

கம்பமதகரியினுரிப்போர்ந்தநெல்லைநாயகர்தங்கருணைதன்னாற்
கும்பமுனியரசுசெய்தவிவ்வாறுமெனக்கூதன்கூறலோடு
மம்பரத்திலுத்தரிகமெறிந்துபிடித்தகத்தியர்பாலன்புகூர
வெம்புபழவினைதொலைக்குமாதவர்பாவருமுவகைமேவினரால். (௪௭)

அகத்தியர் அரசுசெய்சருக்கமுற்றும்.

ஆகத் திருவிருத்தம்-௫௱௪௮.





## வங்கியகுலசேகரபாண்டியச்சருக்கம்.

தராதலம்புகழுநயிமிசாரணியத்தனிலுறையருந்தவத்தலைவர்
கராசலத்துரிவைபுனையுநெல்வேலிக்கடவுளையன்புடன்கருதிப்
பராவிநற்கதிசேர்வங்கியகுலசேகரனெனும்பார்த்திபன்சரிதை
புராணமுற்றுணர்ந்தோயுரைத்தருளென்னச்சூதமாமுனிவரன்புகல்வான். (௧)

முன்றொருகாலத்தலைகடல்வெள்ளமுதல்கழித்தபின்முன்போ
லுந்தியிலுதித்தோன்மன்னுயிர்த்தொகையுமுலகமுநிலைபெறவகுத்தா
னந்தநாளகிலமுழுவதுமுறையேயாழியொன்றுருட்டியேபுரந்தான்
மந்தரத்தடந்தோள்வங்கியகுலசேகரனெனுமதிக்குடைவழுதி. (௨)

தன்னுயிரென்னமன்னுயிர்புரக்குந்தனிக்குடைவழுதியர்பெருமான்
முன்னரினைந்தபிரளயமுலைத்தமுதுநகர்தேவராலயங்க
ளொன்னுமதெல்லாநூதனமாகவென்றுமேநிலைபெறவியற்றிக்
கன்னியம்புரிசைசூழுநெல்வேலிக்கடிநகர்கருதிவந்தடைந்தான். (௩)

கனகமால்வரைநேர்கோபுரநிலையுங்கண்ணுதலாலயத்தெழிலுந்
தினகரன்வட்கிச்சவிகெடமிளிருமாளிகைசிறந்தநெல்வேலித்
தனிநகரழகும்பிரளயத்துலையாதிருக்குமத்தன்மையுநோக்கி
வனைபொலன்கழற்கான்மன்னனத்தலத்தின்மகிமைகேட்பதற்குளம்விரும்பி. (௪)

பொதியமால்வரையினடைந்தகத்தியன்முன்போந்தெதிரடிக்கடிபணிந்து
துதிபலபுகன்றுவேய்வனமகிமைசொற்றருளெனமுனிவேந்தே
யதிர்கடலுலகிலநுறைதலங்களேசமுண்டவற்றுணெல்வேலி
முதுநகர்மகிமைமாத்திரம்விளையதென்னெனப்புரவலன்மொழிவான். (௫)

இளமதிபுனையுநெல்லைநாயகனேயங்கடொல்குலதெய்வமதனு
ளுளமகிழ்ந்தந்தத்தலமகிமையினையுரையெனப்புகன்றனனென்னது
மளவறுமகிழ்ச்சியுடையகத்தியருமகிழ்ந்தெதிர்வருதியென்றெழுந்து
மிளிர்மணிமகுடவேந்துடன்படர்ந்துவேய்வனப்பதியில்வந்தடைந்தான். (௬)

மற்றிதன்முன்னம்வளவனத்துலையாமகிமையைபாருமறிந்தா
னற்றவமுனிக்குநரபதிதனக்குமிரவினின்கனவில்
னூற்றுணிநகருங்கோயிலுஞ்சிறப்பித்திடுவதற்றுணைத்தெழுந்தருளப்
பொற்றடமுடிவேந்தனருளிதுவேறபுரிகுவனெனமனத்துணர்ந்தான். (௭)

அகத்தியர்கண்டகனவுமன்னவனுக்கறைந்தபின்பாதியோடந்த
மகத்துவவேணுவனமகிமையையும்வரன்முறையுணர்த்திடவினவி
யிகப்பரிவுடனேமாடமாளிகையும்வீதியுமிகையறத்திருத்திச்
செகத்தினுக்கணியாய்த்திகழ்ந்தொளிபரப்பத்திருநகர்சிறப்பித்தான். (௮)

அண்டர்தம்பெருமானமருமாலயமுமம்பிகையுறைசினகரமுந்
தண்டியமுகவைங்கரன்முதலோருறையுநேர்தயங்குமம்பலமும்

விண்டொடுசிகரங்கோபுர மற்றுமிளிர்பசும்பொன்மெருக்கெறிந்தே
யெண்டிசைவிளங்குநவமணிகுயிற்றியெழில்பெறவினிதலங்கரித்தான். (௯)

சிந்துபூந்துறைபொற்றுமரைகம்பாநதிமுதற்செப்புமெண்ணான்கு
பந்தவல்வினைகளகற்றுதீர்த்தங்களெலாம்புதுக்குந்தடம்பளிங்கதிற்று
சுந்தரச்சுற்றுப்படியுந்தூறும்மதிலுங்கலந்குபேராளம்பெறத்தொகுத்து
மந்திரகிரியைமாறுறவிளக்கித்தேர்வயங்குகோமறுந்தேரூரமைத்தான். (௰)

திங்கடோறுவந்தருவிழாவியற்றிச்செம்பொன்மால்வரைநிகர்தருந்தே
ரங்கண்மூன்றுலகும்வியப்புறவோட்டியவிர்மணிக்கலனும்பாவுமுந்
மென்கறைபகறுக்கெதிலபெறச்சாத்தியிரண்டுகாலமும்பணிந்தேத்திக்
கொங்கலர்கொன்றைபுனைபரனடியாருவப்பவும்வேண்டியகொடுத்தான். (௰௧)

இன்னணமேகந்திருப்பணியியற்றிமேவிதுறைநாளிலேழைர்வைகன்
மன்னவன்வேண்டவளர்நதநாயகனைவந்தடிதொழுதுமப்பரமன்
றன்னருளதிரந்தியாயிரகோடிதபனர்பேரொளியுடன்றயங்க
மின்னவிமைக்காந்திமதியுடன்றோன்றிவெள்விடைக்காட்சிவல்கினுல். (௰௨)

பஞ்சவன்கண்டுபரவசமாகிச்சுபன்முறைவலஞ்செய்துவணங்கிக்
கஞ்சநாண்மலர்நின்றெருழுதுபைந்தேவிருகண்கவளீர்சொரியநெக்குருகி
மஞ்சறைக்கண்டமயிலெனவடிந்துவாய்மொழிதழுதழுப்புறவே
தஞ்சமேயனதிவ்வதிலைத்தற்காத்தருளெனவெம்பிரான்சாற்றும். [௰௩]

வழுதிநீபுரிந்தபணிவிடையுவந்தாம்வையமேற்கலைகளுமெவருந்
தொழுதருச்சிறப்பின்வேட்டவையெய்தித்தொல்புவிபுரந்துபின்பெமது
பழுதிலாபதத்தில்வருதிசாரூபம்பரிவுறத்தருவமென்றருள்செய்
தழல்விழிக்கடவுண்மாறனைநோக்கியருத்தியாற்பின்னரும்விளம்பும். (௰௪)

அளபமாகலம்பானின்றுமேதோன்றித்தொல்புவிபுரிப்பதற்காக
வுளமகிழ்ந்துறைவதற்கர்மருங்கிலொன்பதுதானமுண்டாக்கு
நவிர்பவிர்ச்சோயிருலிரண்டொன்றுநலம்பெறப்புதுக்கினைசரும்
வளமுறப்புரிதியென்றனீகேட்டும்வாறுண்டேனுவாயெனமன்னன். (௰௫)

முன்னமாண்மூரிவரகமாய்த்தேடுமுதல்வன்முளரியம்பதந்து
மன்னவனமனைத்தையும்பயந்தவம்பிகைசரணவம்புயத்து
மன்னுபேரன்புமறப்புறுதிருக்கவழங்கெனமகிழ்வுடனுதவி
யென்னையாளுடையவன்பீண்டுமயோடுமிலிங்கத்தினுடுசென்றனனுல். [௰௬]

பூவலனுதிபணிதலைக்கொண்டுபோந்துமாயவனதிருயில்கூர்
திருநெல்வேல்லான்றிறப்புறவுதவித்திருந்துமாதாரமேமுதலாய்
மருவுபொற்றுலியனவுறுதனமாய்மாசறநான்முறைவகுத்து
விரிதிர்க்கலன்பட்டாடைமற்றெல்லாம்வேண்டுவகுறைவறக்கொடுத்தான். ௰எ

தலைதொறுநூறுமறையவர்தமக்குவேண்டுவகொடுத்தகமளித்தர
நலம்பொருதோளான்புரிபணிவிடைகண்டுவந்துமால்காட்சியுற்றுதவி



நலம்பெறமதுபதத்தினிற்கோடிகற்பநீண்ணிவீற்றிருந்து
வலம்படுமழுவேந்தரனுலகத்தின்மருவிச்சாரூபமெய்துதியால். (௰அ)

என்றருள்புரிந்துசிதாக்கடவுளினிதுமறைந்தருளியபின்பு
குன்றுறழ்தடந்தோட்டுறிசெலெல்கைவிக்கோநகர்குறுகிவீற்றிருந்தே
வென்றிசேர்செங்கோல்செலுத்துபுநெடுநாண்மேதினிபுரந்துதேவியொடுஞ்
சென்றுமால்பதத்தினிருந்தரனுலகிற்சேர்ந்துசாரூபமுற்றுறைந்தான். [௰௯)

இனையவாறுரும்வங்கியகுலசேகரனெனும்பாண்டியனியற்கை
முனிவிர்காளிவ்வுங்கேளுமிதொருவன்முதவிலான்றனைக்கடன்கொடுத்தோர்
சினமுறப்பலராய்ச்சூழ்ந்துயக்கலைப்பச்சென்றவன்றமராற்குநாப்பப்
புனிதநாயகன்றன்முதல்கைவிற்கொடுத்துப்போக்கியாங்கவனிடரொழித்தான்.

கருணைவாரிநெல்வேலிநாயகனேயன்றிவேறிலையெனக்கனிந்து
மருவுமாதவத்தச்சூதமாமுனிவன்மகிழ்வுடனெடுத்தெடுத்துரைப்பப்
புரையறநோற்குந்தாபதரெல்லாம்பொருந்துபேரன்புடன்வினவி
யருமறைப்பொருளைவேய்வனப்பரனையருத்தியானினைந்துளங்களித்தார். (௨௰]

வங்கியகுலசேகரபாண்டியச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௫௬௮௭

---

## குலசேகரபாண்டியச்சருக்கம்

நறைமலர்ப்பைந்தருக்குலவுநைமிசாரணியத்தினனண்ணிநாளுந்
குறைவறுமெய்த்தவம்புரியுமுனிவர்குலமையம்புகழ்திருநெல்வேலிக்
கிறைமகிமையின்னுமுள்ளதியம்பெனவேயீசான்பதேனும்புராணத்
துறைமுழுதுமளந்தறிந்தசூதமுனிமனமகிழ்ந்துசொல்லலுற்றான். (௧)

மதிகுலமன்னவர்பெருமான்வங்கியசேகரபாண்டியன்வையமுற்றும்
பொதுவறவோர்குடைநிழற்கீழ்ப்புரந்துதிருநெல்வேலிப்புனிதர்செம்பொற்
கதியுதவுமலரடியைவந்தித்துப்பயந்தெடுத்தகாளையொன்றூர்
நிதிமைந்துநிறையளக்கும்பாண்டியகுலசேகரன்பார்நிருபர்கோமான். [௨)

உவகையுடனவன்பயந்தகுலசேகரபாண்டியன்றிகழ்மெய்யுருவநோக்கிக்
குவிமுலைமென்மொழிமடவாரனைங்கனிவனென்றுமயல்கொண்டுகாமக்
கவலையுற்றுமடலெழுதுங்கட்டழகுபெற்றனிதற்காளையன்றன்
றிவவொளிப்பொன்முடிசூடிப்புவிமுழுதும்புரந்துசெங்கோல்செலுத்தினனுல்.

தன்னுயிர்போன்மன்னுயிர்கடனைப்புரந்துபகைசடிந்துதரணிகாக்கு
மன்னர்நிதிநிறையளப்பமனுநீதிமுறைநேமியுருட்டிவாய்ந்த
பன்னகமெய்ப்பணியணியுநெல்லைநாயகர்பதத்திற்பத்தியோடு
முன்னியடிக்கடிபணிந்துதிருப்பணியும்பணிவிடையுமுயன்றுசெய்தான்.

இப்பரிசுநெல்வேலிநாதரடிக்கன்புசெய்துபிலகுசெம்பொற்
செப்பனையதிதலைமுலைத்தெரிவையைமணந்தனைந்துஞ்சனைநீத்த
மைப்புணரியெனத்தழுவக்கவிழினிநியினில்வலியில்லையத்
தொப்பிவனுக்கில்லையெனவெல்லோரும்புகழமகிழ்ந்துறையுநாளில். (௫)

வடபுலத்தினிதுறையுங்கிராதர்பெருங்குலத்திறைவன்வயங்குசூழி
யிடியனையகொடுந்திறலானெண்ணில்லடர்த்தாற்றலுள்ளானியற்கைநாம
மடுசினவேலதிவீரனருந்தவஞ்செய்திமையமர்வந்தருளப்பெற்ற
படைவிறலும்வரத்தியல்பும்புயவலியுமெவர்முழுதும்பகரவல்லார் (௬)

கூற்றமிவனுருக்கொடுமிக்குவலயத்திலுற்றதெனக்கொடுந்தேர்லோச்சி
யூற்றிருந்துமதமொழுகுங்கரித்திரளும்பரித்திரளுமுயர்பொற்றேரும்
பாற்றினஞ்சூழ்கொன்னுனைவேல்வயவர்முதலியதானைப்பரவைசூழ
நாற்றிசையினுவந்துறையும்யாவரையும்வெல்வனெனநயந்துசென்றான். (௭)

அரக்கருறைபதிகடொறுமணுகிநட்புக்கொண்டவுணரனிகத்தோடு
மிருக்குநகரொங்கணும்போயளவளாவித்தழுவியிரக்கமின்றிப்
பரர்க்கழிவுசெயும்புதகன்பருதிமதிகுலத்தினராய்ப்பரிவின்வையம்
புரக்குமன்னர்போர்விரும்பியிளைவேட்டுச் செலும்புலிப்போத் தெனச்சென்று (௮)

சென்றடர்த்துற்றெதிர்படர்ந்தசேனையையுந்தடிந்துமன்னர்திரண்டசெம்பொற்
குன்றனையபுயவலியும்படைவிறலுந்தொலையவென்றுகொடுங்கோல்வேந்தன்
றன்றமவர்நகர்முழுதுஞ்சூறைகொண்டானென்செய்வார்துன்புற்றஞ்சி
யன்றுமுதலவன்பணித்தவேவல்புரிந்துயிர்படைத்தாரரசரெல்லாம். (௯)

வழிமருத்தடனெரியுமுற்றதெனத்தானையுடனுருத்துத்தீயோ
னெழுகடற்புவிமுழுதுமிவ்வாறுவிசையமெய்தியிகல்வேறின்றி
வாழியதன்னகரடைந்துகற்புடையமங்கையினைவலிதின்வவ்விச்
சூழிப்பகரிகமலத்தடமுழக்கிற்றெனப்பலகாரேப்புரிந்தும். (௰)

மாதவர்க்கிடரிழைத்துமறையவருக்கின்னல்செய்துமதலையுண்டும்
பூதலத்தினுறைதேவர்சினகரத்திற்பொருள்கவர்ந்துபோந்தாண்ணி
மேதகையவேள்விபலஇனஞ்சிதைத்தும்வேடரிறைவிரும்பிச்செய்யாப்
பாதகம்வேறில்லையெனயாவர்களுஞ்சொலப்பதகன்வாழுநாளில். (௰௧)

வழுதிகுலக்குரிசிற்னைமலைந்துவென்றுவளநகரும்பாண்டிநாடு
முழுவதுங்கைக்கொள்வனெனமனத்துணர்ந்துமுகில்புரையும்வேடர்கோமான்
றெழுதகையோடருகுநின்றவர்தமைத்தண்ணெனப்போயனிகத்தோடு
மற்றுமிழ்வேன்மன்னவருந்தானைகளும்வரமுரசமறைகவென்றான், (௰௨)

தானைவைடயிற்றூதர்சென்றுமுரசறைவித்தியம்புதலுந்தலைவரோடு
மானவடிவேலனிகத்திறையவருமமைச்சர்களும்வலயங்காக்கு
மேனையுள்ளமன்னவரும்பாரணிசெய்தூர்திகளிவர்ந்துசென்றார்
சேனைவெள்ளமார்த்தெழுந்ததிரைக்கடலாமெனமருங்குசெல்லமன்றோ. (௰௩)

365



வேடர்குலமன்னவனும்விற்பிடித்துக்கச்சிறுக்கியுடைவாள்வீக்கிப்
பீடுபெறுசாலிகையுமுரம்பிணித்துப்பிறங்குகணைப்புட்டிறுக்கித்
தாடிகழவயங்குபொலன்கழலணிந்துதேரேறித்தானைவெள்ளத்
தூடணைந்துபுடைதழுவத்தென்றிசையைநோக்கிவெகுண்டேற்றானன்றே. (௰௪)

மகதமன்னன்வந்திமன்னன்மாளவதேசத்துமன்னன்மச்சமன்னன்
றிகழுமெழிற்கலிங்கமன்னன்காம்போசமன்னன்குருக்குமன்னன்சிந்துமன்ன
னிகரில்சவுராட்டமன்னன்பாஞ்சாலநாட்டுமன்னனிடதமன்னன்
றகவுடைவைதற்பமன்னன்சவுவீரமன்னவன்கோசலத்துமன்னன். (௰௫)

இவர்முதலாமன்னவருநட்பினுறுமாக்கருந்தானவருமீண்டிக்
குவலயத்துக்கிடர்விளைக்கும்வேடர்குலத்தலைவர்களுங்கொடித்தேரோதி
யுவகையொடுஞ்செலவயுதமக்ரோணிகடற்படையுமுடனேபோதக்
கவரியிருமருங்கிரட்டக்கடிதுசென்றான்முடிவுணரான்காலனொப்பான். (௰௬)

தக்கைகாடிகைதிமிலைதடாரிமுதலியமொலித்ததழைத்ததூளி
மைக்கடலினகடுநிறைத்தெண்டிசையுஞ்செறிந்தனமால்வரைபல்கோடி
நெக்குவான்றொடுமடவிகீறுபட்டதாடுகொடிநிமிர்ந்தவவ்வா
றொக்கவருந்தானையொடும்யோசனைகள்பலகடந்தார்த்துற்றானன்றே. (௰௭)

வரைபலவுநதிபலவுஞ்சிலபகலிற்கடந்துசென்றுமறங்கூர்வென்றிப்
பொருசினவேட்டுவர்க்கிறைவன்மடிநெருங்கத்தடத்தெருமைபொழிந்ததீம்பால்
பருகிவரால்வெடிதாவிப்பைங்கமுகின்கனியுதிர்க்கும்பாண்டிநாட்டிற்
றிசைகடொறும்பொன்கொழிக்கும்வைகைதிமருங்கணைந்தான்சேனையோடும். (௰௮)

வெஞ்சினவேட்டுவர்க்கிறையுங்விசயமதுராபுரிமருங்கின்மேவிவாழு
மெஞ்சிலில்பல்குடிகளைப்புக்கலைத்திடலுமவர்வெருவியென்செய்வோமென்
றஞ்சிநெல்லைமாநகரத்திருந்தரசுபுரிந்தானுக்கன்புசெய்யும்
பஞ்சவனுக்குரைத்துமெனமனத்துணர்ந்துபடரின்றொடும்படர்ந்தாரன்றே. (௰௯)

வந்தொருபோதுறைந்தவர்க்குமைம்பதுபோர்தன்னிலொன்றைமகிழ்விறாடும்
புந்தியுறநினைந்தவர்க்கும்புகன்றவர்க்குஞ்சீவன்முத்திபொருந்தநல்கு
நந்தலில்பல்வளஞ்சிறந்தநெல்வேலிமாநகரினண்ணியுள்புக்
கிந்துகுலேசரனவன்முன்பெய்தியவ்வடிவணங்கிவினையசொல்வார். (௨௰)

வேட்டர்குலத்திறையொருவனதிவீரனெனும்பெயரான்வெகுளியோடு
நீடுகடற்றானையொடுந்தலைவரொடுநிருதரொடுநெருநலுற்று
றுடனைத்தூஞ்சூறைகொண்டான்யாங்களுமச்சுற்றிதனைநவில்வானெண்ணி
யோடிவந்தோமென்செய்கோமினியெமக்குப்புகல்பணித்தியிறைவவென்றார். (௨௰௧)

சேட்டனுமேயீனவனுங்கிளரொளிப்பொன்மணியாரங்கிடந்துநீண்ட
தோட்டுணைகள்குழுங்கரக்குங்கரம்புடைத்துமாலயனுந்தொழுதுபோற்று
நாட்டமொருமூன்றுடையநெல்வேலிநாதரருகண்ணுமென்னை
வேட்டுவன்கொல்வெல்வனெனவிளம்பியவர்முகநோக்கிவிரித்துச்சொல்வான்.

தேவர்தொழுநெல்வேலிச்சிற்பரன்பொன்முடிசூடிச்செங்கோலோச்சி
மூவுலகுந்தனிபுரந்துமுருகவேட்கு ... ரசுமுறையாலீந்தான்
மேவுமவனகத்தியருக்கருள்புரிந்தானந ... னிவிரும்பிநல்கக்
கோவியற்கையாம்புரிவதிதுவரன்முறைமை ... ற்குறிக்கொள்வீரால். [௨௩]

முந்தெமதுகுலத்திலுள்ளமுடிவேந்தரரசுமுறை ... ரியுநாளில்
வெந்திறதீங்குறிலவரால்விலக்கொணுதெனினெங்ஙலவிமலன்றனே
யந்தமிறன்கணங்களைவிட்டலக்கணொழித்தருள்பு ... ந்தானநேகமுண்டா
லிந்தவிடர்தீர்ப்பதற்குமவனிருக்கநமக்கென்கொலெண்ணமன்றே. [௨௪]

முன்னமொருசுவேதனுக்காய்மூரியிமில்விடையூருமுதல்வன்றனே
தன்னடியாற்கூற்றுவனையுதைத்ததிக்தத்தலத்திலதுமறையுஞ்சாற்றுங்
கன்னிநகரீதழியாதிர்நகரினுவகையொடுங்கலந்துவாள்வோர்க்
கின்னல்பிணியிறையுமுறுதிதியற்கைநமக்குறுமோவிடர்தான்மன்றே. (௨௫)

அடியவருக்குறுமலக்கணகற்றவன்றேவடியினுடன்முடியுமின்னும்
படியளந்தநெடுமாலும்பங்கயனுங்கண்டறியாப்பரமன்றன்றோர்
வடிவெடுத்துவடிவுடையமங்கையுடன்வளைவனத்தில்வைகின்றவிவ்
விடர்கற்றிநமைப்புரப்பதரிதுகொலோமிகவெளிதெம்மிறைவர்க்கன்றே. [௨௬]

எங்கள்குலத்தெய்வமுமாயெங்கள்குலத்திறைவனுமாயிநிதின்வைகுந்
திங்கள்புனைபரமனுக்குக்குமரனுக்குமியான்றனைச்செப்புகின்றே
னங்கவர்தந்திருவருளால்வேட்டவெனுந்தாவியுமின்றழியுதன்மை
யுங்கண்மனத்துள்ளவச்சம்விடுமினெனவுரைத்தெழுந்தாறுவுந்தோளான். [௨௭]

சென்றுசிந்துபூந்துறையிற்புனலாடிக்கம்பைநதிசேர்ந்துமூழ்கி
மன்றல்கமழ்பொற்கமலவாவியினீராடியதன்மருங்கினென்றுந்
துன்றுகங்கையமுனைசரசுவதிநிருமதைபொருநைசொனுங்காவேரி
நன்றருள்கோதாவிரியாநாலிரண்டுநதியினீருமயர்ந்துதோய்ந்து [௨௮]

நீறணிந்தஞ்செழுத்துணர்ந்துகண்டிகைநீள்வடந்தரித்துவியமத்தோடும்
பேறினிதினருடர்த்தேசுரர்பிரசமலரடியும்பேணியுள்புக்
காறுமுகப்பிள்ளைதனையங்கரனைப்பணிந்துவடிவுடையெம்மன்னை
சீறடியைமுறைவணங்கிவேடரிறைவரவினைத்துஞ்செப்பிப்போற்றி. [௨௯]

பானல்விழியுமைபரவுந்திருமூலநாயகனைப்பணிந்துபோற்றி
ஞானவுருவாயுறையும்வேணுவனநாயகர்முனண்ணித்தாழ்ந்து
சேனையுடன்வேட்டிறைவந்தமையும்விண்ணப்பஞ்செய்துமீண்டு
மீனவனுமனவரதநாரநாயகரவைமுன்மேவினுறுல் [௩௰]



346

மேவியடிக்கடிபணிந்துமேனியெலாம்புளகமெழவிழிநீர்சிந்த
மூவுலகுந்தனிபுரந்தமுழுமுதலேகண்ணுதலேமூவர்கோவே
கோவியற்கைநீகொடுப்பயாம்புரிவதாதலினுற்குறுகுமின்ன
னீவிலக்கக்கடனன்றேதற்பரனேயெனவேந்தனிகழ்த்தியபின்னும். [௩௧]

கிராதகுலத்திறையொருவனவுனொடிரு ... ரொடுங்கேடிலாத
தராதலமன்னவர்களொடும்போர்க்கள ... ந்தானவன்றனைப்பெருக்குமென்பால்
விராயபடைச்சிறுமையுந்தேர்ந்தெண்ணமுற்றேன்சமர்கடந்துவிசையமெய்தப்
புராதனனேயருள்புரிவாய்வே ... புகலில்லையெனப்புகலலோடும். [௩௨]

திங்களொடுகங்கைபுனைதிருமுடியும்விழிமூன்றுஞ்சிவந்தமெய்யு
மங்கைதனின்மான்மழுவுஞ்செங்கோலுமபையமுமாயவனியீன்ற
மங்கையொருமருங்கிருப்பவ ... ச்சியங்கள்பலமுழங்கமருங்குசூழ்ந்து
புங்கவர்கடொழுதேத்தப்பூதகணப்பெருந்தானைப்புணரிசூழ. (௩௩)

குவலயத்தைப்புரந்தகுலசேகரபாண்டியர்முதலாங்கொற்றமன்ன
ருவகையுடன்சாருபமெய்தியுடன்வரவிடைமீதுற்றுத்தோன்றிப்
புவிபுரந்தகழைவனத்தான்காட்சிகொடுத்தரசனுக்குப்பொருவிலாத்தன்
றிவவொளிமெய்யெழிறோக்கத்திவ்யவிழியருள்செய்துசெப்புகின்றான். (௩௪)

வருதிருலேசுரபகைஞர்தங்களைநங்கணங்களினுன்மடியச்செய்து
தருதும்கன்முகத்தனிகம்புடைசூழத்தலைவனொடுஞ்சார்திநீயென்
றருள்புரிந்துவீரபத்ரன்றுர்க்கைபிட்டாபுரத்தியிந்தவகிலம்போற்றும்
பொருசினவேல்வயவீரசாத்தனிவர்நால்வரையும்பொருந்தநோக்கி [௩௫]

வென்றிபெறுநீயிரிவனுடன்படர்ந்துமேவலரைவெகுண்டுசூழ்ந்து
கொன்றிடுமின்மேலுமிவன்றனக்கொரிடர்வந்தாலுங்குறுகித்தீர்மி
னென்றுதிருவாய்மலர்ந்துகரந்துதனதெழிலுருவோடெய்திறுறு
லொன்றியுடன்வந்தவருந்தத்தமுறைவிடங்களிற்புக்குறையமன்றே. (௩௬)

மன்னவனுந்திருவருள்பெற்றுடன்மீண்டுமகிழ்வொடுந்தன்கோயில்புக்கா
னன்னதன்முன்னிகல்வேந்துநெல்வேலிமாநகரத்தருகுசார்ந்து
துன்னுகபோர்க்கென்னவொருதூதுவிட்டானவனடைந்துசொல்லக்கேட்டுத்
தன்னுடையத்தானைமுற்றும்வரமுரசமறைகவென்றான்றரணிவேந்தன். [௩௭]

வேறு.

முரசறைந்துமொழிதலும்வீரரும், புரசையானையுந்தேரும்புரவியுங்
குரைசெய்வேலையினார்த்துக்குழீஇயதா, லரசன்கோயிலின்வாயின்முன்னுகவே. ( )

வேந்துஞ்சாலிகையிட்டுவில்லங்கையி, லேந்திவார்கழைப்புட்டிலிறுக்கியே
நாந்தகம்புடைகட்டிநறைமலர்ப், பூந்துணர்த்தும்பைமாலைபுனைந்துடன். (௩௯)

புயங்கபூடணனைப்புகழ்ந்துற்றொளி, தயங்குவென்றித்தமணியத்தேரிவர்ந்
தியங்கலிப்பக்கவரியிரட்டுற, வயங்கொள்சேனைப்புணரிமருங்குற. (௪௰)

மீனகேதனமேயங்கியிருந்துற, மானவெல்லிக்கவிலைகையாக்குமுத்
தானைமன்னவன்றனைமாதர்கள்பின்னுற, வேலையுக்கரத்திக்கல்முனைவிழுமன். சஉ

துறவுசேனைத்தலைவருமாலகளி, குறுகேருமனமர்சசெடுவுறு
மேறுதேரினரொக்கியவில்லினர், மாறன்றனவலமுதுறமுன்னலைஞர் (சங)

பாண்டில்பெரியரவையினூர்த்தன, சீண்டவானகிரைந்தவரிபால்
மூண்டபோர்க்குமுனிதரசேசாடிவா, நீண்டநானியிருமுகத்தாரணியே. (சச)

மதிகுலத்திறைமாக்கடற்றுனையோ, டெதிர்முனை யெதிரவாவெதிர்காங்கிய
பதிபொலன்கழல்வேடர்க்கரசனும், முதற்கடப்பனிலெவரமுனையாடுதுவலாக

சிந்தமாகதியோங்கிநாக்கடல், வந்தெதிர்த்தெனவாறனைவைத்தா
டந்தவேடர்க்கரசனறன்குயிலயு, மூந்துகேகர்கதுகல்லெய்யமுயனநடு. (சசு)

வேலும்வாளும்விசுமுட்கவிழுர், நூலமன்னவர்தவாகனைவன்
பாதுமும்படைமன்னர்பருந்வேல், குலசேகரமாறனைவநாசெடிபட்டவே. (சஎ)

சிறிவிட்டபடைக்கலத்தெளையுன், மாறியுற்றவரகியுரேவுறா
மீறுமின்புயவிருமலையமும், மீறடைத்தனகாலருபாருமே. (சஅ)

வழுதிசேனையமாற்றலருற்றடர்க், செழுகிவில்வேலவினிவர்செவினமுந்துமெய்
கழுவிற்றண்டிவிம்சாதிப்புடைத்திடக், குழுவிரேகிமடிந்தனசேகாடியே. (சகூ)

மீனகேதனானவன்வென்றியந், சேனைவீரருநினைலியோர்த்திர்
சோலையென்னச்சொரிகளையானவன், சேனைசெடிவிங்கமுறுகளைத்தத

பின்னுநேதிக்குசேகரன்மிதிரத், துன்னுசேதையர்படைக்கலத்தைண்டியே
பன்மியேசாதிபன்மராட்டியன், மன்னுபர்த்தலவேர்தன்மகுதர்கொன். (ருய)

சோரநாதன்கேசாதிபன்றன்னவர், போரின்மிக்கபுனிதசேகாதிபன்
பெருமான்றசீசன்குலத்தக, ஞருமங்கரைபட்டனசாலிமோர். [ருக]

மருவுசெம்பொன்மணிமுடிசென்னியும், விரிபுமார்பழுந்திதாலும்வெவ்வேறுதாய்க்
குருதிசோரத்துணித்துயிர்சுற்றுமவன், பருகல்வினைபாண்டியமன்னன்படியே. (ருஉ)

வேறு.

தங்கள்படைப்பிகமடியுந்தன்மையவன்பெமாற்றரசர்சலத்தியென்னப்
பொங்கியிருனாற்றிசையும்போக்குறுகையைவிலாங்கடபருங்குதேருக்
குங்கமதகரிபரியும்வட்டணைவிட்டபடைகிருந்தநீதித்
திங்கள்குலத்திறையவன்றன்சேனைதனையார்தடர்ந்துகொடுத்தாரன்றே. [ருங]

கரிபரிதேர்சூழ்ந்துவரும்வட்டணையுட்பட்டிறந்தாங்கணன்றமிக
மெரியுமிழும்படைக்கலங்கள்பட்டுடலந்துண்டமுற்றேநந்தறத்துக்கமன்னி
வெரிதரும்போதுவாவிறந்துசேனைமடிந்தனபுவியிற்னைச்சேருன
மருவலர்தோள்புடைத்துவெற்றிவால்வளையுமுழக்கிமகிழ்ந்தார்த்தப்பினனும். ()



கன்னியெயினெல்லைநகர்மருங்கினுள்ளபதிகடொறுங்கனன்றுபுக்குப்
பொன்னுமணியுங்கலையுஞ்சூறைகொண்டரவர்செயலைப்பொருந்திநோக்கி
மன்னுமதிகுலத்திறையுந்தன்செயல்வேறின்றிமுக்கண்வரதன்செய்கை
யெனனைகொலொவெனநினைந்தனஞ்சலையஞ்சலையெனவந்திண்டியார்த்தார். (ருரு)

குமரிமுதற்காஞ்சிவரைத்தென்வடன்மேற்றிசைபொதியங்குணக்குச்சேது
வமையுமிதினளவுமொன்னார்சேனைவெள்ளநிறைந்ததனலணிகத்தோடு
மமதிறைவன்விடுப்பவருந்திறற்பினர்நாற்றிசைமுகத்தாரென்டியெனன்னார்
சமரணியைவென்றிதொறுகந்துணறியவளைத்திகலவிளைத்தார்சலத்திறேனும். (ருசு)

உடன்படரும்யோகினிவெள்ளத்துடன்பிட்டாபுரத்தியுருத்துச்சென்று
வடதிசையிற்காஞ்சிபுரத்துக்கெதிர்ந்தவாளாலுஞ்சூலத்தாலுங்
கடகரியுங்கந்துகமுங்காவலருங்காலாளுங்களத்தில்வீழ்ந்து
படரடைந்துபதைத்திறக்கத்துணித்தவர்கடலையினைப்பந்தாடிவந்தாள். (ருஎ)

சீற்றமுடன்கீழ்த்திசையிற்சேனையுடனுநெதிர்ந்துதிறல்கூர்சாத்தன்
கூற்றுமுட்கவார்ப்பெடுத்துக்கரும்பனையொன்றினைப்பிடுங்கிக்கொண்டுசுற்றி
மாற்றரசர்முடிநெரித்துத்தலைபிளக்கமூளைபொங்கமார்புகீறத்
தோற்றுதடந்தேரினணிதுண்டமுறவாசியினைதுடித்துத்துஞ்ச. (ருஅ)

குன்றனையவேழமினைகுருதிகக்கியலறிவிழுந்துறுரும்வீரர்
துன்றுடலஞ்சின்னபின்னமுற்றிறக்கவெடுத்தறைந்துதொடர்ந்துசென்றுன்
மன்றன்மலர்லங்கல்புனைவயவீரசாத்தனுக்குமலிழ்ச்சிகூர
வன்றுமுதற்பனைவீரனெனும்பெயருண்டாகியதாலகிலத்தின்னும். (ருகூ)

மருவுதிறல்வீரபத்ரர்தேரேறிப்பூதவெள்ளமருங்குசூழப்
புனையாறுமேற்றிசைப்பொதியத்துழ்ந்தெதிர்ந்துவிற்குனித்துப்பொழிந்தவாளி
கரியினிரைபலகோடிபரியினிரைபலகோடிசவனவாசி
யிரதநிரைபலகோடிதுணிபடுத்துமுகங்கடொறுமீண்டிற்றன்றே. (சுய)

குடைதுணிக்கும்மார்த்தவெற்றிக்கொடிதுணிக்கும்பகைஞரிகல்குறித்துவீசும்
படைதுணிக்குமெய்யணிகள்புலதுணிக்குங்கரந்துணிக்கும்படர்ந்துசெல்லு
மடிதுணிக்குமுடிதுணிக்குந்தாள்துணிக்குநாத்துணிக்குமாசுவாலி
யுடறுணிக்கும்வீரபத்ரப்பெருந்திறலோன்சுஞ்சிலையினுந்தும்வாளி. (சுக)

ஈட்டுபுகழ்வீரபத்ரரிவ்வாறுசமர்விளைத்தாரொழில்கூர்துர்க்கை
நாட்டமுடன்றென்றிசையிற்பூதினிகள்புடைதழுவநண்ணிநேர்ந்து
வாட்டிறலாற்கரிபரியைத்தடந்தேரைவயவர்கடற்குழுவைமன்னிப்
பாட்டளிசூழ்மலரலங்கற்பகைவேந்தர்தமைத்துணித்துப்படர்ந்தாளன்றே. (சுஉ)

வேறு.

அண்டவுதரனசோதரன்றன்முகனையனவிமாவிபுகழ்
கொண்டராவணதியெக்யசோடின்மிருகோதரன்சோதி

பொண்டார்மிருக்கிமின்முதலாயுளாக்குழும்பகைமன்னவர்கள்பலர்
நிண்டொட்சாத்தர்பனைமரத்தினடிபட்டுயிர்போயுடல்சிதைந்தார். (சுஉ)

காகபாதன்சுருமாகன்சன்மசத்ருப்புருகேச
னுகமாலிபொன்னவத்தனைகையில்பிரமசத்துருமா
மோகன்காளுசுரன்முதலாய்மொழியுமிகன்மன்னவர்பரனை
மாகம்புகழ்பிட்டாபுரத்திவாளாலெறிந்தாருயிர்தொலைத்தாள். (சுங)

வித்துச்கேசன்புணபயிழியன்மேகன்கேசன்கோகன்னன்
ரத்தகேசான்றார்த்தையிட்டனகையில்காலமர்த்தனன்வர
ளொத்தவெய்ற்றுப்பிரமர்தன்முதலாமுரவோர்பலரிலவின்
மூத்திமுதல்வன்வீரபத்ரன்கணையான்முடியற்றுபிருலத்தார். (சுச)

உருத்துவசன்கலிப்பிரியனுயர்தோட்சருவபட்சணன்வாட்
டருமப்பகைவத்திராசன்சாற்றுந்தம்புராட்சதன்ரூம்
பருதிப்பகைமிந்திரபகைஞன்சுபட்சணனேபணிவத்ரன்
கரியராகாந்தகன்தெற்பகசனன்வீர்யபட்சணனே. (சுரு)

மண்டுரினத்துப்பெலாந்தகனேமுதலாமிகன்மன்னவர்தமையு
மெண்டிக்கிலேயுங்கடந்துவெற்றியெய்தமறிவீரனறனையுத்
துண்டப்படசேமிப்படையாற்றுணித்தாருயிர்கூற்றனவருளி
யண்டமுகடுவெடிபடநின்றார்த்தாளாற்றதுடைத்தும்கை. (சுசு)

பாறுதொடர்வேலொருபதினுயிரவக்குரோணிப்பதாதியையு
மீறுதவஞ்செய்தயனுதவவேண்டுவரம்பெற்றமரவரையுஞ்
சீறிவென்றவிருதரையுந்திண்டோளவுணர்குழுவினையு
மேறுதடக்தோரசரையுமிவ்வாறெதிர்ந்துதணித்தனரால். (சுஎ)

பேரண்டங்களலைத்துமலைபிடுங்கியெறியுங்கொடுஞ்சூறை
யோரண்டத்தின்குழல்புகிலஃதொன்றேனுமிருக்கவற்றோ
காருண்டிலங்குங்காந்தாத்தான்கணங்காடர்ப்பக்கனன்றெடுத்து
போருண்டெனப்போந்துடும்பகைஞரொருவரின்றிப்போன்றினரால். (சுஅ)

குருதிசதிகடலாத்தெழுந்தகுறிவியலைகுழுமியில
விரியத்தலையுண்டிருந்தனவட்டிடைந்தழுகுங்காநக்கொடியுஞ்
சொரிசெம்புனன்மல்வழிந்திழியத்துள்ளிக்கூத்திரணடித்து
மருவிவிகற்தொடவோங்கிவளர்ந்தனர்தம்பிணமலையே. (சுகூ)

எமக்குமிடரின்றொழிந்ததெனவியம்பிமலர்மாரியும்பொழிந்தே
யுமக்குற்றதுயாதிர்த்தனவோவென்றம்பர்விளவமுனிவரொல்லா
நமக்கென்றினிமேலிலையிடும்பையென்னாவின்றார்தாளிலத்தோர்
தமக்குமலக்கணொழிந்ததெனத்தம்மிற்புகன்றமகிழ்ந்திறந்தார். (எ0)

வேந்தர்பரவுங்குலேசாறுமேவுமணித்தேர்விட்டிறங்கிப்
போந்துவீரபத்திரரைப்புகழ்சேர்துற்காதேவியையும் (எக)

368



யாந்தள்புனையுங்காளியையும்பனைவீரனையும்பணிந்துதுதித்
தேந்துமலரிட்டரிச்சித்தானிறைவன்றனைப்பார்த்தவரிசைப்பார். (எஉ)

வழுதியுற்றமாற்றரசர்மடிந்தாரின்னுமிகல்வருமேற்
பழுதுபடயாமுற்றடுதும்பார்காத்திருந்துவாழியென்று
தழுவுமிகலிலிறந்தவவன்றுணைபினைழக்கவுரங்கொடுத்துக்
குழுவினொடுந்தாம்படர்ந்துதத்தங்கோயில்புகுந்துவீற்றிருந்தார். (எங)

அவர்கள்வரத்தாலுய்ந்தெழுந்தவ்வணிகமார்த்துற்றுடன்படரக்
கவிகைவயங்கத்தேரேறிக்கழுமாநகரிஞடுபுகுந்
தெவருமிறைஞ்சும்வேணுவனத்தெங்கோன்றனைப்பணிந்தேத்தி
யுவகையுடன்றன்கோயிற்புக்குறைந்தான்வழுதிபுவிபுரந்தான். (எச)

இன்னவாறும்வேணுவனத்தெங்கோன்வழுதிதனக்கிரங்கித்
துன்னுபகைதீர்த்தருளியதென்றெடுத்துச்சூதனுரைசெய்தா
னன்னகதைகேட்டிறும்பூதுற்றமலன்கருணைத்திறத்தையுளத்
துன்னிக்கனிந்துகுதுகுலிப்புற்றுவந்தார்முனிவர்யாவருமே. (எரு)

வேறு.

இக்கதையைப்படித்தவருங்கேட்டவருமுவகையுடனெழுதினோருந்
தொக்கமரப்புவிபுரந்துதலங்குமெழின்மடந்தையருந்துரிசில்கேள்வி
மக்களும்பெற்றசமகிழ்ந்துவாழ்ந்திருந்துமாயவன்றன்முன்புநண்ணிச்
சக்கரமன்றளித்தசதாசிவனருளாற்சாருவர்சாருபமன்றே. (எசு)

குலசேகரபாண்டியச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்-ருதுஅஅ

## உருத்திரகோடிச்சருக்கம்.

சீதமதிபுனைவேணிச்சிவனுறையுநெல்வேலி
யோதுமுருத்திரகோடித்தலமெனவுமுரைசெய்தீர்
மேதகுமக்காதையினைவிரித்துரைக்கவேண்டுமெனச்
சூதமுனிமனமகிழ்ந்துசுருதிமுனிவரர்க்குரைப்பான். (க)

அளவில்புவனங்கள்பலவண்டகோடிகளனைத்துங்
கிளருமனவலியவுணர்கேடுவிளைத்திடும்வினைவா
துளமருண்டாருயிர்களெல்லாமொருங்குமடிந்தோயும்வகை
வளமருவுதிருக்கயிலைவரதன்மனத்திடையெண்ணி. (உ)

ஆருயிர்களுய்ந்திடவுமவுணரெல்லாமடிந்திடவு
மோருலவுந்தம்முமெய்யிலிருந்துமுருத்திரர்கோடி
யோர்களுடன்வரநினைந்தானுற்றதிறலுடையவர்கள்
சேருமுருவொடுவலியுஞ்செய்கையுநாஞ்செப்புவமால். (ங)

349.



மேனிநிறங்கைபுயங்கள் விழிகளொளிர்முகமுதலா
மானவுருவத்தனையுமமலனையொத்தெய்தின்றாற்
றேனலர்பொற்கொன்றைபுனைசென்னியர்செஞ்சடைமுடியார்
மான்மழுவைத்தரித்திலகுமணிக்கரங்களுடையார். (௪)

கன்னவனைக்குறையர்கறைக்கண்டர்விழிமூன்றுடையார்
மன்னுபுரத்திரியர்தலைமாலையர்முந்நூன்மார்பர்
பொன்னுடையம்பலியுடையார்பொங்கரவப்போர்வையினர்
பன்னகமெய்ப்பணியர்திசைப்பால்புனைவெண்ணீற்றுடையார். (௫)

தாங்குபிண்டிவேல்கணிச்சிசக்கரவெம்படையுடையா
ரோங்கியமுத்தலைச்சூலமொளிர்வாள்கப்பணமுடையார்
வாங்குசரம்வில்லுடையார்மாருதத்தின்கதியுடையார்
பாங்குயர்மேருவைப்பதிக்கும்பாணியர்வெஞ்சினமுடையார். (௬)

படமருடைச்சேடனுறுபார்பொறைப்பகம்பேர்ப்பார்
நெடியமுனிதுலக்கைவுகண்டதிருமெய்யுடையா
ரடியிலெறிலிந்திரலானிலகரவக்கத்தகுடையா
ரடலின்மிகுதிறலுடையாரகமகிழுங்களிப்புடையார். (௭)

கூறுமிந்தவுருத்திரர்கள்கோடியருங்கருணையொடு
நீறுபுனைமேனியனைநிர்க்குணனைநித்தியனை
யேறுடையபெம்மானைவிறைவனைப்பொங்கோமானை
யாறணியுஞ்சடையானையடிவணங்கியெதிர்நின்றார். (௮)

நின்றவுருத்திரர்கடமைநிமலனருளொடுநோக்கி
வன்றிறலால்வானவரைமாதவரைமிகவருத்த
மொன் [illegible] னவலியவுணர்குலங்களொடுமுயிர்தொலைத்தே
யின்றுபலவண்டமெல்லாங்காத்திடுமினெனச்சொன்னான். (௯)

அய்யனுரைப்படியந்தவுருத்திரர்களனைவோரும்
வெய்யதிறபுகல்வலொடும்விறலவுணர்தமைத்தேடியவான்
வையகமும்வானகமுமாதிரமும்பாதலமுஞ்
சையமுறும்இடமெங்குந்தாகூடிச்சென்றனரால். (௰)

செல்கோடியுருத்திரருஞ்சென்றவிசைதொடருஞ்செறிந்தே
யல்கோடியெழுந்தெனுயார்த்தெழுந்தவவுணர்முன
மெல்கோடியுதையம்போலெதிர்ந்தவர்கடமைக்கொன்று
பல்கோடியண்டமெலாம்புரந்திருந்தார்பலகற்பம். (௰௧)

வேறு.

ஆயகாலையிற்கடல்கடைந்தாரமுததனை
மேயதேவருக்கீந்திடவிமலனதருளான்
மாயனுன்முகனிந்திரன்முதலியவரோடு
நேயமத்தெனமந்தரகிரியினையெடுத்தார். (௰௨)



பிடுங்குமக்கிரித்துவாரத்தின்வழியதாய்ப்பிலத்தி
னிடங்கண்மேவியதானவரெண்ணிலரெழுந்தார்
மடங்கலேறனூர்மடித்தபேழ்வாயினர்வதனந்
தடங்கைநாட்டங்கடாண்முடிபற்பலதழைத்தோர். (௰௩)

பொருப்பினோடொருபொருப்பினைப்பொடிபடப்புடைப்பார்
பெருத்தவண்டங்கள்யாவையுங்கரங்கொடுபெயர்ப்பார்
வரைபயினுழ்கடலேழும்வாய்மடுத்துநீள்வடவை
நெருப்பையுமுயிர்த்திடுநெடுமூக்கினுலவிப்பார். (௰௪)

விரைவினிற்கடையுகத்தழல்விழிகொடுவிளைப்பார்
சரியெனத்திரிகிரிக்கிரிகரத்திடைதரிப்பார்
கருதுமக்கடலிக்கடலுடைத்தலைகலப்பார்
மருவுமைக்கடன்மழைத்திரள்குழைத்தனவனப்பார். [௰௫]

கைகளாற்புடைத்தோரொழுகாசினிபிளப்பார்
செய்யதிக்கிடைமதக்கிரியெடுத்திதழ்செறிப்பார்
வெய்யுவன்றன்னைச்சக்கரமென்னவேகிரிப்பார்
துய்யதாரகைக்குலங்களைத்தொட்டுதிர்த்திடுவார். (௰௬)

கலங்களாய்ப்பிலநகரத்தைக்கவினறப்புனைவார்
துலங்குமேழுயர்பொழில்களையிணர்த்தொடைதொடுப்பார்
பொலங்கொளண்டிசையிறைவர்தம்வாழ்வும்போக்கிடுவா
ரலங்குமாயவனுன்முகனுலகமுமழிப்பார். [௰௭]

இன்னதாந்திறலவுணர்களெருங்கினரொங்கு
மன்னதன்மைமாலயன்முதலண்டருமறிந்தே
துன்னுமற்றிவர்நமையெலாந்தொலைப்பரெனநஞ்சி
மன்னுபேரொளிக்கயிலையங்கிரியைவந்தடைந்தார். [௰௮]

வந்துமாலயன்விண்ணவர்வாயின்முன்னின்று
நந்திதாள்பணிந்தெந்தையேநந்திநாயகனே
யந்திவண்ணன்பால்விடுத்திநீயென்றவனருளாற்
சிந்தையன்பொடுகருணைநாயகன்முனஞ்சென்றார். (௰௯)

நீதியோடடிபணிந்தனர்சூழ்ந்தனர்நிமலன்
சோதிநாயகனெதிர்நின்றுதோத்திரம்புகல்வார்
மாதுபாகனேவாதனேமான்மழுக்கரத்தாய்
சீதமாமதிபுனைந்தருள்சிவபெருமானே. (௨௰)

சூலமங்கையேற்றரித்திடுதூயசெஞ்சடையோ
நீலகண்டனேநித்தனேநீறணிபரனே

பாலலோசனனே மறைபகர்ந்தபண்ணவனே
காலகாலனே கதிதருகயிலைநாயகனே. (உக)

இன்னவாறுநற்றுதிபலசொல்லிநின்றிசைப்பார்
மன்னுமாக்கடல்சூழ்ந்தநீர்வையகமெங்குந்
துன்னியார்ந்தனரவுணர்கடொலைவிலாவலியோ
ரன்னவர்தமக்கஞ்சிநின்னையையமென்றடைந்தோம். (உஉ)

பொருவிலாத்திறலவுணர்தம்வலியைநீபோக்கி
யருள்செய்யாயெனிலண்டங்கள்யாவுமேயழியு
மருவலார்புரமெரித்தெமைக்காத்தவானவனே
கருணைநாதனேயெனமுறையிட்டனர்கலுழ்ந்தார். (உங)

அஞ்சலீரெனவவரவர்க்கருள்செய்தேயமல
னெஞ்சகத்திடையுருத்திரர்தமையெலாநினைந்தா
னஞ்சமென்றலந்துருத்திரர்கோடியர்தாமு
மஞ்சனக்கறைக்கண்டனைமலரடிபணிந்தார். (உச)

இருமருங்கினுநின்றனரிருகரங்கூப்பி
யொருவிருப்பொடுதொழுதனரொம்பெருமானே
கருதிநாதனேயெமையெலாம்படைத்தநாயகனே
கருதியெங்களைநினைத்திடுங்கருமமேதென்றார். (உரு)

நம்பனுங்கவர்க்கருள்செய்துநலம்பெறநல்வா
னும்பர்தம்மொடுமுலகெலாநலிவுசெய்தொறுக்கு
வெம்புதானவர்தமைக்கொல்வீரெனவிடைகொடுத்தா
னம்பலக்குடிபொன்னடியிணைதொழுதசென்றாரால். (உசா)

வேறு.

கண்டகருறைந்தபதிகான்வரைகளெங்குங்
கொண்டசினமோடுருத்ரகோடியரும்வந்தே
புண்டரிகமுன்னருறுபுண்டரிகமென்ன
வண்டமும்வெடிப்பவெகுண்டார்த்தவர்முனின்றார். (உஎ)

நின்றிடுமுருத்திரர்களென்னுநெறியோரைக்
கன்றிடுமனத்தவுணர்கண்டனர்களன்றார்
சென்றிடுமின்சென்றிடுமின்சென்றவரையெல்லாங்
கொன்றிடுமின்கொன்றிடுமினென்பர்கொலைவல்லோர். (உஅ)

சிங்கமெனவார்ப்பர்சிலர்சீறுவர்சினப்பார்
மங்குலெனவந்தெதிர்வர்வாயிதழ்மடிப்பார்
சங்கினைமுழக்கிடுவர்தாவுவர்குதிப்பார்
செங்கையொடுசெங்கைகள்புடைப்பர்நகைசெய்வார். (உகூ)

35



ஆயிரகரங்களொடுமாயிரம்வெற்பேந்தி
மேயவருருத்திரதமீதினெறிவாருந்
தூயபலதண்டலைகள்சூழுமரமெல்லாங்
கொயரிவிழித்தருவர்சீறியெறிவாரும். (ஙo)

கையுறுகணிச்சிசிலர்காதியெறிவாருஞ்
செய்யநெடுவேல்கள்சிலர்சீறியெறிவாரு
மய்யநெடுநாணிடுசராசனம்வளைத்தே
வெய்யகணைமாரிசிலர்வீசிவிடுவாரும். (ஙக)

சக்கரமுசுண்டியொடுதண்டுகரவாள
முக்குடுமிவேல்கள்சிலர்மோதியெறிவாரு
மிக்ககழுமுட்படைகள்வீசிவிடுவாரு
முக்கிரநெடுங்கணையமோங்கியெறிவாரும். (ஙஉ)

வானதிரமண்ணதிரமாருதநடுங்கத்
தானவரிவ்வாறுபுரிதன்மையதுகண்டார்
மேன்மையருருத்திரர்வெகுண்டுநகைசெய்தார்
மானவரிவெஞ்சிலையெடுத்தனர்வளைத்தார். (ஙங)

கோடியருருத்திரர்பல்கோடிகணைவிட்டார்
நீடவுணர்முன்னர்விடுநீண்மலையறுத்தார்
தோடலர்மரங்கள்பலதூள்படவறுத்தார்
நாடிவருமம்புசிலைநாணொடுமறுத்தார். (ஙச)

விட்டபடைதப்பணம்வைவேலொடுமறுத்தார்
தொட்டபடைசக்கரங்கள்சூலமொடறுத்தார்
வட்டமொடுதண்டுகரவாளமதறுத்தா
ரொட்டலர்நெடும்படைகளொக்கவேயறுத்தார். (ஙரு)

திண்டிறலுருத்திரரரன்சேவடிநினைந்தார்
கண்டகர்குழும்பியகடற்படைதொலைப்பா
னெண்டிசைகுலுங்கவுலகெங்கணுநடுங்கக்
கொண்டசிலைநாணொலிகள்கொண்டுகணைபெய்தார். (ஙசா)

வெய்யகொடியோரவுணர்மீதுபடுதோறுங்
கைகளறுவாருமிருகால்களறுவாரு
மையுமிழ்கண்களொடுநாசியறுவாருஞ்
செய்யதிருதோள்கள்செவிசிரங்களறுவாரும். (ஙஎ)

உடல்களறுவாருமுடலூடுசொரியுண்ட
குடல்களறுவாருமுதுகோடியர்கிரீடம்
முடிகளறுவாருநிறைபிச்சமறுவாரு
மடலவுணரிவ்வகைபல்கோடியரழிந்தார். (ஙஅ)

கண்டகரிறந்துடல்கழிந்தசளமெல்லாங்
கொண்டகுருதிப்புணரிகோடியிணைக்குப்பைப்
விண்டனபல்கோடிவிறன்மேவிங்கவந்த
மண்டுபலபேய்களொடுமாடுவனமாதோ. (௩௯)

பருந்துகாடங்கழுகுபக்கரிநிழல்
பொருந்துபிணமீதுபலபூதமொடுபேய்க
ளிருந்துதசைமாந்திடவிருடியொடுகூகை
யருந்துவனபாடுவனவாடுவனவெங்கும். (௪௰)

மொய்த்தமர்புரிந்திடுபறந்தலையின்முன்ன
ரித்தகையதாயவுணர்யாவருமிறந்தா
ரத்தனுமைபாகனெனதய்யனடிக்கன்பு
வைத்திடுமுருத்திரர்கள்வகைபுனைந்தாரால். (௪௧)

ஆனகம்படகமாதிதுந்துமிகளார்த்தே
வானவர்மகிழ்ந்தமலர்மாரிகள்பொழிந்தார்
மேன்மைமுனிவோர்துதிவிளம்பினர்களார்த்த
ரோலையுலகோருமிடர்நீங்கினர்களித்தார். (௪௨)

செய்தவமிருந்தகுவர்சியகணைத்தவர்க்குக்
கைதவமியற்றியேகணைத்தொடும்படிந்தா
ரய்யனடியார்தமக்கருந்துயர்விளைப்போர்
வெய்யநரகத்திடைவீழ்வரிதுமெய்யே. (௪௩)

அன்றியெதிர்வந்திடுமவுணர்தொகையாவுங்
கொன்றுவிறலோடுருத்ரர்கோடியர்களெல்லா
மொன்றுமவரைத்தெறுமுயிர்க்கொலைபொருளாய்ச்
சென்றுபரன்மேவியதிருக்கயிலைசேர்ந்தார். (௪௪)

வந்தரனடித்துணைவணங்கினர்களெந்தா
யக்கவலைவுணருனதருளினிலிறந்தார்
புந்தியுறுதீவினைகள்புரிதகுவரோனு
முந்தனிவர்நல்வரமுடித்தவர்களன்றே (௪௫)

எவ்வுயிர்களோனுமதிரத்தெறுகின்றோவா
வெவ்வினைகண்மூடிவிடுமிக்குயர்தவத்தோ
ரவ்வுயிர்களொந்திடுமெளப்பரியதீமைக்
குய்வகைகள்யாதவையுணர்த்தெனவுரைத்தார். (௪௬)

ஆங்கவருரைத்ததுமெனய்யனிவைசொல்வா
னோங்குமறையோர்முனிவரும்பர்தமக்காகத்
தீங்கொருவற்கெய்திலதுதீங்கலதேயாகு
நீங்கினிவைக்கஞ்சிலெமருச்சனையினிங்கும். (௪௭)

351



வேறு.

என்றிவைதானுமைபாகன்மொழியக்கேட்டங்கெதிர்நின்றவுருத்திரர்களியம்புவா
ர்க, கொன்றைபுனைவேணியனே கயிலைவாழுங்குழகனே கோதிலாக்குணத்தினனே
நன்றாகப்புகன்றபடிபூசைசெய்யகானிலத்திலுனக்குவந்ததலமுரைத்தி (௪௮)
யான்றுமனத்தன்புமெமக்கருள்வாயென்னவும்பர்நாயகனமலனுரைசெய்வானு

ம்புவியிலகேசதலமெமக்குண்டேனுமதிற்சிறந்ததலமறுபத்தெட்டதான
ம்பதியிலுயர்ந்ததலந்திருநெல்வேலிநகர்பொதியவரைதனக்குக்கீழ்பாலாகும்
பம்புதிரைப்பொருநைநதிதனக்குமேல்பாற்பழமறைகள்பணிவனமாம்பதியுமாகு
மும்பர்புகழ்தாருகாவனந்தெவாஞ்சியுயர்பிரமவிருத்தபுரமெனவுமாகும். (௪௯)

பிரளயவுற்பத்திச்சேத்திரமாகும்பிரமபுரஞ்சருவசித்தபுரமுமாகு
மருவுபுண்டரீகபுரமாகும்வன்னிவனமாகும்பொற்காஞ்சிவனமுமாகுங்
கருதுமிச்சக்கணகாசிகருமச்சேத்ரங்காமக்கோட்டம்மிடபதலமுமாகும்
பொருவில்பரம்பரஞ்சூழையாகுமிக்கபூலோககயிலாயமதுவேயாமால். (௫௰)

இத்தலத்திலெல்லைகணாற்றிசையுமைந்தியோசனைசூழிடம்பொருந்தியிருப்பதாகு
மத்தலத்திலெய்தியெம்மையருச்சிப்போருமாதிலிங்கமூலலிங்கமாகுமெம்மைப் மு
பத்தியொடுந்தெரிசிப்போர்பணிவோர்தாமும் பரிவினொடுமப்பதியிலிருப்போர்தா
த்தமூந்தான்சிந்துபூந்துறையினிலியமமாமாய்ப்படிவோருமுத்திசேர்வார். [௫௧]

காவினுக்குளுயர்கடவுட்காவைப்போலுங்கதிரினுக்குளுயர்கதிவெய்யோனைப்போ
லுங்கோவினுக்குட்சுரர்கோனைப்போலுநன்னீர்க்குழுவினுக்குள்வாசநீர்க்கங்கை
போலும், பூவினுக்குளுயர்குவளைபோலுங்குன்றிற் பொலிந்திடுபொற்குன்றமே
போலுமிக்க, தேவருக்குளெமைப்போலுந்தலங்கட்கெல்லாந்திருநெல்வேலித்தல
மேசிறந்ததாமால். [௫௨]

மன்னுமந்தவேணுவனப்பதியின்முன்னாளும்வந்துமாலயன்விண்ணோர்நாகர்சித்தர்
துன்னியெங்குறிகப்பொருந்தவிலிங்கம்வைத்தே தூயவருச்சனைபுரிந்துவரங்கள்
பெற்று, நன்னதாலப்பதிதானிலிங்காகாரபுரமெனவுமறைவரந்தப்பதியினெங்
புனையிம்மைப்பூசைசெய்வீரென்றுரைத்தனுருத்திரகோடியர்தொழுதேயுவந்துபோ
னார். (௫௩)

அன்றுமுழக்குந்துமிபேரியால்வாடித்துயருழந்ததாய்மருங்குறாவிடுமாபோ
லொன்றுந்திபெறவுதித்தோர்விழைவுற்றுங்களுவப்பிலொடுமெல்வதுபோன்முன்பு
கேட்ட, நன்யதருமடையாமுளைத்தோர்ந்துகலம்பெருகுநெல்வேலிநகரைநோ
க்கித், தென்றிசையிலுள்ளவெதலங்களெல்லாஞ்சேவைசெய்தேமகிழ்வினொடுசெ
ல்கின்றாரால். (௫௪)

எய்துவருமுருத்திரர்தாங்கோடியோருமிறையவர்திருநெல்வேலிநகரினைந்துதூ
துய்யதிருக்கோபுரத்தின்மீதுதோன்றுந்தூயவிளைத்தாரத்தே தெரியக்கண்டார்
கைமுகிழ்த்தார்சேவைசெய்தார்தொழுதேயார்த்தார்களிவினொடுதெண்டனிட்டா
ரொழுந்தார்செய்ய, மெய்ம்மயிர்கள்பொடிப்பவிருகண்ணீர்லார வேணுவனப்பதி
யையவந்தடைந்தாரால். (௫௫)

வந்தினியசிந்துபூந்துறைநீராடிமகிழ்வொடுபொற்றாமரையிற்படிந்துபோந்தே
சுந்தரஞ்சேர்வடிவுடையதாயைப்போற்றித்தூயபிரகாரங்கள்சூழ்ந்துபோற்றி
யெந்தைதிருமூலலிங்கநாதர்தம்மை யிருகண்ணீர்சொரிதரநின்றிறைஞ்சிப்போற்
றிச், சிந்தைமகிழ்ந்தாதிலிங்கமுன்னரெய்திச்செய்யமலர்த்தாள்பணிந்துதொழுதுப்
போற்றி. (௫௬)

அனவரததானநாயகரைப்போற்றியமலர்சபாபதிநிருத்தனாயப்போற்றிக்
கனிமொழியார்தாருகாவனத்துமாதர்கற்பழித்தசங்காளக்கோலம்போற்றிப்
புனிதவடிவேன்முருகனடியைப்போற்றிப்பொல்லாதபிள்ளைபதம்புகழ்ந்துபோற்றி
யினிதிலெழுந்தாம்ரசபைதொழுதுபோற்றி யிறைவர்திருச்சன்னிதியின்முன்னர்வந்
தார். (௫௭)

வேறு.

அன்னவேலைபரனைநெல்லையமலனையரனையிந்தி
வண்ணனையவுணர்க்கொனறவன்பழிவருத்தநீங்க
வெண்ணிநீர்மொழிந்தவாறிங்கெய்துமென்முன்னேப்பூசை
பண்ணவேவிலிங்கமெங்கட்கருள்செய்வாயெனப்பகர்ந்தார். (௫௮)

மறையுணர்ந்திடுமெய்ஞ்ஞானவரம்பிகழாதமேன்மை
யறிவுமீதூரமேவுமானந்தக்கண்ணீர்வார
நெறியொடுமெதிரேநின்றவுருத்திரர்காணநெல்லை
யிறைவனார்கோடிலிங்கருபமாயிருந்தார்தாமே. (௫௯)

கண்டனர்வியந்தாருள்ளங்களிந்தனர்புளகமெய்யிற்
கொண்டனர்கோடிலிங்கங்குழுமியகோயின்மேவி
யெண்டிசையிடமுஞ்சென்றேயெனக்குனக்கென்றேதா
னண்டரும்வியப்பருத்ரரவரவரொவ்வோர்லிங்கம். (௬௰)

நாடிமுன்னிருப்பார்நெல்லைநாதனையருச்சிப்பார்க
டேடிமுன்னிருப்பார்நெல்லைச்சிவன்றனையருச்சிப்பார்க
ணேடிமுன்னிருப்பார்நெல்லைநிமலனையருச்சிப்பார்கள்
கோடிலிங்கமுமிவ்வாறுகோடிருத்திரரர்ச்சிப்பார். (௬௧)

கறந்தபாறயிர்நெய்யெண்ணேகரும்படுபாகுசெந்தே
னறந்திடுவிதியினூற்றுலவிடேகமடைவாய்ச்செய்தா
ருறைந்திடுலிங்கமெல்லாமொருவர்போற்கோடியோருஞ்
சிறந்திடுபூசைசெய்தார்தேமலர்தெரிந்தர்ச்சிப்பார். (௬௨)

எண்விகைமலர்செங்கையினேந்தியின்றருச்சிப்பார்கள்
பண்ணுயத்திகளுள்ளம்பழுத்துநின்றருச்சிப்பார்கள்
கண்ணினீர்சொரியச்சூழ்வார்களிவொடுமிறைஞ்சுவார்க
ளுண்ணிறைஞானபோதமுணர்ந்துதற்றுதிசெய்வாரால். (௬௩)

252



துன்னகத்தெழுதற்போதந்தனைப்பரபோதமாக
மன்னுமெய்ச்சிவயோகத்தின்மகத்துவபெருமையோர்க்குத்
துன்னிநீர்முகில்கணிக்குந்தூயவானகம்போற்சூழ்ந்த
வன்னபொய்ம்மாயைபோக்கியானந்தமருள்வாய்போற்றி. (௬௪)

வானிருநிலநீர்தேயுவாயுவைம்பூதமாகி
யானபல்லுயிர்வருக்கமாயதற்கயனுமாகி
யூனுமாயுணர்வுமாகியுவப்பினைந்தொழில்செய்விக்குங்
கோனுமாய்நிறைந்துநின்றகுணப்பெருங்குன்றேபோற்றி. (௬௫)

ஆயபல்லண்டமெல்லாமகண்டபேரொளியேபோற்றி
யேயபிண்டங்கள்யாவுமிருந்திராய்பெயர்ந்தாய்போற்றி
மேயவண்டத்திலுள்ளசராசரமனைத்துமேவுந்
தூயபுண்டரிகத்தோடுதோன்றியுந்தோன்றாய்போற்றி. (௬௬)

கோதறுதுதிகள்கூறிக்கோடிருத்திரருஞ்சொல்வா
ராதியேயுனதுபெருமம்பிகைவடிவாள்பெருந்
தீதிலிப்பதியின்பெருஞ்சிந்துபூந்துறையின்பெரு
மோதிடவெண்டுமாருமுருத்திரகோடியென்றே. (௬௭)

காசிகேதாரஞ்சோணசைலங்கழுக்குன்றங்காஞ்சி
மாசில்காளத்திகாழியம்பலமதுரையாரூர்
பேசுமித்தலங்கடாமுன்னங்கமாய்ப்பிறைக்கோடீரத்
தீசனேதிருநெல்வேலியிதையமாயிருக்கவேண்டும். (௬௮)

என்றிவைபுகன்றோர்யாருமிருவிழிவிழித்தேயாங்கு
நின்றிவாவியம்போனிற்பார்சிலர்கால்புகாததானந்
தொன்றியதீபம்போலவுணர்வொடுமசைவார்கேடுந்
துன்றுமாக்கமுமொன்றாகத்துயதம்முளத்துக்காண்பார். (௬௯)

வீடுபேறன்றிப்பின்னைவேறொன்றுமச்சில்லாதார்
நாடினார்சிலர்கள்யோகநாடினார்சிலர்கண்ஞானந்
தேடினார்தேடிக்காணச்சிவானந்தத்தெளிவைக்கண்டா
ரோடினாரோடியொன்றுமிரண்டுமங்கற்றேயுற்றார். (௭௰)

குழுமியிவ்வாறுநின்றவுருத்திரகோடியோர்தம்
விழுமியசெய்கைநாடிவேறுவேறருட்கணோக்கி
மழுமறிதரித்தசெங்கைவரதனெல்வேலிநாதன்
பழமறைபரவுமெங்கோன்பரஞ்சோதிவடிவாய்நின்றான். (௭௧)

விண்ணகமொடுங்கச்சூழ்ந்தவியனுலகொடுங்குமீதே
யெண்ணருஞ்சோதியோங்கியெழுந்தபேரொளியினூடே
புண்ணிறைவிருப்பினோடுமுருத்திரர்கோடியோரும்
பண்ணவனெல்லைவாழும்பரமன்பொன்னடியைச்சேர்ந்தார். (௭௨)

யாழுடன்முகனேயாதிவானவர்பலருமார்த்தார்
அயவரொவருமார்த்தார்சூழ்ந்தகிம்புருடரார்த்தார்
மேயநன்முனிவர்காகர்வரிபுவனத்தோர்யாரு
நாயகனெல்லைவாழுநம்பனைத்துதித்தேயார்த்தார். (௭௨)

பெருமைசேருருத்ரகோடியோர்பேறுபெற்றதாலித்
திருநெல்வேலிக்குருத்ரகோடியாந்திருப்பேராகும்
பரிவொடுருத்ரகோடிப்பெயரினைப்பகர்வோர்தாமே
யிருவினைமுழுதுநீங்கியின்பவீடெய்துவாரால். (௭௩)

இந்தவாறரும்ருத்ரகோடியோரொவருமெய்தி
நந்தலில்பேறுபெற்றாலந்தருகதையாமென்றே
யந்தணரெலருங்கேட்பவகமகிழ்ந்துரைத்தேசூதன்
சுந்தரத்திருநெல்வேலிக்கதையின்னுஞ்சொல்வதானான். (௭௪)

உருத்திரகோடிச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௫௬௯

---

## இபபுரிச்சருக்கம்

சீரணிசெஞ்சடைமவுலிசிறந்தமறைவேதியரோசேண்மின்செய்ய
வாரணவேதியன்பதுமகற்பமாங்காலம்வெள்ளையானைசெல்லப்
பூரணனையருச்சித்துப்புரந்தான்கூறியசாபப்புகைவனீக்கு
மோர்பெறுநற்கதைசொல்வேனென்றினியசூதமுனியியம்புவானால். (௧)

சங்கநிதிபதுமநிதிசுரபிசிந்தாமணியைந்தருவெண்மைமத்
துங்கமதகரிவயிரப்படையிலகுபொன்னுரிமனைப்பொற்கோட்டு
மங்கையயிராணியின்பஞ்சதவேள்விதருபதமும்வாய்ந்தநாளும்
பொங்குவளமிலையாவும்புரந்துபுகழ்சிறந்திடுபொலனகர்வாழ்வேந்தன். (௨)

ஆயிரங்கண்ணுடையமாபதியார்பவைகண்டேயதிலிலோக
மேயவெவற்றினிலுமிந்தரபோகமல்லாற்பிறவிலையைதெய்வஞ்சேர்
மேயவயிராபதம்வாகனமாகப்புடைவாமேவமேகயாத்தோல்க
சாய்மனாதான்விசுவரமகமேருபதமகனைச்சார்ந்துவைகி. (௩)

சித்தமூர்த்தான்கயிலாயநெடுங்கிரியிற்சென்றங்கிமலைமங்கை
புத்திநுழிபுனைவேணிப்புனிதனையன்பாய்ப்பணிந்துபுகழ்ந்துபோந்தே
தந்தைமொழிமடவார்களாடலிசைப்பாடல்களுந்தயவாய்நோக்கிச்
சித்தமகிழ்ந்திவ்வாறுதினமுமின்பந்தெவிட்டிமிகச்சிறக்குநாளில். (௪)

மதிநுதலாளயிராணியினைமாலத்தார்வழுமனத்தனுகி
யல்விரகத்துயராற்றுநைந்துமுலைமுகத்தினமுகமமுந்தச்சேர்த்து



முதிர்காமவேட்கையினுலிரவுபகற்றெரியாமன்மயங்கிநாளுந்
கந்திலகுமணிமுடியான்வானவர்க்கிவ்வாறுகளிக்குங்காலை. (௫)

ஆடுதிறலுற்கோட்டயிராபதமமுதக்கவளங்கள்ளிப்பிறவே
படமதமாரிகள்பொழிந்துபலைக்காத்தாற்பருப்பதங்கள்பலவும்போக்கி
வடமேருப்பசமகன்னுபெரும்பனைசூழ்தருக்களைந்துமருவுசாரற்
றடமிழிந்துமேதினியிற்றண்காவின்மீதுதனித்தங்கிற்றன்றே. (௬)

ஆங்குயர்மால்வனாசாரலதினருவிப்புனலாடியநேகம்வேழந்
தாங்குகாப்பிடிகளொடுஞ்சோலைசெறிதருநிழலைச்சூழ்ந்துவாய்ந்த
தேங்கமழ்செந்தளிர்சாகமருந்திநெடுக்குன்றெனவேதிரண்டுநிற்ப
தோங்குமயிராபதங்கண்டுளமகிழ்ந்துபெருவிருப்போடுவந்தங்கேகி. (௭)

வேறு.

நதிர்கின்றபிடியிலொன்றைத்தொடர்ந்துகாடிலகுகோட்டயிராபதந்தானுள்ளத், தந்திரகத்தான்மயக்கிமருவிவானத் தகிரிடியோன்முழங்கிமிகவதிர்ந்தேயார்த்து, விதிவசத்தாலிதையமொன்றாயிணங்கிமேவி விருப்பமுறுகாமத்தின்வேட்கையாலே, புதியநலச்சலராசிபெருகிப்பொங்கப் புணர்ந்துகாலிலைசெய்துபொருந்திற்றுமால். [௮]

இன்னவகைமயங்கிமடப்பிடியினொடுமிணங்கிமிருகாமத்தினிச்சையாகிப், பொன்னுலகுதனைமறந்துபோதம்போக்கிப் பூர்தருவினிழன்மறந்துபுனிதநீங்கித், தன்னுடையபெயர்மறந்துபரவைசூழ்ந்ததாரணியுற்சடம்பொழிலுமறவாதென்று, நன்வலஞ்சேர்வாழ்விதுவாமெனவேயெண்ணிநான்மருப்புமும்மதமாயக்குநாளில். (௯)

மிக்கதெய்வத்திறமேவுபுழைக்கையானைவெண்மைநிறந்திகழ்மேனிபொருந்தியின்பந், தொக்கமடப்பிடியினொடுமுருகித்தோய்ந்துதொடர்காலவியற்கையினைப்பொய்யென்றெண்ணித், தக்கபெரும்பதியிலுள்ளோர்கழாவண்ணந்தண்கமலாசனவேதன்விதியினாலே, மைக்கருமெய்த்தமரம்வேழமெல்லாம் வதனத்திற்புகர்மல்கவழங்கினுனல். [௰]

உற்றிடுமித்திறமன்றிவேதன்செய்தநாசெய்வோ மொண்புவியையாளுஞ்செங்கோற், கொற்றவர்தங்குலமதனின்மவுலிக்கேய்ந்த குமரர்பலராய்மருவிற்கயமதோன்ற, வெற்றிமலர்த்தொடைபுனைந்துபொற்கண்கட்டிவிடுத்திடுதல்கடனுகுங்கொணர்ந்தோர்தம்மைப். பற்றியரியணைமீதிலிருத்திமிக்கயார்புரத்தனன்றெனவேபகர்ந்தானந்நாள். (௧௧)

தீயசெயல்வலியவுணர்குழுக்கொண்டேகித் தேவர்கடம்பதமெல்லாஞ்சிதைவுசெய்யுநா, நாயகன்றேருளங்கவலுற்றமரர்வேந்தற் கபையமென்றுபகரவிடுமாங்கோர்தேவன், நாயவிமானத்தைவானெறியிற்றூண்டிச்செற்றகணப்போதினிற்கோநகரினெய்தி, யோவிலாதேயோலமோலமென்றேயுரைத்தவுயர்மொழியினுமுற்றுனன்றே. [௧௨]

பொருவிலெழிலையிராவிபோகம்வேட்டுப் புணர்முகிலைமவிருப்பமும் பொருந்தச் சேர்ந்தவுருவுமின்மைமோகவாரிதியிற்றோன்மையக்குமிவைமயோர்வேகத்திகால வார்த்தை, யிருசெவியினுடிபுகப்பலவர்க்கியிலருமணிமடைமுகப்பெய்தியவ னுன், கருதியுரைசெய்தமுறையர்க்குக்கேட்டுக் கண்டகர்தருசெயலினைக்குகன ன்றுசொல்வான். [௧௬]

தருவவொறும்பொல்லாததருகனுணர்தருநாட்டினைமையர்சம்பதங்களெல்லா, மி கவுமழித்தாக்குறையும்விண்ணோர்தம்மைவெருவல்செய்தாராகமழுகிறனன்றமப் பலகதொலையமிகுத்தகெய்வப்படைகளொடும் பண்டுபோற் சென்றுபோர் புரிவ னென்னத், திகழுமநாற்கோட்டவிராபதமாத்தனைச் சிக்கிரமாய்க் கொணர்மி னென்றுசெப்பினுனல். (௧௭]

என்னதுமகெதிர்நின்றதேவராக்தவியமத்தையாங்கடானெனிகளாக, மன்னவனே யிக்குநிற்பக்காறேமென்றூர்வானவர்கோன்முனிவுகொண்டமனத்தனுகி, யங்கி லைமஞ்சனசாலையடைந்துபோந்தேயானதொருதியானமண்டபத்துவைய்திச், சு னுபுலனைந்தடக்கிச்சிந்தையூடுதானுயகோர்மெய்ஞ்ஞானநிலையிற்றோன்வான்.)

வாய்ந்தபங்கையாசனத்திருந்தவாயு வைப்பூரகரும்பகஞ் செலுத்திநோக்க, மெய்ந்தருணிநாசியில்வைத் தநிலைச் சாக்கத்திருத்தி யடம்புறந்சமமதாகப் பா ர்த்தா, ஞயர்சவுணர்வொழிந்தவிராபதமாலாயம்புயிற்லிசரமாமடன் தன்னி ற், மேருய்சதமடப்பிடியிநெருங்கலந்துமேவித்தொக்கபெருங்காதலொடிசைந்திரியக் கண்டான். (௧௮)

கண்டவு-ஞயிரமங்கண்ணிறுவெவன்றகழற்புகையெழுவேகமுயிற்றன், கொ ண்டுவாயிதழதுக்கிமேதினியினைகிழலையுவெநிமாவேண்டமெமக்கெனவை மவ முத்தப், பண்டிசெயும்பணிமுதன்னனெறுவையகற்றிப்பரிசடையுமுனையவ ப் பரிபுனதென்றெண்ணி, யெவடிசையுமிசைமுழங்குமெயினாய்பாகுணியா வதெனச்சாபித்தாருல். (௧௭)

வேறு.

இந்திரன்மொழிந்தசாபமேயானமுதலாய்வெள்ளைத்
தந்திமும்மதத்திருர்ப்புர்தகைமையுங்கொற்றந்தாறு
நந்திமெய்நடுங்கித்தாகசோகமுகயர்ந்துமேனி
சுந்தரமிழந்துபாரிற்றுயரொடுந்திரிந்ததன்றே. [௧௮

இன்னதோர்தன்மையாகியிணங்கியபிடியைநீங்கித்
தன்னுடனுந்துசோருஞ்சலித்திடுந்தயங்குந்தேம்பு
நன்மைசேர்பதங்களின்றிநாடொறுநலிந்தேயிந்தக்
கன்மபூமியிலோவிற்பேனென்றுளங்கலுழ்ந்தேங்கும். (௧௯)

செறிவளவிலங்கிறேன்றுந்திரிவதாவிதியோவென்று
முறுதுயராற்றற்கார்கொலுதவிசெய்திடுவாரென்று
மறிவிலாதமரர்கோன்றனருளின்றிப்பிழைத்தேனென்று
மிறையவனுளமர்றெந்நாளினிப்பெறுவேனென்றும். (௨௦)



இந்தவாறெண்ணியெண்ணிப்பவாசிரங்கும்வேளை
டந்தரநாதர்க்கின்பமானகந்திருவனுரு
மெந்தலோகமும்போய்மீள்வானிருநிலப்பரப்பும்வாய்ந்த
மந்தமாருதமார்சாரல்வளமும்பார்த்தெதிரேவந்தான். ௨௧

ஆங்கெதிராகவேவந்தடைந்தநந்திருவன்றன்பாற்
பாங்குறவாவிரேறுபகட்டரசேகின்றே
யேங்கிமெய்வாடிச்சோரவிருகணீர்சொரியவுள்ளந்
தாங்கியதுயரமெல்லாந்தாழ்விலாதுரைத்ததன்றே. (௨௨]

அதிசமாந்துயரமெல்லாமலக்கணுற்றுரைப்பக்கேட்ட
முதியகந்திருவனானைமுகத்தினைவிரும்பிநோக்கி
மதியிலாய்முன்னம்வானநாட்டினிடந்தவாய்மைப்
புறமைநீயறியாய்போலுமெ மன்றவைபுகல்வதானுன். (௨௩)

தானவர்வுநமுன்றுட்டருநாட்டையழித்தவாறும்
வானவரொல்லாமெய்திமகபதிக்குரைத்தவாறு
மானதாருண்ணைத்தேம்மாசி லுக்கங்குநின்றே
ரேனையவ்வானையிங்கேயில்லையென்றுரைத்தவாறும். [௨௪)

அந்தரநாதன்ஞானவறிவினுலுணர்ந்தவாறு
மிந்தமேதினியிலெய்தி நிற்பதையுளத்திலோர்ந்தே
யுந்தியமுனிவராற்றிபுடனங்குச்சபித்தவாறும்
வந்தகந்திருவன்கூறிவானிடைமறைந்துபோனுன். (௨௫]

இன்னவாறியம்பக்கேட்டவிபவாசிரங்கிமாழ்கி
யங்கிலைதரையில்வீழ்ந்தங்காற்றுமச்சமையத்தன்னிற்
பன்னகப்பணியான்வாழும்பதிபலதொழுதேயானை
முன்னுறமகவிளைதாரதமுனிவன்வந்தான். (௨௬)

முதிரறிவுடையவிளைமுனிவனைக்கண்டுபோற்றி
யிதயமொரந்தருநிவெள்ளைமயபமெதிரின றஞ்சிதிற்பக்
கருமொளிபிறங்கும்வெள்ளிக்கயிலையைநிகர்கைம்மாவே
மறாவாரமுந்தம்போலவாய்மலர்ந்தஞ்சலென்றே. ௨௭]

பன்னகப்பணியிஞர்க்குப்பண்ணிசைபமுதகானங்
கன்னமதாரப்பாடுங்கடவுண்மாமுனிவனுள்ளத்
துன்னுமெய்ஞ்ஞானபோதத்துணர்ந்துநான்மருப்புவேழ
மன்னுசாபத்தைநீக்கும்வகைநினைந்துரைப்பதானுன். [௨௮)

வேறு.

இலகுநாற்கோட்டவிராபதமேகேட்டியிந்தமேதினியினுற்றிசையின்மிக்காம், பல னுதவுதென்றிசையின்மீறுசிவாலயங்கள்பலவுளவாமதிற்சிறந்ததெல்லுரூருந், த லமதனிலுண்மைதருமறுபத்தாறு தானதில்வேட்டவையுதவுந்தலைமீரொட்டாங், குலவுமதிலெட்டுமிகுபாவம்போக்குங்கூறுமிதிலைந்துமுத்திகொடுக்குந்தாமே. ௨௯

பொருள்விளங்குநாதமுமதன்மேன்மைதானும்புகலுவோர்திருவாரூர்பிறக்கமுத்தி யருள்பெருகுதில்லைதெரிசிக்கமுத்தியாகுமருணசலந்தானினைக்கமுத்தி மருவுதிருக்காசிதனிலிறக்கமுத்திமலையமலைக்கிழ்பாலாநதிருநெல்வேலி கருதுமிந்நாலுவகைக்குமுத்திநல்குங்கண்ணுதலோனிணையிறுமெய்யதாமே. ௩௰

இத்தகையதலமகிமைசொல்வோங்கேளாயிமையவெர்பிலுமையவளைவேட்டகாளி ற், கொத்திதழிபுனைவேணிக்குழகனூர்தான்குறுமுனிக்குவந்தமணக்கோலங்காட்டு மத்தகையபதியாகுமமரரெல்லாமன்பினொடுதாருவாய்நின்றுதாரும், பத்தியொடு பூசைசெய்துமுத்திபெற்றபதியாரும்பராசத்திபதமாமால். (௩௧

அன்னதலமாமதனின்முன்னோர்காலமமையுருவாய்நின்றுபலவேதமெல்லா முன்னியேசிவபூசைசெய்துநித்யமாயிருப்பதால்வேணுவனமுமாகு [ ] அன்னமெத்தத்தலத்திலெய்தித்தருமதேவன்றுயவனைப்பூசைசெய்துதொழுதுபோ யெங்கிலும்புகழ்நிடவேயிடபமாகியிருப்பதாலிடபதலமென்றும்போம். ௩௨

பேசுமிந்தத்தலமதனிற்பிறந்தோர்வீந்தோர்பேதுறுவெங்காமத்தால்வழிபோமாற் ரு, னேசவளமுறுதொழில்செய்வாவிறல்வாணிபத்திலத்தாலிப்பிறந்திவினவே டபா, லாசையொடும்வந்தடைந்தோர்நெல்லையென்றேயகத்தினிடையினைத்தி வோர்காண்போர்கேட்போர், வாசமாயினிதிருப்போரொருநாளேனும்வைகினோர் சிவனிணைமுத்திசேர்வார். ௩௩

சித்திமுத்திகொடுப்பதந்தத்தலம்போல்வேறுசிவத்தலங்களில்லையென்றேவிளைநா தன், மத்தகமால்யானைதனக்குரைத்தேவெள்ளைவாரணமேயுமந்தத்தலத்திலெய் தி, வித்தகமாந்திருமூலலிங்கமென்றும் வேணுவனலிங்கமென்றும்விளங்கிநிற்பா ன்றுமத்தகையவிரண்டிலிங்கந்தனையும்பூசித்தன்புடனேபம்மலயாலருச்சித்தே த்தி. ௩௪

இந்தவாறெங்கோனைப்பூசித்தாயேலிபவேந்தேயிந்திரன்முன்விட்டசாப, நீந்தை பேய்முன்போலுன்னிலைமைசேர்வாய்நிச்சயமாமென்றுமொழிந்தருளினான் தந்தியாழ்வல்லவன்பொன்னடியைப்போற்றித்தாழ்ந்திறைஞ்சிக்கடைகொண்டுதவ ளமேனிச், சிந்தாமுமகமகிழ்ந்துவிடைபெற்றுத்தன்றிசையைநோக்கிப்புடைசென றதாமால். ௩௫

பொன்னின்மகமேருவடிச்சாரலிக்கப்பூதலத்திற்பொருந்துபலபதிகளிங்கி மன்னுபலநதியொடுகானயாறுநீங்கிவானுயர்தண்டலைகானம்பலவுநீங்கித் துன்னுவனாபலநீங்கிச்சுரங்கணீங்கித்தூயமலர்வாவிபலசூழுவாய்ந்து [மால்] சென்னெல்வளர்மருதநிலஞ்சிறந்தேயோங்குந்திருநெல்வேலிப்பதியைச் சேர்ந்ததா

வந்திருச்சன்னிதியின்முன்புநின்றுவரதனடித்தாமரையைவணங்கிவாழ்த்திச் சிந்தைமகிழ்வொடுஞ்சென்றுபொருநைமேவிச் சிந்துபூந்துறையினிலீராடிப்போந் தேகந்தமலர்திகழ்பொற்றாமரையின்மூழ்கிக்கார்நிமலியிருசரணக்கமலம்போற்றி யெண்ணிதிருக்கோயில்வலஞ்சூழ்ந்துசென்றேயென்னையாளுடையநந்திபாதம்போ ற்றி. (௩௭)



சென்றுடனுட்பிரகாரஞ்சூழ்ந்துபோற்றித்திருமூலநாயகர்சன்னிதியினெய்தி, யின் றுபரவசமடைந்துசெம்பொற்பாத நினைந்துருகிப்புழைக்காத்தாற்றொழுதுபோற் றிக், கொன்றைபுனைவேணியனைநுதற்கண்ணோனைகுழகனைபுரமெரித்தகோவே யென்றே, யொன்றுமனத்தன்பினொடுபுகன்றுபோற்றியும்பர்தொழும்வேய்முத்தர் முன்னரெய்தி. (௩௮)

உங்கினுமுறைபணிந்துதொழுதுசூழ்வந்தரகராவேணுவனத்தமலாவென்றே, பங் கையனுநெடுமாலுந்தேடிக்காணுப்பதாம்புயத்தையுளநினைந்துபரவிப்போற்றி, கங் கையணிசடையானைமுக்கணானைக்காமனைமுன்னெரித்தானைக்கனகமேருச், செங் கையிலேந்திப்புரங்கள்வென்றதேவைச்செழுஞ்சடைமகிழ்வினொடுந்தெரிசித்தே த்தி. (௩௯)

அமலர்நடராசரடிக்கமலம்போற்றியனவரததானநாயகனைப்போற்றிச், சமர்வடி வேன்முருகன்பொல்லாதபிள்ளைதனைப்போற்றித்தாம்ரசபைதனையும்போற்றிக், க மலமலர்பூத்தகழைவனத்தைப்போற்றிக் களிவினொடுபிரகாரஞ்சூழ்ந்தானு, யி மைபவர்போற்றுந்திருச்சன்னிதியினெய்தியிடபதேவனைப்பணிந்தங்கியல்பாய்நி ன்றே. ௪௰

வந்தாம்பிச்சாபமறுதிரவெங்கோன்மலரடியையருச்சிப்பமனத்தினெண்ணிக், கந் தமலர்திகழ்மபுட்கரணிமூழ்கிக்கைநிறையப்புனன்முகந்துமலர்களேந்திச், சிந் தைமகிழ்வொடுசென்றுமூலலிங்கர்திகழ்வேணுவனலிங்கம்பாதம்போற்றிச், சுந் தரஞ்செழுந்தோதிப்புனலுமாடித்தூயமலர்த்தொடைபுனைந்துவில்வஞ்சாத்தி ௪௧

இவ்வகையையிரண்டிலிங்கந்தனையும்பூசித்தினியகனிவைவேத்தியமியல்பாயேற்றி மன்றுவிமுறைபூசைவழுவாதாற்றிமலரடியைப்போற்றிமுறைபலகாற்சூழ்ந்து அன்றுபுறைக்கமதனும்பெருமூதேதின்றுஆயவிருதாண்மடித்துவணங்கிவாழ்த்தி பன்னிரண்டாண்டிவ்வாறுபூசைசெய்யும்பரிவினுன்மூலலிங்கத்துநாதன். (௪௨)

வார்சடையுமானனமும்விழிகண்மூன்றும்வயங்குதிருக்கரநான்குமழுவுமானுங் கார்விடமநிலருகறைக்களமுநாககங்கணமும்புலியுடையுங்கமலத்தாளுந், சூரிய ராயிரகோடிபுகையம்போலச்சோதிவடிவுந்துலங்கவடிவாளோடும், பாரிடங்கள் புடைசூழவிடைமேற்றோன்றிப்பரிவுடையவெள்ளானைமுன்புபோந்தான். ௪௩)

வென்னையாளுடையானைநெல்லைவாழுமிறையவனைவெள்ளையியமெதிரேகண்டு, மன் னுபரவசமடைந்துகுழைந்துமேனிமயிர்பொடிப்பப்பலகாலுஞ்சூழ்ந்துபோற்றி, யி னைவிருந்சடையானேகருணையானேவிமலனேவேய்முத்தேவிண்ணோர்கோவே பொன்னிதழிபுனைவோனேயென்னையாளும்புண்ணியனேயெனவணங்கிப்புனிதன் [௪௪]
சொல்வான்.

கன்றுனதுபூசையென்றேயுனக்குவேண்டுநலம்பெருகுவரமொன்றேதனவில்வாயென ஞர், தன்றிருமலரடிபணிந்துவெள்ளையானைதூயவனேமகபதிசொல்சாபநீக்கி, யெ ன்றுமுன்சேவடியிலன்புதரவும்வேண்டு மென்னலுமவ்வரமருளிச் செய்தேயெங் ன்றுமுன்சேவடியிலன்புதரவும்வேண்டு மென்னலுமவ்வரமருளிச் செய்தேயெங் கோ, னென்றுமனத்தன்புறுமெய்ஞ்ஞானபோத ருளத்துறைவோன்மூலலிங்கத் [௪௫]
துட்போந்தான்.

ஆங்கமலன்மறைந்தபின்னர்வெள்ளையானையாலயத்தைவலமாகச் சூழ்ந்துபோற்றி, பாங்குடனேமுன்புபோலிருந்தம்பூசைபண்ணியேபரிவுநீமகிழ்ந்தோர்நாட் டேங்கமழ்பொற்கொன்றைபுனைநெல்லைநாதர்திருவுளமிரங்கியதிசயமதாக,வோ ங்குநாறகோட்டவிராபகத்தின்செய்தியும்பர்கோமானுணர்ந்திடுமாரத்தனரால்.

வேறு.

அதிசயமிகழ்த்தலோடுமமரர்கோனஞ்சுடர்மாணிக்கக்
கதிரொளிவிமானமூர்த்திகளுழவணைந்துசூழ்நெல்வேலிப்
பதியில்வந்தனைந்துமுக்கட்பரமனாலயத்தைமேவி
மதியணிபுவன்முன்வெள்ளைவாரணநிற்பக்கண்டான். (௪எ)

கருதிவானவர்கோனுள்ளங்களிப்புறமகிழ்ந்துநோக்கி
யருகுறச்சென்றுவெள்ளையானைமத்தகத்தைத்தீண்டிப்
பரிவுறகீவிமுன்னுட்சாபமுமொழியப்பார்த்தப
பொருவின்மெய்வரங்கள்பின்னுந்தந்தனமென்றபோதில். [௪அ]

புழைக்கைமாக்களிறுவானப்புரந்தரனடியிற்றாழ்ந்து
தழைத்தபேரன்பினோடிந்தனைநீர்நிற்பநோக்கிக்
குழைத்தபொற்சிலையானெல்லைக்குழகனையருச்சித்தேத்தித்
தொழத்தகவுடையோயென்னைச்சோதிபால்விடுத்தியென்றான். (௪௯)

இயம்புமவ்வார்த்தைகேட்டேயிமையவர்கோனவ்வெள்ளைக்
கயர்தகவாய்க்கொண்டேகினங்கள்செய்தடையுதிங்கி
வியந்தாசனனிதமுன்னுய்ப்பவிமுறையருச்சித்தேத்தி
நயந்தடிவணங்கிநின்றுதுதிபலநவிலலுற்றான். (௫௰)

விதியொடுநெடியமாலும்விளம்புதற்கரியாய்போற்றி
பதியிணிலுயர்ந்தநெல்லைப்பதியுறைபரனேபோற்றி
மதிநுதலுமைச்செவ்வாய்வடிவொருபாகாபோற்றி
சுதிமுறைவிரும்பித்தாம்ரசபைநடம்புரிந்தாய்போற்றி. (௫௧)

பொருவிறந்தவமெய்ஞ்ஞானப்போதகப்பொருளேபோற்றி
மருவுமைம்புலனும்வென்றோர்மனத்துறைவரதாபோற்றி
கருதிமாதவர்கள்போற்றுங்கருணைநாயகனேபோற்றி
திருமலாபுரமுன்றெய்தநெல்லைநாயகனேபோற்றி. (௫௨)

இன்னணந்துதியாலேத்தியிறைஞ்சிநெஞ்சுருகும்வேலை
மன்னுவாசவனேவெள்ளைவாரணத்தோடுநீயும்
பொன்னுலகணைந்துவாழ்திபோவெனவிலிங்கத்தூடு
நன்னயமதுரவாக்குநலம்பெறவெழுந்ததன்றே. (௫௩)

அருள்செயும்வாக்கைமேற்கொண்டாலயநீங்கிப்போந்து
மருவுவச்சிரத்தான்வெள்ளைவாரணமீதிலேறிப்



பெருகுபல்லியங்களார்ப்பப்பிறைநுதலரம்பைமாதர்
பொருவில்பொற்கவரிவீசப்பொன்னுலகெய்தினானால். (௫௪)

விண்டணிகுழையினானைமதிபுனைவேணியானைப்
பண்டுமாலயனுங்காணாப்புனிதனைத்துறையுந்தேவை
யண்டர்கோன்வெள்ளையானையடைந்துபூசித்தவாற்று
லெண்டிசைபுகழ்நெல்வேலிக்கிபபுரியென்றும்பேராம். [௫௫]

மாதவத்தவரோவெள்ளைவாரணம்வந்துநெல்லை
நாதனையருச்சித்தேத்திநலந்தருபேறுபெற்ற
காதையைமொழிந்தேன்மாயன்கமடமாய்ப்பூசைசெய்த
தொகுகேளென்றருகுதமுனிவரனுரைப்பதானான். (௫௬)

இபபுரிச்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௩௬௰௧

## கச்சபாலயச்சருக்கம்

கருதுகாலத்தினளவையுஞ்சட்டறவிறந்தொழிந்திடுகாலை
மருவுமாருயிரெய்ப்பினைமாற்றுவான்மனத்திடையினிதெண்ணிப்
பெருகுகங்கைபொன்னிதழிவளரவுவெண்பிறையணிசடைநாதன்
பரியுமண்டமெலாந்தொலைத்திருந்தனன்பராபரையொடுதானும். [௧]

அண்டகோடிகளழியினுமழிவிலதாந்திருநெல்வேலி
பண்டுதோன்றியதலமதின்மூலமாகியதனிப்பரமானுக்
கொண்டகாரணப்பகுதியாம்யாவைக்குங்குறியுடையிலையாகுந்
தண்டமாமெனத்தகுதியதாயுறைதருமதுசகத்சாரம். (௨)

அவைதிரண்டொருதிவ்வியவிலிங்கமதானதங்கிநுவேதான்
சிவன்புரியுமைசெதாழிலிலுமைபதெனச்செப்புவர்சிறந்தோர்க
ணவமதன்றிதுபுராணபுராணமாம்புனிதநான்முனிவோர்க
டவமிகுந்தமெய்யோகிகளருள்பெறத்தருவரதமதாமால். (௩)

மலரயன்முனமிவ்விலிங்கத்தினைமகிழ்வொடுமருச்சித்தே
யிலகுபொன்னடிபணிந்திடநெல்லைவாழிறையவனினிதோடு
முலகம்யாவையும்படைத்திடுதொழிலையுமுதவிநல்வரமீந்து
நலமிகுந்தபொற்காத்திரன்மணிமுடிநன்குடன்புனைந்திட்டான். (௪)

இன்னதன்றியுநீவெள்ளைவாரணத்தின்மேலிருந்தான்வருபோதிற்
றுன்னுமாதவத்தோன்றுருவாசனாந்துாயநன்முனிபோந்தே
மன்னுபைந்துழாய்மாலையையுதவிடமலர்க்கையங்குசத்தேந்தி
நன்னர்வெண்கரிமத்தகநாப்பணின்றிடமீதுவைத்தான். (௫)

வேறு.

பங்கணுய்ந்தமாலிகையிலைவாங்கியப்பகடு
பங்கமுற்றிடக்கால்கொடுதைகைப்பதுபார்த்தே
பொங்குவெஞ்சினமுனிபுரந்தரன்றிருவெல்லாந்
தங்குவெண்டிரைவேலையில்வீழ்கெனச்சபித்தான். (௬)

அந்தவாறுதானிந்திரதிருவெலாமான்றே
யுந்துநீர்க்கடல்வீழ்தலுமும்பருமெல்லாம்
வந்துபாற்கடல்கடைந்தெடுப்போமெனமகிழ்ந்து
முந்தமர்திரம்பிடிங்கினர்கடன்முகட்டுய்த்தார். (௭)

பொருவில்வாசுகியைக்கயிறாகவேபூட்டி
யிருபுறத்தினுமமரருமவுணருமீண்டி
மருவுபாற்கடலொலிபுயாடுமறுகிடவலியாத்
திரியவாங்கலிற்சாய்ந்ததுநெடுமுடிச்சிகரம். (௮)

பாதலத்திடைவீழ்ந்தமந்தரப்பருப்பதத்தை
மீதெடுப்பதெம்மான்முடியாதெனவிளம்பி
மாதவத்தினர்தானவர்வானவரெவருஞ்
சீதரற்கிவைசெப்பிடுவோமெனச்சென்றார். (௯)

வந்துபொன்னடிபணிந்தனர்மலர்க்கரங்கூப்பி
யெந்தையேயெனத்தொழுதனரேத்தினர்துதிப்பார்
நந்தனிந்தசெங்கரத்தனேநளினமாதுறையுஞ்
சுந்தரந்திகழ்மார்பனேசருகிராயகனே. (௰)

நெடுநிலத்தைநீயோர்பதந்தினுலளந்தனைநீண்ட
வடிவெடுத்தனையுலகெலாம்பார்த்தனையணைந்து
மடியருக்கின்பவாழ்வுதானளித்தனையையா
விடரினெய்தினோமெங்களுக்கருள்செய்வாயென்றார். (௰௧)

வந்தகாரியமேதெனமாயவன்கேட்ப
விந்திராதிபர்கடந்திடுசெய்தியதெல்லா
நந்திடாதுரைசெய்தலுநாகநாட்டவரோ
சிந்தையஞ்சலீர்துயர்தீர்க்குவமென்றே. (௰௨)

அருள்சுரந்துமாயவனெழுந்தமரர்கள்சூழக்
கருடன்மீதினிலேறியேசென்றுபாற்கடலின்
மருவியாங்கதுகண்டுபுள்வாகனநீங்கி
யிருநிலம்புகழ்சமடமதாமுருவெடுத்தான. (௰௩)

கொண்டகூர்மமெய்யிலக்கம்போசனையிடங்கொண்டு
வெண்டிரைக்கடற்படிந்துவீழ்மந்திரமெழுப்பித்
திண்டிறற்பெருமுதுகின்மேற்றிகழுறவிருத்தக்
கண்டுதேவருமசுரருமுன்புபோற்கடைந்தார். (௰௪)



வேறு.

இன்னணங்கடைந்தகாலையெறிதிரைத்திவலைவானத்
துன்னிமீத்தெறிப்பப்பொங்கியுடைந்துபாற்கடல்சுழன்ற
தொன்னலர்புரங்கள்காய்ந்தோர்க்குரைத்திதுபுரிந்தாரில்லை
யனைதாலாலகாலவிடமுதங்கெழுந்ததன்றே. (௰௫)

நஞ்சுதானெழுந்துசீறிநாடிமுன்வருதலோடுங்
கஞ்சன்மான்முதலாயுள்ளகடவுளரதனைக்கண்டே
யஞ்சியீதெம்மையெல்லாமடுமெனவெருவியோடிச்
செஞ்சடைக்கடவுள்வாழுங்கயிலைமால்வரையைச்சேர்ந்தார். (௰௬)

வந்துதானென்னையாளும்வரதனைவணங்கிவாழ்த்தி
யெந்தையேகயிலைவாழுமிறைவனேமழுமானேந்துஞ்
சுந்தரக்கரத்தினுனேதூயனேபரனேயெங்கள்
சிந்தையாலுற்றவிந்தவருத்தநீதவிர்ப்பாயென்றார். (௰௭)

என்னலுமிறைவனுங்கட்கெய்தியதுயரேதென்னப்
பொன்னடிதொழுதுநின்றுபுகலுவாரமுதம்வேண்டி
மன்னுபாற்கடலையாங்கள்கடைந்தனமருவியாங்குத்
துன்னிவெவ்விடந்தான்முன்புதோன்றியேயெழுந்ததாமால். (௰௮)

ஆயவெவ்விடத்துக்கஞ்சியபயமென்றடைந்தோமென்னத்
தூயவன்பாங்குநின்றசுந்தரன்றனைநோக்கி
யேயநஞ்சதனையிங்கேகொணருதியென்னலோடும்
போயதுகொணரவாங்கிப்புனிதனுட்கொண்டபோதில். (௰௯)

களத்திடைநிற்பக்காளகண்டப்பேரமைந்தானையன்
வளைக்கைமான்மற்றோர்தம்மைமகிழ்வொடுநோக்கிநீங்க
ளுளத்தயவொடுமுன்போற்பாற்கடல்கடைந்திடுமென்றோதக்
குளத்தழல்விழியினுனைவிடைகொண்டுபோயினூரால். (௨௰)

வந்துபாற்கடலின்முன்போன்மாயவன்கமடமாகி
முந்துறக்கிடப்பவாமைமுதுகின்மந்தரத்தைநாட்டிச்
சுந்தரக்கயிறதாகவாசுகிவிசித்துவீக்கி
யந்தரத்தவருமற்றவவுணருங்கடைந்தகாலை. (௨௰௧)

முகடிமுன்னெழுந்தாளந்தமுகடியைவருணற்கீந்தார்
பகர்மருத்துவரைத்தேவர்பண்டிதராகவைத்தா
ரகமகிழரம்பைமாதராறுபத்தாறுகோடி
திகழுமங்கவருவானச்சிலதியராகச்செய்தார்.  (௨௰௨)

சுரையெழுந்திடலும்வானோர்கைக்கொண்டுசுரரேயானா
ரருவருப்புற்றுநீத்தவவுணருமசுரரானார்
வருமுச்சைச்சிரவமாவைமகபதிக்களித்திட்டார்கள்
திருவொடுகவுத்துவத்தைத்திருமாறன்மார்பில்வைத்தார். (௨௩)

ஐந்தருத்தேனுச்சிந்தாமணிநிதிகள்யாவும்
வந்தெழுந்திடவேயந்தவகையெல்லாமாயனோக்கி
யிந்திரன்றனக்கென்றீந்தானிமையவரெவரும்போற்றச்
சந்திரனெழுந்துவானிற்றண்கதிர்பரப்பினானால். (௨௪)

இதுவெலாம்பிறந்தபின்னரினிப்பவையெவையுமொன்று
மதிரசமதுரமிக்கவாரமுதெழுந்தகாலைத்
திதிதருமவுணர்தாமுந்தேவருமெமக்குமக்கென்
றதிரவாரிதிகள்பொங்கவுடன்றுபோர்புரியலுற்றார். (௨௫)

இவ்வகையிவர்கள்வெம்போரியற்றலுங்காப்பணெய்தித்
திவ்வியவமுதகும்பஞ்செங்கண்மாலெடுத்துக்கொண்டே
வெவ்வியதிறத்தாலின்னோர்விளிந்திடாவண்ணமாங்கு
மௌவல்வெண்ணகைவாள்வேற்கண்மோகினிவடிவுகொண்டான். (௨௬)

முருகலரறன்மென்கூந்தன்மோகினிவனப்புவாய்ந்த
வுருவொடுமாயன்கையிலுற்றவாரமுதங்கொண்டு
பரிவுறுமன்னம்போலப்பையவேநடந்தாண்மேய
செருவிடத்தவுணர்தேவர்பின்னுறச்செல்வதானார். (௨௭)

ஆங்கதுகண்டுமாயனரும்புபோன்முறுவல்காட்டத்
தாங்கியவேட்கையோடுந்தானவரானோராகி
நீங்கினர்போலநின்றார்நெடியவனவரைநோக்கிப்
பாங்கினோடினியவார்த்தைபவளவாய்திறந்துசொல்வான். (௨௮)

நீவிரின்னமுதத்தாலேநெடுங்களத்தெதிர்ந்துபோர்செய்
தாவிதானிறந்திடாமலொழிதிரோவமுதமுங்க
ளுவளிப்புறவேநாமுழல்குவோமென்றேநாக
மேவலைத்துயிலுமாயமோகினிவிளம்பிச்சென்றாள். (௨௯)

மதுரமென்மொழியைக்கேட்டவானவர்மயங்காநின்று
ராதிர்கழலவுணரெல்லாமாசைமிக்குடையராகிக்
கதிரிளமுறுவலாலுங்கலகவேல்விழியினாலு
முதிர்கனிமொழியினாலுமோகவாரிதியிலாழ்ந்தார். (௩௰)

மைக்கருங்குழலைநோக்கிமனம்புண்ணாய்மயங்குவாருந்
தக்கபொன்னுதலைப்பார்த்துத்தளர்வொடுதியங்குவாரு
மிக்கபொற்றனத்தைக்கண்டுவெதும்பியோர்ந்துருகுவாருந்
தொக்கதானவரிவ்வாறுசோர்ந்துணர்வழிந்துவீழ்ந்தார். (௩௧)



ஆயதோர்காலைவானத்தமரரையணியாய்வைத்து
மாயவனமுதந்தன்னைமகிழ்வொடுபகுந்தானன்னோர்
நேயமாயருந்துபோதினிலவொடாதவற்குநாப்ப
ணேயவாங்கிராகுவென்போனிருப்பதோர்குறிப்பாற்கண்டான். [௩௨]

கண்டுடன்சினமீக்கொண்டுகையுறுதெறுவியாலே
தண்டுழாய்மாயனன்னோன்றலையினைத்துணித்துவீழ்த்தா
னண்டர்தம்மோடுமுன்னமலைகடலமுதந்தன்னை
யுண்டவிற்றுண்டிரண்டுமுயிரினைப்பெற்றவாமால். [௩௩]

ஆனதோர்காலைமாயனருக்கனைவிதுவைநோக்கித்
தானுளம்வெகுண்டுசொல்வான்சார்ந்தவிக்கேதிராகு
வேனைமற்றுங்கடம்மையெதிருறப்பாயநீவிர்
மேன்மையதிகழ்ந்தப்போதின்மிகப்பரிவுழப்பீரென்றான். (௩௪)

அமுதமுண்டமரரெல்லாமாருயிரதனையோம்பிக்
கமையில்வெஞ்சினத்துப்பொல்லார்க்கார்நிறத்தவுணர்தம்மைச்
சமர்செய்துசெகுத்துவேலைதாழ்ந்ததந்திருவும்பெற்று
விமலமார்செம்பொனாட்டிற்பண்டுபோன்மேவினாரால். (௩௫)

வேறு.

ஈதுதானிவணிகழ்ந்தனவெறிதிரைப்பரவை
மீதுதங்கியவாமைவெண்பாற்கடன்முதலா
யோதுமேழ்கடலொன்றுபட்டோங்குநீரெழுந்தே
பூதலப்பரப்பெங்கணும்பொருந்தநின்றதுவால். [௩௬]

இலகுமேன்முதுகிலக்கம்யோசனையெழிற்கரங்கள்
குலவுமத்தொகையளவையார்குணித்திடவல்லா
ருலகிலுள்ளவாருயிரெலாநடுங்கிடவோங்கிச்
சலதியேழையுஞ்சேறெழத்தருக்கொடுகலக்கும். [௩௭]

திருந்துவேலையிற்றிமிங்கலமேமுதலாகப்
பொருந்துமீன்குலமனைத்தையும்புழையகல்வாயா
லருந்தியும்பசிதீர்ந்திலவாதலினாமை
விரிந்தபாரறச்சேறெலாநுகர்ந்துமீதுலவும். (௩௮)

ஓதவார்கடலேழுமொன்றாகவேயுடைத்துப்
போதுநீர்ப்பெரும்பெருக்கெலாம்பொருந்துசேருக்கி
மீதியங்குவதன்றியூடிலாய்மிதந்தெழும்ப
வேதமில்புவியில்லையவ்வெல்லைநீரெவையும். [௩௯]

தேங்குவெண்டிரைதிரைத்தெழுவேலையோரேழு
மோங்குகார்த்தத்திலுறும்பெருவெள்ளநீரொத்த

தாங்குநீந்திடுந்தொறுங்கிழிந்தாழிநீர்போந்தே
பாங்குமேருவைச்சூழ்ந்துமேதினியெலாம்பரக்கும். (௪௰)

இந்தவாறுணர்ந்தெரிகதிர்பரப்புவெய்யவனுஞ்
சுந்தரந்திகழ்பசுங்கதிர்த்தூயசந்திரனு
முந்துநீர்க்கடலுதித்தெழுவஞ்சினுறோங்கி
வந்திருட்பிழம்பண்டமும்வானமுமறைத்த. (௪௧)

அண்டரிவ்வகையறிந்தனர்மலரயனோடு
மெண்டிசைப்பெருந்தவர்தொழுகயிலையினெய்தி
வெண்டிரைக்கடலெழுந்தாஞ்சண்டவிண்ணவனைத்
துண்டவெண்பிறைசூடியதூயனைத்தொழுதார். (௪௨)

முகுந்தனுமையின்வடிவதுகொண்டுமுந்நீருட்
புகுந்துமந்தரமெழுப்பினன்றிரும்பியப்பொழுதிற்
சகந்தனையழித்தாருயிர்க்கிடர்செய்தானவன்ற
னகந்தைதீர்த்தெமைக்காத்தருளையயென்றடைந்தேம். (௪௩)

எங்களுக்கொருதன்பம்வந்தெய்தினுலதனை
மங்கைபாகனீயன்றியார்தீர்த்திடவல்லார்
கங்கைசூடிமுன்காத்ததுபோலின்றுங்காப்பா
யங்கைமான்மழுவேந்திமேயைபயமென்றடைந்தேம். (௪௪)

மச்சரூபமாய்மாயன்முன்வாதைசெய்காலைப்
பிச்சனேயவைதீர்த்துயிர்காத்தபெற்றியைப்போற்
கச்சமாகிவெந்துயர்செயக்கலுறுமெங்க
ளச்சந்தீர்த்தெமைக்காத்தருளையயென்றடைந்தேம். (௪௫)

இந்தவாறுநின்றிரந்திடுமிமையவர்க்கிரங்கிக்
கந்தரக்கறையெம்பிரான்கடகரிவதனக்
கைந்துகைப்பிள்ளைதன்னையங்கருணைநோக்கிப்
புந்திமிக்குளாய்தடுத்திகொணீயெனப்புகன்றான். (௪௬)

இன்னணம்புகறந்தைபாலிபமுகனுரைப்பா
னின்னருளிதுவாமெனிலெனதுநீள்புழைக்கை
யன்னதற்கிலக்காவதோவென்னலுமமலன்
புன்னகைபுரிந்தருள்செய்துபோவெனப்புகன்றான். (௪௭)

நன்றெனப்பரனடிதொழுதைங்கரநாதன்
சென்றுவாரிதியேழுமொன்றாகவேசெறிந்து
துன்றுநீரொலாந்துதிக்கையோடுறிஞ்சமந்தரநீள்
குன்றுமாமையுங்கரத்தினுட்கூடவெய்திடவால். (௪௮)

பூதலத்திடையூதினன்புனலெலாமீண்டு
சீதநீர்க்கடற்புகுந்தனசீதரவாமை



மேதினிப்புறங்கிடந்ததுவிண்ணவரெல்லா
மாதரத்தொடுகண்டுதம்மனத்துயரகன்றார். (௪௯)

நீடுபார்மிசைக்கிடந்திடுமாமையைநீண்ட
கோடுகொண்டுமெய்குலைடந்தன்முதுகினிற்குலவு
மோடுதந்தைபாலடியுறையாகவேயுய்த்தான்
மாடுநின்றயனிமையவர்வரதனைத்தொழுதார். (௫௰)

வித்தகப்பரஞ்சோதியைவேதநாயகனை
யத்தனைப்பதம்பணிந்தையநீமுன்னூடமாலைப்
பத்தியோடிந்தவாமையின்முதுகினைப்பதிய
வைத்தணிந்திடவேண்டுமென்றயன்வழுத்தினனால். (௫௧)

பரமனுங்கதையெடுத்தணிந்தான்மறைபகரும்
பிரமனோடிமையோரெலாம்பிறங்குவெண்சே
விரியவீசினரார்த்தெழுந்தேகிவிண்ணாட்டின்
மருவியாங்குமுன்போலவேமகிழ்ந்துவீற்றிருந்தார். (௫௨)

வேறு.

மற்றவண்கிடந்தவாமைமருவியமயக்கநீங்கிக்
கற்றைவார்சடையினானைக்கருத்திடைநினைந்துபோற்றிச்
சிற்றறிவுடையேன்செய்ததீவினைதீருமாறு
சொற்றிடவேண்டுமென்னத்தூயவனருள்செய்வானால். (௫௩)

மாயனேயுனக்கிங்குறறவல்வினைதீரவேண்டி
லாயநந்தலத்துக்கெல்லாமதிகமாங்காஞ்சிபோன்ற
வேய்வனஞ்சூழ்நெல்வேலிவியனகரதனின்மேவி
நீயெமைப்பூசைசெய்வாயென்றிவைநிகழ்த்தினனால். (௫௪)

கண்ணுதலிறைவன்கூறக்கமடமாமுருவினோடு
நண்ணியேதிருநெல்வேலிநகரினிலினிதுபோந்தே
விண்ணவர்பணியும்வேண்டவளர்ந்தமாலிங்கத்தோடு
புண்ணியமூலலிங்கப்புனிதனைப்புகழ்ந்துபோற்றி. (௫௫)

விதிமுறையன்பினோடுவிமலனைப்பூசைசெய்து
பதமலர்பலமுறைதுசூழ்ந்துபரவிமுனைநின்றே
மதிபுனைவேணியானேவரதனேமழுவலானே
கதிதருபரனேநெல்லைக்கடவுளேபோற்றிபோற்றி. (௫௬)

ஆலவெவ்விடத்தையுண்டங்கமரருக்கமுதையீந்த
சூலபாணியனேஞானச்சுருதிநாயகனேமேவுஞ்
சீலமாதவத்தோருள்ளத்திருக்கறவிருக்குந்தேவே
பாலலோசனனேநெல்லைப்பரமனேபோற்றிபோற்றி. (௫௭)

இன்னநற்றுதிகளெல்லாமியம்பிமாயவனுமெங்கோன்
சன்னிதிமுன்புதாழ்ந்துகரந்தலைமீதுகூப்பி

மன்னுமெய்குலுகுலிக்துமயிர்ப்புறம்பொடிப்பவார்வந்
தன்னியுட்குழைந்துகண்ணீர்சொரிந்துநெஞ்சநியுங்காலை. (௮)

கங்கைசூழ்சடையுங்காளகண்டமுங்கண்கண்மூன்றுஞ்
செங்கைமான்மழுவுமார்பிற்றிகழுமுந்நூலுந்தோணு ஞ்
பொங்குபாரிடமுஞ்சூழப்புனிதனெல்வேலிநாதன்
மங்கையோர்பாகமாகமழவிடைமீதுபோந்தான். (௯)

கண்டனன்மாயனுள்ளங்கனிந்தனன்கண்ணீர்சோரத்
தண்டமவன்பிறையினுனைச்சூழ்ந்தடிபரவிநின்று
ணண்டர்நாயகனம்மன்பர்க்கத்திகநீயுனதுபூசை
கொண்டனமுனக்குவேண்டும்வரமுண்டேற்கூறுகென்றான். (௰)

பிறையணிசடையாய்நான்செய்பிழையினைப்பொறுத்தியுன்ற
னறைமலர்க்கமலபாதநண்ணியெந்நாளுமன்பு
விறைவுறப்பேதியாதநெஞ்சமுந்தருதிமுன்போ
துறும்வல்லியனித்தியாமையுருவினைத்தவிர்த்தியின்னும். (௧௧)

இந்தநெல்வேலிகச்சபாலயமெனப்பேர்மக்கச்
சுந்தாலிங்கக்கச்சபேசுரனெனவேயோங்கச்
சிந்தையில்வேட்டவிந்தவரமெலாமருள்செய்யென்று
ணந்தணிகுழையினுனுநல்கியேமறைந்துபோனான். (௧௨)

மாயனும்வரம்பெற்றமைவடிவதுதொலைந்துமுன்போற்
பாயொளிப்பச்சைமேனியவித்திரமெய்திமேவுந்
தூயவாலயத்தைநீங்கித்துலங்குபுள்ளூர்திமேலேறி
மேயவைகுண்டந்தன்னின்மேவிவீற்றிருந்தானன்றே. (௧௩)

கானலர்துளபமாயன்கச்சபத்துருவிநோடுந்
தானினிதெய்திவெங்கோன்றனையருச்சித்தவாற்றான்
மேனிலையுணருமேலோர்மேவிவாழ்திருநெல்வேலி
மாநகர்ப்பெயருங்கச்சபாலயமாகுமாதோ. (௧௪)

அரவணைத்துயிலுமாயனவதாரந்தொறுநெல்வேலித்
திருநகர்தனிலெய்தித்திரிபுரமெரித்தமுக்கட்
பரமனையருச்சித்தேத்திவரம்பலபெற்றவாற்றான்
மருவுமப்பதிக்குவிண்டுமாபுரமெனவும்பேராம். (௧௫)

இன்னவாறுநுங்கச்சபாலயமகிமையென்றே
சொன்னமாதவத்துமிக்கசூதமாமுனியைநோக்கி
மன்னுமத்தலத்துக்காதையின்னமும்வழங்குகென்ன
வன்னாகன்முனிவர்கேட்பவகமகிழ்ந்துரைப்பதானான். (௧௬)

கச்சபாலயச்சருக்கமுற்றும்.

ஆகத் திருவிருத்தம்—௬௱௭௰.



## பிரமவிருத்தபுரச்சருக்கம்.

ஆயபிரளயங்கடொறுமழிவில்பதியாய்ப்பூருவமாய்
நேயமொடுமேசத்திசிவலிங்கதென்றுநித்தியமாய்ச்
சேயபிரமராளவிலர்பூசிப்பவதியுநெல்வேலிக்
கேயபிரமவிருத்தபுரமெனவும்பெயராதாகுமால். (௧)

ஆகத் திருவிருத்தம் ௬௱௭௰௮.

## தசரதராமன்பூசைபண்ணிப்பாசுபதம்பெற்ற சருக்கம்.

திருவளருமணிமார்பனயோத்தியில்வந்தவதரித்துசிலையிராமன்
பொருவிதிருநெல்வேலிப்புனிதனைவந்தருச்சித்துப்புகழ்ந்துபோற்றிக்
கருதியமெய்வரங்களொடும்பாசுபதம்பெற்றிடுங்காதைதன்னைச்
சுருதிமொழிமாதவரோகேண்மினெனச்சூதமுனிசொல்வதானான். (௧)

முதிர்பிரமகற்பமதின்முந்தியகற்பத்திரண்டாம்யுகத்தின்மாயன்
கதிரிலகுமணிமாடவயோத்திவருந்தசரதன்காதலனேயாகி
பிதுவியிற்சீதையைவேட்டுவெங்கானிற்றவவிரதவேடம்பூண்டு
பதிநீக்கிப்பவிரதிபோய்ப்பஞ்சவடிதீரத்தின்பாங்குவந்தான். (௨)

உயர்கோதாவிரியின்மகிழ்ந்தசப்ரமணியரையும்வணங்கிவாழ்த்திச்
சுந்தாஞ்சோபிராமேசரெனவேயிலிங்கமதைத்தச்சூழ்ந்துபோற்றிச்
சிந்தமகிழ்வரம்பெற்றுச்சிறந்திடுகாவேரிநதிதீரமேவி
யந்திவண்ணர்சம்புநாதனைப்போற்றியாச்சிரமத்தமருநாளில். (௩)

வானவர்தந்துயர்தீரச்சூர்ப்பநகைசூட்சியின்மாரீசன்மாயத்
தானொருபொன்மானுகச்சார்ந்தவனைத்தொடர்ந்துதசரதன்சேய்ராமன்
போனவுடனிலக்குமனும்போகவிராவணனவந்துபொய்வேடத்தாற்
றேனமருமொழிச்சீதைதனைக்கொடுபோயிலங்கைநகரதனைச்சேர்ந்தான். (௪)

மற்றுமந்தவிராகவன்றன்மாயமானைத்தொடருங்வழியிற்றுக
முற்றுவில்லினுற்கிறியுயர்பொருநைதனையடைப்பித்துடனேமேல்பாற்
பற்றிநெருடிலிங்கம்வைத்துக்கயத்தாற்றிற்பூசைபண்ணிப்பணிந்துபோற்றிக்
கொற்றமுறுசிவனைக்கோதண்டராமேசனெனக்கூறிப்போந்தான். (௫)

பின்னுமந்தமாயமானைத்தொடர்ந்தினங்கொண்டுபிறைவாய்ம்பான்
மன்னு[illegible]தனைத்தொலையமானுமின்மடித்தபின்னர்வரிவில்ராமன்
றன்னுழைவந்திடுமிளையோன்றன்னோடும்வந்துபன்னசாலைநோக்கி
மின்னிடைச்சீதையைக்காணான்விதிவசத்தான்மதிமயங்கிவெதும்புகின்றான். (௬)

இலக்குமனுமிராகவனுமிருவரும்வெந்துயர்க்கடலினிடையேமூழ்கி
யலக்கணுற்றெங்கணுநாடியரக்கரடியொடுசீதையணிகள்கண்டார்
துலக்கமுடையவராகிச்சொல்லுவார்நம்முடையசோகமெல்லாம்
விலக்கிடுவாகத்தியனென்றவரிருக்குமாச்சிரமமேவினுரால். (எ)

அன்புடையநெஞ்சினராயாச்சிரமத்தடைந்துதொழுமயேந்திவேந்தன்
றன்புதல்வர்தமைநோக்கித்தழுவியருகிருத்திமிக்கதயவினோடும்
பொன்புணருமணிமார்பாவரக்கர்குலந்தொலைக்கவந்தபுலவுவேலோ
யுன்புகழையெம்மனோருரைப்பதனுக்கெளிதோவென்றுவகையொடுசொன்னான். (அ)

என்றுமுனிபகர்ந்திடலுமிராகவனுமிதுசொல்வானிமையோர்போற்ற
மன்றினடம்புரிகருணைவரதனுக்கன்புடையமாதவத்தினனே
குன்றிலுறைதமிழ்முனியேகுரைகடலைக்குடித்தவனேகோதிலானே
நன்றுவருங்காலமுன்னைநானடைந்தேன்றுயர்தவிர்நல்குவாயே. (கூ)

என்னலுஞ்செந்தமிழ்முனிவனிம்புவானெல்வேலிக்கிறைவனெந்தோன்
றன்னுடையமலரடியிலருச்சித்தாற்றவிர்ந்திடுமுன்றுசோகம்
அன்றுபெரும்பகைமுடிக்கப்பாசுபதமுந்தருவனெனவேசொல்லி
மன்னுமவனொடுமெழுந்துவரும்வழியிற்சடாயுவினைவந்துகண்டார். ௰

கண்டவுடன்குறுமுனிபைக்கைதொழுதசடாயுவென்பான்கமலமாதைக்
கொண்டுசென்றவிராவணனெனின்றிவைகூறிச்சிவபதமுட்கொண்டுபோந்தான்
திண்டிறலோயிவன்றனக்குச்செய்கடனிங்கியெனமுனிவன்செப்பலோடு
மண்டருங்கண்டதிசயிப்பவிராகவன்கைகொடுக்கடன்களாற்றினுரல். ௰௧

பொருநைநதிக்கரைமேல்பாற்பணிதலையத்தலத்தினிடைப்பூசைபண்ணிக்
கருதுமிராமேசனெனக்கைகுவித்துச்சேவைசெய்துகளிவாய்ப்போயறி
யருகுதிகழுருத்திரபாதமும்போற்றியகத்தியமாமுனிவனேடும்
பருதிகுலத்தசரதன்றனபாலர்திருநெல்வேலிப்பதியில்வந்தார். (௰௨)

வருதுபொற்றுமறைமூழ்கிமகிழ்விநூடுவேடிவுடையமானதப்போற்றிச்
சுந்தரநற்பிரகாரஞ்சூழ்போந்துநன்கைகருகிச்சூழும்வேணி
யர்கிவண்ணர்திருமூலநாதரடித்தாமரையையருச்சித்தேத்தி
யெந்தைதிருநெல்வேலிநாயகர்பொற்சரணமலரிறைஞ்சினுரால். (௰௩)

அனவரததானநாயகரடித்தாமரைமலரையன்பாய்ப்போற்றி
மனமகிழ்விநூடுதாம்ரசபைநடராசனைத்தொழுதுவணங்கிவாழ்த்திக்
கனிவினெடுமிளையோனுமிராகவனும்பெருகுநிலாக்கடனிருண்ட
முனிவரனுமினிதினெடுமுதல்வர்தெக்கணாமூர்த்திமுன்புவந்தார். (௰௪)

வேறு.

ஆங்கிராகுராமனுக்குத்தமிழ்முனிவனஞ்செழுத்தைப்
பாங்குடனேயுபதேசம்பண்ணுதலுங்கேட்டுவந்தே
நீங்கருமக்கமுந்திருவெண்ணீறமெய்யினிடைநிலவத்
தாங்கிநெடுங்காலமிகுதயவினெடுதவம்புரிந்தான். (௰௫)

· தசரதராமன்பாசுபதம்பெற்றசருக்கம் எ௱௫

ஐம்புலனுமொருவழியாய்நிறுவியரனடித்துணையே
தம்பமெனநினைந்துருகித்தவம்புரியுஞ்செயல்கண்டே
தம்பர்தெக்கணாமூர்த்திநாயகனுமெதிர்தோன்றச்
செம்படுமக்காங்கூப்பிச்சேவைசெய்துதுதிசெய்தான். (௰௬)

ஆதியாயந்தமுமாயானந்தமயமான
சோதியாய்ச்சுடரொளியாய்சொற்பொருளாய்ச்சூழிலாப்
பாதியாய்வேதப்பரியாய்மழுப்படையாய்
பூதியாய்சாலிபுரத்தாய்புரப்பாயே. (௰௭)

பத்திசெய்துதித்தம்பரவுசனகாதியர்க்கு
முத்தியருண்மெய்ஞ்ஞானமுத்திரையின்வகைகாட்டி
வித்தகமெய்ப்பொருள்விரித்துவிளங்குவடதருவின்கீழ்ச்
சித்தமுவப்புடனிருக்குந்திகிரிவனத்தாய்போற்றி. (௰௮)

வேறு.

இன்னதுதிசொல்லுமிராமன்முகநோக்கி
யுன்றன்சிந்தையுவந்தவரங்கேள்
பொன்னடியின்மேல்வீழ்ந்துபோற்றிமகிழ்கூர்ந்து
தன்னுவரத்தின்றெகைவிரித்துச்சொல்லுவான். (௰௯)

பண்டினதுபாதம்பணிபரசுராமனுக்குக்
கொண்டபுகைமுடிக்கக்கோரமழுக்கொடுத்தாய்
திண்டிறலிராவணன்முன்சென்றுசெயப்புரிகோ
தண்டமொடுபாசுபதமுந்தரவேண்டும். (௨௰)

மேயபகைஞர்விடுபகழியெம்முடைய
காயங்கலந்துதுயர்காட்டாவகைவேண்டு
நேயமுறுசீதைசிறைநீங்கிவரவேண்டு
நாயகனேயிவ்வரநீநல்கிடவும்வேண்டுமால். [௨௰௧)

பையாடரவப்பணியாய்பலிகவர்செங்
கையாய்கருணைக்கடலேசெழும்பவள
மெய்யாய்மெய்ஞ்ஞானவிழுப்பொருளேவேணுவனத்
தய்யாவுன்மீதிலெனக்கன்புந்தரவேண்டும். (௨௰௨)

என்றுவரங்களிவைகேட்டிறைஞ்சியெதிர்
நின்றசிலைராமனிகழ்த்துவரமுங்கொடுத்தே
கொன்றைபுனையுங்குழகனுயர்கோதண்ட
நன்றிதருபாசுபதத்துடனேநல்கினுன். (௨௰௩]

ஆயவரமத்தியமலன்மறைந்திடலு
மாயன்மகிழ்ந்துவலஞ்செய்தருழ்போந்தே

நேயமுடிச்சன் னிதியினின் றிறைஞ்சித்தம்பியொடு
மேயமுனியோடும்விடைகொண்டு போயினுன். (உ௫)

சந்தமறைமுனிவன்றனிருக்குஞ்சாலையிற்போ
யந்தமுனிவனருள்பெற்றடிபரவிச்
சிந்தைமகிழச்சிறந்தவரம்வாங்கி
விந்தைமதங்கபருப்பதத்தைமேயினுன். (உ௬)

வேறு.

வந்திராகவன்வாலியைவதைசெய்துவானரப்படையோடுஞ்
சிந்துவெண்டிரைக்கடலடைத்ததன்மிசைசென்றிலங்கையைச்சூழ்ந்தே
சுந்தரச்சிலைவலியிலவ்வரக்கரைத்தொலைத்துயர்திகாய
னிந்திரசெயித்தொடுகும்பகன்னனையிராவணன்றனைமாய்த்தான். (உ௭)

மாயைவல்லவரக்கர்தாமடிந்தபின்மகிழ்வொடிரகுராம
னேயமாகவீடணற்கரசியனிலைபெறமுடிசூட்டித்
தூயகற்புடைச்சானகியுடன்றெறுஞ்சூழ்கவிப்படையோடும்
பாய்திரைக்கடற்சேதுவில்வந்துதான்பரிவொடுபிலைவசெய்தான். (உ௮)

மலரின்மேலயன்வழிவருமரக்கனை [illegible] வுந்திரச்
சிலைகொள்வாணுதற்சீதைசெங்கையினுற்றிகழ்மணற்சிவலிங்க
முலகமெங்கணும்புகழ்ந்திடப்பூசனையுவப்பொடுபுரிந்தேத்தி
யிலகுசெஞ்சடையிராமநாயகனொனவியம்பினன்விடைகொண்டான். (உ௯)

பருதிகாதலனுமனங்கதனுடன்பலபடைத்தலைவோரு
மருகுசூழ்தருவானரப்படையொடுமயோத்திமாநகரெய்தித்
தருமநீதிநல்லறங்களுந்தழைத்திடச்சூகமணிமுடிசூட்டிப்
பொருவிலாநெறித்துணைவரோடிராகவன்புவிபுரந்திருக்கின்றுன். (௩0)

இன்னவாறுதாசரதியாகவனெல்லைவாழிலைவையனைவிணிதேத்தி
மன்னுமெய்வரம்பெற்றிருக்கதையெனமகிழ்வொடுமுரைசெய்தே
பின்னுமத்தலமகிமைநடந்திடுபெருமைசேர்கதையெல்லாந்
துன்னுமனமொடுமாதவர்கேட்பவேருசமாமுனிசொல்வான். (௩௧)

தசரதராமன்பாசுபதம்பெற்றசருக்கமுற்றும்.

ஆகத் திருவிருத்தம்—௯௱௮.

---

## தலமகிமைகேட்டகிர்டனனுக்குப்புத்திரனுதவிய சருக்கம்

நிலவுபதிரதியரவுகொன்றைசூடுநிமலரமைவனப்பாமர்நெல்லைநாதர், மலரடிசய யனுதினமுமினி துபோற்றிவாழ்த்தியன்பாய்மகிழ்வுறுமாதவத்திறேரும் யுலகமெ ல்லாமுய்யமேதினியின்மேல்வந்துற்பவித்தகிட்டனனுண்மையுணர்ந்தேநெல்லைத், தலமகிமைகேட்டியுர்சாம்பனைமுன்பெற்றசரிதையதுகேண்மினெனச்சாற்றினுல்



கண்ணுதலோனருளின்வசுதேவனூர்பூர்காதலனுபுற்பவித்தகாளமேக, வண்ணன ரவிந்தமலர்க்கண்ணன்கிட்டணன் வளஞ்சிறந்ததுவாரகைமாநகரின்வைகிப், பண் ணவரும்விண்ணவரும்பாருளோரும்பரிந்துதினம்போற்றிடுபார்த்திபனேயாகி, யெண்ணரியசதுரங்கபலத்திறேனொடுமிருந்தினிதாயரசுரிமையியற்றுநாளில். (௨)

மன்னுமகப்பெறுவேள்விசெய்துதூயவானவருக்கவியளித்தும்வறிஞோர்க்கென்று மன்னசொன்னதானமிகக்கொடுத்துமிக்க வருந்தவங்கள்புரிந்துமுயறறங்கள்செ ய்தும், தன்னுடையமனைவியரின்மேன்மையானசாம்பவதிதன்பாற்சந்ததியில்லாம ன், முன்னியந்தமாதினெடும்புதல்வன்வேண்டிமுதல்வனூர்திருக்கயிலைமுன்புபோ ந்தான். (௩)

வந்துதிருக்கயிலாயவரையின்பாங்கர்மகிழ்ந்தரியதவம்புரிந்துவதியுநாளி, லிந்தொ ளிருஞ்சடைமுடியுமிதழித்தாருமிலகுமதியானனமும் விழிகண்மூன்றுங், கந்தர மைக்கவினொளியுமுந்நூன் மார்புங்கரியுரியுமான்மழுவுங்கரங்களொன்குஞ், சுந்தர வாணுதலுமையென்னம்மையோடுந்தூயவிடைமீதுவந்துதோன்றினின்முன். (௪)

கண்டுபரம்பொருளையிருகண்ணுறக்கண்டானெடிதுயிர்த்தான்விம்மினுன் புளகங் கொண்டான், மன்றுபுரமெரித்தானை அடிபணிந்தானரகராசிவனே யென்முன், சொன்றைபுனைகோடீரத்தானேயென்முன்கும்பிட்டானகங்குழைந்தா ன்குழகாவென்ரு, னன்றுமறுகருணையென்முனுடிப்பாடிநாவினலஞ்செழுத்தைய வின்றுசூழ்ந்தான். (௫)

கருணைபொழிகண்ணுதலேகோலங்காட்டுங்கங்காளாகாரணனேகயிலையானே, ய ருணமணிநிறத்தானேவெண்ணீற்றனேயக்கமணிபுனைவோனேயழிவிலானே, மர ணமெப்பிறப்பின்றிநித்தியராகிமகத்துவமாய்மிகவாழ்ந்துன்னடியாரெல்லாஞ், சர ணதாமரையடையவைப்பாய்ஞானத்தற்பரனேயற்புதனேயழற்கணேனே. (௬)

என்றினையபலதுதிகளியம்பலோடுமென்னையாளுடையபிரானிரங்கிநோக்கி,நன்று ன துதோத்திரங்கேட்டின்பமுற்றேநல்குவரமுளதென்னிநவில்வாயென்ன, மன்று ளடம்புரிசரணத்தானேவேணுவனத்தானேயெனக்குமகவருள்வாயென்றே, நின் றுதொழுதடிவணங்கக்கயிலைவாசனிரந்தரனின்மலனிவைதானிகழ்த்துவானுல். (௭)

பத்திமிகுமறிவுடையகிட்டனனேநீபனைவனஞ்சூழ்நெல்வேலிப்பதியில்வந்தாற்,புத் திரனையுனக்கருள்வோம்வருவாயென்னப்பூதகணம்புடைசூழவானோர்போற்றச், சித்தர்கள்கந்திருவர்சிவயோகர்நாகர்தேவர்முனிவரர்சூழத்தெவியோடும், வித்த கவெள்விடைமீதுபோந்தான்சூழ்ந்தவேதியர்கள்வேதமொழிவிளம்பியார்த்தார்-

பூதகணம்பல்லியங்களார்த்தார்விண்ணோர் பூமாரிபொழிந்தார்த்தார் பொருவில்வீ ணைக், கீதவிசைநாரதர்கிம்புருடரார்த்தார்கின்னரர்களளவிலர்கின்னரங்களார்த் தார், சோதிமணிக்குடைகுன்டோதரனூர்சூழ்ந்தார்தூயவர்களாலவட்டஞ்சூழ்ந்து போந்தார்திருநந்துபமுனிவரர்களேர்தலைவயோகர்பாவாடைசெறிந்தேயோங்க.

மற்றுமுளபல்வரிசைவளங்களோங்கவானவனூர்குடமுழவுவாசித்தேக, லுற்றவாயிரம்வாயும்பாணுகம்பனெண்மணிச்சங்காயிரம்வைத்தூதியேகக்

கொற்றமணிப்பொற்பிரம்புகரத்திநேர்திக்குலபுரந்திகட்டியங்கள்கூறியேகச்
சுற்றுபரிசனங்களெல்லாஞ்சூழ்ந்தேயேகத்தொண்டர்குழாந்துடலவுஞ்சொல்லை
ப்போந்தார். (௰)

பத்தருறைசிவதலங்களுள்ளதெல்லாம் பணிபவனோன் திருநோக்காற் பார்த்தே
போந்தா, னத்திர காசியினுடனேகாஞ்சிபார்த்தா னுடுக்கிதம்பரமண்ணுமலைகாளத
திமத்தியார்ச்சுனமாலவாயும்பார்த்தான்மணிகொழிக்குமலையாரிவளங்கள்பார்
த்தான், புத்திதழ்புனைசடையாருறைகுற்றாலம்புனிதமிறைசிந்துபூந்துறையும்பார்த்
தான். (௧௧

ஈந்ததிருநெல்வேலிவளங்கள் பார்த்தான்வானவருமுனிவோருமகிழ்ந்துபோற்றச்
சிந்தைமகிழ்ந்தியங்களெல்லாம்பூதார்ப்பத் தேவமடவார்நடனஞ்செய்தேயார்ப்
ப, வந்தானந்துமியார்ப்பச்சின்னமார்ப்ப வடியவர்களார்ப்பவாலயந்தப் போந்
தே, யிந்துமுதல்வடிவிநெல்லைநாத னிலங்குசிங்காசனத்தில் வீற்றிருந்தாரன்
றே. (௧௨

ஆயதொருகாலைகிட்டினன்வந்தானெல்லையமலனடித்துணைபரவி யன்பாய்ப்போற்றி
காயகனேநம்பானேநமச்சிவாயநாயகவெனக்கருளவேண்டுமென்றா
நேயமொடுபுகன்றிடவுங்கருணைகூர்ந்துநித்தனைமையனத்தினைநோக்கின்றா
மேயதவக்குறுமுனிவன்வதனநோக்கியப்புறநல்லுறதமொழியலம்புவாருலகு

வேறு.

மருவும்பிப்புவியின்வேண்டும்வளம்பதிநமக்குண்டேனும்
திருவளர்திருநெல்வேலிதெக்கணகயிலையாமா
லருடுருவிளையாட்டிங்ஙனம்பொருடிநகருஞ்செய்தோந்
கருதயித்தலத்தும்மன்மைகேட்டவர்கதிபெறுவார். (௧௩)

நீதியன்புடையமிர்ட்டணவினைத்தபுத்திரனுமுண்டா
மாதவமுனிவேயமிக்க மகத்துவத்தலத்தின்மேன்மை
போதனுமறியானேயபுகதுவாயிலதுக்கென்றே.
யோதுநான்மறைக்குமேட்டாலிங்கத்தினுருவேபோந்தான். (௧௪)

கருமுகில்வண்ணங்காட்டுங்கந்தரன்கருணைவாழ்த்திப்
பெருவிருப்போடுஞ்சென்றுயிராங்குபொற்கோயில்சூழ்ந்தே
பொருவிலாமால்லிங்கமூலலிங்கத்தைப்புகழ்ந்துபோற்றி.
மருமலர்க்குழலாள்காந்திமதியிருபாதம்போற்றி. (௧௫)

மற்றுளதேவர்தம்மைமகிழ்வொடுபணிந்துபோற்றிச்
சுற்றுநற்பிரகாரங்கள்சூழ்ந்துசன்னிதியில்வந்தே
நற்றவக்குறியரும்பணந்தநாயகனைப்போற்றி
யுற்றதென்பாலங்கொய்துபுவப்பொடும்குருதானன்றே. (௧௬)

இனியபொற்குருந்திலேநுங்கிருட்டினனின்பமான
மனமதனனுஞ்சென்றுவாதனுர்மொழிந்தவாறே





புனிதநற்பொருநைச்சிந்துபூந்துறைப்புனலினாடி
நனைமலர்செறியும்பொற்றாமரையினன்னீரினாடி. (௧௭)

மதிமுதல்வடியாள்கோயில்வலங்கொண்டுமுன்னரெய்திப்
புதமலர்பலகொண்டுபோற்றிப்பண்பொடுவிடைகொண்டேகி
நதியணிமலர்நெல்லைநாயகர்கோயில்சூழ்ந்தே
கதிதருமூலலிங்கத்தொடுகமழ்முத்தைப்போற்றி. (௧௮)

நாயகர்நாயச்சியாரைநலம்பெறத்தொழுதுபோற்றித்
தூயங்கங்காளநாதர்துணையடிவிரும்பிப்போற்றி
மேயவம்பலத்திலேறும்விமலனைவணங்கிப்போற்றி
மாயவன்வலங்கொண்டெய்திமகிழ்ந்துசன்னிதியில்வந்தான். (௧௯)

வந்ததன்றுணைவிசாம்பவதியொடுமகிழ்ந்துபோற்றிச்
சிந்தையன்போடுங்கும்பமுனிவன்பாற்சிறந்துவைகிச்
சந்திசூழ்திருநெல்வேலித்தலபுராணத்தின்மேன்மை
யந்தநற்கும்பன்சொல்லமகிழ்ந்தினிதுகேட்டான். (௨௰)

நித்தநீயிவ்வாறுசிந்துபூந்துறைநீராடி
வித்தகக்கமலவாவிவிரும்பிநீராடிப்போந்தே
யத்தனெல்வேலிநாதனடியிணைபரவிப்போற்றி
முத்தமிழ்க்கும்பன்சொன்னபுராணந்தான்முடித்தநாளில். (௨௧)

உளமகிழ்ந்தினிதீர்த்தமாடிவந்தோகையோடு
மளவிலந்தனருக்கெல்லாமன்னமதளித்தான்மிக்க
முளரியங்கரத்தாலீகைமுகமலர்ந்தினிதீந்தான்
இளருமித்தானமெல்லாங்கிருட்டினனிந்தபின்னர். (௨௨)

பின்னவிர்சடையானெல்லைவிமலனார்கோயிலெய்தி
மன்னுநற்பிரகாரங்கள்வலங்கொண்டுசூழ்ந்துவந்தே
தன்னுநற்கருணைமூலலிங்கத்தைத்தொழுதுபோற்றிச்
சன்னிதிமுன்புசென்றுதகவொடுபுகழ்ந்துநின்றான். (௨௩)

ஆயதோர்காலையுன்னிலாதபானந்தகோடி
மேயசெஞ்சோதிமெய்யும்விழிமூன்றுநான்குகையு
மேயமான்மழுவுங்காளகண்டமுமிலங்கத்தோன்றத்
தூயவெள்விடையின்மீதேதுணைவியோடெதிரேநின்றான். (௨௪)

நெல்லைநாயகனார்மூலலிங்கத்தினெழுந்துநின்று
வெல்லையிற்சோதிமெய்யுமெழிலையுமெதிரேகண்டான்
முல்லைமாதுநீங்கியேத்திமுதல்வனேமுடிவிலானே
நல்லதோர்பிள்ளைதன்னையெனக்குநீநல்கவேண்டும். (௨௫)

என்னனுங்கருணைநாதனியம்புவான்மாலேநீதான்
முன்னுனியித்தலபுராணமுழுதுமேயறிந்ததாலே

புன்மையில்புதல்வன்றன்னைத்தந்தனம்போவாயென்று
மன்னுயர்மூலலிங்கத்தூடுபோய்மறைந்தானையன். (௨௭)

கொண்டபேருவகையோடுங்குழகனைவணங்கிப்போற்றி
யண்டர்கள்பணியுநெல்லையமலனையாதியானை
தென்றிசைவிடத்தையுண்டதேவனையென்றுபோற்றி
வெண்டயிராருந்துமாயன்விடைகொண்டுவெளியிற்போந்தே. (௨௮)

அகத்தியமுனிவன்றன்னையன்பொடுமனுப்பிக்கொண்டு
மகத்துவமனையாளோடுமற்றுளசேனையோடுஞ்
செகத்துயிரனைத்துங்காக்குஞ்சேதாமுலகமெல்லாந்
தொகுத்தபல்வளமுமோங்குந்துவாரகைநகருஞ்சேர்ந்தான். (௨௯)

வந்தினிதரசுசெய்துமகிழ்ந்துடனிருக்குநாளிற்
சிந்துரநுதலாள்சாம்பவதிதிருவயிற்றினூடு
சுந்தரச்சுரூபமெய்யத்தூயவரொவருந்போற்ற
விந்திரற்கரசுநல்குமிளவல்போலிளவலீன்றாள். (௩௰)

ஈன்றவப்புதல்வன்பேருஞ்சாம்பனென்றெவ[illegible]சொல்லு
வான்றநதந்தைதைபோலவறிவுறபெருமைபெற்றன்
ரூன்றியகருணைமாயன்றூயநலரசுசெய்து
சான்றவரொவரும்போற்றத்தயவொடுமினிதுவாழ்ந்தான். (௩௧)

தகவொடுதிருநெல்வேலித்தலபுராணத்தைக்கேட்டு
மகவுபெற்றினிமைபெற்றனமாயவனென்னில்மற்று
ரகமகிழ்வோடுகேட்போரமலன்றன்றுணாரிலென்று
மிகபரமெய்திவாழ்ந்தாரென்பதுமெய்ம்மையாமே. (௩௨)

யாவர்களேனுமிந்தத்தலபுராணத்தைக்கேட்டி
லாவலினிவரத்தெய்தமருமகவெய்தும்வித்தை
மேவுநற்செல்வமெய்தும்விரும்பியகாமமெய்துஞ்
சேவன்முத்தியையுமெய்தந்திலனுணையிதுமெய்யாமே. (௩௩)

அண்ணலார்திருநெல்வேலியதிசயபுராணங்கேட்டுக்
கண்ணனூர்புதல்வன்பெற்றகதையினைமொழிந்தோமென்றே
புண்ணியத்தவங்கள்செய்யும்பொருவின்மாதவர்கள்கேட்பப்
பண்ணவச்சூதன்பின்னும்பரமனூர்கதையைச்சொல்வான். (௩௪)

கிருட்டிணனுக்குப்புத்திரனுதவியசருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௬௱௨௰௨

---

364



## பொற்றாமரையின்முழுகினபெண்களுக்குப் புடைவைகொடுத்தசருக்கம்

ஆதிநாயகர்நெல்வேலியண்ணலார்விளையாட்டாக
மாதரார்புடைவைதன்னைமகிழ்வொடுவழங்குகாதை
வேதநான்கெனச்செய்வேதவியாசனூர்விளம்புமாறு
சோதிமாதவர்கள்கேட்பச்சூதமாமுனிவன்சொல்வான். (௧)

முன்னொருகாலங்கோடைமுதிர்ந்திடுவேனிற்கால
மன்னியதிருநெல்வேலிமாநகரதனில்வாழு
மின்னிடையமுதச்செவ்வாய்வெண்ணகைவிரைமென்கூந்தற்
கன்னியர்பலருங்கூடக்கமலவாவியினில்வந்தார். (௨)

ஞாலமெங்கணுமேவேனிலுறுவெம்மையாலும்
வாலிபநலத்தினாலுமனத்துறுமகிழ்ச்சியாலு
மூலயத்தலமர்ந்தபொற்றாமரையத்தீர்த்தநீரிற்
சீலமங்கையரெல்லொருஞ்சிறந்தினிதாடவேண்டி. (௩)

தெய்வநன்னீரின்மேன்மைதெரிந்தினிதுவந்துநோக்கார்
மெய்யிலாபரணங்கொங்கைமீதணியாரமாலை
கையிலார்வளைகள்பாதகடகமுங்கிடப்பமானத்
துய்யபூங்கலைகளெல்லாந்தூயநீர்க்கரையில்வைத்தார். (௪)

அணிதுகில்போக்கிநாணியன்னங்களைநகுமாபோன்
மணிதிகழ்கமலவாவிவாசநீரிடைபுட்போந்தே
தணவுறுமிடங்கடோறுந்தாவியேநீந்துவாரு
மிணைமுலைக்குடங்கள்காட்டியெழுந்துபின்மூழ்குவாரும். (௫)

மைமலிவிழிசேர்ப்பமேனிவளைந்துநின்றுடுவாருங்
கைகொடுகைகள்கோத்துக்கலந்துநின்றுடுவாருஞ்
செய்யபங்கயங்கண்மூழ்கத்திரண்டுநின்றுடுவாரு
மெய்யொடுமெய்கள்சேர்த்துவிரும்பிநின்றுடுவாரும். (௬)

தங்கண்மெய்யுருப்பையகந்தத்தடாகத்திற்காண்கின்றோரு
மங்குறுபொருளைத்தங்களாகத்திற்காண்கின்றோருங்
கொங்கையிலணிந்தசந்தக்குழம்பெலாங்குழப்புவாரு
மங்குலினிருண்டகூந்தல்வாசநீராக்குவாரும். (௭)

பீனவெம்முலைமேலாரம்பின்னவேயாடுவாரு
கானமீந்தாமுமேயநம்புனலாடுவாரும்
வானகைக்குருகாலிப்பவாவிநீராடுவாரு
மானனங்கமலமன்றாகமகிழ்ந்தாடும்போதில். (௮)

வேறு.

மின்னேர்சடைமவுலியும்விளங்குமானனமும்
பொன்னினூர்சிலம்பொலித்தபொற்றுமரைப்பூவுங்
கன்னகுண்டலமுந்திகழ்சமைவனக்கடவுண்
மன்னுமெய்த்தவமாதர்முன்வருவபோல்வந்தார். ௯

வந்தமுன்புநின்றுடியசெக்கர்வான்வடிவு
முந்துபுன்னகைநிலவும்வெண்ணிலவணிமுடியும்
விந்தையாகமெய்ம்முழுவதுமணிந்தவெண்ணீறுங்
கந்தவாவியினும்மக்கனனியாகண்டார். ௰

ஐயகோவிவரார்கொலோவிங்ஙனமடைந்தார்
மெய்யிலக்கரும்விளங்குவெண்ணீறுமேமிலேர்தார்
துய்யகோலமும்புதிதிவர்சொரூபமென்சொலவோங்
கையில்வைத்துக்பாலமுங்கவினமுன்னின்றார். [௰௧]

என்றுகூறுவராண்டவைகீரவர்நாங்க
டுன்றுநீர்க்கரையேறவும்வேண்டுமென்சொல்வோஞ்
சென்றுநீந்தமறைவிடைசெலுந்திகம்பரரோ
நன்றுநீர்வினைநிலையெனக்கைகொட்டிநகைப்பார். (௰௨)

நல்லவிற்பனரோயுயர்நான்மறைநாலுஞ்
[illegible]ருதவத்தோரிரதுபின்கேட்பச்சூதமாமுனிவரனிசைப்பான்.



சண்பையிற்பிள்ளையார்திருக்கூட்டத்தபோதனரனைவரும்விருப்பாற்
[illegible]டனகும்பமுனிதனைச்சூழ்ந்துபனைவனமகத்துவமனைத்து
[illegible]படவுரைக்கவேண்டுமென்றிரப்பவறிந்தவாதியம்புகேமென்று
[illegible]னவின்றனதீயவர்கேட்டுஈயனர்தனித்துமெய்விதிர்த்தே. (௨)

அதிசயமாமிவ்வனைவனத்தலத்திலன்புடனொருசிவலிங்கம்
[illegible]ரதிட்டைசெய்யவேநினைந்துவிரைவுடன்ஞானபோனகரைத்
துதிசெய்துவணங்கிநினைந்தவாதியம்பத்தொண்டரைநோக்கியேநமது
மதியிதுசலஞ்செய்வதேயென்றவருமகத்தியரொடும்புகல்வார். (௩)

இத்தலமீதியாதையாலென்றயிலக்குமியுறைதலாலிறையோ
னித்தலும்விருப்பானின்றிடலானெல்லையிலொருசிவலிங்கம்
புத்தியாய்ப்ரதிட்டைசெயவொருதலசீர்பகர்மினென்றுரைத்திடலோயா
முத்திநகேள்வன்யாதுமாராயர்துமுகமலர்ந்தினையனமொழிவான். (௪)

வேய்வனநாதர்க்கிடதுமேல்புறமாய்வீரகாளிக்குமேல்பாலிற்
கூவிளவனமும்புண்ணியவிருக்கக்கூட்டமுநிறைந்ததனடுவோ
ராவிடையாளுமிலிங்கமுந்தேவிபீடமுமழகுபெற்றிருந்த
தியாவருமறியார்பிறர்க்கிதுகாணக்கோடிசென்மத்துமெய்தாதால். (௫)

கோதிலாஞானவரன்டியேற்குக்குருவருளுக்கொருகுன்ற
மாதலாலின்பாலறைந்தனன்முன்மேயாசனுந்தேவபாண்டியனு
மோதும்வேதியருக்கரமுஞ்சிவனுக்குறசிவாலயமுமங்கமைக்கக்
காதலாயிருந்தாரென்றனன்முனியக்கணத்தினிலிருபானும்வந்தான். (௬)

வந்தசம்பந்தர்தமைப்புகத்துமலரடிதொழுதகிழிருந்தே
யிந்தநல்லுரையைக்கேட்டுமகிழ்ந்தேயின்றநற்றினங்குருபூச
மந்தமாதலத்தைப்பார்க்கவேண்டியதென்றரசனும்பிரியமுற்றுரைத்தா
னுந்துபேருவகையுடனமைமுனைப்பாலுண்டவன்முனியொடுமெழுந்தான். (௭)

லாத்தியஞ்சின்னமொலிக்கமன்னவனும்வருந்திருக்கூட்டமுஞ்சூழக்
கேத்திரந்தனிற்சென்றரனுறைந்தருளுஞ்சிவாலயங்கிட்டியேதொழுது
நேத்திரப்பிரியமனத்தினுக்கிரதமிலனுக்காலையம்பத்தர்க்
கேத்துநற்கிரமமட்டுமிங்கியற்றவினிதெனயாவருமகிழ்ந்தார். (௮)

சிவனுக்கீசானதிக்கிலோர்தீர்த்தங்கேவிமுன்னேயொருதீர்த்தந்
தலமறக்கண்டற்புதமெய்திமுனியுஞ்சம்பந்தருங்கரங்கோத்துக்
கலமறான்குதிக்கினுஞ்சூழ்ந்துகண்டபோதகத்தியன்புகல்வான்
பலமறுமிந்தத்தலமுளதெனமுன்பகர்ந்தனன்கயிலையிற்பரமன். (௯)

வனைவனத்தலபுராணத்தும்விளங்குமறந்தனனிதுவுமாயென்றுன்
புரையமுஞானபோனகர்தாமும்புரவலற்கூவியித்தலத்தே

விரைவுடனேமூரானையிலெங்கும்வெளுங்கண்டுசிவாலயமடங்க
ணிறைபெறமகாவிக்யுயற்றிகழுசெனசீழ்ந்தலைசதனைவல். ௰

உக்கிரன்றனக்குக்கோயிலொன்றலமயென்னுளாத்தனைரசமுமகிழ்ந்து
மிக்கசம்பியரையுடனமைத்திந்தவிதிப்படிசெய்ம்பின்களெனை ஈன
றிக்கெலாம்விளங்குந்திருமதிலுவாயில்கள்சிறப்பொருறுவ
தக்ககோபுரந்தேர்தேவிமுன்விடைகடயங்குமையொருவிச்சிரகம். ௰௧

நந்தியேமுதற்றுவாரபாலகருநற்பெலிப்பீடம்பொற்கம்ப
மிந்திரைதங்கும்வீதிகள்சிவபத்தர்க்கியல்பாமடங்களு
மந்தணர்க்ககரம்வீரபத்திரனுக்கக்கினிதிக்கிலாலயமும்
பந்தியாய்த்தலத்தானிகர்தாதியர்கள்பல்லியக்காரர்க்குக்கிரகம். (௰௨)

நறைமலர்வனங்கூவங்குளஞ்சுனைகளுற்குலக்குடிகளாவுணங்கண்
மறையவர்சிவபத்தருக்குமேசெல்லும்வகைதனக்கிரட்டியவிலர்கண்
முறைபசுவெருமைதாதியர்மருந்தமொழிந்திடுத்திரவாடை
குறைவறக்கொடுத்தக்கிரகங்கடோருங்கோயிலும்விதானமுஞ்செய்தார். (௰௩)

அப்பொழுதரசன்பிள்ளையார்தமக்குமகத்தியர்க்குமவைகாட்டத்
தப்பறவவையுங்கண்டனருவகைதலைத்திடான்மொழிபகர்ந்தார்
மெய்ப்பொருள்மூலலிங்கத்தினருளால்வித்தகர்தாமெழுந்தருளி
யிப்புவிதனில்யானினைத்தமுடித்தாரென்றுகொண்டாடினனிருபன். (௰௪)

நிருபனைநோக்கிப்பிள்ளையார்தாமுஞ்சிவபத்தரிலுநிகர்த்
தருமவானுனையாதுனக்கரிதாஞ்சம்பத்துமுண்டோவினனுங்
கருதியவெல்லாமெய்திடுமென்றுனகடமுனியுந்திருக்கூட்டத்
தருமறையவருமகிழ்ந்தனசிவனுமகமகிழ்ந்தேயருளசெய்தான் (௰௫)

தேவபாண்டியனுமகத்தியருளோபாமுத்திரையுந்திருக்கூட்ட
மேவருஞ்சூழக்கோயில்வலஞ்செய்திறைமுனர்தொழுதெழுந்தருகிப்
பாவிஞ்செய்துஞானசம்பந்தர்பகர்ந்தனர்தோத்திரம்பனாயா
மாவுடையாளுக்காவிகாயகனேயிலமூவிலைபரம்பொருளே. [௰௬]

மால்விழியிடந்தசாத்தியபாதமலரயன்றேடொணாமுடியோய்
காலிருமூர்த்தமாகியைந்தொழிலுநடத்தியஞ்செழுத்தருவாகி
மூலமாயன்பரிதயத்தினதலாமுதல்வனேயானந்தமயமே
சீலமுங்குறியுமிறந்தமெய்ப்பொருளேதிருத்தொண்டர்காதனேசரணம். ௰௭)

தன்மமேவிடையாய்த்தாருவனேசாசத்திரசேகாசரண
வின்மலாவாக்குமனத்துக்குமெட்டாததனேசராதயிர்க்கெல்லாம்
சன்மமேகிப்பிறப்பிறப்பகற்றுங்கர்த்தனேயழிவின்மெய்ப்பொருளே
தொன்மையுமுமுடிவுமில்பரனேதொண்டர்களுதனேசரணம். ௰௮)

பத்தர்க்குமெனக்குந்தேவபாண்டியற்குமபரிவுடன்றெரிசித்தபேர்க்கு.
சித்தலு சாரியமுடிகளினையேயேவேண்டினனென்றே



சித்தசொக்குருகின்றதோத்திரங்கள்செய்தனன்முனியும்வில்வத்தாற்
சுத்தபன்மலராலாயிரநாமர்துதித்தருச்சனைசெய்துதொழுதான். (௰௯)

தொண்டர்கள்பதிஞருயிரார்தாமுந்தனித்தனிதுதித்தருச்சித்தார்
விண்டுவோலிபாவேய்வனத்துறையும்விமலர்பூசனைக்குவிட்டிருந்த
தண்டலைசூழ்ந்தநிலத்துடனிலமூந்தனவகையுமதிற்சேர்த்தே
யெண்டருங்காமிகாகமவிதியாலியற்றினர்பூசையும்விளங்க. ௨௰

மகரமாதத்திலிரேபதித்தினத்தின்மழவிடைக்கொடியுமங்கேற்றிப்
புகழ்தரவிழாவுஞ்சிறப்புடனடத்திப்பூசத்திருட்டிருத்தேருந்
திகழுமாராட்டுமற்றைநாளதனிற்றிருத்தொண்டர்நாதர்கொண்டருள
நிகரில்சம்பந்தரகத்தியர்தொண்டர்நியமித்தபடிநிறைவேற்றி. (௨௧)

குருசிற்றுந்தனைவரும்படிந்துதொண்டர்களுதலைத்தொழுதார்
பாரினிலதிகலவைவன்த்தலத்திற்பத்தர்கள்பெயருடைத்தலமுஞ்
சிருட்டன்கூடிச்சைவர்வைதிகருஞ்சிறப்புடன்விளங்கவேசெய்த
காரியன்றேவபாண்டியன்றன்றன்னைக்களிப்புடன்புகழ்ந்தனரெவரும். (௨௨)

திருத்தொணடர்நாதர்தமக்கெவரேனுந்திருப்பணிமலர்வனஞ்செய்தோர்
கருதுதொன்றியாக்கள்விடுத்தவர்பூசைக்கட்டளைசெய்தவரவர்க்கு
மிருத்துவங்ககன்றுசெல்வமுமெய்திவீடுபெற்றுய்யவுமருள்வா
லுரைக்கினறதேவையுமுண்மையீதுண்மையுண்மையென்றுரைத்தனன்சூதன். ( )

இக்கதைகேட்டமுனிவரர்வியந்தேயிறையுறைவேய்வனத்தலத்திற்
றக்கசண்பையினிற்பிள்ளையார்வரவுந்தருஞ்சிவபிரதிட்டைசெயவுந்
தொக்கதொண்டர்களுமகத்தியர்தாமுநதுகளறுதவத்தினர்யாரு
மிக்கதாய்ச்சேரடசொபசாரத்தாலவிமலனைப்பூசைசெய்திடவும். (௨௪)

இவையெலாந்தேவபாண்டியனுக்குமிறைவன்பூருவசனனத்தி
னவையறச்செய்யுஞ்சுகிர்தமேயென்றுநரபதிதனையும்புகழ்ந்து
பவமறவெங்கட்கிக்கதைகேட்கப்பகர்தலாலுய்ந்தனமென்றே
சிவபதமறவாச்சூதனைவணங்கிச்சிந்தையாற்பூசனைசெய்தார். [௨௫]

இந்தமாக்கதைகளையுக்கேட்டவர்படித்தோர்முறையினிலெழுதிவைத்திட்டோர்
புரதியாற்பாட்டின்பொருள்விரித்துரைத்தோர்புவிதனிற்றிருவுடன்பொலிந்து
பந்தமாம்வினையுநீங்கியேயந்தம்பரம்பரனென்றுநித்தியமாய்க்
கந்தமார்கூந்தலுமையுடனுறையுங்கயிலையிற்கடிதுசென்றடைவார் (௨௬)

தொண்டர்கணயினார்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௬௩௪௫.

## நின்றசீர்நெடுமாறநாயனார்சருக்கம்

பூங்கழனியிடந்தோறும்புடைசிறந்தகடைசியர்பொற்கரங்கள்வீசித்
தேங்கமலக்களைசிதறத்தேனருந்தமறுகாலுமறுகாலேட்ட
மாங்கனியைவராலெய்த்துவானரங்கள்வீசமள்ளர்வளைந்துவாரும்
பாங்குயர்தேம்பொழில்சூழும்பண்புடையதென்மதுரைப்பாண்டிநாடு

சீர்திகழுமணிமாடஞ்சிகரகோபுரங்கள்சென்றுசெம்பொனூட்டி
ஞூரமணியிடக்கயங்களாடுமரம்பையரொளிவேயணியாயாடுங்
கார்மலிதண்சோலைதொறுங்களிமயில்களாடமதுகரங்கள்பாடும்
வாரிதிகழெயில்சூழவைகைசூழ்மதுரைமாநகரமாகும். (௨)

ஆணிலையந்தணர்சாலையாகமசாத்திரசாலையணியாயோங்கு
மேன்மையிரசதசபையும்வித்தகர்மெய்ச்சங்கமுமேவிளங்குமேலோன்
றுணமதிலறுபத்துநான்குதிருவிளையாடலுஞ்செய்தோங்கும்
வானவிமானமுமோங்குவளஞ்சிறந்தமதுரைமாநகரந்தனே. (௩)

கோதில்வளம்பலசிறந்துகுலவுமிந்தமதுரைநகர்க்குடிகளோங்கப்
பூதிசாதனம்விளங்கப்பொருவிலறாதழைத்தோங்கப்புனிதர்சேவைச்
சீதமதிகுலதிலகன்றென்னவர்தம்மரபில்வந்தோன்செய்யசெங்கோன்
னீதிமனுமுறைபுரக்குநின்றசீர்நெடுமாறனிகரில்வேந்தன். (௪)

மன்னுபுவிமுழுதமொருகுடைநிழற்கீழரசுசெய்துவாழுநாளிற்
றன்னுதலைமயிர்பறித்தகுண்டரவநெறிவழியேதொடருங்காலை
தன்னிகரிறிருஞானசம்பந்தர்திருநீறுசாத்தப்பெற்றே
யந்நிலைவிட்டெந்நிலமுஞ்சைவநெறிதழைத்தோங்கவரசுசெய்தான். (௫)

ஞானநிலைப்பெருமையிலுணரசரிமைபுரிந்தறனுமரசர்க்கெல்லா
மேன்மைபெறவணங்காதமுடிபுனைந்தவிறலுமிகுபுகழுநோக்கி
வானவர்கோனகமகிழ்ந்துமணியாரஞ்சமணிமாற்பிற்பூண்டு
பானல்விழிமங்கையருக்கரசியார்தம்முடனேபரிந்துவாழ்ந்தான். (௬)

சாருமதகரிபரிதேர்காலாளிறுடுசதுரங்கசேனை
தேருமதிமந்திரிமார்சேனைகாவலர்முதலோர்சிறந்துசூழ
வாருமசோகுடைத்தெய்வமரசென்னுமருகரொன்றுயிரவர்தம்மைக்
கூருமுனைக்கழுவில்வைத்தகுலச்சிறையார்தினமும்மன்புகொண்டுபோற்ற. (௭)

மாற்றரசர்திறையளப்பவரம்பில்குடிதழைப்பமணிமுரசமார்ப்பப்
போற்றுசைவநெறியோங்கப்புனிதநிறைதொண்டர்குழாம்பொலிந்தேயோங்கத்
தோற்றுவெண்ணீற்றொளிவிளங்கத்தூயமநுநீதிமுறைதலங்கியோகை
யாற்றலொடுமினிதரசுபுரிந்துபன்னாளையின்பந்தரசர்கோமான். (௮)



வேறு.

சென்றுதிருவாலவாய்ச்சுந்தரேசன்சேவடிமேலன்புடையதியானத்தோடு, நின்று பரவசமடைந்துநினைந்துபோற்றிநிததியனேநிரந்தரனேநிகரிலானே, கொன்றை முடித்தருள்பரனேபரையோர்பாகாகுழகனேசங்கரனேகோலத்தானே, யென்றுபல தோத்திரங்களியம்பிப்போற்றியிலகுதிருச்சன்னிதிமுன்பிவைசொல்வாளுல்.

நித்தமுமுன்சன்னிதிக்காட்பட்டுநில்லேனீதியொடுதொண்டுசெய்துநினைந்துபோற் றேன, பத்தியில்லேன்பாவனையும்பண்ணேனுன் பாற்பரிவிலேனெந்நாளும்பரிந்து நோக்கிச், சித்தமுவந்தழிவிலாப்பேரின்பத்தின்றெளிவுதருமெய்ஞ்ஞானத்தேவ யுன்றுண், முத்தியெனக்களித்திடுவாயென்றுபோற்ற முதல்வனார்திருவாக்கான் மொழிகுவாரால். (௰)

அறிவுடையகவுரியனேநீதானப்பாலன்புடையோனுதலினுற்சொல்வோங்கேளாய் மசறிவுடையவனமோங்குந்திருநெல்வேலி தென்மலையக்கீழ்பானம்பதிக்குத்தென் பா, லெறிபிறைநிறைந்தம்மையங்கேதரிசிப்போர்க்குநிச்சயமாய்முத்திவருநீயங்கே போய், முறையினுயர்திருப்பணிகள்செய்துபோற்றின்முத்தியங்கேபெறுவையெ னமொழிந்தானுதன். (௰௧)

அய்யனருள்செய்துமறைந்திடலுமாறனாலவாயமலனருளன்பாய்ப்போற்றித், தய் யவனேசுந்தரேசரனேயென்றுதோத்திரங்கள்பலபுகன்றுதொழுதுபோற்றி, மைவி ழியாளங்கயற்கணம்மைபாதம்வணங்கியருச்சித்தேத்திமகிழ்ந்துபோற்றி, செய்ய திருவாலயத்தைச்சூழ்ந்துபோற்றிச்சிற்பரனைவிடைகொண்டு செழியர்கோமான்.

வந்துமணிக்கோயிற்காலிடத்துவைகுமங்கையருக்கரசியார்க்கிவைதான்கூறிச், சிந் தைமகிழ்ந்தினியகுலச்சிறையைநோக்கித் திருநெல்வேலிப்பதிக்குச் செல்கின்றோ நாம், தந்திரமந்திரத்தலைவர்முதலாயுள்ளசதுரங்கசேனைவர வழையென்றேதிச், சுந்தரப்பொற்சிவிகைமீதேறிமாறன் றுணைவியொடும்படைநெருங்கிச்சூழப்போந் தான். (௰௩)

கம்பமதகரிகோடிபரிகள்கோடிகாற்படைகள்கோடிகொடித்தேர்கள்கோடி, யும்ப ருயர்கேதனங்கள்குடைகள்கோடியொலித்தமணியிடக்கயங்கள்கோடிசூழக், கொ ம்புடனேபல்லியங்கள்கோடியார்ப்பக்குலவுசங்குதாரைசின்னங்கோடியார்ப்ப, வம்புவிலையவனைந்தகடல்போலேசூழ்நதங்கணியாகவிருமருங்குநிறைந்துபோத. (

மந்திரிமாரிருமருங்குஞ்சூழ்ந்துபோதவரிசைபலசெய்வோர்கண்மகிழ்ந்துபோற்றத், தந்திரியாழ்வாசிப்போர்தாமுன்போதச்சாமரைகளிருமருங்கும்வீசிப்போதச், சுந் தரப்பாவாடையெங்குஞ்சூழ்ந்துபோதச்சுருதியொடுசங்கீதமுழங்கிப்போத, சிந் தைமகிழ்கட்டியங்கள் கூறிப்போதத்தென்மதுரைப்பாண்டியனார் சிறந்துபோந் தார். (௰௫)

கடம்பவனத்தெல்லைகடந்தேகிப்போந்துகரிவரநல்லூரில்வந்துகளாவினீழ, லிடம் படவாழ்பால்வண்ணலிங்கநாதரிணையடியினருச்சித்துத்தொழுதுபோற்றி, விடம் பயிலுங்கண்டர்சிவசங்கரேசர்விமலரடித்துணைநினைந்துவிரும்பிப்போற்றி, நடம்பு ரிசித்திரசபைநாயகனைப்போற்றிநம்பர்திருநெல்வேலிநகரின்வந்தான். (௰௬)

வந்தவுடன்சிவிகைநின் றமிழ்ந்துபோந்து வரதீர்திருச்சன்னிதியின்மருங்குநின் று
சர்திவனத்திருமூலத்தானத்தானைத்தாம்பரசபைநாயகனைத்தழற்கண்ணுனைச், சிந்
தைமகிழ்ந்தானந்தக்கண்ணீர்வாரச்சேவைசெய்துபாண்டிமாதேவியோடும், விந்
தைவளர்பொருநைநதிமேல்பாலோங்கிவிளங்குசிந்துபூந்துறையின்மேவினுரால்.

வேறு.

ஆங்குறையும்வளம்பார்த்தாரதிசயமென் றினிதொடு
பூங்கம ழுஞ்செறிந்தசிந்துபூந்துறையினீராடிப்
பாங்குறையுந்தருமுசன்பாதமலர்பணிந்தேத்தி
தேங்குதலைமொழிமாளுந்தென்னவனுமுடன்போந்தார். [௧௮]

சூழ்ந்தபடைத்தொகைநெருங்கத்துயகயற்கொடிதுலங்க
வாழ்ந்தவறிவுடையகுலச்சிறையாருமருகுவரத்
தாழ்ந்தடிக்கண்முறைவணங்கித்தார்வேந்தர்முன்போதப்
போழ்ந்தமதிபுனைவேணிப்புங்கவர்சன்னிதியில்வந்தார். [௧௯]

மணிமறுகினிடைசூழ்ந்துவளைவனஞ்சூழ்பொற்கோயி
லணிதிகழ்பொற்றுமலரீராடியகமகிழ்வினொடு
பணியணியும்பரமரிடப்பாலுறையுங்காந்திமதி
துணையடிகளொடுதுதிசெறதோத்திரங்கள்பலபகர்ந்தே. (௨௰)

வளைந்தமலர்க்குழற்சொருக்குமணிமுறுவற்றிருமுகமும்
புனைந்திடுமங்கலநாணும்பொறகாமும்விழிமூன்று
மணந்தமிதழுடையசெந்தாமரையடியும்பரிபுரமு
நினைந்துபரவசமடைந்தான்விடைகொண்டுநீங்கினுன். ௨௧

மன்னுமணிப்பிரகாரம்வலங்கொண்டுசூழ்போந்து
தென்னவனுர்கருமாரிச்சிறப்புமினிதொடுநோக்கிப்
பன்னகமெய்ப்பணியாளர்பரிந்துறையுநதிருக்கோயிற்
பொன்மதில்சூழ்போநதிருச்சன்னிதியின்முன்போந்தார். ௨௨

அங்குறையுநந்தீசரடிவணங்கித்தொழுதேத்தித்
துங்கமணிப்பிரகாரஞ்சூழ்ந்துசென்றுசோதிமணிச்
செங்கைகிரமேற்குவித்துத்திருமூலநாதரிரு
பங்கயப்பொற்பாதமலர்பணிந்துதுதிபகர்வரால். (௨௩)

பண்ணவனேபரம்பொருளேபரகதியைத்தருநிதியே
விண்ணவர்கள்பணிபிரமவிருத்தபுரவேதியனே
கண்ணென்றுமூன்றுடையானேகருணைநிறைதருகடலே
நண்ணருநின்பதமடியேனண்ணவருள்செயவேண்டும். (௨௪)

என்றுபலதோத்திரங்களினிதொடுபுகன்றருளி
நின்றுதொழுதடிபணிந்துநெஞ்சுருகியுடல்புளகித்



தொன்றுபடாதருமைந்துபொறியுமொருவழிநிறுவித்
தன்றுசடைமுடியுடையனைத்துயவனைத்தொழுதகன்றுன். (௨௫)

வந்துதிருநெல்வேலிவளைவனத்தெம்பெருமானைப்
பந்தவினைப்பவந்தொலைக்கும்பண்ணவனைப்பரம்பொருளை
யந்திவண்ணச்செழுஞ்சுடரையாரமுதையகங்குழைந்து
சிந்தைமகிழ்வொடுநின்றுசேவைசெய்துசெப்புவான். ௨௬

வேலையெழுவிடமயின்றவித்தகனேவிளையிதழி
மாலைபுனைவேணுவனமகாலிங்கநாயகனே
சூலமழுப்படையானேதூயவனேதொல்லோனே
பாலவிழிப்பரம்பொருளேபரகதிதந்தருளென்றுன். (௨௭)

இனியதுதிபலகூறியெதிர்நின்றுதொழுதேத்தி
நினைவழிந்துபரவசமாய்நெட்டுயிர்த்துமயிர்பொடிப்பக்
கனியுமுளத்தொடுகண்ணீர்கலுழவிருகரங்கூப்பிப்
புனிதனையன்பொடுபோற்றிவிடைகொண்டுபோதனுல். [௨௮]

பாங்குறையுமனவாததானற்பதமலர்போற்றி
யாங்குநடராசனைக்கங்காளனையுமடிதொழுதே
யோங்குகாமைந்துடையோரொளிர்வடிவேலனைவணங்கி
மூங்கில்வனத்தொழுதுசபைமுன்னின்றுபணிந்தேத்தி. (௨௯)

தென்னவனுராலயத்தைச்சூழ்ந்துதிருச்சன்னிதியின்
முன்னரினிதொடுவந்துமுதல்வர்பதம்பணிந்துநின்றே
யர்நிலையினந்திசரடிவணங்கிவிடைகொண்டு
பொன்னனையாள்பாண்டிமாதேவியொடும்புறம்போந்தார். (௩௰)

வேறு.

இங்குநிகழ்ந்தவைபுகன்றேமிதற்குமுனங்குலச்சிறையாரினிதினெய்தித்
திங்களணிவேணியினுர்கோயிலுக்குவடக்குநெடுந்தெருவின்பாங்கர்
மங்குறவழ்மணிமாடமாளிகைகோபுரங்களுமண்டபமுஞ்சோதி
தங்குமணித்திருமதிலுஞ்சாலைகளும்புதியவளர்தரச்செய்வித்தான். ௩௧)

நீண்டமணிவாயிலொருமிறைந்திடுபொற்படிகணிதிநிறைசோபானம்
வேண்டுமிட்டதொருமமைத்துவிளங்குமந்தப்புரங்களொடுவிதானச்சாலை
பாண்டிமாதேவியார்பரிந்திருக்குஞ்சாலைகளும்பலவுஞ்செய்து
தூண்டொரும்பொற்பழக்குலையின்வாழைகமுகொடுதென்னலங்கச்செய்தான்.(௩௨)

மற்றமன்னர்மந்திரிமார்சேனைகாவலர்முதலாய்வந்தோர்க்கெல்லா
முற்றமணிச்சாலைகரிபரிச்சாலையுப்பரிகையொழுங்காய்ச்செய்தே
கொற்றவனுக்குரைத்திடலுங்கோயிற்கால்வளங்கண்மகிழ்கொண்டுபார்த்து
வெற்றிமுரசொலியார்ப்பமீனவர்கோனரசுவீற்றிருந்தான்மன்னே. (௩௩)

வளவர்குலப்பாவையருமாளிகையினுட்புகுந்துமகிழ்ந்துவாழ்ந்தா
ரளவில்படைஞோர்களெல்லாமவரவருக்கமைத்தவிடமமர்ந்துவாழ்ந்தார்
குளையணைந்தார்க்கன்பர்குலச்சிறையுமகிழ்வொடுதங்கோயில்சேர்ந்தா
ருளமகிழ்வோடுலகெலாமுயர்ச்சிபெறநீதியரசுரிமைசெய்தார். (௫௪)

நித்தமுயர்வழுதிசிந்துபூந்துறையினீராடிநெல்லைவாழு
மத்தனையுங்காந்திமதியன்னையையுஞ்சேவைசெய்தாலயத்தைச்சூழ்ந்தே
பத்தியொடுசென்னிதிமுன்பரிந்துநின்றுதோத்திரங்கள்பகர்ந்துபோந்து
சித்தமுவப்பொடுமரசுசெய்நாளிற்றிருப்பணிகள்செய்வதானான். ௫௫

நீதிதழைத்தோங்குதிருநெல்வேலிநாதர்முன்புகிலைபெற்றோங்கச்
சோதிமணிமண்டபத்தைத்தூயமகமேருவெனத்துலங்கச்செய்தே
வேதிகைபொற்படிதூண்கள்விளங்குதிருவாயிலணிவிரவிச்சூழ்ந்த
சோதின்மணிக்கோபுரமுஞ்செண்மதிலும்வெள்விடையுங்குலவச்செய்தான்

நீண்டபெருந்தெருநான்குநிகரிலறச்சாலைகளுநிறைந்தசோதி
பூண்டமணித்தேரினியவாகனங்கள்கொடிமரம்பொற்பூண்பட்டாடை
வேண்டுமணிக்குடைகளிடக்கையங்கவொடுவிளங்குசித்ரவிதானச்சீலை
சேண்கொடிதோரணம்பலவுஞ்செய்துதிங்கடோறும்விழாச்செய்வித்தானால். ௫௭

நந்தவனம்பூம்பொழில்சுணைகளாவுமடங்கள்செய்தநகரிதோறுங்கு
மந்தணர்களரசரொடுவசியர்வேளாளர்குடியமைத்துமோங்கச்
சுந்தரஞ்சேர்பாண்டிமாதேவியுயர்சிந்துபூந்துறைக்குத்தென்பா
லெந்தையுறைந்திடச்செய்தபாண்டிமாதேவீச்சரமுமோங்க. (௫௮)

மன்னுதிருநெல்வேலிமாநகரினினிதிருந்தவர்க்கோர்க்கெல்லா
மன்னசொன்னதானமும்பொன்னுடைகளுமன்பினகமகிழ்ந்தளித்துத்
தன்னுமிறையாதிலொன்றுவாங்கியசையாமணியுலகமுங்கியோங்கத்
தென்னவன்றனுயிர்போன்மன்னுயிர்காத்தினிதரசுசெய்யுநாளில். (௫௯)

வேறு.

வந்துதிகிரணநாளின்மன்னவர்மகிழ்ந்துசூழச்
சுந்தரவமைச்சர்யாருஞ்சூழ்ந்தனர்தொடர்ந்துபோத
மந்தரச்சுவடுதாங்கும்வளவர்கோன்பாவையோடுஞ்
சிந்துபூந்துறைநீராடச்சென்றனனரசர்கோமான். (௬௦)

எதிர்திரைப்பொருனையாற்றிலிறையமின்புறவேயெய்தி
நிலைசிவதீர்த்தச்சிந்துபூந்துறையினினீராடி
முறைசெபதவங்கண்முற்றிமுதல்வனைத்தொழவேமீண்டு
செறிமூரியங்களார்ப்பசிவிகைமேற்சிறந்துபோந்தான். ௬௧

ஆயதோர்காலைதன்னிலரசர்கோன்புதல்வனுக்கு
நேயநெல்வேலிமாறனெறிமறைக்குலத்துவந்த
சேயொருசிவிகைமீதுதானொருசிவிகைமீதா
வாயநீராடச்சிந்துபூந்துறையதனிற்போந்தார். (௬௨)



இன்னவாறிவர்களிறைவனையெதிரேகண்டு
முன்னியப்பனவனேறுஞ்சிவிகையைமூடிப்போக்கி
மன்னவனடுத்துக்கிட்டவருதலுமகிழ்விலோடு
தன்னுடைச்சிவிகைநீங்கித்தாதையைத்தொழுதுநின்றான். (௬௩)

செல்வனைநோக்கியந்தச்சிவிகையேதென்னவோடு
மெல்லியன்மாதென்றேதவிழுமிதென்றரசன்போந்தான்
பல்லியமார்ப்பச்செயுமபனவனுந்தியல்வந்தார்
சொலலியவண்ணம்வேதன்றோகைதன்வடிவமானான். (௬௪)

தன்னைநீடுங்கியந்தச்சுருதியோன்சொருபமிந்தப்
பெண்வடிவானேனென்றுபிதற்றிநின்றிரங்கலோடு
மண்முழுதாளுமாறன்மகனவைநோக்கியெங்கோ
னெண்ணியவாறுண்டானதென்றதிசயமங்கெய்தி. (௬௫)

மருமலர்க்குழலுஞ்செய்யவாண்மதிமுகமுங்கோலத்
திருநுதலழகுநீலச்செங்கயல்விழியுஞ்சோதிக்
குருமணிசெறிபொற்கோட்டுக்கொங்கையுங்குறித்துநோக்கி
யரிவையர்தம்மிலிந்தவழகுடையவராரொன்றே. (௬௬)

தாதைதன்னிளவோயான்சொற்றகைமையினுலோவாண்பால்
பேதையர்வடிவமானதெனமனம்பேதித்தேங்கிக்
கோதையருருவமானகுலமறைமகனைநோக்கித்
தீதிவைதீர்ப்பானெங்கோன்சிவனருளாலென்றோதி. (௬௭)

இங்குநின்றிரங்கவேண்டாமெய்திடெம்மரசன்பாலி
மங்கையர்வடிவமானவாறினிப்புகல்வோமென்றே
பொங்கொளிச்சிவிகைமீதுமுன்புபோற்பொதிந்துபோந்து
செங்கயற்கொடிகளோங்குந்தென்னவன்வாயில்சேர்ந்தார். (௬௮)

பனவனுமாதைமூடிபல்லக்கினிருத்திப்போந்து
கனகமுலரசன்முன்னர்க்காதலன்கரங்கள்கூப்பி
மனதினுள்ளதுசொல்லாமல்வாய்மறந்துளைத்தேனியு
நினையுமவ்வண்ணமாண்பானேரிழையானதென்பான். (௬௯)

காதலன்மொழியைக்கேட்டகவுரியர்கோமான்சீறிச்
சூதரீபுகலலாமோவென்றுளத்துளக்கமெய்திக்
கோதிலாக்குணத்தினுனுங்கோயிற்கால்வாயினெய்தி
நீதுசேர்மறையோனுற்றநேரிழைவடிவம்பார்த்தான். (௭௦)

அய்யகோவிதுதானென்கொலதிசயம்யாருமென்பான்
செய்யுமாறென்னேநெல்லைச்சிவன்செயலிதுவோவென்பான்

பொய்யுரைமெய்யதானபுதுமையைப்பாருமென்பான்
கைதவனிந்தவாறுகலங்கிநெஞ்சழியுங்காலை. (௫௧)

உயர்மறைச்சிறுவன்றந்தைதாயொடுமுறறுசொல்லா
மயர்வொடக்கணத்தனைய்தியாண்டகைமகளைப்பார்த்தார்
மயிலிளஞ்சாயன்மாதர்வடிவதுகண்டுமாழ்கித்
துயரொடுமரசன்றன்னைச்சூழ்ந்துநின்றிவைசொல்வாரால். (௫௨)

அரசனேயுனதுமைந்தனிவையென்றோதலீயுந்
திருமுறநினைத்தலாலேசெயிழையானதன்றே
மருவினுக்கிவனோர்பிள்ளைமறையவசிறுவன்றனைக்
கரவுசெய்திடுவதாமேகருணைசெய்திடலாகாதோ. (௫௩)

கற்றறிபுதல்வராலேகதியினைப்பெறுவாரொன்றே
சொற்றிடுங்கலைகள்யாவுஞ்சுருதியுஞ்சொல்லுகீரா
லுற்றிவன்றன்னைப்பெறுண்டாமெனவிருந்தேனென்னை
யுபசாரமிலிட்டவாறிதுநன்றதாமால். (௫௪)

மாயமோவிதுவென்பாருமன்னவர்நீதியில்லாத்
தேயமோவிதுவென்பாருந்தெய்வமோவீயென்பாரு
ஞாயமோசெய்தாயென்றேநான்மறையோர்கள்கூறு
மாயசொற்கொடுமைகேளாவரசனுமிதுசொல்வானால். (௫௫)

அந்தணீர்கேளீர்நீங்களாகுலப்படவும்வேண்டாஞ்
சுந்தரவடிவாயேதுணையடிதொழுதுபோற்றி
நந்தணிகுழையார்நெல்லைநாயகரருளாலுங்கள்
மைந்தனைமுன்புபோலவருவதுந்திடுவோமென்றான். (௫௬)

ஆதியானமலனெங்கோனமைவனப்பாமநெல்லை
நாதனாலயத்துட்போந்துநாமிங்குவருவகாறு
மாதவமறைவல்லோர்வருந்திடாதிருப்பீரென்று
பூதநாயகன்பொற்கோயிற்புகுந்தனனரசர்கோமான். (௫௭)

வந்துநெல்வேலிநாதன்மலரடிவணங்கிப்போற்றிச்
சிந்தையன்போடுநின்றுதியானங்கள்செய்துபோற்றி
யந்தகன்றன்னைவென்றவமலனேயருட்கண்ணனே
யெந்தையேசிவனேபோற்றியென்றுநெஞ்சுருகிப்போற்றி. (௫௮)

மாறனிப்பழிக்கென்செய்கென்மறையவன்பெண்பாலான
வேறுருநீக்கிமுன்போல்விளங்கிடவேண்டுமென்றே
யாறெனக்கண்ணீர்வார்ரவனனமெழுகாகவுள்ளங்
கூறுமைம்புலனுமொன்றாய்க்குழகன்மேலன்புபூண்டான். (௫௯)

இந்தமெய்யன்பாலெங்கோனிலகுசெம்பவளமெய்யுஞ்
சுந்தரமழுவுமானுஞ்சோதிவான்முகமுந்தூய



கந்தரக்களமுநான்குகரங்களுங்கண்கண்மூன்றும்
வந்தெதிர்தோன்றக்கண்டானலரடிதொழுதுவீழ்ந்தான். (௬௰)

வீழ்ந்தடனெழுந்துபோற்றிவிம்மிதனுயிர்ப்புவீங்கிச்
சூழ்ந்துவந்தெதிர்கைகூப்பித்தொழுதுசெஞ்சோதியானைப்
போழ்ந்தவெண்மதியைச்சூடும்புனிதனேபோற்றிபோற்றி
யாழ்ந்தபோதிருருள்ளத்தவிரொளிமணியேபோற்றி. (௬௧)

என்றுதோத்திரஞ்செய்தானையெதிர்வரக்கண்டகன்றாய்
நின்றவன்றன்னைநோக்கிநிமலனருளிச்செய்வா
னொன்றுமன்புடனேநீயிங்குற்றதேதனையென்றோதத்
தென்றுசெஞ்சடையினானைத்தொழுதுகைதலைனுஞ்சொல்வான். (௬௨)

மறையவன்பெண்பாலானவன்பழிதீர்க்கவேண்டு
மிறைவனேயருள்வாயென்றானெம்பிரானருளிச்செய்வா
னிறையுமம்மன்பர்வாக்கானிகழ்ந்திடுகருமத்தால்வந்
துறைதருஞ்செயலையாரோவொழித்திடவல்லாரொன்றே. (௬௩)

பின்னரும்புகல்வானித்தப்பெண்ணுருப்பெண்ணேயாகு
மன்னவேதியனுக்கின்னமாண்பிள்ளையான்றுதந்தோ
முன்னியங்கவனுக்கிந்தவாறுநீமொழிவாயென்று
மன்னவர்க்கருளியெங்கோன்மகாலிங்கத்துறுபோந்தான். (௬௪)

இன்னவைபுகலக்கேட்டங்கிசைபெருமாறனெங்கோன்
மன்னுபொற்கோயில்சூழ்ந்துவந்துசன்னிதியினின்று
சன்னியோர்பாகன்றன்னைக்கருத்திடைநினைந்துபோற்றித்
தென்னவன்விடைகொண்டேகிக்கோயிற்கால்வாயில்சேர்ந்தான். (௬௫)

அண்டனார்மறையோரெல்லாங்காவலனருகுசூழ்ந்தார்
திண்டிறலமைச்சரோடுசேனைகாவலர்கள்சூழ்ந்தா
ரெண்டிசைப்புவியினுள்ளோர்யாவரும்வியந்துசூழ்ந்தார்
கொண்டபேருவகையோடுமவரவர்க்கினிமைகூறி. (௬௬)

மன்னவனெதிரேநின்றமறையவன்வதனநோக்கித்
துன்னுமிப்புதல்வன்மூத்ததாய்பெண்பிள்ளையாக
வின்னமுமுனக்காண்பிள்ளையினிதொடுமளித்தோமென்றே
பன்னகப்பணியார்நெல்லைப்பரமனாருளிச்செய்தார். (௬௭)

என்றிந்தவாறுதந்தைதாய்தனக்கினியக்கூறி
நன்றுடன்போக்கிநல்லநாளொருமுகூர்த்தந்தன்னின்
மன்றலங்குழலானமாதையோர்மறைவல்லோன்பா
லொன்றுநன்மணஞ்செய்வித்தாருவந்திருபெரும்வாழ்ந்தார். (௬௮)

மற்றவன்றந்தைதானுமற்றொருகுமாரன்றன்னைப்
பெற்றினிதோடும்வாழ்ந்தானபெருந்திறலரசர்கோமான்

பற்றொடுநெல்லைநாதர்பதமலர்பணிந்துபோற்றி
யுற்றரசினிதுசெய்தேயுலகெலாம்புரக்குநாளில். ௬௯

வேறு.

நெடுநிலத்தைமனுமுறைபுரிந்தரசுநிலைபெறப்புரியுமாறனு
ரடல்படைத்தபடைடாளும்வந்தரசரடிபணிந்துநின்றசொரிவதுங்
கொடைமிகுத்தபுகழ்வலியுமெண்ணியடுகொலைகுறித்துவருபுலியென
வடபுலத்தரசர்கடல்செய்தானையொடுவந்துசூழ்தரவணைந்தனர். ௭௰

புரவிவெங்களிறுதேரொடும்படைகள்பொருவிலாதபலகொடிகளும்
வரிவில்பிண்டிமழுவாள்கைவேன்முசலம்வாமயானியொடுநேமிகள்
சுரிகைதண்டிவைகண்மினிரவெண்டிசைகள்சூழவெங்கணுநெருங்கியே
விரவுவெம்படையினளவுதான்மொழியின்வீரையேழுமிகரல்லவால். ௭௧

ஆரவெங்கணுநெருங்கியேறுபடையாரபாரமிகுமமலையுந்
தாரைகளுந்துடிபேரிகாளமொடுதாளமேளமுயர்நமிலையும்
வீரமேம்முரசுகண்டைபமபையொடுவிரவியார்த்தெழுமுழக்கமுங்
காரிடிக்குலமுழக்கின்மிக்கனகறங்கியார்ப்பினொடுமார்த்தவே. ௭௨

இந்நவாறுதிகழார்ப்பொடேறுபடையெந்தையார்திருநெல்வேலியை
வந்துசூழ்வரவளைந்தவாறுநெடுமாறன்முன்புழையர்கூறலுஞ்
சிந்தைதானமிகவெகுண்டுதீயினுறசெம்புபோல்விழிசிவந்திடத்
தந்திரத்தலைவர்புடைநெருங்கியுறைதமதுவாயிலிடைசார்ந்தனன். ௭௩

அணிபிறங்குமணிவாயின்முன்புவருமரசர்கோனிலைமைகண்டுதான்
மணிசெறிந்திடுபொன்முரசறைந்தனர்கள்வளைகயற்கொடிகளெங்கினுர்
கொணர்மணிக்குடைகளாலவட்டமொடுகொற்றவெண்குடைநிழற்றினர்
பணிபுரந்துபலவரிசைகொண்டுமிகுபரிசனங்கள்புடைசூழவே. ௭௪

நின்றமன்னவனைவந்துசூழ்ந்தனர்கணிகரிலாநிலையமைச்சருந்
தன்றுதந்திரர்கள்சேனைகாவலர்துரகராசிபலகோடியுங்
குன்றதென்னவுயர்காட்டுவெங்கரிகள்கோடிதேர்பலகோடியு
மொன்றுசேனைபலகோடிதன்றிவருமுயர்பதாகைபலகோடியே. ௭௫

திரளும்வெம்படைகள்செறியுமாரொலிகடிமிலைபம்பைகுடமுழவொடு
மிரலைசங்குதுடிபதலைதூர்த்துமிகளிருகண்டையுயர்தொண்டக
முரசுகொக்கரிகடாரைசின்னமொடுமொந்தைபேரிகைதடாரியும்
விரவுதண்ணுமைமகடக்கைமிக்கவொலிமீறியூழியெனவார்த்ததே. ௭௬

மிக்கபேரொலிகளுற்றவீரர்பலர்வில்லுநீண்முசலம்வேல்கணை
தொக்கபாலமுயர்கப்பணஞ்சுரிகைசுற்றுபாசமொடுசூலமுந்
தக்கவாளொடுகழுக்கடைப்படைசடண்டுபிண்டிபலதாங்கியே
புக்கதானைதரைசுற்றுவாரியதுபோலெழுந்துபடைபோதவே. ௭௭



வீறுசூழ்படைகளேறுமார்ப்பொலியும்விசைகொண்மாட்படைமுழக்கமுந்
தாறுபாயுமதகரிகளார்ப்புமணிதங்குதேருருளினோசையு
மீறிநாரியமிசைக்குமார்ப்பொலியுமெறிதிரைப்பரவையேழினுங்
கூறுமோசையினுமிக்கதாம்படைஞர்கூண்டுவந்துடனெருங்கினார். ௭௮

வேறு.

நெருங்குமிப்படைசூழவேயடுநின்றசீர்நெடுமாறனார்
பொருங்களிப்பொடுமெதிர்வரும்வடபுலத்துமன்னவர்வீறெலா
மொருங்கவிர்தவிறந்துபோம்வகையுறுதிறல்வரமுதவெனக்
கருங்கணம்பிகைபாகர்வேய்வனக்கடவுளாலயநண்ணினார். ௭௯

சென்றுமால்விடைமுன்புநின்றிவைசிந்தையன்பொடுசெப்புவான்
கொன்றைசூடியகுழகனேபகைகொண்டமுப்புரவென்றவா
வென்றுபூங்கணையெய்தமாரனையாசம்வேகவெரித்தவா
வின்றுவந்திடுவடபுலத்தரையேதுசெய்யநினைத்தனை. ௮௰

இன்னவாறெதிர்நின்றுகூறினனிருகணீர்சொரிதரவுமே
தன்னுமெய்ம்மயிர்பொடிப்பவாங்குலகனுக்கமுநெடிதுயிர்ப்பொடு
மன்னனன்புறுபரவசத்தொடுமலரடித்துணைநினைதலு
முன்னியங்கெதிர்தோன்றிவேய்வன்முதல்வனுரிவைமொழிகுவார். ௮௧

நீதிசேர்நெடுமாறனேபொரநினைத்துவந்தசர்வீருவார்
போதுநீபொருபோர்க்களத்திடைபூதவெம்படையாவையு
மாதரத்தொடணுப்புவோமெனவருள்செய்தானகமகிழ்வொடு
மாதுபாகனைமனத்துள்வைத்திடுவழுதிதேர்மிசையேறினான். ௮௨

மற்றமன்னவர்சேனைகாவலர்மந்திரித்தலைவோர்களு
முற்றதம்பரிசிவிகைவெங்கரியாங்குதேரினுமேறினார்
சுற்றுதானைபல்கோடிகோடிகள்சூழ்ந்துபின்றொடர்ந்தேகவே
கொற்றமன்னவன்றேர்நடந்தனகுலவுசெற்கொடியோங்கவே. ௮௩

சங்குதாரைகள்சின்னமார்த்தனதக்கபேரிகையார்த்தன
பொங்குதாளமெக்காளமார்த்தனபொருவில்பம்பைகளார்த்தன
துங்கவெம்முரசிரலையார்த்தனதுயதொண்டகமார்த்தன
மங்குல்போன்முழவதிரவேநெடுமாறனார்படைசென்றவே. ௮௪

பதுங்கால்வகையுறுப்பினும்படைபரந்தெழுந்தால்பாரெலா
மிகநெருங்கினபடர்துகிற்கொடிவிண்ணெருங்கினவிண்ணெலாம்
புகநெருங்கினதேர்க்கொடிஞ்சிகள்புரவியார்த்தெழுதுகளெலாந்
திகைநெருங்கினபோர்க்களத்திடைசென்றசென்றனசேனையே. ௮௫

கடல்செய்தானைவெங்கரிவயப்பரிகடவுதேர்பலகோடியும்
புடைநெருங்கிடசிங்கவேறதுபோலநின்றநெடுமாறனு

நடுதிறங்கொடுபொரநீங்கென்மனவில்வெம்படையதனிடை
வடபுலத்தினர்நெடுங்கடமணிச்சயிந்தவரைகடத்தினர். (௮௬)

தங்கள்சேனையினுடுவினின்றதொன்னவேந்தனைநோக்கினர்
செங்கயற்கொடிநோக்கினர்பெருந்திறலும்வீரமுநோக்கினர்
மங்குல்போலவுமார்த்துமுன்னுறவருபதாதியைநோக்கினர்
பொங்குவெஞ்சினவடபுலத்தவர்போர்குறித்திவைபுகலுவார். (௮௭)

நின்றசீர்நெடுமாறனேயெதிர்நின்றசேவகனென்றுகா
ணின்றுபோர்புரியெங்களோடெனவிலகுவெஞ்சிலையேந்தினர்
அன்றுநாணிரிணைவிசையினோடவர்சுற்றினர்கணைபற்றினு
ரொன்றுவாளிகள்கோடிதூவினரூழிசேருருமேறினர். (௮௮)

வீரமோடெதிர்நின்றமீனவன்வேகமோடெதிர்நகைசெய்தே
பாரவெஞ்சிலைவாளிகோடிபரப்பியங்கவைமாற்றியே
போரில்வருதுவர்மார்புபுண்படுபொங்குசோரியொழுங்கிடக்
கூர்வர்வாளிகள்கோடியாழ்ல்கொளுவியோடவிடுத்தனன். (௮௯)

மாறனெய்திடுவாளிசென்றனவடபுலத்தவர்படையெலாங்
கூறுசெய்தனகொலைபுரிந்தனகுலவுசெங்கையறுத்தன
வீறுகாலொடுகண்களுஞ்சிவிளங்குசென்னியறுத்தன
வேறுவீரர்களளவில்கோடியரின்னவாறுமடிந்தனர். (௯௰)

வழுதிவிட்டகைவாளிபட்டுயர்மதகரித்திரள்பட்டன
குழுமுவெம்பரிகோடிபட்டனகுலவுதேரவைபட்டன
வொழுகுசீழுகவாயுதங்களொடிந்துதண்டமதாயின
வழிபிணந்தொடுமிணைமயினறனவலலகோடிகளாடின. (௯௧)

தென்னவன்படைசிறிவந்தனசெறுநர்சேனையெதிர்ந்தன
வின்னவாறிருபடைநெருங்கினவெதிர்ந்துபோர்புரிகாலையின்
மின்னுவேலெறிசககாத்தொடுமிளிர்கழுக்கடைவெஞ்சரா
மன்னுகைத்தடிசரிகைமழுவொடுசூலம்வாணியிர்தேமாரு. (௯௨)

மற்றுமுன்னனபடைகள்யாவையுமாரிபோலெதிர்வீசவே
யுற்றகாலொடுகரங்களற்றனவுடறுணிந்தனசென்னியு
மற்றுவீழ்ந்தனகுடல்பிதுங்கவணிப்புயங்களறுந்தன
பற்றிறுங்கினகழுத்துபாறுபறந்துசூழ்ந்துபுறந்தலை. (௯௩)

சிரந்துடித்தனசுற்றுதாரொடுசென்னிபிடித்தவளைந்திடுங்
கரந்துடித்தனவேல்குளித்தகவின்கொண்மார்புதுடித்தன
வரிந்தகச்சொடுமிடைதுடித்தமடித்தவாய்கடித்தன
பொருந்திவீரர்சினங்கொணெஞ்சொடுபோர்புரிந்திடுகளமெலாம். (௯௪)

குருதிபொங்கியநதிபரந்தனகுறையுடற்பிணமாடின
செருவிலற்றபடைக்கலக்குவைசிகரவெற்பைநிகர்த்தன



வெருவவைபாருநடுகொடிசெறிந்தனவிகலனெங்குநெருங்கின
மருவிவெஞ்சினவீரர்வந்தவலோந்துபோர்செய்பறந்தலை. (௯௫)

அடன்மிகுந்திடுவழுதிவெம்படையமர்புரிந்திடுபோதினில்
வடபுலத்திகழுசூர்வெம்படைமாய்ந்தவாறதுகண்டன
ருடனெதிர்ந்தனர்சினமிகுந்தனரூழிக்கார்க்கடலாமெனப்
படைகிரண்டெதிர்முரசுகொம்பொடுபம்பைபம்பிடவந்தனர். (௯௬)

பொருகரிப்படைதுரகதப்படைபொருவில்காற்படைதேர்ப்படை
வருபடைத்தொகைசூழவந்தனர்வடபுலப்பகைமன்னவர்
திருகுகோடுமுழக்கினர்பொறிசிந்துதீவிழிசிந்தினு
ரரியினைக்கரிசூழ்வபோன்மதியரசர்கோனைவளைந்தனர். (௯௭)

வந்துசூழ்ந்திடுமன்னர்தாமெதிர்வந்தமாறனைநோக்கியே
யுந்துவாளிகளேவியெம்மொடுமுற்றசேனையொழித்தனை
யிந்தமேன்மையும்வலியுநன்றுனதியல்புமாண்மையுநன்றுகாண்
வெந்திறற்கணையினிவிலக்கெனவிட்டனர்பலவிசிகமே. (௯௮)

செறுநரெய்தடுவாளிதானெதிர்தீமுகங்கொடுவருதலு
நெறியினின்றிடுபெருமைதங்கியநின்றசீர்நெடுமாறனு
நறுக்கிவாளியநேகமேவியவ்வாளிசேரவறுத்தன
குறுதிவாளிகள்பின்னுமேவினரூழிநாண்மழையொப்பவே. (௯௯)

எய்தவாளிகள்பலவுமீனவனெய்தறுப்பதுகண்டனர்
கையினுயர்முசலமெண்ணிலகல்லொடுஞ்சிலர்வீசினு
ரய்யனுஞ்சிலைகோலவையார்ந்தநுண்பொடியாக்கினன்
வெய்யகோரமொடிதுவல்லக்கெனவிட்டெறிந்தனர்வேல்களே. (௱)

கண்டமன்னவன்வேலவேல்கொடுகண்டதுண்டமதாக்கினு
னண்டர்கொண்டதுரோணமோடவரம்புமம்பினறுத்தனன்
விண்டுபோல்வருதேரறுத்தனன்வெற்றிமாலையறுத்தனன்
மண்டுபோரிடைவடபுலத்தவர்வாளிகோடிவழங்கினர். (௱௧)

முடிவின்மன்னவன்வடபுலத்தர்கைமூர்த்துபோரதுபுரிவதற்
தொடரும்வெம்படையழிவுமற்றவர்துணிவுமெண்ணினெண்ணியே
யடியருக்கருள்புரிதரும்பரனைமனத்தவனருள்செய்த
படைவருந்திறலுண்டுவெற்றிபடைக்கலாமெனநின்றனன். (௱௨)

வேறு.

செந்தாதலர்நிம்பம்புனைசெழியன்மகிழ்வுறவே
மந்தாகினிபுனைவேணியன்மதிவாணுதல்வடிவா
னொந்தாயுறைதிருமேனியனெங்கோனருளாலே
வந்தாரிவண்வருசேனையின்வரலாறதுபுகல்வார். (௱௩)

அழல்போலெரிவிழியார்பொடியணிவார்மணியழலு
கழல்வீரர்கண்மகமேருவுங்கடலுர்துகள்செயவோர்
சுழல்வேல்கதைசூலத்தொடுதொடர்பாசமுமுடையோ
ரெழுகோடியர்விறலோடமர்க்களமீதினெதிர்ந்தார். (௯௪)

முகமாயிரர்கரமாயிரர்முடியாயிரர்வலியோ
ரகல்வாயினர்நெடுமேனியராயிலார்படையுடையா
ருகமாயிரமெனினுமனமுலையாதமர்புரிவோர்
மிகுகோபியர்பலகோடியர்விறலோடெதிர்வந்தார். (௯௫)

வடமேருவைநிகர்மேனியர்வடவைக்கனல்விழியார்
படவாளரவணிபூணினர்பகுவாயினர்வலியோ
ரிடிபோலதிர்குரலார்கணமெண்ணாயிரகோடி
யடல்வாள்கதைகொடும்பாசியலெடுவோருடன்வந்தார். (௯௬)

கந்தா...நாகமுநடை நாசமுமேந்திப்
பந்தாடுகைதிகழ்பூதர்கள்பலகோடியர்வநதா
ரைந்தாருவையுடையாரையுமடுவாரடுபெழ்வா
யிந்தாரெயிறுடையாரவரொழுகோடியர்வந்தார். (௯௭)

உலகேழினுமுறுமாருயிருண்போரொருகோடி
மலையேழினோடொன்றும்புனைமணிமார்பினர்கோடி
கொலையேபுரிகழுமுனிலைகொண்டோரொருகோடி
புலவார்கரவாளங்கொடுபோர்தோரொருகோடி. (௯௮)

வாளாயுதர்பலகோடியர்மழுவாயுதர்கோடி
தோளாயுதர்பலகோடியர்சூலாயுதர்கோடி
தாளாயுதர்பலகோடியர்தருவாயுதர்கோடி
நீளாயுதர்பலகோடியர்நெடுநேமியர்கோடி (௯௯)

இவ்வாறளவிலர்பூதர்களிடியேயெனவார்த்தே
மொய்வார்முரசதிரப்பலமுழவெங்கணுமார்ப்ப
மைவாருதியேழும்பொரவருமாறெனவந்தார்
தெவ்வானவர்சேனைத்திரடெரியாவகைசேர்ந்தார். (௱)

பெருகும்படைசூழவ்வருபட்டாபுரத்தியுனேர்
தருபேரொளியுடையாளரதகமெய்வடிவாளும்
வருடாங்கினிவனதக்கையுமாதாவெழுபேருந்
திருவாலயந்திருவாயில்கடிகழ்காவல்செய்வோரும். (௱௧)

பனைநீள்கரமாவார்கரும்பனைவீரர்கல்லனையார்
முனியார்தடிவீரனுயர்முருகாவுடையாரும்
வினைநாறியபடையார்படைவிடுகாவலர்தாமும்
புனைவார்சடையுடையாரொடுபுகழூருடையாரும். (௱௨)



அருள்கூர்குளத்தூராரொடுமழியாப்பதியாருந்
திருமாணிக்கமுடையாரொடுதிகழ்செண்பகக்கூத்தர்
பெருகாவனைக்காட்டார்புகழ்பெறுசூச்சாவுடையார்
கருமேகமதுடையாரானைகாத்தபெருமாளும். (௱௧௩)

மேகந்திறைகொண்டாரொடுவேலங்குடியாருஞ்
சோகந்தவிர்த்திடுவார்பெரியசுவாமிதவசொளிசே
ராகம்பெறுமாத்தியடியார்சேவகப்பெருமான்
மாகம்புகழ்குருந்தாவுடையாருமுடன்வந்தார். (௱௧௪)

வேறு.

இந்தவிதமய்யனருளெய்துபடைவீரர்
வந்துபுகமுன்பமர்செய்வடபுலத்துமன்னர்
சிந்தைமிகநொந்தனர்தியங்கினர்திகைத்தார்
புந்திமயக்குற்றனர்புலம்பினர்புகன்றார். (௱௧௫)

ஆரிவண்வந்தபடையாழியிடைமேனாட்
கோரமொடெழுந்தவிடமோகொடியகூற்றோ
போரவுலகுற்றிடுபிரளயப்பெருக்கோ
தேரினவையன்றெமதுதீவினையிதென்பார் (௱௧௬)

உன்னியிவைகூறினர்களோடவழிகாணு
நர்நிலையினின்றனரடுந்தொழின்மறந்தார்
தென்னவன்மகிழ்ச்சிபெறுதேவகணவீரர்
மன்னுமருவாரையுயிர்மாய்த்திடத்துணிந்தார். (௱௧௭)

செங்கைநெடுவாள்கொடெதிர்சென்னிதடிவாரு
மங்கையொடுகாலினைகளாகமரிவாரும்
பங்கமுறநாசிசெவிபற்றியரிவாருங்
கங்கபத்திரங்கள்கொடுகண்கள்குடைவாரும். (௱௧௮)

பொற்சுரிகைகொண்டிருபுயங்களரிவாரு
மற்றுமுயர்சத்திகொடுமார்புகுடைவாரும்
பற்றுகதைகொண்டுடலையெற்றியடுவாருஞ்
சுற்றுவளைசார்ந்தர்துணித்தனர்பல்கோடி. (௱௧௯)

எதிர்ந்துபொருபாரிடமதெண்ணில்பலகோடி
வதிர்ந்தபடைமன்னவர்சண்மாளவதைசெய்த
வதிர்ந்துவருசாரதர்களானையொடுபாய்மாப்
பிதிர்ந்திடவறுத்திடுபிணக்குவைகள்கோடி. (௱௨௰)

மற்றுமுளசாரதர்கள்வாய்கொடுகடித்து
முற்றவுகிராலுடலமுன் றியுயிருண்டு
சுற்றியெறி போதிலுடல்சூறைபடுபஞ்சி
விற்றதெதிர்வந்தபடையெண்ணில்பலகோடி. (கஉக)

பூங்கொடிபிட்டபுரத்திபோரினிடைசேறி
யாங்குமருவாருடலமள்ளியுயிருண்டா
ளோங்குவனதற்கையுமொன் ருருயிரையுண்டாள
வாங்கிண்டியாதகவடிவாள்சிலரைமாய்த்தாள். (கஉஉ)

விளங்குதிருவாயிலுடைவீரரொதிர்சேறித்
துளங்குபடைஞோர்தலைதணித்தனர்துகைத்தார்
களங்களொடுகாலுமிருகைகளுமறுத்தா
ருளங்கவிசிறந்தனர்கனோகையொடுமார்த்தர்ர். (கஉங)

சென்றுதடிவீரனெருடுசேவகப்பெருமான்
மின்னற்றன்னர்சிலர்களைக்குருந்துடையவீரன்
வென்றனன்சிலர்சிலரைமேவமுடையார்தா
மன்றுசெய்தபோர்த்தொழிலையார்புகலவல்லார். (கஉச)

பற்றுகரும்பனைவீரர்பங்கயக்கைவாளா
லுற்றபடைஞோருடலமொன்றுநூறதாக்கித்
தெற்றுப்பலகோடிபடைசித்ரவதைசெய்தார்
மற்றுமொர்பனைப்பிடுங்கிமாற்றலரைமாய்த்தார். (கஉரு)

செய்யகுளத்தாரொடுசெண்பகக்கூத்தயர்
வெய்யசிலவீரர்தமைவெட்டினர்களார்த்தார்
ஐயமுருகாவுடையார்குச்சாவுடையாருங்
கையினெடுகோலிகொங்கண்டகரைமாய்த்தார். (கஉசு)

மன்னுபடைவீடுடையர்வாய்ந்தசடையுடையார்
மூன்னுவருவீரர்கண்முடித்தலையறுத்தார்
தன்னிகரின்மற்றுமுளசாத்தரனையோருந்
துன்னுபலவீரர்தலைதோளொடுதுணித்தார். (கஉஎ)

ஏற்றில்வருமுக்கணுடையெந்தையினிதேவுங்
காற்றுநுகரங்கெனுங்கணப்படைகளோடும்
கூற்றமெனநின்றுபடைகூடிடெதிர்வந்த
மாற்றலராவென்றுநெடுமாறன்மகிழ்வுற்றான். (கஉஅ)

வேறு.

இந்தவகையிறந்தபறந்தலையிலெழுங்குருதிபொங்கியிழிந்தவாறு
வந்துவரிநிறைந்தனபுள்வாளின்மிடைந்தனவலகைவளைதருழ்ந்த



பந்தமுறுபிணக்குவைகள்பலகோடிபருப்பதமதென்னப்பார்த்தார்
புந்திமயக்குற்றழிந்தோர்புலம்பிவடபுலத்தோடிப்போயினாரால். (கஉகூ)

வடபுலத்துமன்னவர்கண்மாண்டிரிந்துபோனபின்னர்வரதனேவு
மடலுறுதெய்வதப்படைகளவரவர்தம்பதங்கடொறுமடைகின்றார
னெடுமணிப்பொற்றேரேறிநின்றசீர்நெடுமாறனிதானஞ்சூழத்
திடனுறநாற்றிரள்சூழத்திருநெல்வேலிப்பதியிற்சென்றுசேர்ந்தான். (கஙo)

வேறு.

வந்தெதிரேமாதர்புடைசூழநின்றமங்கையர்க்கரசியாரோடுமாறன்
சிந்தைகூர் தறைபொற்றாமரைநீராடித்தேவிவடிவுடையாளைச்சேவைசெய்தே
சுந்தரஞ்சேர்திருமூலத்தானம்போற்றிச்சோதிநெல்லைநாயகனைத்தொழுதுவாழ்த்திச்
சந்திரகோடிரனவாததாணர்சரணதாமரைமலரைத்தாழ்ந்துபோற்றி. (கஙக)

தூயபலதேவரையுமன்பாய்ப்போற்றியாலயத்தைவலங்கொடுசூழ்ந்தரசர்சூழ
ரேயமொடுசந்நிதியினின்றுபோற்றிநெஞ்சினிடையஞ்செழுத்தைநினைந்துபோய்,
சேயெனுநெல்வேலிமாறனுக்குமாங்கேசிவன்கருணைபுரியமகிழ்தேவியோடு
மேயகுலச்சிறையாரும் வியந்துபோற்றவேந்தர்பிரான் விடைகொண்டுவெளியிற் (கஙஉ)
போந்தான்.

ஆங்குமறையவராசிகூறிவாழ்த்தவமைச்சரொடுசேனைகாவலருஞ்சூழ
வோங்குமணித்தேரேறித் திருநெல்வேலியூர்வலஞ்சூழ்ந்தியங்கள்கடலொலிபோ
லார்ப்பப் பாங்குவ்ளர்தேவியொடு மகவிரைவுடியவிந்துமனைக்கோயிற்கால்வாயி
னைய்தித், தாங்குசிங்காசனமேல்வீற்றிருந்தானிம்பத்தார்வழுதிதமிழ்நாடுதழைக் (கஙங)
கத்தானே.

நீதியொடுபஞ்சவனுநீர்தவாறுநெடுங்காலமரசுசெய்துநெல்லைவாழுஞ்
சோதிதிருவாலயத்திற்சென்றெங்கோனைச்சூழ்ந்திறைஞ்சிக்கரங்கூப்பித்தொழுது
போற்றிப், பாதிமதிபுனைவேணிப்பரமனையுன்பதமலரையருளெனவேபரவிப்போ
ற்றிப், போதமொடுசந்நிதியின் முன்புநின்று புகழ்ந்துபலதோத்திரங்கள்புகல (கஙச)
தானுன்.

வேதமெனுமொலரியருத்ரனுவிண்முதலாய்விரிந்தபஞ்சபூதமாகி
யோதரியமகேசனுமாயப்பாலெங்குமுயர்ந்தசதாசிவமாகிவிந்துவாகி
நாதவெளிபாய்ப்பரையாய்ச்சிவமுமாகிநம்பெருமானர்தடனங்காட்டுஞ்
சோதியெதிகம்பரனேநெல்லைவாழுஞ்சுந்தரனேமெய்ஞ்ஞானச்சுடரேபோற்றி. )

சித்திரைசித்திரையின்மருவிநின்றுதிரமாகிநடத்துபொருளாகியைந்து, சத்திச
னையின்றநின்வடிவதாகித்தநுகரணபுவனபோகமுந்தாலுகி, முத்தியுயிர்பெரு
ம்பொருட்டைந்தொழிலுமன்பாய்முறைநடத்தியருள்புரியுமுதல்வாபோற்றி, யத்
தமிழ்ச்சைவநெறிக்கரசேபோற்றிமமையனத்தெம்பெருமானேயரனேபோற்றி. )

மானவிநிறையாணவகன்மத்தினேறிவருதிரோதாயியதோமாயையென்னு, மின்ன
ல்வலைதனிலகப்பட்டுள்ளேதாணின்றிடர்விளைக்குமறுபகைக்குமிடைந்துசோர்வா,

ருன்னினையாதவர்க ணினைப்போர்க்கெல்லா மூழ்முறையால்வரும் பவங்களுட னேதீர்ப்பாய், அன்னுபநாமலாயிலென்னை வைப்பாய்சோதியேநெல்வேலிச்சுட ரேபோற்றி. (௧௮௭)

பரிவிறெருமுயிரையெல்லாம்படைப்பாய்காப்பாய் பாசவினைசுட்டறுப்பாய்பாரி லார்க்கும், கருதரியபேரின்பமளிப்பாயோகர்கருத்திருக்குமெட்டாபார்காணவல் லார், வருபிரமவிருத்தபுரவரதாநெல்லைவடிவுடையமங்கைமணவாளாபோற்றி, ப ரிபிரமரணவிறந்தோரன்புபூணவர்க்கொண்புபூண்டவமைமுத்தேபோற்றி. ௧௮௮

அங்கமறையாகமசாத்திரங்கள் மிக்கனயகலைகளிக்குடிலையிலைகடாளுயர்ந், தங்க ளின்பெருமையினைக்கூறுநீயுமதனிடையுட்பொருளாய்மெய்யறிவாய்நின்றாய், ப ங்கயத்தைநான்முகனேறுமிக்குபரிந்துவுங்கோலம்பாரிடந்தாங்காணச், செங் கமலப்பதத்திலென்னையிருத்தவேண்டிந் திருவனச்சிவக்கொழுந்தே தேவேபோ ற்றி. ௧௮௯

அரியாகியானந்தமயமதாகியகண்டபரிபூரணமாயழிவிலாத
வொளியாகியருவாகியுருவமாகியோங்காரத்துட்பொருளாயொழிவிலாத
வெளியாகிப்பரமாகிவீடுமாகிவீடாதமெய்ஞ்ஞானவிளக்குமாகித்
தெளிவாகியபாலாகித்தேனுமாகித்திருவனத்துறைகின்றசிவனேபோற்றி. ௧௯௦

இன்னபலதோத்திரங்களியம்பிநெல்லையெங்கோன்முன்னின்றுபரவசமாயார்வத் துன்னிநின்றவானந்தவாரிசோரத்தொன்மையறிவிதையத்திறுரேடேறான்று, முன் னியிரண்டொன்றறமெய்ஞ்ஞானபோதமுதல்வடியைப்புமங்கிலவனமுதல்வாயாது ன், பொன்னடிக்கேபோதவருள்புரிவாயென்னப்புனிதனருளால்வழுதிபோந்தா னன்றே. (௧௯௧)

இருங்கடல்சூழ்புவிமுழுதுஞ்சைவமோங்கவிலகுவெண்ணீற்றொளிவிளங்கவொரு மோங்க, வருந்தவரும்வளவர்கோனின்றபாவை மங்கையருக்கரசியார்வணங்கிய ன்பாய்ப், பெருங்கருணைவாரிதியேயமுதேநெல்லைப்பெம்மானேயருளொளியெம்பெ ருமானல்க, வருங்கமலத்தடியெனும்மாலறியாச்செம்பொனடியின்கீழமர்ந்திருமம ர்ந்தாரன்றே. ௧௯௨

மந்திரமுமந்திரமுந்தடைபட்டோடத்தாங்கணிட்டவேதசாகரத்திறுடை, வேதசிர ம்போலமணமொல்லாங்கமுவிலேறவிகல்வழுதிசீர்த்தியுலகெங்குமோத, முந்துசைவ நெறிவெண்ணீற்றொளியுமோங்கமுயற்சிபுரிந்தருள்பெருகுமுதன்மையாள, மந்தி ரியார்குலச்சிறையார்தாமுநெல்லைவாத னடிக்கீழிருந்தமகிழ்வுற்றாரால். (௧௯௩)

வானவர்கள்மலர்சொரிந்தாரார்த்தாரிந்தமன்னவர்களார்த்தனர்சண்மறைகளார் த்த, வன்னவிசைத்தந்துமிகளெங்குமார்த்தவணியுமணியாழொடுமேழிசைகளார் த்த, வேலையுலகுள்ளோர்களெங்குமார்த்தரெண்டிசைகாவலரெல்லாமினிதிலா ர்த்தார், ஞானபோதனர்யோகர்சித்தரார்த்தார்நம்படியார்களெல்லாநயந்தேயா ர்த்தார். (௧௯௪)



ஆதிவனாவனத்துறையமலன்பாதமாசர்கோனினிதெனுநிமடைந்தபின்னர்க், கா தலாடுநெல்வேலிமாறனன்பாய்க்கனகமணிமுடிசூடிச்செங்கோலேந்தி, மேதினி யெல்லாம்புகழச்சைவமோங்கவெண்ணீற்றின்றொளிவிளங்கத்தந்தைபோலச், சித மர்க்குலம்விளங்கச்சிறந்துசிங்காசனத்திலிருந்தரசளிமைசெய்தானன்றே. ௧௯௫

கோலநெடுஞ்சடைமவுலியக்கமாலைகுலவுவெண்ணீறிவைதலங்குக்கோதிலாரே, யாலவிடமயில்பரமாமலர்நெல்லையநாதனைநாயகனைப்போற்றிச், சிலமொடும ரசுபுரிந்தருள்வோனின்றசீர்நெடுமாறன்கதையைச்செப்பினோமா, லேனும்வகையி ன்னமுநாமறிந்தகதையியம்புவோமெனச்சூதனியம்புவானால். [௧௯௬]

நின்றசீர்நெடுமாறநாயனார்சருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம் — ௬௯௦௯.

---

## வடபுலத்துக்கெவுடன்வந்தசருக்கம்.

பூதங்கடந்துபொறிகடந்துபோதங்கடந்துபொருள்கடந்து
வேதங்கடந்துவிதிகடந்துமென்மைகடந்துவேதாந்த
நாதங்கடந்துமுதலீறாடுவுகடந்துநால்வகையாம்
பாதங்கடந்தபனைவனத்தான்சாதையினமும்பகரொன்றுர். (௧)

ஆன்றுதலங்களெவற்றினுமுந்துயதலமாநெல்வேலிக்
கொன்றைமுடித்தசடைமவுலிக்குழகனினியவிளையாட்டி
லொன்றுமீகளுமெனவுரைக்கேயுமையோர்பாகன்றனைவாழ்த்தி
நன்றுசிறந்தமுனிவரர்க்குகலஞ்சேர்சூதமுனியவில்வான். (௨)

தீதுபிரமுங்கலியுகத்திலெறியின்மதமேற்கொண்டுநின்ற
பேதைமனத்தனறிவிழந்துபிதற்றுமிழ்சமயப்பிறப்புடையோன்
பூதம்போடுநீணமணிபுனையும்புனிதனடியார்தமைக்கண்டாற்
றீதுபுரிவெஞ்சினக்கெவுடன்றிகழ்தென்றிசையிற்போந்தனனால். (௩)

காசிமுதலசவினவரையுங்கலந்தபடைகண்மிசைப்பரப்பித்
தேசமலைசபுரிவேந்தர்தண்டபடைகண்முறித்தோட
நாசமுறவேகொலைபுரிந்துநாடுங்காடும்பலகடந்து
வாசிபலவுடன்திகிறவளஞ்சேர்நெல்லைவந்தடைந்தான். (௪)

வாவியுடனித்தலத்திருந்தமனுடர்மிருகபட்சியெல்லாஞ்
சாவைவருந்தியோடுதலுஞ்சிவன்றனருளாற்றொண்டர்சூழாம்
புத்தியறிவிறெடுங்கோயில்வாயில்பொருந்திநிற்பதனை
யந்தக்கெவுடர்சமக்கரசனவர்களெதிரோதானவந்தான். (௫)

மன்றுதலத்தார்தானத்தார்மகிழுமினியமடபதிகள்
துன்னிமிருந்தபரிசனங்கள்சூழுமனையிற்கெவுடர்பிரான்

முன்னியவர்கண்முகநோக்கிமுடிவிலாதமுதல்வனெவ
னென்னப்பகர்வார்நாசமிலாதிருப்போனெல்லையிறையென்றார். (௬)

பல்லாயிரமாமண்டபகிரண்டப்பரப்பிலிருப்போர்க்குங்
கல்லாமூடர்தங்களுக்குங்கல்வியறிந்தமேலோர்க்கும்
வல்லாய்மாறுபாடுனைத்தவந்தவுனக்குமெமக்குமற்று
மெல்லாவுயிர்க்குமொராகியிருப்போனெல்லையிறையென்றார். ௭)

நன்றுமொழிந்தீரெனக்கைத்தாளன்சொல்தெய்வஞ்சிவனென்னி
லின்றுநானிங்குனாக்குமதிசயங்களிவிடத்துண்டாமோ
வொன்றுதலத்தீரெனநீதானுனக்குமவையுண்டாகுமென்று
ரன்றேற்றெறப்டியமிக்கில்லையென்றுலடைத்திருட்புகுந்தான்.

மணிமண்டபத்தில்வந்துநின்றுவாய்ந்தகருங்கற்காலைபரி
தனியப்பசும்புல்லருந்திடுமோதண்ணீர்குடிக்குமோவவையான்
கொணர்வீரெனிலுங்கொணர்ந்துமுன்னேருவித்தார்குருவக்கருணாலே
யுணவாய்த்தின்றகமுநீருமுடனேகுடிப்பமகிழ்வுற்றான். ௯

மற்றுமுடனுட்பிரகாரம்வாலுமூங்கின்மரங்கண்டா
லுற்றவனையிற்றுமலைப்பூவுண்டாமோவென்றுனைத்திடவு
மற்றைப்போதிலப்போதுண்டானவவைபார்த்ததிசயித்தான்
கொற்றமுடையகெவுடர்பிரான்கொண்டமகிழ்ச்சிக்களவின்றால். (௰)

பித்தனுற்றசோபிலுக்கொண்டாம்பிராகாரத்தில்வடக்குநின்ற
சொத்துநிறைகொண்டவறாபிலுயர்கூவிளாவுண்டாமோவெனக்கூற
வத்தனருளாலவ்வவில்லயர்ந்தமைப்பவகமகிழ்ந்தான்
பத்தியுடையகெவுடனெல்லைப்பதியெப்பதுக்குமதிகமென்றான். ௰௧

அன்னபிரகாரத்திலிலங்காபீசானத்திடையில்லுற
வன்னிமரத்தின்மாவடுவுண்டாமோவெனவும்வன்னிதனி
றுன்னிநிறைத்துமாவடுவேயசூழ்ந்தகாய்ப்பவதிசயித்துச்
செந்நெல்வயல்சூழ்நெல்வேலிச்சிவனேதெய்வமெனத்தொழுதான். ௰௨

பூதியடியார்நெல்வேலிப்புனிதன்புகழ்பாடினரார்த்தார்
வேதமறையோருந்திரிகம்வீசிமறைபாடினரார்த்தார்
காதிமுனிவர்தண்டமெறிந்தமலர்புகழ்பாடினரார்த்தார்
மாதர்குரவைபலவார்த்தார்வானோருயர்துந்துபியார்த்தார். ௰௩

முன்புபுரிந்தபுண்ணியத்தான்முதல்வர்திருநெல்வேலியில்வந்
தன்புமிகுந்துகெவுடர்தமக்கரசனமலனாலயத்து
ளின்பமுடனேசென்றுதிருமூலலிங்கரடியிறைஞ்சிப்
பின்புவண்டவளர்ந்தநெல்லைப்பெருமானடித்தாமரைபணிந்தான். ௰௪

நக்கோர்பரவுமனவரததானடித்தாமரைதொழுது
புக்கபலதேவலாத்தொழுதுபோந்துதாம்ரசபைபோற்றி



மிக்கவம்பலம்விரும்பிச்சூழ்ந்துவிமலைபணா
...ங்கவன்வடிவாளபிராமிமலர்ச்சேவடியைத்தொழுதேத்தி. (௰௫)

கொன்றைமுடித்தோனஞ்செழுத்துக்குழகனடியுமுட்கொண்டு
நின்றுபோயடியார்க்குந்தரில்வரிசைபலசெய்தே
துன்றுபடைகண்மிகநெருங்கதீரயகெவுடர்பெருமானுஞ்
சென்றுதலங்கள்பலதொழுதுசென்றானறனதுசெழும்பதிக்கே. (௰௬)

ஆயகாலைநெல்வேலியமலனருளாற்கெவுடர்பிரான்
போயபின்புமுன்போடிப்போனகுடியும்புரவலரு
நேயமுடனேதிரும்பிவந்துநிலமிடந்துநிரந்தரனைத்
தேயமுழுதுமதிசயிக்குந்தேவதேவைத்தெரிசித்தார். (௰௭)

வேறு.

மாறுபாடாகவந்தகெவுடர்கோன்வணங்கியேவெண்
ணீறுபூசிடவும்பஞ்சாக்கரநினைந்திடவும்பெற்றான்
வேறுவேறுகச்சொன்னசரிதையத்தைவிரும்பிடாம
லாறுசூடியநெல்வேலியமுதைவணங்குவீரே. (௰௮)

இன்னதாக்கெவுடர்சேவிங்கெய்தியகாதையென்று
சொன்னமாதவத்துமிக்கசூதமாமுனியைநோக்கி
மன்னுதாம்பிரமன்றத்துவரதனார்நடஞ்செய்காதை
தன்னைநீசொல்வாயென்னுந்தாபதர்தமக்குச்சொல்வான். (௰௯)

வடபுலத்துக்கெவுடன்வந்தசருக்கமுற்றும்.

ஆகத்திருவிருத்தம்—௬௩௯௫.

## தாம்பிரசபையிலம்மைக்குநடனங்காட்டியசருக்கம்

பெருகுநதியுநகர்வுபிறைமுடித்தசடைமவுலிப்பெம்மானெங்கோன்
மருவலர்கள்புரமெரித்தவரதன்வனாவனப்பரமன்வடிவாள்பாகன்
கருதுமடியவர்க்கருளுங்கங்காளன்கண்ணுதலோன்கயிலைவாச
னிருமலனித்தியனிருத்தனெல்வேலிநாயகனைநினைந்துபோற்றி (௧)

சூதமுனிவரனினியசுருதிமொழிமாதவர்க்குச்சொல்வானெல்லை
நாதன்மகிழ்ந்தன்பினொடுதாம்ரசபையூடுநடஞ்செய்தகாதை
வேதவியாதன்சுகர்க்குமேலுளின்மொழிந்தபடிவிளம்புகின்றே
னாதரவாய்க்கேண்மினெனவருந்தவஞ்செய்மாதவத்தோரறைகுவாரால். (௨)

துங்கமறைசொலுஞ்சூதமுனிவரனேமெய்ஞ்ஞானச்சோதியானே
திங்களணிவேய்வனத்தார்தலபுராணம்புகலுஞ்சிந்தையானே
பங்கயனைநிகர்வேதவியாதர்மாணாக்கரனைபரிவிலாத
வெங்கண்மனத்திருடொலைக்குமிரவியேயெரியினுதித்தெழுகின்றனே. (௩)

ஞானநிலைபுணர்ந்தவனேநலஞ்சிறந்தகிருபைதருநயனத்தோனே
வானவர்தங்குரவனினுமகத்துவமிக்கறிவுடையமனத்திறனே
யானநெறிப்பெருமையனேயுனதுமறைவாக்கியத்தினமுதங்காதாற்
பானமதுபண்ணியுந்தாளினனம்மிடாய்தீராதபான்மையாலேயும். (௪)

ஆதலினுனெல்வேலியமலர்தாம்பிரசபையிலன்பர்யாருங்
காதையினையெங்களுக்குத்தெரியவுரைத்தருளெனவேசுழறலோடுஞ்
சீதமதிமுகமலர்ந்துமனமகிழ்ந்துசுகரிடர்தீர்ந்துசெய்ய
சூதமுனிவரனினியதுயமுனிவரைநோக்கிச்சொல்லின்றனால். (௫)

அருந்தவஞ்செய்மாதவரேயரனருள்பெற்றடையவரேயறிவுள்ளோரே
திரந்தசடைமவுலியரேதிறனியுமேனியரேநிகரிலாரே
பொருந்துபரிசுத்தமனப்புண்ணியரேபுங்கவரேபுதுமையோரே
திருந்துவளாவனப்பரமன்சேவடிமீதன்புடையவிந்தையோரே. (௬)

சத்தியபராபரனார்தாம்பிரசபைநடராசர்சரிதைகேட்கும்
புத்தியுடையவர்நீவிராதலான்மிகுசதமும்பொருந்தியாங்கு
முத்தியடைவதிடமாமென்றினிய முனிவோர்தம்முகத்தைநோக்கிச்
சித்தமகிழ்சூதமுனிதாம்பிரசபைமேன்மைதனைச்செப்புவாரால். (௭)

வேறு.

திங்கள்சூடிறைவனெல்லைத்திகம்பரன்சென்னிமீது
பொங்குழுணமுழுமானேந்தும்புராதனன்பூதநாதன்
கங்கையிவனியன்கங்காளனசறைலிடமிலகுகண்டன்
சங்கரனெங்கோன்சிங்காசனத்திடையிருக்கும்போதில். (௮)

அருகினங்கிருந்தஞானவடிவுடையவளெனம்மை
கருதியங்கெழுந்துவதக்குழைவனக்கடவுளானே
திருமலப்பொருளேதாம்பிரசபையினின்றிருந்தங்காணும்
பெருவிருப்புடையோனென்றுபிரானடிவணங்கிச்சொன்னாள். (௯)

மாலயன்மகவான்மிக்கவானவர்சனகராதி
நால்வர்பொன்வீணையேந்துநாரதன்குறியகும்பன்
சீலநற்புலியின்பாதர்பதஞ்சலிசித்தர்நாக
ரேனுமார்க்கண்டர்சததவிருடியர்முனிவர்யாரும். (௰)

அனைத்துளவுலகமெல்லாமளித்துயிர்தமைக்காக்கு
மனத்தயவுடையதேவேவாரணமுரித்தகோவே
நினைப்பவரிதையமேவுநித்தனேநிமலாபோற்றி
கனைத்துண்ணீருதிருநேம்பனேபோற்றிபோற்றி. (௰௧)

என்றுதோத்திரங்கள்செய்தேயியல்பொடுமருச்சித்தேத்தி
நின்றிவைபுகல்வார்செல்லைநித்தனேநிமலதாம்பர
மன்றினிலாடுங்கூத்துமகிழ்வொடுமியாங்கள்காண
வின்றுநீயருளவேண்டுமென்னவுமிறைவன்சொல்வான். (௰௨)



ஐய்வருமண்டகோடியனைத்துயிரெல்லாமீன்ற
தாய்வடிவுடையாள்காணத்தாம்பிரசபையின்றே
நயனன்னித்தஞ்செய்வோர்நீங்களுஞ்சூழ்ந்துநின்று
நேயமாய்க்காண்பீரென்னநிகழ்த்தினனிகழ்த்தலோடும். (௰௩)

தலங்களிலுயர்நெல்வேலித்தாம்பிரசபையிலெங்கோ
னிலங்கிழையுடனேயின்றுனென்றுநாந்தீசனெண்ணிப்
பொலங்கொள்பொன்னகரில்வாழும்பொருவில்கம்மியனையுள்ளங்
கலங்கிடநினைத்தலோடும்வந்தடிதொழுதுநின்றான். (௰௪)

எதிர்நின்றானைநோக்கியிலகுதாம்பிரமன்றத்தைப்
புதிதுசெய்திடுவாயென்னப்பொன்னகர்த்தச்சன்போந்தே
கதிதருசபையைநோக்கிக்கனகநன்மணிகளாலே
முதிர்கலைச்சிற்பநூலின்முறையலங்கரிப்பதானான். (௰௫)

அணிபசும்பொன்னால்வானமாதிபொற்றூவியீரய்
மணிபலகுயிற்றிச்சூழமாகதப்பலகைநாற்றிப்
பணிபலசெயத்தூண்கள்பலபலநிறுத்திப்பாங்கர்
திணிபெறுத்திரங்களோட்டிச்செம்பொனான்முகடுசேர்த்தான். (௰௬)

நாற்றிசையெங்குஞ்சூழநவமணிக்கொடுங்கைநாற்றி
யேற்றபொன்மதலைதோறுமிசைதவளைகள்சேர்த்தா
னூற்றபன்மணிகளாலங்காதவரணந்தகோடி
தோற்றவதென்னச்சோதிதுலங்குபொற்றூவிசேர்த்தான். (௰௭)

ஆங்குவர்சபையின்முன்னராயிரம்பவளத்தூணி
லோங்குமண்டபஞ்செம்பொன்னாலொளிர்மணிபிறங்கச்செய்தான்
பாங்கொளிபிறங்கத்தூயபத்திமண்டபமுஞ்செய்தே
வாங்குபொற்படியுநீண்டவாயிலும்வகுப்பாய்ச்செய்தான். (௰௮)

வாழைகள்கமுகுகன்னல்மதலைகடோறுஞ்சேர்த்திச்
சூழ்மணிக்கொடிகணாற்றித்துலங்குமுத்தாரந்தூக்கிக்
கேழ்மணிப்படங்கள்கோடிகளொளிபிறங்கச்செய்து
தாழ்தொடைசுக்கந்தாதுஞ்சபையலங்காரஞ்செய்தான். (௰௯)

மற்றுளவின்னமெல்லாம்வகைவகையாகச்செய்தே
யுற்றவனந்திபால்வந்துரைத்தநுமுவந்துநோக்கிப்
பற்றறிவுடையநந்திபரனடிபணிந்துபோற்றி
யற்புதஞானத்தாம்பிரசபையலங்கரித்தேனென்றான். (௨௰)

என்னதுமகிழ்ந்துநெல்லையிறையவனிமையமீன்ற
மின்மயவடிவாய்வந்தநிகழ்வடிவாளைநோக்கித்

தன்னிகரில்லாமானேதாம்பிரசபையிலும்போய்
மன்னியநிருத்தஞ்செய்வோம்வந்தீர்காண்பீரென்றான். (௨௧)

திங்கள்சூடியமாதேவன்சேவின்மேலேறிப்பாக
மங்கைதன்னோடும்போகத்தேவரனைவர்பலருஞ்சூழப்
பொங்குநற்கணங்கள்சூழப்புணரியினியங்களார்ப்பச்
சங்கொடுசின்னமார்ப்பத்தாம்பிரசபையில்வந்தான. (௨௨)

வந்துநல்வளங்கள்பார்த்தேமகிழ்ந்துவாய்மலர்ந்துசொல்வான்
சுந்தரக்கயிலைத்தாம்ரசபையினுந்துய்தாமென்றே
சந்திரமோலிஞானத்தாம்பிரசபையினும்
சிந்தையன்பாகச்சிங்காசனத்தின்றிறாதரூளர். (௨௩)

மகர்ந்திடுசெய்தேனொ... பாறயிர்க்குடங்கள்கோடி
யிருந்ததண்பொருளைக்கும்விதித்தவையுள்ளதெல்லா
முகுர்ந்துமயனுமற்றமுனிவருமுறையினெய்தித்
தரும்படிமுன்புமின்னுமானவிடேகஞ்செய்தார். (௨௪)

வாய்ந்தநற்றிருவொற்றுடைமகிழ்வொடுசாத்தித்தூய
பூந்துகிலுத்தரீகம்புனிதபெய்பொருந்தச்சாத்திச்
சேர்ந்தபட்டாடைசாத்திச்சிறந்தவாசிகையுஞ்சாத்தி
யாய்ந்தபொன்மாலைசாத்தியக்கமாலையுஞ்சாத்தி. (௨௫)

கதிர்மணிமவுலிசாத்திக்கனகுண்டலங்கள்சாத்தி
முதிர்மணிவலையுஞ்சாத்திமுறைபுரிமுந்நூல்சாத்தி
புதியபொற்கடகமாழிபொற்கரர்தோளுஞ்சாத்தி
விதிரவமணிகள்சாத்திநிறைந்தவெண்ணீறுசாத்தி. ௨௬

களபகத்தரிசாந்திமழ்திருச்சாந்துசாத்திக்
குளிர்சந்தக்குழம்புசாத்திக்குங்குமத்தெய்வைசாத்தி
வளர்பரிமளக்காலேகவண்ணமுமகிழ்ந்துசாத்தி
யிளருபாளிதஞ்சிந்தூரயிறைவனுக்கினிதாய்ச்சாத்தி. (௨௭)

அரையின்மேற்புலித்தோல்சாத்தியரவகங்கணமுஞ்சாத்தி
நிறைமணிபவளமுத்தாநிறைந்தநீள்வடங்கள்சாத்திக்
கரியுரிசாத்திவாய்ந்தகனகிங்கிணியுஞ்சாத்திப்
பரிபுரஞ்சதங்கைதண்டைபங்கயப்பாதஞ்சாத்தி. (௨௮)

மற்றுளவணிகளெல்லாம்வகைவகையாகச்சாத்திச்
சிற்பரைவடிவாள்செய்யதிரிபுராதனக்குமிவ்வா
றற்புதவலங்காரங்களமரர்தமாதர்செய்யப்
பெற்பினைவேத்யந்தியாராதனைபுகழ்ந்துசெய்தார். (௨௯)



வேறு.

நின்றிலையதேவர்களுமுனிவோர்தாமுநிமலனடித்தாமரையைநினைந்துபோற்றி
மன்றிடைடம்புரிவாதன்மகிழவாசவனமாலைமாலுயர்மத்தளமதிர்த்தான்,மன்றிய
கைத்தாளமுயிர்தொகுத்தோனார்த்தான்றூயபுரந்தரனுயர்துந்துமியதார்த்தா,ஞெ
ன்றுகடுஞ்சினமறலியொளிர்செம்பொன்னினுடைவாள்செங்கரத்தேந்தியுடுக்குமா
ர்த்தான். (௩௦)

ஒருநிருதியெக்காளமூதியார்த்தானுலவிக்காவலிபையெடுத்தூதியார்த்தான், கருதி
மருத்துவனுகஇன்னமார்த்தான்கனிந்துநிதிக்கோன்றூபங்கமழவார்த்தான், மரு
வுதலையோகிசரிருபாணின்றேயன்னுமணிப்பாவாடைவழங்கியார்த்தார், பெருகுவி
ருப்பொடுதென்கீழ்த்திசைவாழங்கிபிறங்குமணித்தீவெட்டிபிடித்தேநின்றான்...

நாரதர்தும்புருவீணைபாடியார்த்தார் நலம்பெறும்யாழகத்தியர்வாசித்தேயார்த்தா
ர், சாரணர்கிம்புருடருங்கின்னரர்களார்த்தசுத்தவிருடியர்மறைப்பத்திகளா
ர்த்தார், பாரிடங்களனைவோருஞ்சூழ்ந்துநின்றேபண்ணு... வொலியலவுமார்
த்தா, ...மணிப்பிரம்புகொடுநந்திநாதனமுதவாய்மலர்ந்துதுதிகூறியார்த்தான்

வேதியர்கள்வேதமொழிவிளம்பியார்த்தார்மிகுயோகராலவட்டம்வீசியார்த்தார்
பூதர்சிலர்விசிறிகொடுவீசியார்த்தார்பூமாரிவிண்ணோர்கள்பொழிந்தேயார்த்தார்
நாரதனடியாரொழுத்தஞ்சோதியார்த்தார்நாகமடந்தையர்நடனஞ்செய்தேயார்த்தா
ர்,சீதமலர்த்திருவிடுகலைசொன்மாதுஞ்செந்தமிழ்ப்பாவிசைபாடிச்சிறந்தேயா
ர்த்தார். (௩௧)

குற்றமில்தண்டோதரனுஞ்செங்கைமீதுகொற்றமணிக்குடையேந்திக்குதித்தேயா
ர்த்தான்,மற்றுமுயர்பகைம்பன்வாய்வாய்தோறும்வலம்புரிச்சங்காயிரங்கள்வை
த்தேயார்த்தான், ...றபுடைவாணனன்னிரண்டாயிரங்கையாலும்பொருவில்குட
முழவதனைப்புடைத்தேயார்த்தான், சிற்பரனூர்நடம்புரியுஞ்சபைமுன்னாகத்தேவர் (௩௨)
குழாமில்லாறுசிறந்தேயார்ப்ப.

சனகர்முதனால்வர்சிவயோகர்பூதிசாதனர்கண்முனிவோர்களுகர்தேவர்
புண்டர்புரிசடைமவுலிப்போதர்கீதர்புரத்திலக்கமணிபுனைபுண்ணியர்கள்யோகர்
கணியுமீனப்பரிவுடையோர்புலியின்பாதர்கலைபயிலும்பதஞ்சலிமாற்கண்டரின்னோ
ரனகனிறைதாம்ரசபைமீதிலெங்கோனுடியசெந்தாமரையன்பாய்ச்சேவிப்ப...

கங்கைமுதனீர்மகளிர்கவரிவீசக்கன்னியர்கற்பூரவாலத்தியேந்தத், துங்கவிறையே
தமெல்லாந்துதிசெய்தார்ப்பத்தொகுத்தபலவண்டமெல்லாஞ்சூழ்ந்தேயார்ப்ப, ம
ங்கையுமைகவுரிபராயிமையம்பூத்தவடிவுடையநாயகியார்மகிழ்ந்துகாண, திங்க
ளணிவேணியர்தாம்பிரமன்றத்திற்சிறந்தினியதிருநடனஞ்செய்வதானார். (௩௩)

வேறு.

திறலுறு...முயலகனுடனைறுசெறெனத்திகழொருபதமுதலிடையூன்றி
விறலொடுமொருபதமுறைமுறைதிசைதிசைவிசையொடுகுலவிடமிகவீசிப்

பெறுவாமுதவிடவருமொருகரமலர்பிரியமதொடுமுறைமுறைவிசிப்
பொறையொடுமொருகரமபயமதறவிறைபுவிதமதறவிறைபொலிவித்தான். ௫௭

கனலொருகரமலர்மிசைகொடுகடையுககனமுறுமசனியதெனவதிரு
மணமதுறுதுடியொருகரமிசைகொடுவயில்விழியமுதனமொழிகவுரி
வனமணியணிதனவடிவுடையவண்மதிமுகமிசைகுலுவுகண்ணினளுதித்
தினகரராளவிலொளிகொடுமுகமதிதகழ்ச்சைகிலவெழுமகிழ்வுற்றான். (௫௮)

வேறு.

திருமுடிமிசைவிரிசடையாடத்திகழிளநிலவொடுதிரையாட
வரவுபொன்னிதழியொடணியாடவவிரொளிநிலவியகுழையாடப்
பொருபுயமொடுமழுமானுடப்பொடியணிமார்பொடுதோடையாட
மருவுகையனலொடுமணியாடவளர்புலித்தருயரனா... ட. (௫௯)

குலவியபவளகுஞ்சிதமா ... புகழ்விரிப்பர்புரமாட
விலகியமலரடியினிதாடவெழின்முயலகனுடனுட
நிலவியதிசையொடுநிலனுடவிறைபலகுலவரைநெடிதாடச்
செல்வமாயினன்வளவனமிமலன்திருநடமுறைதிருவருள்செய்தான். (௬௦

வேறு.

இவ்வகைதாம்பிரசபையிலெண்ணிலையாண்டோ ரினிதொடுசெய்திருநடனத் தியல்
பையெல்லா, மவ்வனவடிவுடையவடமான்காந்திமதிதேவிபார்த்தருளிமகிழ்ச்
சிகூர்ந்தே, இவ்வியதன்னுடல்புளகமுறவானந்தத்திலாக்கடலினிடைமூழ்கிச்சிவ
னேயுன்னை; யெவ்வகையும்பிரியாமலிருந்தபேதின் னென்றனக்குக்கிடைத்ததென
வின்பமுற்றாள். (௬௧

மாலயனிந்திராமரர்வேதவேதர்மாதவர்கள்ளின்னார்கிம்புருடாகர்
சேலமுதரகமுனிதிகழ்மாற்கண்டர்சிறந்தபதஞ்சலிவியாக்ரபுலியின்பாத
ரேணுமுபமன்னியர்காசிபர்சம்பத்தரொழுவரோமமிருடியரோமசர்கண்வேசர் ராஸ்
கோலவிசைத்தும்புருநாரதர்சூழ்யோகர்குழுமியெல்கோனைதிர்துதிகள் கூறவா

ஆடரவக்கிண்கிணித்தரளசேபோற்றியாமுதேயமுதவிரசமேபோற்றி
தேடரியமாமணியேயணியேபோற்றிதேவேசங்கரசதாசிவனேபோற்றி
நாடரியசதுர்வேதகாதாபோற்றிபட்டுபுரமெரித்தநகையாய்போற்றி
நிடாவத்துடியிலகுகரத்தாய்போற்றிநி... னேதாம்ரசபைவிமலாபோற்றி. (௬௨)

நீண்டபவண்டகோடியினுமேவி... நைந்திடுதொல்புவிமுழுதன்ர்துதோன்றி
மீண்டுமொருயிரனைத்துமொடுக்கி... ாங்கனிலகியமுத்தலைவேல்செங்கரத்தினோங்கி
யாண்டிநனியடுக்கடைகாட்புற மகாட்டாடுமாடல்விரும்பியவடிவாட்காகவந்தத்
த... வமிக்கரடியத... னேபோற்றிதாம்ரசபைநாயகனேபோற்றிபோற்றி.

பனைகவுரிகாந்திமதிபாகாபோற்றிபண்ணவனேவெம்புலியம்பரனேபோற்றி தி
திளைகுலவுசெம்பவளச்சடையாய்போற்றிசெம்பவளத்திருமேனிச்சிவனேபோற்



